# போதையில்லா, வளர்ச்சியில் சிறந்த புதியதோர் தமிழகம் படைப்போம்!

**இளைஞர்களின் எழுச்சியே, தமிழ்நாட்டின் வளர்ச்சி!**

## தேர்தல் அறிக்கை
## 2026 சட்டப்பேரவைத் தேர்தல்

★ பெண்கள், குழந்தைகளுக்குப் பாதுகாப்பு

★ தரமான கல்வி, கண்ணியமான வேலைவாய்ப்பு

★ அனைவருக்கும் சமூகநீதி, அனைவருக்கும் வளர்ச்சி


வெளியீடு

**பாட்டாளி மக்கள் கட்சி**

எண் 10, திலக் தெரு, தியாகராயர் நகர், சென்னை - 600017.

தொலைபேசி: 90031 18333, 99623 41999

மின்னஞ்சல்: **media@pmkofficial.com**

# வாக்களிப்பீர்

# சின்னத்திற்கு!



# இளைஞர்களின் எழுச்சியே, தமிழ்நாட்டின் வளர்ச்சி!

அன்புள்ள தமிழ் மக்களே!

வணக்கம்!

சுவர் இல்லாமல் சித்திரம் வரைய முடியாது. இன்றைய சூழலில் சித்திரம் வரைவதைவிடச், சுவர்களைப் பாதுகாப்பதுதான் மிகவும் அவசியம் என்ற நிலைக்குத் தமிழ்நாடு தள்ளப்பட்டிருக்கிறது. காரணம், தமிழ்நாட்டில் மக்கள் தொகையின் இலாபப் பங்கு என்று கருதப்படும் இளைஞர்கள் தான் தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லக் கூடியவர்கள் என்று நம்பப்படுகிறது. ஆனால், வேரிலேயே வெந்நீர் ஊற்றிய கதையாகத் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு யார் காரணமாக இருப்பார்களோ, அவர்களையே அழிக்கும் வேலைதான் 5 ஆண்டுக்கால திமுக ஆட்சியில் நடைபெற்றது.

இளைஞர்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படைத் தேவை கல்வியும், வேலைவாய்ப்பும் தான். ஆனால், தரமான கல்வியையும், கண்ணியமான வேலைவாய்ப்பையும் வழங்குவதற்கு திமுக ஆட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கல்வி மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் 90%–க்கும் கூடுதலானவற்றை திமுக அரசு நிறைவேற்றவில்லை. அதனால், இளைஞர்களின் வளர்ச்சி பெருமளவில் தடைபட்டிருக்கிறது.

இன்னொருபுறம், இளைஞர்களின் சீரழிவுக்கான அத்தனை கதவுகளையும் திமுக அரசு திறந்துவிட்டிருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்புவரை மது மட்டும் தான் இளைஞர்களைச் சீரழிக்கும் சக்தியாக இருந்தது. இப்போது கஞ்சா, மெத்தபெட்டமைன், அபின், ஹெராயின், கோகைன், எல்எஸ்டி, கூல் லிப் உள்ளிட்ட அனைத்து வகையான போதைப் பொருட்களும் திரும்பிய திசையெல்லாம் கிடைக்கின்றன. அதன் விளைவு, பள்ளி வகுப்புகளில் மாணவர்கள் மட்டுமின்றி, மாணவிகளும் கஞ்சா உள்ளிட்ட போதை மருந்துகளை உட்கொண்டு மயங்கிக் கிடக்கும் நிகழ்வுகள் அதிகரித்துவிட்டன. பொதுமக்கள் பயணிக்கும் பேருந்துகளில் எந்த அச்சமும், தயக்கமும் இன்றி மாணவிகள் மது அருந்தும் காணொலிகள் வெளியாகி அதிர்ச்சியடையச் செய்கின்றன. இந்த அவலங்களைத் தடுப்பதற்குத் திமுக ஆட்சி எதையும் செய்யவில்லை.

தமிழ்நாட்டில் போதைப்பொருள் கலாச்சாரம் கட்டுப்படுத்தப்படாததற்கான முதன்மைக் காரணம், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் கடத்தல் மற்றும் வணிகத்தில் ஆளும் திமுகவினரே ஈடுபட்டிருப்பதுதான். அதேபோல், தமிழ்நாட்டில் அதிகாரப்பூர்வமாக 4,787 மதுக்கடைகள் செயல்பட்டு வரும் நிலையில், சந்துக் கடைகள் என்ற பெயரில் சட்டவிரோதமாக 20 ஆயிரத்திற்கும் கூடுதலான மதுக்கடைகள் இயங்கி வருகின்றன. அந்தக் கடைகளில் எந்தத் தடையுமின்றி 24 மணி நேரமும் மது வணிகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இன்னொருபுறம் கள்ளச்சாராய வணிகமும் தடையின்றி நடைபெற்று வருகிறது. கடந்த 2023ஆம் ஆண்டு விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தை அடுத்த எக்கியார் குப்பம், செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தை அடுத்த பேரம்பாக்கம் ஆகிய இடங்களில் கள்ளச்சாராயம் குடித்து 29 பேர் உயிரிழந்தனர். ஆனால், அதில் இருந்து பாடம் கற்காத திமுக அரசு, தொடர்ந்து கள்ளச்சாராயத்தை

ஊக்குவித்தது. அதன் விளைவு, 2024ஆம் ஆண்டில் கள்ளக்குறிச்சியில் கருணாபுரத்தில் கள்ளச்சாராயம் குடித்து, 68 பேர் உயிரிழந்தனர். இத்தனைக்கும் இந்தக் கள்ளச்சாராய வணிகம் காவல் நிலையத்தில் இருந்து 50 மீட்டர் தொலைவில் நடைபெற்றிருக்கிறது.

இப்படியாகக், 'குப்புறத் தள்ளிய குதிரை குழியும் பறித்ததாம்' என்பதைப் போல, இளைஞர்களுக்குக் கல்வியும் வேலைவாய்ப்பும் வழங்கத் தவறிய திமுக அரசு, அவர்களைப் போதைப் பொருட்களுக்கும் அடிமையாக்கிச், சீரழிவுப் பாதையில் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது. இதே நிலை நீடித்தால், தமிழ்நாட்டில் வளர்ச்சி குறித்துப் பேசுவதற்கு வாய்ப்பே இருக்காது. காரணம், தமிழ்நாட்டு இளைஞர்கள் கல்வி பெறாமல் வேலைவாய்ப்புக்கான தகுதிகளை வளர்த்துக் கொள்ளாமல், மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாகித், தங்களின் வாழ்க்கையைத் தொலைத்திருப்பார்கள் என்பதுதான்.

அதனால்தான், இளைஞர்களை போதை என்ற வீழ்ச்சிப் பாதையில் இருந்து மீட்டெடுத்துக், கல்வி, வேலைவாய்ப்பு என்ற வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டுமானால், அதற்கான முதல் தேவை திமுகவை ஆட்சியில் இருந்து அகற்றுவதுதான். இந்த ஒற்றை நோக்கத்திற்காகத்தான் பாட்டாளி மக்கள் கட்சி கடந்த பல ஆண்டுகளாகப் பாடுபட்டு வருகிறது. இதற்காகத்தான் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சி இணைந்திருக்கிறது.

அதிகாரம் கிடைத்தால் அதைப் பயன்படுத்தி மக்களுக்கு எப்படியெல்லாம் நன்மை செய்யலாம்? ஆளும் கூட்டணியின் அங்கமாக இருந்தால், ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கி, தமிழ்நாட்டுக்கு எத்தகைய திட்டங்களைக் கொண்டுவரலாம்? எதிர்க்கட்சியாக இருந்தால் ஆட்சியாளர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டி, மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை எவ்வாறு தடுக்கலாம்? என்பதற்கு ஆகச் சிறந்த உதாரணமாகத் திகழ்வது பாட்டாளி மக்கள் கட்சிதான்.

மத்திய அரசில் பாட்டாளி மக்கள் கட்சி இடம்பெற்றிருந்த போது, ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் குறிப்பாகத் தமிழ்நாட்டுக்கும் செயல்படுத்திய திட்டங்கள் எண்ணிலடங்காதவை. தமிழ்நாட்டில் ஒரு மீட்டர் தொலைவுக்குக் கூட மீட்டர் கேஜ் பாதை இல்லாமல் அனைத்துப் பாதைகளும் அகல ரயில்பாதைகளாக மாற்றப்பட்டிருப்பதற்குப் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தொடர்வண்டித் துறை இணையமைச்சர்களாகப் பதவி வகித்தது தான் காரணமாகும். சேலம் தொடர் வண்டிக் கோட்டம், தமிழ்நாட்டிற்கு ஏராளமான புதிய தொடர்வண்டிப் பாதைகள் அமைக்கப்பட்டது போன்றவற்றுக்கும் பாட்டாளி மக்கள் கட்சிதான் காரணமாகும்.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சராக மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் பணியாற்றியபோது புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்தினார். உலகமே வியக்கும் 108 அவசர ஊர்தித் திட்டம் அவரது சிந்தனையில் உதித்த திட்டமாகும். பொது இடங்களில் புகைபிடிக்கத் தடை விதித்தது, திரைப்படங்களில் மதுகுடிக்கும் மற்றும் புகைபிடிக்கும் காட்சிகளின் போது எச்சரிக்கை வாசகங்களை வெளியிடச் செய்தது, குட்கா போதைப் பாக்குகளைத் தடை செய்ய அடித்தளம் அமைத்தது என மக்கள் நலன் சார்ந்து ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தினார். இதற்காக அமெரிக்காவின் லூதர் டெர்ரி விருது உள்ளிட்ட 4 பன்னாட்டு விருதுகளை மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் வென்றார். போலியோ ஒழிப்பு, எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்தியது, உலகின் மிகப்பெரிய சுகாதார இயக்கமான, தேசிய ஊரக சுகாதார இயக்கத்தை அறிமுகம் செய்து

வெற்றிகரமாகச் செயல்படுத்தியது, சிற்றூர்களுக்கும் தரமான மருத்துவம் கிடைக்க வகை செய்தது ஆகியவையும் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்களின் சாதனைகளாகும்.

அதேபோல், 2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது, அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சி இணைந்தது. கூட்டணியில் சேர்வதற்காக கூட்டணிக்குத் தலைமை வகித்த அதிமுகவிடம் 10 கோரிக்கைகளைப் பாட்டாளி மக்கள் கட்சி முன்வைத்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு, காவிரிப் பாசன மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கச் செய்தது, கூட்டுறவுச் சங்கங்களில் உழவர்கள் பெற்றிருந்த ரூ.12,110 கோடி கடன்களைத் தள்ளுபடி செய்ய வைத்தது, செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, தென்காசி ஆகிய 6 புதிய மாவட்டங்களை உருவாக்கச் செய்தது, 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை உருவாக்க வைத்தது, 5 மற்றும் 8ஆம் வகுப்புகளுக்கு அறிவிக்கப்பட்ட பொதுத் தேர்வை இரத்து செய்ய வைத்தது, அத்திக்கடவு – அவினாசி திட்டம், மேட்டூர் உபரிநீர்த் திட்டம் போன்ற பாசனத் திட்டங்களைச் செயல்படுத்தச் செய்தது போன்றவற்றைப் பாட்டாளி மக்கள் கட்சி சாதித்தது.

இவை அனைத்துக்கும் மேலாகக் கல்வியிலும், சமூக நிலையிலும் மிகமிகப் பின்தங்கிய நிலையில் வாடும் வன்னிய மக்களுக்கு 10.5% உள் இடஒதுக்கீடு வழங்கச் செய்தது பாட்டாளி மக்கள் கட்சியின் ஆகச் சிறந்த சாதனையாகும். மக்கள் நலனுக்காகப் பாட்டாளி மக்கள் கட்சி முன்வைத்த கோரிக்கைகளில் பெரும்பாலானவற்றை முதலமைச்சராக இருந்த அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் ஏற்றுக் கொண்டு செயல்படுத்தியது பாராட்டத் தக்கது.

2021ஆம் ஆண்டில் தொடங்கி, இன்று வரையிலான திமுக அரசின் ஊழல்களையும், மக்கள் விரோதச் செயல்பாடுகளையும் பாட்டாளி மக்கள் கட்சி தான் அப்பட்டமாக அம்பலப்படுத்தி வருகிறது. திமுக அரசின் தவறுகளை பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் ஒவ்வொரு நாளும் அறிக்கைகள் வாயிலாகப் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று வருகிறார். 2021ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக அளித்த 505 வாக்குறுதிகளில் 98% வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுவிட்டதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், அவரது அமைச்சரவை சகாக்களும் கூறி வந்த நிலையில், அவை அப்பட்டமான பொய் என்பதை பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் தான் நிரூபித்தார். திமுக அளித்த 505 வாக்குறுதிகளில் 66 வாக்குறுதிகள், அதாவது 12.94% மட்டும்தான் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை “விடியல் எங்கே?” என்ற ஆவணத்தின் மூலம் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் ஆதாரத்துடன் வெளிப்படுத்தினார்.

அதேபோல், தமிழ்நாட்டில் ரூ.12.16 இலட்சம் கோடி அளவுக்குத் தொழில் முதலீடுகள் வந்துவிட்டதாகவும், அதன் மூலம் 34 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்திருப்பதாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொய்ப் பரப்புரை செய்து வந்த நிலையில், அதையும் பாமக தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் தோலுரித்துக் காட்டினார். இதற்காக, “திமுக அரசின் பொய் முதலீடுகள்” என்ற ஆவணத்தை 2025ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியிட்டார். அதில், தமிழ்நாடு அரசு செய்து கொண்ட 1,176 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மூலம் தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய ரூ.12.16 இலட்சம் கோடி தொழில் முதலீட்டில் வெறும்

8.2% மட்டும் தான் வந்திருப்பதாகப் புள்ளி விவரங்களுடன் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் விளக்கியிருந்தார். இதன் மூலம், திமுகவின் முகமூடி கிழிந்தது.

தமிழ்நாட்டை ஆட்சி செய்யும் திமுக தமிழக மக்களுக்கு உரிமைகளை வழங்குவதற்குப் பதிலாக அவர்களின் உரிமைகளைப் பறித்திருக்கிறது. இதுகுறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், தமிழ்நாட்டில் இருந்து திமுக ஆட்சி ஏன் அகற்றப்பட வேண்டும் என்பது குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும், 1. சமூக நீதிக்கான உரிமை (Right to Social Justice), 2. வன்முறையில்லா வாழ்வுக்கான மகளிர் உரிமை (Women's Right to Live Free from Violence), 3. வேலைக்கான உரிமை (Right to Employment), 4. விவசாயம் மற்றும் உணவுக்கான உரிமை (Right to Farming & Right to Food), 5. வளர்ச்சிக்கான உரிமை (Right to Development), 6.நல்லாட்சி - அடிப்படை சேவைகளுக்கான உரிமை (Right to Good Governance and Public Services), 7. கல்வி, நலவாழ்வுக்கான உரிமை (Right to Health & Right to Education), 8. மது – போதைப் பொருள்களால் பாதிக்கப்படாமல் இருக்கும் உரிமை (Right to be Free from Alcohol & Drug Harm), 9.நீடித்திருக்கும் நகர்ப்புற வளர்ச்சிக்கான உரிமை (Right to Sustainable Urban Development), 10. ஆரோக்கியமான சுற்றுச்சூழலுக்கான உரிமை (Right to a Healthy Environment) ஆகிய 10 உரிமைகளை மீட்டெடுப்பதற்காகப் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் 108 நாட்களுக்குத் தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணத்தை மேற்கொண்டார்.

உரிமை மீட்க... தலைமுறை காக்க... என்ற முழக்கத்துடன், 25.07.2025 அன்று சென்னையை அடுத்த திருப்போரூரில் பயணத்தைத் தொடங்கிய மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள், 09.11.2025 அன்று தருமபுரியில் பயணத்தை நிறைவு செய்தார். இந்தப் பயணத்தின் போது திமுக ஆட்சியின் அவலங்கள் குறித்து அவர் ஆற்றிய உரைகளும், திமுகவின் ஊழல்களையும் சட்ட விரோதச் செயல்களையும் அவர் அம்பலப்படுத்தியதும் தமிழ்நாட்டு மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன. 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திமுக ஆட்சி அகற்றப்படுவதற்கான அடித்தளம் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்களின் இந்தப் பயணத்தின் போதுதான் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக, சிறந்த எதிர்க்கட்சி, சிறந்த ஆளும் கூட்டணிக் கட்சி, மத்திய அரசில் அதிகாரம் கிடைத்ததைப் பயன்படுத்திச், சிறந்த திட்டங்களைக் கொண்டு வந்த கட்சி எனப் பல பெருமைகளை பெற்றுள்ள பாட்டாளி மக்கள் கட்சி, தமிழ்நாட்டில் திமுக ஆட்சியை அகற்றி, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதற்காக எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தலைமையில் அதிமுக ஆட்சியை அமைக்க வேண்டும் என்பதற்காக அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் தரத்தை மீட்டெடுத்து, அவற்றில் அனைவருக்கும் தரமான கல்வி இலவசமாகக் கிடைக்கச் செய்வது, தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துவது, வீழ்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கும் வேளாண்மையை மீட்டெடுத்து, இலாபம் தரும் தொழிலாக மாற்றுவது, போதையில்லாத் தமிழகம் அமைப்பது, பெண்களும், குழந்தைகளும் அச்சமின்றிப் பாதுகாப்பாக நடமாடும் சூழலை ஏற்படுத்துவது, படித்த

இளைஞர்களுக்குக் கண்ணியமான வேலைவாய்ப்பு வழங்குவது, இயற்கை வளங்களை பாதுகாப்பது, தமிழ்நாட்டு மக்களுக்கு அனைத்துச் சேவைகளும் குறித்த நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்வது, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவது, அரசு ஊழியர்களின் பழைய ஓய்வூதியத் திட்டம் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவது, அனைத்து மக்களுக்கும் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வது, இவை அனைத்திற்கும் மேலாக அனைத்துத் தரப்பினருக்கும் உள்ளடக்கிய வளர்ச்சியை வழங்க வகை செய்யும் சமூகநீதி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு (சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு), அதன் அடிப்படையில் உள்இடஒதுக்கீடு வழங்குவது உள்ளிட்ட சமூகநீதி நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகியவற்றைச் சாத்தியமாக்க வேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நோக்கம் ஆகும்.

பாட்டாளி மக்கள் கட்சி அங்கம் வகிக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றிபெற்று, எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தலைமையில் அஇஅதிமுக ஆட்சி அமைந்தால், இந்த நோக்கங்கள் அனைத்தும் நிறைவேறும். இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஏராளமான வாக்குறுதிகளையும், செயல் திட்டங்களையும் இந்தத் தேர்தல் அறிக்கையில் பாட்டாளி மக்கள் கட்சி பட்டியலிட்டிருக்கிறது. மக்கள் சந்திப்பு, பல்துறை வல்லுநர்களுடன் கலந்தாய்வு, பொருளாதார வல்லுநர்களின் வழிகாட்டுதல்கள் ஆகியவற்றின் உதவியுடன் தான் இந்தத் தேர்தல் அறிக்கையை பாட்டாளி மக்கள் கட்சி உருவாக்கியுள்ளது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்றால், இந்தத் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படுவதைப் பாட்டாளி மக்கள் கட்சி உறுதி செய்யும். இது பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதி மட்டுமல்ல... சத்தியமும் ஆகும்.

வாருங்கள் தமிழக மக்களே.... போதையில்லா, வளர்ச்சியில் சிறந்த புதியதோர் தமிழகம் படைப்போம்!

# ஒழியட்டும் ஊழல் ஆட்சி... மலரட்டும் மக்களின் நல்லாட்சி!

இயற்கையின் கொடையால் தமிழ்நாட்டிற்கு அனைத்து வளங்களும் கிடைத்திருக்கின்றன. ஆகச் சிறந்த மனித வளம் தமிழ்நாட்டில் தான் கிடைக்கிறது. உலகின் 156 நாடுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் தொழில்நுட்ப வல்லுநர்களாகவும், பொறியாளர்களாகவும், மருத்துவர்களாகவும், பேராசிரியர்களாகவும் பணியாற்றி வருகிறார்கள் என்பதே தமிழ்நாட்டின் மனித வளத்திற்கு சான்று ஆகும். இவ்வளவு வளங்களையும், பெருமைகளையும், சிறப்புகளையும் கொண்டிருக்கும் தமிழ்நாடு, ஐரோப்பிய நாடுகளுடனும், சிங்கப்பூர், ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட ஆசிய நாடுகளுடனும் போட்டியிட்டு வளர்ந்திருக்க வேண்டும்.

ஆனால், கடந்த ஐந்தாண்டுக்காலத் திமுக ஆட்சியில், பீகார், உத்தரப்பிரதேசம் போன்ற இந்தியாவின் பின்தங்கிய மாநிலங்களுடன் கூடப் போட்டியிட முடியாமல் திமுக அரசு தோல்வியடைந்திருக்கிறது. தமிழ்நாட்டில் திமுக அரசு ஏன் நீடிக்க வேண்டும்? என்ற வினாவை எழுப்பினால், அதற்கு ஆதரவாக ஒரே ஒரு காரணத்தைக் கூடக் கூற முடியாது. அதே நேரத்தில், திமுக ஆட்சி எதற்காக அகற்றப்பட வேண்டும் என்ற வினா எழுப்பப்பட்டால், அதற்கு ஆயிரம் ஆயிரம் காரணங்களைப் பட்டியலிட முடியும். தமிழ்நாட்டில் திமுக ஆட்சி தொடர்ந்தால், அடுத்த தலைமுறையினரைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

திமுக ஆட்சியை அகற்றுவதற்கு ஆயிரம் காரணங்களைக் கூற முடியும் என்றாலும், அடிப்படையான ஐந்து காரணங்களைத் தமிழ்நாட்டு மக்கள் முன் பாட்டாளி மக்கள் கட்சி வைக்கிறது. அவற்றின் விவரம்:

1. தமிழ்நாட்டில் மது, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் பயன்பாடு வரலாற்றில் இதற்குமுன் இல்லாத அளவுக்கு அதிகரித்துவிட்டது. இதனால், மாணவர்கள், இளைஞர்கள் உள்ளிட்டோர் சீரழிக்கப்பட்டு வருகின்றனர்.

2. பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டோருக்கு எதிரான குற்றங்கள் பெருகிவிட்டன. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு முற்றிலுமாகக் சீர்குலைந்துவிட்டது. தமிழகத்தில், கடந்த 5 ஆண்டுகளில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

3. சமூகநீதி பலி கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவின் பல மாநிலங்களில் சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாட்டில் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த திமுக அரசு மறுத்துவிட்டது. உச்சநீதிமன்றமே ஆணையிட்ட பிறகும், வன்னியர்களுக்கு உள்இடஒதுக்கிடு வழங்காமல் திமுக அரசு சமூகநீதிக்குத் துரோகம் செய்துவிட்டது.

4. கொள்முதல் விலை உயர்வு, நீர்ப் பாசனத் திட்டங்கள் என வேளாண் வளர்ச்சிக்காக திமுக அரச எதையுமே செய்யவில்லை. இதன் விளைவாகக் கடந்த இரு ஆண்டுகளாகத் தமிழகத்தில் வேளாண் துறை எதிர்மறை வளர்ச்சியை அடைந்து வருகிறது.

5. படித்த இளைஞர்களின் எதிர்காலத்திற்காக அரசுத் துறையில் ஐந்தரை இலட்சம் வேலைவாய்ப்புகளும், தனியார் துறையில் 50 இலட்சம் வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்படும் என்று வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த திமுக, வெறும் 94 ஆயிரம் அரசு வேலைகளை மட்டுமே வழங்கியுள்ளது. பழைய ஓய்வூதியத் திட்டம், சமவேலைக்குச் சமஊதியம், பணி நிலைப்பு உள்ளிட்ட அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எதையும் திமுக அரசு நிறைவேற்றவில்லை.

தமிழ்நாட்டில் அனைத்துத் துறைகளிலும் திமுக அரசு படுதோல்வி அடைந்திருக்கிறது. தமிழ்நாட்டில் கிடைக்கும் இயற்கை வளங்கள், மனித வளம், துறைமுகங்கள், விமான நிலையங்கள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றின் பயனாக, மராட்டிய மாநிலத்திற்கு அடுத்தபடியாக, இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

இதைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றியிருக்க முடியும். ஆனால், ஊடங்களின் துணையுடன் வெற்று விளம்பரம் தேடியதைத் தவிர, மாநிலத்தின் வளர்ச்சிக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு துரும்பைக் கூடக் கிள்ளிப் போடவில்லை. ஒரு மாநிலம் வளர்ச்சியடைய வேண்டும் என்றால், கல்வி, சுகாதாரம், வேளாண்மை, சமூகநலன் உள்ளிட்ட துறைகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால், இந்தத் துறைகளுக்கு நிதி ஒதுக்குவதில் தமிழ்நாடு 15 முதல் 22 வரையிலான இடங்களுக்குத் தள்ளப்பட்டதுதான் திமுக ஆட்சியின் சாதனை ஆகும்.

ஒவ்வொரு அரசுக்கும் ஒவ்வொரு சாதனைப் பட்டியல் இருக்கும், ஆனால் திமுக அரசின் சாதனைகளைப் பட்டியலிட வேண்டும் என்றால் ‘பூஜ்ஜியம் தான்’. அதே நேரத்தில், பூஜ்ஜியத்தில் திமுக படைத்த சாதனைகளின் பட்டியல் மிகவும் நீளமானது. தமிழ்நாட்டு மக்களின் பார்வைக்காக அந்தப் பட்டிலியலில், 10 பூஜ்ஜிய சாதனைகளை மட்டும் இங்குப் பட்டியலிடுகிறோம்.

1. திமுக அரசால் செயல்படுத்தப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் – 0
2. திமுக அரசால் புதிதாகத் தொடங்கப்பட்ட மாவட்டங்கள் – 0
3. திமுக அரசால் புதிதாகத் தொடங்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகள் – 0
4. திமுக அரசால் புதிதாக உருவாக்கப்பட்ட எம்.பி.பி.எஸ் இடங்கள் – 0
5. திமுக அரசால் புதிதாகத் தொடங்கப்பட்ட வேளாண்மைக் கல்லூரிகள் – 0
6. திமுக அரசால் புதிதாக மேற்கொள்ளப்பட்ட சமூகநீதி நடவடிக்கைகள் – 0
7. திமுக அரசால் செயல்படுத்தப்பட்ட அனல் மின்திட்டங்கள் – 0
8. திமுக அரசால் புதிதாக நியமிக்கப்பட்ட கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் – 0

9. திமுக அரசால் புதிதாகத் தொடங்கப்பட்ட அரசு பள்ளிக் கூடங்கள் – 0

10. திமுக அரசால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட புதிய வேலைவாய்ப்புகள் – 0

இது ஒருபுறம் என்றால், நிதி நிர்வாகத்தில் திமுக அரசு படுதோல்வி அடைந்திருக்கிறது. திமுக அரசே வெளியிட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில், அதிகக் கடன் வாங்கிய மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு தான் முதலிடம் பிடித்திருக்கிறது. 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் நிலவரப்படி, தமிழ்நாட்டின் மொத்தக் கடன் ரூ.9 இலட்சத்து 52 ஆயிரத்து 374 கோடி ஆகும். 2025–26ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட போது, இது ரூ.9 இலட்சத்து 29 ஆயிரத்து 959 கோடியாக இருக்கும் என்றுதான் கணிக்கப்பட்டிருந்தது. ஆனால், கணிக்கப்பட்டதைவிட ரூ.22,415 கோடி கூடுதலாக திமுக அரசு கடன் வாங்கியிருக்கிறது. திமுக அரசின் கடைசிக் காலத்தில், பொங்கல் பரிசு, மகளிர் உரிமைத் தொகை முன்பணம் போன்றவற்றை வழங்குவதற்காகக் கடன் வாங்குவது, இலக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு வருவாய் ஈட்டாதது ஆகியவை தான் கடன் அதிகரித்ததற்குக் காரணம் ஆகும்.

இந்திய விடுதலைக்குப் பிறகு, தமிழகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஏற்படுத்தப்பட்ட 1952ஆம் ஆண்டிலிருந்து திமுக அரசு பொறுப்பேற்பதற்கு முந்தைய 2020–21ஆம் நிதியாண்டின் இறுதி வரையிலான 70 ஆண்டுகளில் தமிழகத்தின் நேரடிக் கடன் ரூ. 4.56 இலட்சம் கோடி மட்டும் தான். ஆனால், அதன்பின் பொறுப்பேற்ற திமுக அரசு ஐந்தாண்டுகளில் வாங்கிக் குவித்துள்ள கடன் மட்டும் ரூ.4.96 இலட்சம் கோடி ஆகும். இதில் மிகவும் வருத்தமளிக்கும் செய்தி என்னவென்றால், 2025–26ஆம் ஆண்டில் திமுக அரசு ரூ.1.84 இலட்சம் கோடி கடன் வாங்கிக் குவித்திருப்பதுதான்.

பொதுவாக, ஒரு மாநில அரசு மூலதனச் செலவுகளுக்காக மட்டும் தான் கடன் வாங்க வேண்டும். மருத்துவக் கல்லூரிகள், பாசனத் திட்டங்கள், சாலைகள் போன்ற உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்கான செலவுகள் தான் மூலதனச் செலவுகள் ஆகும். திமுக ஆட்சியில் சுமார் 5 இலட்சம் கோடி அளவுக்குக் கடன் வாங்கிக் குவிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த ஐந்தாண்டுகளில் செய்யப்பட்ட மூலதனச் செலவு, ரூ.2 இலட்சத்து 23 ஆயிரத்து 987 கோடி தான். இதன் மூலம் கடனாக வாங்கிய தொகையில் மீதமுள்ள 2 இலட்சத்து 76 கோடியை திமுக அரசு வீணாக செலவழித்துள்ளது.

திமுக ஆட்சிக்கு வந்த நாள் முதலாகவே, வீண் செலவுகளைக் குறைத்து வருவாய் பற்றாக்குறையை ஒழிப்போம் என்று கூறி வருகிறது. ஆனால், ஐந்தாண்டுகளாகவும் வருவாய்ப் பற்றாக்குறை ஒழிக்கப்படவில்லை. மாறாக, 2025–26ஆம் ஆண்டில் கூட ரூ.69 ஆயிரம் கோடி அளவுக்கு வருவாய்ப் பற்றாக்குறையை திமுக அரசு விட்டுச் சென்றுள்ளது. அதே நேரத்தில், இந்தியாவின் பின் தங்கிய மாநிலம் என்று கூறப்படும் உத்தரப்பிரதேசம், கடந்த 4 ஆண்டுகளில் வருவாய் பற்றாக்குறையை ஏற்படுத்தாமல் ரூ.2.15 இலட்சம் கோடி வருவாய் உபரியை ஏற்படுத்தியுள்ளது. அதன் மூலம் தமிழ அரசைவிடக் குறைவாகக் கடந்த 4 ஆண்டுகளில் 2.57 இலட்சம் கோடியை மட்டுமே கடனாக வாங்கியுள்ள உத்தரப்பிரதேச அரசு, அதைவிட ரூ.2.08 இலட்சம் கோடி கூடுதலாகச் சேர்த்து, மொத்தம் ரூ.4.65 லட்சம் கோடி அளவுக்கு மூலதன செலவு செய்திருக்கிறது.

திமுக ஆட்சியின் முடிவில் உள்ள கடன் அளவைக் கணக்கிட்டுப் பார்த்தால், ஒவ்வொருவரின் பெயரிலும் ரூ.1.27 இலட்சம் வீதம் 4 பேர் கொண்ட குடும்பத்தின் மீது ரூ.5.08 இலட்சம் கடன் சுமை சுமத்தப்பட்டிருக்கிறது. இதேநிலை நீடித்தால் தமிழ்நாடு வங்கிகளிடம் அடகு வைக்கப்பட்டுவிடும். தமிழ்நாட்டை மீட்க வேண்டும் என்றால், அதற்கு ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் ஊழல், மது – போதைக் கலாச்சாரம், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை ஒழித்து, அனைத்துத் தரப்பினருக்கும் வளர்ச்சி அளிக்கும் ஆட்சி அமைய வேண்டும் என்றால், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில், பாட்டாளி மக்கள் கட்சியும், அது அங்கம் வகிக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணியும் மிகப் பெரிய வெற்றி பெற வேண்டும். தமிழ்நாட்டை வளர்ச்சியில் சிறந்த மாநிலமாகவும், அமைதி நிலவும் மாநிலமாகவும் மாற்றுவதற்கான செயல் திட்டங்கள் பாட்டாளி மக்கள் கட்சியிடம் உள்ளன.

2026 சட்டப்பேரவைத் தேர்தலில், பாட்டாளி மக்கள் கட்சி அங்கம் வகிக்கும் கூட்டணி ஏன் வெல்லவேண்டும்? என்பதற்கான காரணங்கள் தேவைக்கும் அதிகமாகவே உள்ளன. எனவே, தமிழ்நாட்டில் திமுக ஆட்சியை அகற்றி, எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தலைமையில் அதிமுக ஆட்சி அமைவதற்கு வசதியாகப் பாட்டாளி மக்கள் கட்சி அங்கம் வகிக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு வரும் தேர்தலில் மக்கள் அமோக ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

■

# 2026 சட்டப்பேரவைத் தேர்தல்
# பாட்டாளி மக்கள் கட்சி
# தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு

**குழுத் தலைவர்**

மருத்துவர் **இரா. செந்தில்**
முன்னாள் மக்களவை உறுப்பினர்

**உறுப்பினர்கள்**

முனைவர் **அரங்க வேலு** இ.ஆ.ப (ஓய்வு)
முன்னாள் தொடர்வண்டித்துறை இணையமைச்சர்

முனைவர் **கோ. தன்ராஜ்**
முன்னாள் மக்களவை உறுப்பினர்

வழக்கறிஞர் **கே.பாலு**
செய்தித் தொடர்பாளர்

திரு. **கோ. ஆலயமணி**
தலைவர், தமிழ்நாடு உழவர் பேரியக்கம்

திரு. **இர. அருள்**
செயலாளர், பசுமைத் தாயகம்

திரு. **கே. பொன்மலை**
சமூக முன்னேற்றச் சங்கம்

# பொருளடக்கம்


1. பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கை 15
2. போதையில்லா தமிழகம் 19
3. வேளாண்மை 22
4. நீர் மேலாண்மை 28
5. பள்ளிக் கல்வி 31
6. உயர்கல்வி 35
7. நலவாழ்வு 39
8. வேலைவாய்ப்பு 44
9. ஒரு கோடிப் பேருக்கு வேலை 47
10. சமூகநீதி – சமுதாயம் 49
11. சமூகநீதி – மாநில இடஒதுக்கீடு 53
12. நிர்வாக சீர்திருத்தம் 56
13. ஊழல் ஒழிப்பு 59
14. தொழில் வளர்ச்சி 62
15. தொழில் முதலீடுகள் 65
16. பொருளாதார வளர்ச்சி 68
17. பொதுத்துறை நிறுவனங்கள் மேம்பாடு 71
18. மகளிர் நலன் 73
19. வறுமை ஒழிப்பு – விலைவாசிக் கட்டுப்பாடு 76
20. அரசு ஊழியர் நலன் 78
21. முறைசாரா, அமைப்புசாரா தொழிலாளர் நலன் 81
22. உட்கட்டமைப்பு மேம்பாடு 83
23. போக்குவரத்து 86
24. மின்சாரம் 89
25. தண்ணீர் 93
26. சமூக நலன் 95
27. சிறுபான்மையினர், பட்டியலினத்தவர் பிற பிற்படுத்தப்பட்டோர் நலன் 97
28. இந்துசமய அறநிலையத்துறை, மசூதிகள், தேவாலயங்கள் 100

29. பால் உற்பத்தியாளர், நெசவாளர் நலன் 102
30. வணிகர் நலன் 104
31. மீனவர் நலன் 106
32. இளைஞர் நலன், மாற்றுத்திறனாளி நலன் 109
33. திரைத்துறை வளர்ச்சி 112
34. பத்திரிகையாளர் நலன் 115
35. ஈழத் தமிழர் நலன் 117
36. இயற்கை வளப் பாதுகாப்பு 119
37. சுற்றுச்சூழல் பாதுகாப்பு 121
38. நகர்ப்புற வளர்ச்சி 126
39. சட்டம் – ஒழுங்கு, காவலர் நலன் 129
40. சட்டம் – நீதி 132
41. மொழி 134
42. சென்னை 137
43. சுற்றுலா 142
44. பொதுப் பிரச்சினை 144
45. மத்திய – மாநில அதிகாரப் பகிர்வு 145
46. வாக்காளர்களுக்கு வேண்டுகோள்! 147
47. அன்புமணி இராமதாசு ஆற்றிய பணிகள் 149
48. பா.ம.க. ஆவணங்கள் 151
49. பா.ம.க. சாதனைகள் 152

# சமூக ஜனநாயகமே
# பாட்டாளி மக்கள் கட்சியின் கொள்கை!

எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்... இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்'' என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும். இந்த இலக்கை எட்ட சமூக ஜனநாயகக் கொள்கைதான் சிறந்த வழி என்று பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது. இந்தியாவைவிட மிக மோசமான பொருளாதார ஏற்றத்தாழ்வு நிலவிய ஐரோப்பிய நாடுகள் இன்று பொருளாதார வலிமையுடனும், அமைதியுடனும் திகழ்வதற்குக் காரணம் சமூக ஜனநாயகக் கொள்கைதான். உலகின் 51 நாடுகளில் சமூக ஜனநாயகக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் கட்சிகள் தனித்தோ, அல்லது பிற கட்சிகளுடன் கூட்டணி அமைத்தோ ஆட்சி செய்கின்றன. அந்த நாடுகளில் வறுமை ஒழிந்து, செழுமை நிறைந்து அமைதி நிலவுகிறது. தமிழ்நாட்டையும் அத்தகையதொரு, உன்னத நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகத்தான், சமூக ஜனநாயகக் கொள்கையைப் பாட்டாளி மக்கள் கட்சி பெருமிதத்துடன் கடைப்பிடித்து வருகிறது.

### அனைத்திற்கும் அரசியலே ஆதாரம்

சர்வாதிகார ஆட்சி முறைக்கு எதிரான சனநாயக ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டுள்ள நாடு இந்தியா. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு அரசாங்கத்தை அமைக்கும் நாடாளுமன்ற ஜனநாயகம் (Parliamentary Democracy) இங்கு நடைமுறையில் உள்ளது. இது ஒரு பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை (Participatory Democracy) ஆகும்.

நாடு, பொருளாதாரம், பாதுகாப்பு, அடிப்படை உரிமைகள் என மனித வாழ்வின் எல்லா அடிப்படைத் தேவைகளும் 'அரசியல் கட்சிகள்' எனும் அச்சாணியின் மீதுதான் கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மக்கள் அனைவருக்குமான 'நல்ல அரசியல்' சூழலை உருவாக்கவும், மக்கள் அனைவருக்குமான 'நல்லதொரு அரசாங்கத்தை' அமைக்கவும் பாட்டாளி மக்கள் கட்சி உறுதியேற்றுள்ளது.

### சமூக ஜனநாயகம் எனும் உயர்வான கொள்கை

உலகளவில் அரசியல் கொள்கைகள் முதன்மையாக நான்கு வகைப்படுகின்றன.

1. தாராளவாதம் (Liberalism) 2. பழைமைவாதம் (Conservatism) 3. பொதுவுடைமை (Communism) 4. சமூக ஜனநாயகம் (Social Democracy). இவற்றில் சமூக ஜனநாயகக் கொள்கையைப் (Social Democracy) பாட்டாளி மக்கள் கட்சி பின்பற்றுகிறது.

சமுதாயத்தின் ஒவ்வொரு குடிமகனும் சுதந்திரமான, நீதியான வாழ்க்கையை வாழவேண்டும் என்பது சமூக ஜனநாயகக் கொள்கையின் அடிப்படை ஆகும். சமூக ஜனநாயகத்தின் இலக்குகள் சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதி, சமூக ஒருமைப்பாடு என்பனவாகும்.

## சுதந்திரம் (Freedom)

பேச்சுரிமை, கருத்துரிமை, வழிபாட்டு உரிமை போன்ற குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் (Civil and Political Rights), எதிர்மறை உரிமைகள் (Negative Rights), கல்வி, மருத்துவம், உணவு, வீடு, வேலை போன்ற பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் (Economic, Social and Cultural Rights), நேர்மறை உரிமைகள் (Positive Rights) ஆகிய அனைத்து வகை மனித உரிமைகளையும் உறுதிசெய்வதன் மூலம் சுதந்திரத்தைக் காக்க வேண்டும்.

## சமத்துவமும் நீதியும் (Equality and Justice)

அரசாங்கம் எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும். இனம், மொழி, மதம், சாதி, பாலினம் என எதன் அடிப்படையிலும் மக்களிடையே பாகுபாடு காட்டக்கூடாது. அதே நேரத்தில் சமமாக நடத்துவது என்பது இரண்டு சமமான ஆட்களுக்கு இடையே தான் பொருந்தும். சமமற்றவர்கள் சமமாக நடத்தப்படக் கூடாது.

## சமூக ஒருமைப்பாடு (Solidarity)

சமூகம் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். சமூகத்தில் இயல்பாக இருக்கும் பல்வேறு குழுக்கள், பிரிவுகளுக்கு இடையே பரஸ்பரம் ஒத்துழைப்பு வேண்டும். அதுமட்டுமல்லாமல், பணம் படைத்தோர், ஏழை, முதியோர், இளையோர், சமூக நிலையில் முன்னேறியவர்கள், பின் தங்கியவர்கள் என எல்லாவிதப் பிரிவுகள் இடையேயும் ஒத்துழைப்பு வேண்டும்.

இவ்வாறாகச் சமூக ஜனநாயகம் (Social Democracy) எனும் அரசியல் சித்தாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பின்பற்றுகிறது பாட்டாளி மக்கள் கட்சி.

## ஜனநாயக அரசின் கடமைகள்

கல்வி, உடல்நலம், கண்ணியமான வேலை, போதுமான வருமானம், ஊட்டமுள்ள உணவு, வசதியான வாழ்விடம், பண்பாட்டு வாழ்க்கை உள்ளிட்ட எல்லாவிதமான சமூக பொருளாதார உரிமைகள் அனைத்தையும் ஒவ்வொரு மனிதனுக்கும் உறுதி செய்வது தேவைகளில் இருந்து விடுதலை ஆகும் (Freedom from want).

பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் கூடும் உரிமை உள்ளிட்ட எல்லாவிதமான அரசியல் மற்றும் குடி உரிமைகளை ஒவ்வொரு மனிதனுக்கும் உறுதி செய்வது அச்சத்திலிருந்து விடுதலை ஆகும் (Freedom from fear).

சட்டத்தின் ஆட்சி, நல்லாட்சி, ஜனநாயகம், பொறுப்புடைமை, மனித உரிமைகள் உள்ளிட்டவற்றை உறுதிசெய்ய வேண்டும். இதன் மூலம் கண்ணியமான வாழ்க்கை சாத்தியமாகிறது (Freedom to live in dignity).

தேவைகளில் இருந்து விடுதலை, அச்சத்திலிருந்து விடுதலை, கண்ணியமான வாழ்க்கை ஆகியவற்றை இந்திய அரசியல் அமைப்புச் சட்டமும், ஐநா மனித உரிமை உடன்படிக்கைகளும் வலியுறுத்தியுள்ளன. ஐநா நீடித்திருக்கும் மேம்பாட்டு இலக்குகள் (Sustainable Development Goals)

2030 இன் இலக்கும் இதுதான். இந்த மேலான இலட்சியங்களைத் தமிழ்நாட்டில் சாத்தியமாக்க வேண்டும் என்பது பாட்டாளி மக்கள் கட்சியின் நோக்கம் ஆகும்.

## ஒரு புதிய சமூக ஒப்பந்தம் (A New Social Contract)

ஆட்சி நடத்தும் அரசாங்கத்திற்கும், ஆளப்படும் மக்களுக்கும் இடையேயான உடன்படிக்கை சமூக ஒப்பந்தம் (social contract) எனப்படுகிறது. மக்கள் அரசுக்கு விட்டுக்கொடுக்கும் உரிமைகளுக்குப் பதிலாக, அரசாங்கம் மக்களுக்குப் பாதுகாப்பை வழங்கும், வளமான வாழ்க்கைக்கான சூழலை அளிக்கும் என்கிற உடன்பாட்டின் மீதுதான் ஆட்சி அதிகாரம் நிறுவப்பட்டுள்ளது. அரசாங்கம் எனும் மாபெரும் உச்ச அதிகார அமைப்பு சமூக ஒப்பந்தம் மீதுதான் கட்டப்பட்டுள்ளது.

'அரசின் சேவைகளைத் தருமக் காரியங்களாகக்' கருதும் அணுகுமுறை (The Charity Model) இதுவரை தமிழ்நாட்டின் ஆட்சிப் பண்பாக இருந்து வருகிறது. இதற்கு மாற்றாக அரசின் பணிகள் மக்களின் உரிமையாகப் பார்க்கப்படும் மனிதஉரிமை சார்ந்த அணுகுமுறையைப் (The Human Rights Based Approach) பாட்டாளி மக்கள் கட்சி முன்வைக்கிறது.

மக்கள் என்போர் உரிமையைக் கொண்டிருப்போர் (Rights-holders), அரசாங்கம் என்பது அந்த உரிமையை நிறைவேற்றக் கடன்பட்டோர் (The duty-bearers) என்பதைத் தமிழகத்தின் புதிய அரசியல் சித்தாந்தமாக உருவாக்க வேண்டும். இதன் மூலம் இறையாண்மை என்பது ஆள்வோரிடம் இல்லை, மக்களிடம் இருக்கிறது ('The people' as the repository of sovereignty) என்பதை நிலைநாட்ட வேண்டும் எனப் பாமக உறுதி ஏற்கிறது.

## அரசாங்கத்தின் பொறுப்புடைமை (Accountability)

மக்கள் அனைவரும் மதம், இனம், சாதி, வாழிடம், பாலினம், வயது என எந்தப் பாரபட்சமும் இன்றி, எல்லா மக்களுக்கும் பொறுப்புக்கூறும் (Accountability) அரசாங்கத்தை அமைக்க வேண்டும். பாட்டாளி மக்கள் கட்சியின் அரசாங்கத்தின் பொறுப்புடைமை (Accountability) முறையே மூன்று அங்கங்களைக் கொண்டிருக்கும். 1. கடமைப்பாடு (Responsibility), 2. பதில்கூறும் பொறுப்பு (Answerability), 3. செயலாற்றுதல் (Enforceability).

## அரசாங்கத்தின் கடமைகள் (Duties)

சமூக உடன்படிக்கையின் கீழ், ஆளும் அரசாங்கத்திற்கு மூன்று வகையான கடமைகள் உள்ளன. 1. மதிப்பளிக்கும் கடமை (Duty to respect). 2. பாதுகாக்கும் கடமை (Duty to protect). 3. நிறைவு செய்யும் கடமை (Duty to fulfil).

## ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்புகள்

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. ஆனால், இன்னமும் ஜனநாயகம் குறித்த பரந்த அளவிலான புரிதல் இல்லை. ஆட்சியாளர்களும் ஜனநாயகத்தைப் பின்பற்றும் ஆட்சியாளர்களாக இல்லை. இந்த நிலையை மாற்றி ஜனநாயகப் பண்புகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் நாடாக இந்தியா திகழ வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி விரும்புகிறது.

## ஜனநாயக அமைப்பின் அடிப்படைப் பண்புகள்

- ★ நேர்மையான தேர்தல் (Free and fair elections)
- ★ சட்டத்தின் ஆட்சி (The rule of law)
- ★ முழுமையான அதிகாரப் பகிர்வு (Separation of powers)
- ★ வெளிப்படை நிருவாகம் மற்றும் ஊழல் ஒழிப்பு (Anti-corruption, transparency and accountability)
- ★ சுதந்திரமான, பன்முக ஊடகம் (Free, independent and pluralistic media)
- ★ முனைப்புடன் செயல்படும் குடிமைச் சமூகக் குழுக்கள் (Civil society groups)
- ★ பேச்சுரிமையும் கருத்துரிமையும் (Freedom of expression and opinion)
- ★ அரசியலில் சகிப்புத்தன்மை (Political tolerance)
- ★ அமைதியான முறையில் ஒன்று கூடும் உரிமை (Freedom of association and of peaceful assembly)
- ★ மதம் மற்றும் நம்பிக்கை உரிமை (Freedom of thought, conscience, religion or belief)
- ★ அதிகாரப் பரவலாக்கம் (Decentralisation)

■





# கஞ்சா, மது போதையில்லாத தமிழகம் அமைப்போம்!

தமிழ்நாடு இன்று எதிர் கொண்டுவரும் மிகப் பெரிய சமூகக் கேடு கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் கட்டுப்பாடு இல்லாத புழக்கம் ஆகும். தமிழ்நாட்டின் எந்த ஊரை எடுத்துக் கொண்டாலும், அந்த ஊரில் எந்தத் தெருவை எடுத்துக் கொண்டாலும், அங்கு கஞ்சா தடையின்றிக் கிடைக்கும். பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்களும், மாணவிகளும் கூட கஞ்சா புகைத்துவிட்டுப் போதையில் மயங்கிக் கிடப்பது அன்றாட வழக்கமாகிவிட்டது. ஒரு காலத்தில் மாணவர்கள் வகுப்பறையில் மது அருந்திய நிகழ்வுகள் வியப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்துபவையாக இருந்தன. ஆனால், இன்று கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் பயன்பாடு மிகச் சாதாரணமாகிவிட்டது.

இன்னொருபக்கம், மது வழக்கம் போல மாநிலம் முழுவதும் வெள்ளமாய் ஓடுகிறது. தமிழ்நாடு முழுவதும் 4,787 மதுக்கடைகள் அதிகாரப்பூர்வமாக இருப்பதாகக் கூறப்பட்டாலும், சுமார் 25,000 சந்துக் கடைகள் சட்டவிரோதமாகச் செயல்பட்டு வருகின்றன. மது வணிகத்தைக் குறைப்பதற்கு திமுக ஆட்சியில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்துவதற்கான அமைப்புகள் வெளியிட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் தமிழ்நாட்டில் ஆண்டுக்கு 22 இலட்சம் கிலோ கஞ்சா பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. 40 இலட்சம் பேர் கஞ்சா பழக்கத்திற்கு அடிமையாகியிருப்பதாகக் கூறப்படுகிறது. ஒரு கிலோ கஞ்சாவின் சந்தை மதிப்பு ரூ.7 ஆயிரம் என வைத்துக் கொண்டால், தமிழ்நாட்டில் ஓராண்டு முழுவதும் பயன்படுத்தப்படும் கஞ்சாவின் சந்தை மதிப்பு ரூ.1,540 கோடி ஆகும். பொருளாதார மதிப்பின் அடிப்படையில் இது மிகவும் குறைவு ஆகும். தமிழ்நாட்டில் ஓராண்டுக்கு ரூ.70,000 கோடிக்கு மது வணிகம் நடப்பதாக கூறப்படும் நிலையில், கஞ்சா வணிகத்தின் மதிப்பு அதில் 45–இல் ஒரு பங்குதான். ஆனால், இதனால் விளையும் சமூகத் தீமைகளும், குற்றங்களும் மதுவால் ஏற்படும் தீமைகளைவிடப் பல நூறு மடங்கு அதிகம் ஆகும். இன்னும் கேட்டால், கஞ்சாவின் விலை குறைவாக இருப்பதும், போதை அதிகமாக இருப்பதும், கஞ்சா போதையைக் கண்டுபிடிக்க முடியாது என்பதும்தான் கஞ்சா பழக்கம் அதிகமாகப் பரவுவதற்குக் காரணம் ஆகும்.

இதுதவிர, உயர் மதிப்பு கொண்ட போதைப் பொருட்களின் புழக்கமும் பல நூறு மடங்கு அதிகரித்திருக்கிறது.

## திமுக அரசின் தோல்விகள்

**திமுக ஆட்சியில் தான் கஞ்சா புழக்கம் அதிகமானது. கஞ்சா வணிகத்தைத் தடுக்கப் பலமுறை சோதனைகள் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் போதிலும், அதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை. மது வணிகத்தைக் கட்டுப்படுத்துவதிலும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. போதையைக் கட்டுப்படுத்துவதில் திமுக அரசின் தோல்விகள்:**

1. **ஆளும் கட்சியினரே கஞ்சா, மெத்தபெட்டமைன் உள்ளிட்ட போதைப் பொருட்களை விற்பதால் அதை அரசும் காவல்துறையும் தடுப்பதில்லை.**

2. **திமுகவின் அயலக அணி நிர்வாகி ஜாஃபர் சாதிக் ரூ.3,000 கோடிக்குப் போதைப் பொருட்களைக் கடத்தியதாகக் கைது செய்யப்பட்டுள்ளார். கடத்தல் மூலம் கிடைத்த பணத்தின் பெரும் பகுதி திமுகவுக்குச் செலவழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.**
3. **500 மதுக்கடைகளை மட்டுமே மூடிய திமுக, 1200–க்கும் கூடுதலான மனமகிழ் மன்றங்களைத் திறக்க உரிமம் அளித்துள்ளது. அவற்றின் வாயிலாக மட்டும் ஆண்டுக்கு ரூ.13,500 கோடிக்கு மது விற்பனையாகிறது.**

**மதுவிலக்கு, போதை ஒழிப்புக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன், மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தி வெற்றிபெறும்.
2. மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு, கள்ளச்சாராயம் விற்கப்படுவதைத் தடுக்க விரிவான திட்டத்தைப் பாமக வகுத்து, அரசின் மூலம் செயல்படுத்தச் செய்யும்.
3. தமிழ்நாட்டில் மிகப் பெரிய சமூகத் தீமையாகவும், அச்சுறுத்தலாகவும் உருவெடுத்திருக்கும் கஞ்சா, மெத்தபெட்டமைன் உள்ளிட்ட போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்துவதற்காகப் பஞ்சாப் மாநிலத்தில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுவதைப் போன்று ‘போதைப் பொருளுக்கு எதிரான போர்’ (War Against Drugs) இயக்கம் தீவிரமாகச் செயல்படுத்தப்படும்.
4. தமிழ்நாடு காவல்துறையில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு என்ற தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும். அதன் தலைவராக டிஜிபி நிலை அதிகாரி பணியமர்த்தப்படுவார்.
5. தமிழ்நாட்டின் 4 மண்டலங்களில் இப்பிரிவுக்கு டிஐஜி நிலையிலான அதிகாரியும், இரு மாவட்டங்களுக்கு ஒரு கண்காணிப்பாளர் நிலையிலான அதிகாரியும் பொறுப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படுவர்.
6. கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களைக் கடத்துபவர்கள், விற்பனை செய்பவர்கள் அனைவரும் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை அதே குற்றத்தைச் செய்தால், குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்படுவார்கள்.
7. கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் நடமாட்டம் குறித்து காவல்துறைக்கு தகவல் தர 987 என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண் அறிமுகம் செய்யப்படும்.
8. போதைப் பொருட்கள் நடமாட்டம் குறித்துத் தகவல் தருவோரின் விவரங்கள் இரகசியமாக பாதுகாக்கப்படும். ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் போதைப்பொருள் பிடிக்கப்பட்டால், அந்தத் தகவலைத் தெரிவித்தவருக்கு ரூ.10,000 வெகுமதி வழங்கப்படும்.

9. ஒவ்வொரு பகுதியிலும் கள்ளச்சாராய விற்பனையைக் கட்டுப்படுத்துவது ஊராட்சி மன்றத்தலைவர், கிராம நிர்வாக அதிகாரி, உள்ளூர்க் காவல்துறை ஆய்வாளர்களின் பொறுப்பு ஆக்கப்படும். இதனைக் கண்காணிப்பது மாவட்ட ஆட்சியரின் கடமை ஆக்கப்படும். இந்தக் கடமையைச் செய்யத் தவறுவோர் பணியிடை நீக்கம் செய்யப்படுவார்கள்.

10. கள்ளச்சாராய வழக்குகளை விரைந்து விசாரிக்கும் வகையில், சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு வழக்கும் 6 மாதத்திற்குள் விசாரித்துத் தீர்ப்பு அளிக்கப்படும். தீர்ப்பு வழங்கப்படும் வரை பிணை வழங்கப்படாது.

11. குடிப்பழக்கத்தால் கணவரை இழந்த பெண்களுக்கு நிலையான வாழ்வாதாரம் ஏற்படுத்தித் தரும் வகையில், அவர்கள் சொந்தத்தொழில் தொடங்க அரசு உதவி வழங்கும்.





# விவசாயத்தில் இலாபத்தைப் பெருக்கக் கொள்முதல் விலை உயர்வு, சந்தை வாய்ப்புகள்!

உலகில் போற்றப்பட வேண்டிய தொழில் என்றால் அது விவசாயம் தான். உலகம் முழுவதும் அனைவருக்கும் உணவு படைக்கும் தொழில் அதுதான். ஆனால், உலகுக்கே உணவு படைக்கும் விவசாயிகளின் நிலை மிகவும் துயரமான நிலையிலேயே இருக்கிறது. அதிலும் குறிப்பாக, தமிழ்நாட்டில் உழவர்களால் சாகுபடிச் செலவைக்கூடத் திரும்பப் பெற முடியாத நிலைதான் நிலவுகிறது. இதற்குக் காரணம், கொள்முதல் கட்டமைப்பும், சந்தை வாய்ப்புகளும் போதிய அளவில் இல்லாதது தான்.

ஒரு குவிண்டால் நெல் விளைவிப்பதற்கு ரூ.2,300 வரை செலவாகும் நிலையில், அரசின் கொள்முதல் விலையாக ரூ.2,500 மட்டுமே தரப்படுவதும், அதில் கையூட்டாக ரூ.250 பறிக்கப்படுவதும் உழவர்கள் மீது நடத்தப்படும் மனிதநேயமற்ற தாக்குதல்கள். அதுமட்டுமின்றி, கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்படும் நெல் உடனடியாகக் கொள்முதல் செய்யப்படுவதில்லை. இதனால், நெல் மூட்டைகள் மழையில் நனைந்து நாசமாகின்றன. கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்த மழையில் நெல் மூட்டைகள் நனைந்து நாசமானது கண்ணீரை வரவழைக்கும் சோகமாகும்.

நெல், கரும்பு தவிர்த்த பிற விளைபொருட்களுக்குத் தமிழ்நாட்டில் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படவில்லை. அதனால், கடந்த ஆண்டில் மாம்பழங்கள், தக்காளி, வெண்டைக்காய் போன்ற பயிர்கள் குப்பையில் கொட்டப்பட்டதைத் தமிழக மக்கள் அறிவார்கள். தமிழ்நாட்டில் கடந்த இரு ஆண்டுகளாக வேளாண்துறை எதிர்மறை வளர்ச்சி (மைனஸ் வளர்ச்சி) அடைந்து வருகிறது. இந்த நிலையை மாற்றி, வேளாண்மையை இலாபம் தரும் தொழிலாக மாற்ற வேண்டியது மிகவும் அவசியம்.

### திமுக அரசின் தோல்விகள்

2021 சட்டப்பேரவைத் தேர்தலின் போது, உழவர்கள் நலன் மற்றும் வேளாண்மை தொடர்பாக மொத்தம் 56 வாக்குறுதிகளை திமுக அளித்திருந்தது. அவற்றில் 8 வாக்குறுதிகளை மட்டுமே நிறைவேற்றியுள்ளது. மீதமுள்ள 48 வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. அவற்றின் விவரம்:

1. ஊரகப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் அனைத்துப் பொருட்களையும் விற்பனை செய்வதற்கான சந்தைகள் உருவாக்கப்படும். (வாக்குறுதி எண்–30)
2. கேரளத்தில் செயல்படுத்தப்படுவதைப்போல் தமிழ்நாட்டில் அனைத்து வேளாண் விளைபொருட்களுக்கும் கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படும். (வாக்குறுதி எண்–32)

3. ஒவ்வொரு ஒன்றியத்திலும் தானியச் சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும். இவை உலர் களங்களுடன் கூடிய கொள்முதல் நிலையங்களுடன் இணைக்கப்படும். (வாக்குறுதி எண்–50)
4. தென் தமிழ்நாட்டில் மதுரையில் வேளாண் பல்கலைக் கழகம் அமைக்கப்படும். (வாக்குறுதி எண் – 54)
5. நியாயவிலைக் கடைகளில் நாட்டுச் சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். (வாக்குறுதி எண் – 68)

### வேளாண்மையை இலாபம் தரும் தொழிலாக மாற்றுவதற்கான பா.ம.க.வின் செயல் திட்டங்கள் வருமாறு:

1. நெல் முதல் எள் வரை அனைத்து விளைபொருட்களுக்கும் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கும் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படும். இதற்காக வேளாண் விளைபொருள் விலை நிர்ணய ஆணையம் அமைக்கப்படும்.
2. தமிழகத்தில் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்ட அனைத்துப் பொருட்களையும் கொள்முதல் செய்யவும், அவற்றைக் கூட்டுறவு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்யவும் வசதியாக வேளாண் விளைபொருட்கள் கொள்முதல் ஆணையம் அமைக்கப்படும்.
3. ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.3,500 கொள்முதல் விலை வழங்கப்படும். இதில் குவிண்டாலுக்குக் குறைந்தபட்சம் ரூ.900 மாநில அரசின் ஊக்கத்தொகையாக இருக்கும்.
4. ஒரு டன் கரும்புக்கு ரூ.5,000 கொள்முதல் விலையாக நிர்ணயிக்கப்படும். இதை அனைத்துச் சர்க்கரை ஆலைகளும் வழங்குவதை அரசு உறுதி செய்யும்.

### வேளாண்துறை வளர்ச்சிக்கான உத்திகளை வகுக்க ஆணையம்

5. திமுக ஆட்சியில் 2024–25ஆம் ஆண்டில் மாநிலத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார உற்பத்தி மதிப்பிற்கு வேளாண்துறைப் பங்களிப்பு 2.99%ஆக வீழ்ச்சியடைந்துவிட்டது. இந்த நிலையை மாற்றி, மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு வேளாண்துறையின் பங்களிப்பை 20%ஆக உயர்த்துவது குறித்துப் பரிந்துரைக்க வல்லுநர்களைக் கொண்ட ஆணையம் அமைக்கப்படும்.
6. தமிழ்நாட்டில் வேளாண்துறை ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 6% வளர்ச்சி அடைவதை உறுதி செய்யத் திட்டங்கள் வகுக்கப்படும்.
7. சிறு–குறு விவசாயிகளுக்கு மத்திய அரசின் சார்பில் இடுபொருள் மானியமாக ஆண்டுக்கு ரூ.6,000 வழங்கப்படுவது போதுமானது அல்ல. இந்தத் தொகையுடன் தமிழக அரசின் சார்பில் கூடுதல் தொகை சேர்த்து, ஏக்கருக்கு ரூ.10,000 மானியம் வழங்கப்படும். அதிகப்பட்சமாக ஓர் உழவருக்கு ரூ.30,000 என்ற அளவில் மானிய வரம்பு நிர்ணயிக்கப்பப்படும்.

8. வேளாண் தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.2500, குறைந்தபட்ச ஊதியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

9. உழவர்கள் வருங்கால வைப்புநிதி ஆணையம்: தமிழ்நாட்டில் 60 வயதைக் கடந்த உழவர்களுக்கு மாதம் ரூ.1,500 ஒய்வூதியம் வழங்குவதற்கு வசதியாக உழவர்கள் வருங்கால வைப்புநிதி ஆணையம் அமைக்கப்படும். இதற்காக உழவர்கள் செலுத்த வேண்டிய சந்தாத் தொகையையும் அரசின் பங்கையும் தமிழக அரசே செலுத்தும்.

### நிதிநிலை அறிக்கையின் மொத்த மதிப்பில் 25% வேளாண் சார்ந்த துறைகளுக்கு ஒதுக்கீடு

10. வேளாண்துறை வளர்ச்சியடையாததற்கு முக்கியக் காரணம் கொள்முதல் கட்டமைப்புகளும், பாசனக் கட்டமைப்புகளும் ஏற்படுத்தப்படாததுதான். இத்தகைய கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுவதை உறுதி செய்ய நிதிநிலை அறிக்கையின் வருவாய்ச் செலவுகளில் 25% வேளாண்மை சார்ந்த துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

11. கொள்முதல் நிலையங்களில் குறைந்தபட்சம் 500 டன் நெல் மூட்டைகளைச் சேமிக்கும் வசதி ஏற்படுத்தப்படும். இனி மழையால் நெல் மூட்டைகள் சேதம் என்ற நிலை ஏற்படாமல் இருப்பது உறுதி செய்யப்படும்.

12. உழவர்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளைச் சேமித்து வைக்க உலர்த்தும் வசதியுடன் கூடிய பிரம்மாண்டக் கிடங்குகள் அமைக்கப்படும்.

13. காய்கறிகள், பழங்கள், மலர்கள் உள்ளிட்ட வேளாண் விளைபொருட்களை வீணாகாமல் பாதுகாத்து வைக்க அனைத்து வட்டங்களிலும் குளிர்ப்பதனக் கிடங்கு அமைக்கப்படும்.

14. அனைத்து மாவட்டங்களிலும் உணவுப் பதனத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.

### நியாயவிலைக் கடைகளில் நாட்டுச் சர்க்கரை, சமையல் எண்ணெய்

15. நியாயவிலைக் கடைகளில் நாட்டுச் சர்க்கரை விற்பனை செய்யப்படும். குடும்ப அட்டைக்கு மாதத்திற்கு 2 கிலோ நாட்டு சர்க்கரை வழங்கப்படும்.

16. நல்லெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவை நியாயவிலைக் கடைகள் மூலம் மானிய விலையில் விற்பனை செய்யப்படும்.

### பயிர்க் கடன்கள் தள்ளுபடி

17. கூட்டுறவு வங்கிகளில் உழவர்கள் பெற்ற குறுகிய கால மற்றும் மத்தியக் காலப் பயிர்க் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். இதனால், கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பை 2 ஆண்டுகளில் தமிழக அரசு திரும்பச் செலுத்தும்.

18. பொதுத்துறை வங்கிகளில் உழவர்கள் வாங்கிய ரூ.1 இலட்சம் வரையிலான பயிர்க் கடன்கள் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். இந்தத் தொகையைப் பொதுத் துறை வங்கிகளுக்கு அரசே செலுத்தும்.





19. கூட்டுறவு வங்கிகள் மூலம் பெறப்படும் பயிர்க் கடன்களுக்கு 10% மானியம் வழங்கப்படும். ரூ.1 இலட்சம் கடன் வாங்கினால், ரூ.90 ஆயிரம் திரும்பி செலுத்தினால் போதுமானது.

### 25% வேளாண் பரப்பை இயற்கை முறை விவசாயத்திற்கு மாற்ற சிறப்புத் திட்டம்

20. தமிழ்நாட்டில் ஒட்டுமொத்த சாகுபடி பரப்பில், 25% பரப்பை இயற்கை விவசாயம் சார்ந்ததாக மாற்ற சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். 2031ஆம் ஆண்டுக்குள் இந்த இலக்கு எட்டப்படும்.

21. உரம், பூச்சிக்கொல்லி ஆகியவற்றை தவிர்த்து, இயற்கை விவசாயத்திற்கு மாறும் உழவர்களுக்கு ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ.12,000 வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

22. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப்படும் சிறப்பு அங்காடிகளில், இயற்கை விவசாயம் மூலம் சாகுபடி செய்யப்பட்ட உணவு தானியங்கள் மற்றும் காய்கறிகளை விற்பனை செய்ய தனிப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

23. மரபணு மாற்றம் செய்யப்பட்ட, மரபணு திருத்தப்பட்ட விதைகள் தமிழ்நாட்டில் அனுமதிக்கப்படாது.

24. இயற்கை விவசாயத்தில் ஈடுபடும் உழவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக இயற்கை விவசாயிகள் நலவாரியம் ஏற்படுத்தப்படும்.

25. மாடு வளர்க்கும் விவசாயிகளுக்கு, 80% மானியத்துடன் சாண எரிவாயு அடுப்புகளை அரசே அமைத்துக் கொடுக்கும்.

### வேளாண் சந்தைத் துறைக்குப் புதிய அமைச்சகம்

26. தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, தோட்டக்கலைத் துறைக்குப் புதிய அமைச்சகம் ஏற்படுத்தப்படும்.

27. வேளாண் விளைபொருட்களை உள்ளூரில் சந்தைப்படுத்துவதற்கும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் வசதியாக, வேளாண் சந்தைத் துறை என்ற புதிய அமைச்சகம் ஏற்படுத்தப்படும்.

28. தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் விளையும் தனித்துவமான காய்கறிகள், பழங்கள் மற்றும் வேளாண் உற்பத்திப் பொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

29. தனித்துவம் பெற்ற காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வசதியாக அப்பயிர்கள் விளையும் பகுதிகளில் ஏற்றுமதி வசதி மையம் அமைக்கப்படும்.

30. நன்செய் நிலங்கள், வேளாண்மை தவிர்த்த பிற பயன்பாடுகளுக்கு மாற்றுவது தடை செய்யப்படும்.

31. இயற்கை விவசாயம் ஊக்குவிக்கப்படும். மண்புழு உரம் உள்ளிட்ட இடுபொருட்கள் இலவசமாக வழங்கப்படும்.

### வேளாண் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்

32. சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் மாம்பழம், தக்காளி, மரவள்ளி, ரோஜா மற்றும் பிற மலர்களுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும்.

33. கடலூர், அரியலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் முந்திரி, பலா மண்டலங்கள் அமைக்கப்படும்.

34. தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் பழங்கள் மற்றும் காய்கறி மண்டலங்கள் அமைக்கப்படும்.

35. கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழில் வளர்ச்சி மண்டலம், பொள்ளாச்சியில் தென்னைத் தொழில்நுட்பப் பூங்கா, ஊட்டியில் காஃபி, தேயிலை மண்டலம் அமைக்கப்படும்.

36. திருச்சி மற்றும் கரூர் மாவட்டங்களில் வாழை, முருங்கை மண்டலங்கள் அமைக்கப்படும்.

37. மலர் உற்பத்தி அதிகம் உள்ள மாவட்டங்களில் வாசனைத் திரவியத் தொழிற்சாலையும், மாம்பழம் மற்றும் தக்காளி அதிகம் விளையும் மாவட்டங்களில் அவற்றின் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் அமைக்கப்படும்.

### 20 வேளாண் கல்லூரிகள் அமைக்கப்படும்

38. தமிழ்நாட்டில் இரு மாவட்டங்களுக்கு ஒரு வேளாண் கல்லூரி வீதம் மொத்தம் 20 வேளாண் கல்லூரிகள் செயல்படுவது உறுதி செய்யப்படும். இதற்கு வசதியாக, அரசு வேளாண் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிய வேளாண் கல்லூரி தொடங்கப்படும்.

39. தஞ்சாவூரிலும், நெல்லையிலும் வேளாண் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்படும்.

40. தருமபுரியில் தோட்டக்கலைப் பல்கலைக் கழகம் அமைக்கப்படும்.

### வேளாண் மின் இணைப்பு

40. தமிழ்நாட்டில் வேளாண் பயன்பாட்டுக்கான மின் இணைப்புக்கு விண்ணப்பித்து ஆண்டுக் கணக்கில் காத்திருக்கும் உழவர்கள் அனைவருக்கும் உடனடியாக மும்முனை மின்சார இணைப்பு வழங்கப்படும்.

41. புதிய மின் இணைப்புக் கோரி இனி வரும் காலங்களில் விண்ணப்பிப்பவர்கள் அனைவருக்கும் ஒரு வாரத்தில் மின் இணைப்பு வழங்கப்படும்.

42. மின் இணைப்பு இல்லாத விவசாயிகளுக்குச் சூரிய ஒளி மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பும், மின்சார மோட்டாரும் இலவசமாக வழங்கப்படும்.

**ஊரக வேலைத் திட்டத்தில் 150 நாட்கள் வேலை**

43. மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள கிராமப்புற வளர்ச்சி மற்றும் வாழ்வாதார உத்தரவாதத் திட்டத்தின் கீழ், ஆண்டுக்கு 125 நாட்கள் வேலை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாட்டில் அத்திட்டத்தின்படி 150 நாட்களுக்கு வேலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

44. மத்திய அரசின் கிராமப்புற வளர்ச்சி மற்றும் வாழ்வாதார உத்தரவாதத் திட்டம் வேளாண் துறைக்கு நீட்டிக்கப்படும். வேளாண் விளைநிலங்களில் பணி செய்யும் தொழிலாளர்களின் ஊதியத்தின் ஒரு பகுதியை அரசும், இன்னொரு பகுதியை சம்பந்தப்பட்ட விவசாயியும் வழங்குவார்கள்.

45. தமிழ்நாட்டில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத் தமிழ்நாடு அரசின் சார்பில் பயிர்க் காப்பீட்டு நிறுவனம் தொடங்கப்படும்.

46. இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் பயிர்களுக்கு இரு வாரங்களில் இழப்பீடு வழங்கப்படுவதை அரசு உறுதி செய்யும்.

47. வேளாண் பணியின் போது விஷப் பூச்சிகள், பாம்புகள் கடித்து உயிரிழக்கும் விவசாயிகளுக்கு ரூ.10 இலட்சம் இழப்பீடு வழங்கப்படும்.

48. அறுவடை இயந்திரம் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்களை வாங்குவதற்கு உழவர்களுக்கு 60% மானியத்துடன் கடன் வழங்கப்படும்.

49. தனியாரிடம் உள்ள அறுவடை இயந்திரம் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்களை அரசால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் உழவர்கள் வாடகைக்கு எடுப்பதற்கு வசதியாக செல்பேசி செயலி அறிமுகம் செய்யப்படும்.

# 10 ஆண்டுகளில் ரூ.2 இலட்சம் கோடியில் நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்!

தமிழ்நாட்டில் வேளாண் துறை வளர்ச்சிக்குப் பெரும் தடையாக இருப்பது பாசனப் பரப்பு நீட்டிக்கப்படாததுதான். பாசனப் பரப்பு நீட்டிக்கப்படாததாலும், ஏற்கெனவே உள்ள பாசனக் கட்டமைப்புகள் முறையாகப் பராமரிக்கப்படாததாலும், தமிழ்நாட்டில் சாகுபடிப் பரப்பு கடந்த 50 ஆண்டுகளில் 40 இலட்சம் ஏக்கர் குறைந்திருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திற்குப் பிறகு கடந்த 60 ஆண்டுகளில் ஒரு டி.எம்.சி.க்கும் அதிகக் கொள்ளளவு கொண்ட நீர்த் தேக்கங்கள் ஒன்றுகூடக் கட்டப்படவில்லை. காவிரி – குண்டாறு இணைப்பு உள்ளிட்ட பல பாசனத் திட்டங்களை செயல்படுத்துவதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்த நிலையை மாற்றிப் பாசனத் திட்டங்களை அதிக அளவில் செயல்படுத்துவதன் மூலம்தான் வேளாண் துறையை வளர்ச்சியடையச் செய்ய முடியும்.

### திமுக அரசின் தோல்விகள்

**திமுகவின் தேர்தல் அறிக்கையில் (2021) நீர் மேலாண்மைத் துறை தொடர்பாக 29 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 2 வாக்குறுதிகள் மட்டுமே முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 27 வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.**

1. **நீர்நிலைகளை மேம்படுத்துவதற்கான நீர் மேலாண்மைத் திட்டம் முதல் கட்டமாக ரூ.10 ஆயிரம் கோடி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும். (வாக்குறுதி எண் – 89)**
2. **நொய்யல் ஆறு சீர்படுத்தப்பட்டு, பவானி – நொய்யலாறு – அமராவதியாறு இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். (வாக்குறுதி எண் – 103)**
3. **சேலம் – மேச்சேரி நீரேற்றுத் திட்டம் நிறைவேற்றப்படும். (வாக்குறுதி எண் – 106)**
4. **கொளத்தூர் தோணிமடுவுத் திட்டம் – நான்கு மலைகளிலிருந்து வரக்கூடிய நீரைத் தடுப்பணை கட்டித் தேக்கி வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். (வாக்குறுதி எண் – 107)**
5. **கிருஷ்ணகிரி மாவட்டம் படேதலாவ் ஏரியில் இருந்து வெண்ணம்பள்ளி, அச்சமங்கலம் உள்ளிட்ட 5 கால்வாய்களையும் நக்கல்பட்டி, புதூர் உள்ளிட்ட 10 ஏரிகளையும் இணைக்கும் வகையில் புதிய கால்வாய்கள் வெட்டப்படும். (வாக்குறுதி எண் – 110)**

### தமிழ்நாட்டில் பாசனப் பரப்பை அதிகரிப்பதற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்:

1. தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் அடுத்த 10 ஆண்டுகளில் ரூ.2 இலட்சம் கோடி செலவில் நிறைவேற்றி முடிக்கப்படும். இதற்காகப் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு மட்டும் ஆண்டுக்கு ரூ.20,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. தருமபுரி – காவிரி உபரிநீர்த் திட்டம், அரியலூர் – சோழர் பாசனத் திட்டம் ஆகியவை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

3. காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டப் பணிகள் விரைவுபடுத்தப்படும்.

4. விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் நந்தன் கால்வாய்த் திட்டம் செயல்படுத்தப்படும். நந்தன் கால்வாயைத் தென்பெண்ணை ஆற்றுடன் இணைக்கும் திட்டமும் செயல்படுத்தப்படும்.

5. தருமபுரி மாவட்டத்தில் என்னேகொல்புதூர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்படும்.

6. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் படேதலா கால்வாய்த் திட்டம், பாலே குழி பாசனத்திட்டம் செயல்படுத்தப்படும்.

7. சேலம் மாவட்டத்தில் தோணி மடுவு பாசனத் திட்டம் செயல்படுத்தப்படும்.

### தடுப்பணைத் திட்டங்கள்

8. தஞ்சாவூர் – அரியலூர், மயிலாடுதுறை – கடலூர் மாவட்டங்களில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே இரு புதிய தடுப்பணைகள் கட்டப்படும். இவை ஒவ்வொன்றும் ஆண்டுக்கு ஒரு டிஎம்சி தண்ணீரை வழங்கும் கொள்ளளவு கொண்டவையாக இருக்கும்.

9. மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்கள் பயனடையும் வகையில் வைகை ஆற்றில் தடுப்பணைகள் கட்டப்படும்.

10. நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்படும்.

11. தமிழகத்தில் தூர்ந்து போன, ஆக்கிரமிக்கப்பட்ட ஏரிகள் கண்டறியப்பட்டுப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

12. வீராணம் ஏரி, பொன்னேரி, ஆர்.எஸ்.மங்கலம் ஏரி உள்ளிட்ட தமிழகத்தின் பெரிய ஏரிகள் அனைத்தும் தூர்வாரப்பட்டு, அவற்றின் முழுக் கொள்ளளவு எட்டப்படும்.

13. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையான நீர்ப்பாசனத் திட்டங்கள் குறித்து அந்தந்த மாவட்ட உழவர் சங்கங்களுடன் கலந்தாய்வு நடத்தி முடிவெடுக்கப்படும்.

### காவிரி – கோதாவரி இணைப்பு

14. தமிழ்நாட்டு உழவர்களின் பெருங்கனவான காவிரி – கோதாவரி நதிகள் இணைப்புத் திட்டத்தை விரைந்து செயல்படுத்தும்படி மத்திய அரசுக்குப் பாட்டாளி மக்கள் கட்சி அழுத்தம் கொடுக்கும். இத்திட்டம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளிடையே கருத்தொற்றுமை ஏற்படுத்தும்படி மத்திய அரசைப் பாமக வலியுறுத்தும்.

15. தமிழகத்திற்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

16. காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் புதிய அணை கட்டக் கர்நாடகத்திற்கு அனுமதி அளிக்கக்கூடாது என்று பா.ம.க. வலியுறுத்தும்.

17. முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவுபடுத்தப் பாட்டாளி மக்கள் கட்சி பாடுபடும்.

18. பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசும், காவிரியின் துணை ஆறுகளின் குறுக்கே கேரள அரசும் தடுப்பணைகள் கட்டுவதை மத்திய அரசின் மூலமாக பா.ம.க. தடுத்து நிறுத்தும்.

19. கோவை, திருப்பூர் மாவட்டங்கள் பயன்பாட்டுக்கான பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அறியப்படும்.

■

# அனைவருக்கும் இலவசக் கல்வி...
# அரசுப் பள்ளிகளுக்கு மறுமலர்ச்சி!

ஒரு காலத்தில் அனைவருக்கும் கல்வி வழங்கும் அறிவுச்சுரபியாகத் திகழ்ந்து வந்த அரசுப் பள்ளிகளின் நிலைமை கவலைக்குரியதாக மாறியுள்ளது. மத்திய அரசு அண்மையில் வெளியிட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில், 2022–23, 2023–24 ஆகிய இரு ஆண்டுகளில் மட்டும் தமிழக அரசுப் பள்ளிக்கூடங்களில் மாணவர்களின் எண்ணிக்கை 5.31 இலட்சம் குறைந்திருக்கிறது. ஐந்தாண்டுகளுக்குக் கணக்கிட்டால் திமுக ஆட்சியில் மட்டும் அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 13.28 இலட்சம் குறைந்திருக்கக் கூடும். இது மிகவும் கவலையளிக்கும் புள்ளி விவரம் ஆகும்.

அரசுப் பள்ளிகளில் 10 ஆண்டுகளுக்கு முன் 75 இலட்சம் மாணவர்கள் படித்த நிலை மாறி, இப்போது 45 இலட்சம் பேர் மட்டுமே படிக்கின்றனர். அதே நேரத்தில், இதே காலக்கட்டத்தில் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 35 இலட்சத்திலிருந்து 65 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. பத்து ஆண்டுகளில் அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை 30 இலட்சம் குறைந்து, தனியார் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை அதே அளவு அதிகரித்ததற்குக் காரணம், அரசுப் பள்ளிகளில் போதிய கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படாததும், போதிய எண்ணிக்கையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாததும் தான் ஆகும். அரசுப் பள்ளிகளில் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்றால், உட்கட்டமைப்பு வசதிகளையும், ஆசிரியர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டியது அவசியம் ஆகும்.

### திமுக அரசின் தோல்விகள்

திமுக ஆட்சியில் பள்ளிக் கல்வித் துறையை மேம்படுத்த எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அரசுப் பள்ளிகளில் பெரும்பாலானவை இடிந்துவிழும் நிலையில் இருப்பதால், மரத்தடிகளில் வைத்துப் பாடங்களைக் கற்பிக்க வேண்டிய நிலை நிலவுகிறது. வகுப்பறைகளைக் கட்டுவதற்காகப் பேராசிரியர் அன்பழகன் பெயரில் புதிய திட்டம் தொடங்கப்பட்டாலும், அத்திட்டத்திற்கு ஒதுக்ககப்பட்ட நிதியில் பாதி அளவு கூடச் செலவிடப்படவில்லை. பள்ளிக் கல்வித்துறை வீழ்ச்சிக்கான திமுகவின் தோல்விகளில் முக்கியமானவை.

1. 3,800 பள்ளிகளில் 5 வகுப்புகளுக்கு ஓர் ஆசிரியர் மட்டுமே உள்ளார்.
2. தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒரு இலட்சம் வகுப்புகளுக்கு ஆசிரியர்களே இல்லை.
3. தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் என மொத்தம் 29,831 பள்ளிகளில் சராசரியாக 2.5 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர்.

4. ஐந்தாண்டுக்காலத் திமுக ஆட்சியில் ஒரே ஒரு முறை மட்டுமே இடைநிலை, பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
5. பகுதி நேரச் சிறப்பு ஆசிரியர்கள், தற்காலிக ஆசிரியர்கள் என 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்குப் பணி நிலைப்பு வழங்கப்படவில்லை.

## பள்ளிக் கல்வித்துறை வளர்ச்சிக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்:

1. மழலையர் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கப்படும். தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை அரசே செலுத்தும்.
2. தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்விச் செலவு, நலத் திட்டங்கள் ஆகியவற்றுக்காக ஒரு மாணவனுக்கு ஓராண்டுக்குச் சராசரியாக ரூ.1.06 இலட்சம் செலவிடப்படுகிறது. ஆனால், இந்தச் செலவுக்கான முழுமையான மதிப்பு மாணவர்களைச் சென்றடையவில்லை. இது குறித்து வல்லுநர் குழு அமைத்து ஆய்வு செய்து, மாணவர்களுக்குத் தரமான கல்வியும், கல்வி சார்ந்த உதவிகளும் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.
3. ஒவ்வொரு மாணவருக்கும் ஓராண்டுக்குக் கல்வி வழங்குவதற்காக மட்டும் ரூ.50,000 செலவிடப்படும். இதன் மூலம் உலகத் தரத்திலான கல்வி வழங்கப்படுவதை உறுதி செய்ய முடியும்.
4. பள்ளிக் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை முதல் கட்டமாக மாநிலத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில், 3%ஆக, அதாவது 2026–27ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 7 ஆயிரம் கோடியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 60,000 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்

5. அரசுப் பள்ளிகளில் தரமான கல்வி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக அடுத்த 5 ஆண்டுகளில் இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் என மொத்தம் 60,000 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.
6. ஓராசிரியர் பள்ளிகளே இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்படும். அடுத்த ஐந்தாண்டுகளில் 5ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் குறைந்தது 3 ஆசிரியர்களும், 8ஆம் வகுப்பு வரை உள்ள நடுநிலைப் பள்ளிகளில் குறைந்தது 6 ஆசிரியர்களும் இருப்பது உறுதி செய்யப்படும்.
7. ஆசிரியர்களின் தேவை முன்கூட்டியே கணக்கிடப்பட்டு, காலியிடங்கள் ஏற்படுவதற்கு முன்பே அவற்றை நிரப்புவதற்கான ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு விடுவார்கள்.

8. ஆசிரியர் தகுதித் தேர்வில் (டெட்) வெற்றிபெற்ற இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்குப் போட்டித் தேர்வுகள் நடத்தப்படாது. அவர்கள் தகுதி காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் நேரடியாக நியமிக்கப்படுவார்கள்.

9. 2011ஆம் ஆண்டுக்கு முன் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் நியமிக்கப்பட்டுப் பணியாற்றி வரும் டெட் தேர்வில் தேர்ச்சி பெறாத 4 இலட்சம் ஆசிரியர்களின் எதிர்க்காலத்தை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு எளிமையான முறையில் சிறப்பு டெட் தேர்வு நடத்தப்படும்.

10. ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றி பெறுவதற்கான தகுதி மதிப்பெண்கள் பொதுப் பிரிவினருக்கு 50%ஆகவும், அனைத்து இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கும் 40%ஆகவும் குறைக்கப்படும்.

11. அரசுப் பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையிலும், தொகுப்பூதிய அடிப்படையிலும் பணியாற்றும் கணினி ஆசிரியர்களும், பிற சிறப்பு ஆசிரியர்களும் பணி நிலைப்பு செய்யப்படுவார்கள்.

## 10, 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகள் ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படும்

12. மாநிலப் பாடத் திட்டத்தைப் பின்பற்றும் பள்ளிகளுக்கான தேர்வு முறையில் சீர்திருத்தம் செய்யும் நோக்குடன் 10 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகள் ஒவ்வொரு ஆண்டும் இருமுறை நடத்தப்படும். இருமுறையும் தேர்வுகளில் பங்கேற்ற மாணவர்கள், எந்தத் தேர்வில் அதிக மதிப்பெண் எடுத்தார்களோ அது கணக்கில் கொள்ளப்படும்.

13. அரசுப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் ஒரே மாதிரியான பாடத்திட்டம், தேர்வுமுறை கடைப்பிடிக்கப்படும்.

14. தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளை எதிர்கொள்ள வசதியாக 9–ஆம் வகுப்பிலிருந்தே சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

## ஆறாம் வகுப்பு முதல் புத்தகப் பை இல்லாக் கல்வி முறை – இலவச மடிக்கணினி, கைக்கணினி

15. அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் புத்தகப்பை இல்லாத கல்விமுறை அறிமுகம் செய்யப்படும். இதற்காகப் புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டு, அனைத்து மாணவர்களும் மடிக்கணினி அல்லது கைக் கணினி (டேப்லெட்) மூலம் பாடங்களைப் பின்பற்றும் வசதி ஏற்படுத்தப்படும். இந்த வசதி 6ஆம் வகுப்பு, 9ஆம் வகுப்பில் ஒரே நேரத்தில் அறிமுகம் செய்யப்பட்டு, அடுத்தடுத்த வகுப்புகளுக்குப் படிப்படியாக நீட்டிக்கப்படும்.

16. புத்தகப்பை இல்லாக் கல்வி முறையை செயல்படுத்துவதற்கு வசதியாக, 6ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு இலவசக் கைக் கணினி வழங்கப்படும்.

17. அரசுப் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் இலவச மடிக்கணினி வழங்கப்படும்.

18. கல்வி தொடர்பாக மாணவர்களுக்குத் தேவைப்படும் பேனா முதல் இலவசப் பேருந்து அட்டை, மிதிவண்டிகள் வரை அனைத்துப் பொருட்களும் இலவசமாக வழங்கப்படும்.

### மாணவர்களுக்கு நிதியுதவி

19. மாணவர்களின் இடைநிற்றலைத் தடுப்பதற்காக ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ–மாணவியருக்கு 10ஆம் வகுப்பில் மாதம் ரூ.500 வீதமும், 11, 12ஆம் வகுப்புகளில் மாதம் ரூ.1,000 வீதமும் நிதியுதவி வழங்கப்படும்.
20. மாணவர்கள் பள்ளிகளுக்கு எளிதாகச் சென்று வர வசதியாக, 'மாணவர்கள் மட்டும்' பேருந்துகள் இயக்கப்படும்.
21. தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் தரமான கல்வி வழங்கப்படுகிறதா? என்பதை ஆய்வு செய்யத் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்படும்.
22. அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் இடஒதுக்கீட்டைக் கட்டாயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
23. தமிழ் வழிக் கல்வி முறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.
24. மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தவும், ஆங்கிலத்தில் பேசும் திறனை ஏற்படுத்தவும் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படும்.
25. பள்ளிகளில் வாரப் பாட வேளைகளின் எண்ணிக்கை 35 ஆகக் குறைக்கப்படும்.
26. வாரத்திற்கு 5 பாட வேளைகள் விளையாட்டிற்கும், 3 பாட வேளைகள் தொழில் பயிற்சிக்கும், இரு பாட வேளைகள் நீதி போதனைக்கும் ஒதுக்கப்படுவது கட்டாயமாக்கப்படும். யோகா பயிற்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.
27. அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் மருத்துவ ஆய்வு நடத்தப்படும். இதற்காக, மாணவர்களுக்கு மருத்துவ ஸ்மார்ட் கார்டு (Health Smart Card) வழங்கப்படும்.

# அனைவருக்கும் உயர்கல்வி...
# அரசு கல்லூரிகள் தரம் உயர்த்தப்படும்!

தமிழ்நாட்டில் தரமான உயர் கல்வியை வழங்குவதில் திமுக அரசு படுதோல்வி அடைந்திருக்கிறது. இந்திய விடுதலைக்குப் பிறகு தமிழ்நாட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் மாணவர்கள் திரும்பிச் செல்வதும், ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் இடங்களை ஏற்படுத்திய பிறகும் விண்ணப்பித்த மாணவர்களுக்கு இடம் கிடைக்காத நிலை நிலவுவதும்தான் வாடிக்கை ஆகும். இந்தப் பெருமை திமுக ஆட்சியில் சீர்குலைந்திருக்கிறது.

திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 2022–23ஆம் ஆண்டில் 170 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 748 மாணவர்கள் முதலாம் ஆண்டில் சேர்ந்தனர். அதன்பின், ஒவ்வொரு ஆண்டும் மாணவர்ச் சேர்க்கை குறைந்து, 2025–26ஆம் ஆண்டில் 181 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்ச் சேர்க்கை வெறும் 96,000ஆகக் குறைந்திருக்கிறது. இதே காலக்கட்டத்தில், தனியார் கல்லூரிகளில் சேரும் மாணவ–மாணவிகளின் எண்ணிக்கை 1,94,306 என்ற அளவில் இருந்து 2025–26ஆம் ஆண்டில் 2,62,529ஆக அதிகரித்திருக்கிறது. இதற்குக் காரணம் அரசுக் கல்லூரிகளில் கல்வித் தரம் மிக மோசமாகச் சீரழிந்திருப்பதுதான்.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு ஐந்தாண்டுகளில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஒரே ஒரு உதவிப் பேராசிரியர் கூட நியமிக்கப்படவில்லை. அரசுக் கல்லூரிகளில் 11,000 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் இணைப் பேராசிரியர்கள் பணியிடங்கள் இருக்கும் நிலையில், அவற்றில் 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளன. திமுக ஆட்சியில் 35 புதிய கல்லூரிகள் தொடங்கப்பட்டாலும், அவற்றுக்கு ஒரே ஒரு ஆசிரியர் கூட நியமிக்கப்படவில்லை. இதுதான் உயர்கல்வித் துறையின் சீரழிவுக்கு மிக முக்கியக் காரணம் ஆகும்.

### திமுக அரசின் தோல்விகள்

கல்வி மற்றும் மாணவர்கள் நலன் தொடர்பாகத் திமுக ஆட்சியில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, மாணவர்களின் நலனுக்காக அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் பெரும்பான்மையாக நிறைவேற்றப்படவில்லை. திமுகவின் தோல்விகளில் முதன்மையானவை:

1. மாணவர்களின் கல்விக் கடன் ரத்து செய்யப்படும். (வாக்குறுதி எண்–159)
2. நீட் தேர்வு ரத்து செய்யப்படும். (வாக்குறுதி எண் – 160)

3. உயர் கல்வித் துறை அமைச்சர்கள் நான்குமுறை மாற்றம் செய்யப்பட்டனர்.
4. உயர் கல்வித் துறைச் செயலாளர்கள் ஏழு முறை பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.
5. உயர் கல்வித் துறையின் கீழ் செயல்படும் 13 பல்கலைக் கழகங்களில் 11 பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர்கள் இல்லை. மேலும், காரைக்குடி அழகப்பா மற்றும் திருநெல்வேலி மனோண்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர்களின் பதவிக் காலம் முடிந்து, நீட்டிக்கப்பட்டுள்ளது.

## உயர் கல்வித்துறை மேம்பாட்டுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. அரசு கலை அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள் ஆகியவற்றில் அனைவருக்கும் பட்டப்படிப்பு இலவசமாக வழங்கப்படும். கல்விக் கட்டணமாக ஒரு பைசாகூடச் செலுத்தத் தேவையில்லை.
2. அனைத்துத் தொகுதிகளிலும் ஓர் அரசு கலைக் கல்லூரி செயல்படுவது உறுதி செய்யப்படும். இப்போது, 181 கலைக் கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், ஆண்டுக்கு 12 கல்லூரிகள் வீதம் ஐந்தாண்டுகளில் 60 புதிய அரசு கலைக் கல்லூரிகள் திறக்கப்படும்.
3. ஒவ்வொரு மாவட்டத்திலும் இரு மகளிர் அரசு கலைக் கல்லூரிகள் செயல்படுவது உறுதி செய்யப்படும்.
4. மாவட்டத்திற்கு ஒரு பொறியியல் கல்லூரி இருக்கும் வகையில் புதிய கல்லூரிகள் தொடங்கப்படும்.
5. தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் 1000 பேரும், மாணவிகளில் 1000 பேரும் தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கு உயர்கல்வி பயில அனுப்பப்படுவர். இதற்கான அனைத்துச் செலவுகளையும் தமிழக அரசே ஏற்றுக்கொள்ளும்.

## உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் நியமிக்கப்படும்

5. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஒன்பதாயிரத்திற்கும் மேற்பட்ட உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், அவற்றை நிரப்பும் வகையில் ஆண்டுக்கு 2 ஆயிரம் பேர் வீதம் ஐந்தாண்டுகளில் 10 ஆயிரம் உதவிப் பேராசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

6. உதவிப் பேராசிரியர் நியமனங்களில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு பணியிடங்கள், பல்கலைக் கழக மானியக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட தகுதி பெற்ற கௌரவ விரிவுரையாளர்களுக்கு ஒதுக்கப்படும். அவர்கள் சிறப்புத் தேர்வு மூலம் நியமிக்கப்படுவார்கள்.

7. உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் வரை அவற்றில் பணியாற்றும் கௌரவ விரிவுரையாளர்களுக்கான ஊதியம் ரூ.50,000ஆக உயர்த்தப்படும். ஆண்டின் 12 மாதங்களுக்கும் அவர்களுக்கு ஊதியம் மற்றும் பிற உரிமைகள் வழங்கப்படும்.

## நீட் தேர்வு விலக்கு - கல்விக் கடன் தள்ளுபடி

8. மருத்துவப் படிப்பில் சேர்வதற்கான நீட் எனப்படும் நுழைவுத் தேர்வில் இருந்து தமிழ்நாட்டில் உள்ள அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு மட்டும் விலக்கு பெறப்படும். புதிய சட்டத்தை இயற்றி, மத்திய அரசிடம் பேசி இது சாத்தியமாக்கப்படும்.

9. உயர்கல்வி முடித்து 2 ஆண்டுகளுக்குள் பணியில் சேராத மாணவர்கள் பெற்ற கல்விக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். இந்தக் கடன் தொகையை அரசே செலுத்தும்.

## செயற்கை அறிவுத் திறன் - உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள்

10. சென்னையில் செயற்கை அறிவுத் திறன் பல்கலைக் கழகம் (Artificial Intelligence (AI) University) தொடங்கப்படும். செயற்கை அறிவுத் திறன் நிறுவனத்துடன் இணைந்து இப்பல்கலைக் கழகம் செயல்படும்.

11. கோவையில் திறன் பல்கலைக் கழகம் (Skill University) தொடங்கப்படும்.

12. சென்னைப் பல்கலைக் கழகமும், அண்ணா பல்கலைக் கழகமும் திறன்சார் அறிவு மையங்களாகத் (Centre of Excellence) தரம் உயர்த்தப்படும்.

13. தமிழகத்தில் 6 ஒருமைப் பல்கலைக்கழகங்கள் (Unitary Universities) அமைக்கப்படும். ஆராய்ச்சிகளைச் செய்வது மட்டுமே இவற்றின் முதன்மை நோக்கமாக இருக்கும்.

12. சென்னையில் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (Indian Institute of Science Education and Research - IISER) அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மத்திய அரசிடம் வலியுறுத்தி, ஓராண்டிற்குள் இந்த உயர் கல்வி நிறுவனம் தொடங்கப்படும்.

13. தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களும் 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திலும் ஐ.ஐ.டி,க்கு இணையான ஓர் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (Tamilnadu Institute of Technology - TIT) அமைக்கப்படும். ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு சட்டக்கல்லூரியும், ஒரு வேளாண் கல்லூரியும் அமைக்கப்படும்.

### தமிழ்நாடு பல்கலைக்கழக மேலாண்மை ஆணையம்

14. தேசிய அளவில் பல்கலைக்கழக மானியக் குழு செயல்படுவதைப் போன்று, தமிழ்நாட்டில் தமிழ்நாடு பல்கலைக் கழக மேலாண்மை ஆணையம் என்ற புதிய அமைப்பு ஏற்படுத்தப்படும். பல்கலைக்கழகங்களுக்கு நிதி வழங்குதல், பாடத் திட்ட வழிகாட்டுதல்களை வழங்குதல் உள்ளிட்ட பணிகளை இந்த ஆணையம் மேற்கொள்ளும்.

15. பல்கலைக்கழகங்களை நிர்வகிக்கப் பல்கலைக்கழக நிர்வாகப் பொதுச் சட்டம் கொண்டு வரப்படும்.

16. பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்கள் முதல் பேராசிரியர்கள் வரையிலான ஆசிரியர்களையும், ஆசிரியர்கள் அல்லாத பிற பணியாளர்களையும் தேர்வு செய்யத் தனி ஆணையம் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் பல்கலைக் கழகப் பணி நியமனங்களில் ஊழல் தடுக்கப்படும்.

### மாணவர்கள் ஆணையம்

17. உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் நலன்களைப் பாதுகாக்க மாணவர்கள் ஆணையம் அமைக்கப்படும். மாணவர்களிடம் பாகுபாடு காட்டப்பட்டாலோ, உரிமைகள் பறிக்கப்பட்டாலோ இந்த ஆணையம் நடவடிக்கை எடுக்கும்.

18. நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள், தனியார் கல்லூரிகளில் இடஒதுக்கீட்டு முறையை நடைமுறைப்படுத்த பா.ம.க. நடவடிக்கை எடுக்கும்.

19. தமிழகத்தில் உள்ள ஐ.ஐ.டி., ஐ.ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., மத்தியப் பல்கலைக் கழகம், தேசியச் சட்டப் பள்ளி உள்ளிட்ட மத்தியக் கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் 50% இடங்களை மாநில ஒதுக்கீடாக வழங்க வேண்டும் எனப் பா.ம.க. வலியுறுத்தும்.

# அனைவருக்கும் மருத்துவம் இலவசம்... அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகள்!

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மருத்துவத் துறையின் இருண்ட காலம் என்றால் அது 2021ஆம் ஆண்டு முதல் 2026ஆம் ஆண்டு வரையிலான திமுக ஆட்சி தான். 1980ஆம் ஆண்டில் தொடங்கி, 2021ஆம் ஆண்டு வரையிலான 41 ஆண்டுகளில் தமிழ்நாட்டை அதிமுகவும், திமுகவும் 9 முறை மாறிமாறி ஆட்சி செய்திருக்கின்றன. இந்தக் காலத்தில் ஒவ்வொரு ஆட்சியிலும் குறைந்தது ஒரு மருத்துவக் கல்லூரியாவது அமைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக 2011 முதல் 2016 வரையிலான ஐந்தாண்டுகளில் 4 மருத்துவக் கல்லூரிகள், 2016 முதல் 2021 வரையிலான ஐந்தாண்டுகளில் 14 மருத்துவக் கல்லூரிகள் என மொத்தம் பத்தாண்டுகளில் 18 மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2021ஆம் ஆண்டில் மட்டும் மத்திய அரசின் நிதியுதவியுடன் 11 மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டதற்குப் பாட்டாளி மக்கள் கட்சியும் ஒரு வகையில் காரணமாக இருந்திருக்கிறது.

ஆனால், 2021ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த திமுக, அதன் முழு ஐந்தாண்டுக் காலத்தில் ஒரே ஒரு மருத்துவக் கல்லூரியைக் கூடத் திறக்கவில்லை. அதுமட்டுமின்றி, ஏற்கெனவே உள்ள மருத்துவக் கல்லூரிகளில் கடந்த ஐந்தாண்டுகளில் ஒரே ஒரு மாணவர் சேர்க்கை இடத்தைக்கூட திமுக அரசு புதிதாக ஏற்படுத்தவில்லை. அதேபோல், அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மருத்துவர்கள், செவிலியர்கள் என ஒரே ஒரு பணியாளரைக் கூட நிரந்தர அடிப்படையில் நியமிக்கவில்லை. இதனால், மருத்துவக் கல்வியும், மருத்துவச் சேவையும் பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றன. இந்த நிலை கண்டிப்பாக மாற்றப்பட்டாக வேண்டும்.

### திமுக அரசின் தோல்விகள்

2021ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான திமுகவின் தேர்தல் அறிக்கையில், மருத்துவச் சேவை, மருத்துவக் கல்வி ஆகியவை சார்ந்து 18 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. அவற்றில் 15 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. 3 வாக்குறுதிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டன.

**நிறைவேற்றப்படாத முக்கிய வாக்குறுதிகள்:**

1. கோவை, நெல்லை, திருச்சி மற்றும் கிருஷ்ணகிரியில் மாநில அரசின் நிதியிலிருந்து புதிய உயர் சிறப்பு மருத்துவமனைகள் 3 ஆண்டுகளில் கட்டப்படும். (வாக்குறுதி எண் – 348)

2. 108 ஆம்புலன்ஸ் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் ஆம்புலன்ஸ் வாகனங்களின் எண்ணிக்கை முதல் கட்டமாக 2 ஆயிரமாக உயர்த்தப்படும். (வாக்குறுதி எண் – 349)
3. மாவட்ட நெடுஞ்சாலைகளில் 50 கிமீ தொலைவிற்கு ஒன்று வீதம் அவசரச் சிகிச்சை மருத்துவமனை அமைக்கப்படும். (வாக்குறுதி எண் – 350)
4. விரிவுபடுத்தப்பட்ட சென்னைப் பெருநகரில் தாம்பரம், சோழிங்கநல்லூர், மதுரவாயல் ஆகிய 3 இடங்களில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய அரசு மருத்துவமனைகள் கட்டப்படும். (வாக்குறுதி எண் – 354)
5. அரசு மருத்துவமனைகளில் உள்ள காலிப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படுவதோடு, ஒப்பந்த நியமன முறையில் தற்போது பணியாற்றும் மருத்துவர்களும், செவிலியர்களும் பணிநிரந்தரம் செய்யப்படுவார்கள். (வாக்குறுதி எண் – 356)

## நலவாழ்வுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரிகள் இல்லாத காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், மயிலாடுதுறை, பெரம்பலூர், தென்காசி ஆகிய 6 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும். கடலூர் மாவட்டத்தில் இரண்டாவது அரசு மருத்துவக் கல்லூரி கடலூரில் அமைக்கப்படும். தமிழ்நாட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கக் கூடாது என்ற தேசிய மருத்துவ ஆணையத்தின் தடையைத் தளர்த்தி, இக்கல்லூரிகள் அமைக்கப்படும்.
2. அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனைகளில் செயற்கைக் கருத்தரிப்பு மையங்கள் (IVF Centres) அமைக்கப்படும்.
3. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் எங்கெல்லாம் இதய அறுவைச் சிகிச்சை மையம், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை மையம் போன்றவை இல்லையோ, அங்கெல்லாம் அவை உள்ளிட்ட அனைத்துத் துறை அறுவைச் சிகிச்சை மையங்கள் தொடங்கப்படும்.
4. பெருகிவரும் முதியோர் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் முதியோர் சிகிச்சைப் பிரிவு உருவாக்கப்படும்.
5. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சித்த மருத்துவப் பிரிவு முழு அளவில் செயல்படுவது உறுதி செய்யப்படும்.
6. தஞ்சாவூர், கோவை, சேலம், வேலூர், நெல்லை ஆகிய நகரங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள் எய்ம்ஸ் எனப்படும் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்திற்கு இணையானவையாகத் தரம் உயர்த்தப்படும்.

7. மெட்ராஸ் மருத்துவக் கல்லூரி தென்னிந்தியாவின் முதலாவது உயர் சிறப்பு மருத்துவ மையமாகத் (Center of excellence) தரம் உயர்த்தப்படும்.

8. அரசு மருத்துவக் கல்லூரிகளில், செவிலியர் பயிற்சிக் கல்லூரி இல்லாத இடங்களில் புதிய செவிலியர் பயிற்சிக் கல்லூரிகள் திறக்கப்படும்.

### கூட்டுறவு மருத்துவக் கல்லூரிகள்

9. மருத்துவர்கள் ஒன்றாக இணைந்து கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, அதன் மூலமாக மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்துவது ஊக்குவிக்கப்படும். கூட்டுறவு மருத்துவக் கல்லூரிகளை அமைக்கத் தமிழக அரசின் சார்பில் 25% மானியம் வழங்கப்படும். இந்த மருத்துவக் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் மிகவும் குறைவாக நிர்ணயிக்கப்படும் என்பதால், ஏழைகளும் மருத்துவக் கல்வி பெற வாய்ப்பாக அமையும்.

10. சென்னையில் ரூ.1000 கோடி செலவில் மாநிலப் புற்றுநோய் மருத்துவ மையத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

11. புற்றுநோய் சிகிச்சைக்கான மருந்துகள் மிகவும் அதிக விலை கொண்டவை என்பதால் அவற்றை வாங்க மக்களுக்கு நிதி உதவி வழங்கப்படும். இதற்காகத் தனி நிதியம் ஏற்படுத்தப்படும்.

12. மருந்து மாத்திரைகளின் விலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தரப்பெயர் இல்லாத மருந்து மாத்திரைகள் (Generic Medicine) ஊக்குவிக்கப்படும்.

### அனைவருக்கும் தரமான இலவச மருத்துவம்

13. தமிழ்நாட்டில் அனைத்து மருத்துவமனைகளிலும் உலகத் தரம் வாய்ந்த மருத்துவச் சிகிச்சை இலவசமாக வழங்கப்படும். இதற்கு வசதியாகத் தமிழகத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும்.

14. வருமான வரம்பின்றி அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு வழங்கப்படும். அதற்கான பிரீமியத் தொகையைத் தமிழக அரசே செலுத்தும்.

15. தமிழ்நாட்டில் 50 வயதைக் கடந்த அனைவருக்கும் முழு மருத்துவப் பரிசோதனை இலவசமாக மேற்கொள்ளப்படும். அரசு மருத்துவமனை, தனியார் மருத்துவமனை உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் இதை மக்கள் இலவசமாகச் செய்துகொள்ள முடியும்.

### ஒரு இலட்சம் ஆஷாக்கள் நியமனம்

16. தமிழகத்தின் ஊர்ப்புறங்களில் மருத்துவச் சேவை வழங்குவதில் உதவுவதற்காக ஆஷாக்கள் (Accredited Social Health Activists - ASHAs) நியமிக்கப்படுவார்கள். தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 79,394 ஊர்களிலும் இந்தச் சேவையை வழங்க வசதியாக, ஒரு இலட்சம் ஆஷாக்கள் நியமிக்கப்படுவார்கள்.

17. பள்ளிக் குழந்தைகளின் மதிய உணவில் அவர்களுடைய ஒரு நாள் தேவைக்கான வைட்டமின்களும், தாது உப்புக்களும் இருப்பது உறுதி செய்யப்படும்.

18. மருத்துவர் அன்புமணி இராமதாசு அவர்களின் சீரிய முயற்சியால், தேசிய அளவில் தொடங்கப்பட்ட 108 அவசர ஊர்தித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 28.02.2026 அன்றைய நிலவரப்படி, 1353 அவசர ஊர்திகள் செயல்படுகின்றன. இவற்றுக்கான தேவை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, இவற்றின் எண்ணிக்கை கிட்டத்தட்ட இரட்டிப்பாக 2,500 ஆக உயர்த்தப்படும்.

### மகப்பேறு கால நிதியுதவி ரூ.25,000

19. கருவுற்ற பெண்களுக்கான மகப்பேறு கால நிதிஉதவி ரூ.25,000 ஆக உயர்த்தப்படும்.

20. ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மக்களிடம் பரப்புவதற்காகச் சிற்றூர் தொடங்கி நகரம் வரை அனைத்து ஊர்களிலும் பொதுமக்கள் நடைப்பயிற்சி செய்வதற்கும், உடற்பயிற்சிகள் செய்வதற்கும் திடல்கள் உருவாக்கப்படும்.

21. பள்ளிக்கூட மருத்துவப் பரிசோதனைத் திட்டத்தில் அனைத்துப் பள்ளிச் சிறார்களுக்கும் முழு உடல் பரிசோதனை செய்யப்படும். இதற்காக, அவர்களுக்கு மருத்துவ ஸ்மார்ட் அட்டை வழங்கப்படும்.

### குழந்தைகள் நலன் - புகையிலைக்குத் தடை

22. அனைத்துக் குழந்தைகளுக்கும் 100% தடுப்பூசி மற்றும் தடுப்பு மருந்துகள் வழங்கப்படும்.

23. பிறந்த குழந்தைகளுக்கு ஒரு வயது நிறைவடையும் வரை குழந்தையின் தாய்க்கு நாள்தோறும் ஒரு லிட்டர் பால் இலவசமாக வழங்கப்படும்.

24. பொது இடங்களில் புகைபிடிக்க விதிக்கப்பட்ட தடை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். பான், குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.

25. அரசு மருத்துவமனைகளில் புகையிலை மீட்பு மையங்கள் அமைக்கப்படும். மருத்துவர்கள் அனைவரும் புகையிலைக்கு எதிரான விழிப்புணர்வை மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுவார்கள்.

26. புகையிலைப் பொருட்களின் விலையை அதிகரித்து, விற்பனையைக் குறைக்கும் நோக்குடன் 100% மதிப்புக்கூட்டல் வரி விதிக்கப்படும்.

27. பள்ளிகள், கல்லூரிகள் 100 மீட்டர் சுற்றளவில் புகையிலைப் பொருட்கள் விற்கக் கூடாது என்ற விதியும், 18 வயது முடியாதவர்களுக்கும் புகையிலைப் பொருட்கள் விற்கக் கூடாது என்ற விதியும் கட்டாயமாகச் செயலாக்கப்படும்.

### உடலியக்க மருத்துவத் (பிசியோதெரபி) துறை

28. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் வட்ட மருத்துவமனைகளில் உடலியக்க மருத்துவப் (பிசியோதெரபி) பிரிவு ஏற்படுத்தப்படும்.
29. அனைத்து மாவட்டங்களிலும் அரசு உடலியக்க மருத்துவக் கல்லூரிகள் படிப்படியாகத் தொடங்கப்படும்.
30. பொது சுகாதார சேவைத் திட்டங்களில் பணியமர்த்தப்படும் உடலியக்க மருத்துவர்களுக்கு ரூ.40,000 குறைந்தபட்ச ஊதியமாக நிர்ணயிக்கப்படும்.
31. உடலியக்க மருத்துவம் சார்ந்த கிளினிக் அமைப்பதற்கான ஒழுங்குமுறை விதிகள் எளிமைப்படுத்தப்படும்.
32. தனியார் மருத்துவமனைகள் மற்றும் தனியாக சேவை செய்யும் உடலியக்க மருத்துவர்களுக்கு நல வாரியம் அமைக்கப்படும்.

### மருத்துவர்கள் / மருத்துவமனைகளுக்கு பாதுகாப்பு

33. தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (The Tamil Nadu Clinical Establishments (Regulation) Act) 5ஏ பிரிவு தவறாகவும், பழிவாங்கும் நோக்கத்துடனும் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க அதில் தேவையான திருத்தங்கள் செய்யப்படும்.
34. மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் பாதுகாப்புச் சட்டம் உறுதியாக செயல்படுத்தப்படும். இந்தச் சட்டத்தின்படி மருத்துவர்கள் அளிக்கும் புகார்களின் அடிப்படையில் 12 மணி நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுவது கட்டாயமாக்கப்படும்.
35. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்படி அளிக்கப்படும் சிகிச்சைகளுக்கான கட்டணம் இந்திய மருத்துவர்கள் சங்கம் ஆய்வுகளின் அடிப்படையில் வழங்கும் பரிந்துரைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படும்.
36. அரசாணை எண் 153/2012–இன்படி ஆண்டுதோறும் ஜூலை 1ஆம் தேதி தேசிய மருத்துவர்கள் தினம் அரசின் சார்பில் கொண்டாடப்படுவதும், சிறந்த சேவையாற்றும் மருத்துவர்களுக்கு ரூ.50,000 ரொக்கப் பரிசு, பதக்கம், சான்றிதழ்களுடன் கூடிய விருதுகள் வழங்கப்படும்.
37. உள்ளாட்சிகளிடமிருந்து உரிமம் பெறுவது, வணிக உரிமம் பெறுவது ஆகியவற்றிலிருந்து 50 படுக்கைகளுக்கும் குறைவாக உள்ள மருத்துவமனைகளுக்கு விலக்கு அளிக்கப்படும்.
38. மருத்துவமனைகளின் பணியாளர்கள் தேவையை நிறைவேற்றும் வகையில், அரசு மருத்துவக் கல்வி நிறுவனங்களில் துணை மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை இடங்கள் அதிகரிக்கப்படும்.
39. அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்களின் நிர்வாக மற்றும் மருத்துவம் சாராத பணிகளை கவனித்துக் கொள்ள உதவியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

# 5 இலட்சம் பேருக்கு அரசு வேலை! வேலையில்லா இளைஞர்களுக்கு மாதம் ரூ.5,000 உதவித்தொகை!

ஒரு மாநிலத்தின் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளில் முதன்மையானவை தரமான கல்வி வழங்குவதும், கண்ணியமான வேலை வழங்குவதும் ஆகும். ஆனால், இந்த இரண்டிலும் திமுக அரசு படுதோல்வி அடைந்துவிட்டது. தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் இளைஞர்கள் படித்துவிட்டு, அவர்களின் தகுதிக்கு ஏற்ற வேலை கிடைக்காமல், கிடைத்த வேலையைச் செய்து வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 6 இலட்சம் பேர் பட்டப்படிப்பைப் படித்துவிட்டு வெளியேறும் நிலையில், அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமை ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் அரசுத் துறையில் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகளையும், தனியார் துறைகளில் 10 இலட்சம் வேலைவாய்ப்புகளையும் வழங்கினால் தான் படித்த இளைஞர்களுக்கு கண்ணியமான ஊதியத்துடன் கூடிய வேலைகள் கிடைப்பதை உறுதி செய்ய முடியும். ஆனால், திமுக ஆட்சியில் 5 ஆண்டுகளுக்கும் சேர்த்தே 94,000 பேருக்கு மட்டுமே அரசு வேலைகள் வழங்கப்பட்டுள்ளன. தனியார் துறையில் அதிகப்பட்சமாக 5 இலட்சம் பேருக்குக் கூட வேலை வழங்கப்படவில்லை. இதனால், தமிழ்நாட்டில் தகுதிக்கு ஏற்ற வேலை கிடைக்காத இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் வளர்ச்சியை உறுதி செய்ய அரசு மற்றும் தனியார் வேலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குப் பாட்டாளி மக்கள் கட்சி உறுதிபூண்டிருக்கிறது.

## திமுக அரசின் தோல்விகள்

அரசு வேலைவாய்ப்புகள் மூலம் இளைஞர்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்தித் தரவேண்டிய திமுக அரசு, இளைஞர்களின் எதிர்க்காலத்தைச் சீரழிக்கும் செயல்களை மட்டுமே செய்தது. அரசுத் துறைகளில் புதிய பணியிடங்களை ஏற்படுத்துவதாக வாக்குறுதி அளித்த திமுக அரசு, அதைச் செய்வதற்குப் பதிலாக இருக்கும் பணியிடங்களையும் ஒழித்தது.

**திமுகவின் தோல்விகளில் முதன்மையானவை**

1. ஐந்தரை இலட்சம் பேருக்கு அரசு வேலைகள் வழங்குவதாக வாக்குறுதி அளித்துவிட்டு, அதில் 17%, அதாவது 94 ஆயிரம் பேருக்கு மட்டுமே அரசு வேலை வழங்கியது.
2. ஐந்தாண்டுகளில் புதிதாக ஓய்வுபெற்றவர்களால் ஏற்பட்ட காலியிடங்களைக் கூட நிரப்பவில்லை.

3. காலியான பணியிடங்களில் நிரந்தரப் பணியாளர்களை நியமிப்பதற்குப் பதிலாக ஒப்பந்தப் பணியாளர்களை நியமித்தது.
4. அனைத்து அரசுத் துறைகளுக்கும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமே ஆட்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று சட்டம் இயற்றிய திமுக அரசு, அதை மதிக்காமல், நகராட்சி நிர்வாகத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, கூட்டுறவுத் துறை போன்றவற்றுக்குத் தனித்தனியாக ஆள்தேர்வு நடத்திப் பல்லாயிரம் கோடி ரூபாய் ஊழல் செய்தது.

**வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:**

1. தமிழக அரசுத் துறைகளில் நீக்கப்பட்ட பணியிடங்களை மீண்டும் ஏற்படுத்துதல், காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களையும் நிரப்புதல் ஆகியவற்றின் மூலம் 5 இலட்சம் பேருக்கு அரசு வேலை வழங்கப்படும்.
2. 2026–27, 2027–28 ஆகிய இரு ஆண்டுகளில் மட்டும் 2.5 இலட்சம் பேருக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கப்படும். கீழ்க்கண்ட துறைகளில் கீழ்க்கண்ட எண்ணிக்கையில் வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்.

   அ. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்ட நான்காம் தொகுதிப் பணிகளுக்கு 35,000 பேர் தேர்வு செய்யப்படுவார்கள்.

   ஆ. இரண்டாம் தொகுதிப் பணிகளுக்கு 10,000 பேர் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

   இ. அரசுப் பள்ளிகளில் வகுப்புக்கு ஓர் ஆசிரியர் வீதம் நியமிக்கவும், காலியிடங்களை நிரப்பவும் ஒரு இலட்சத்திற்கும் கூடுதலான ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும். முதல்கட்டமாக 2025–26ஆம் ஆண்டில் 40,000 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

   ஈ. காவல்துறை, தீயவிப்புத்துறை, வனத்துறை உள்ளிட்ட சீருடைப் பணிகளுக்கு 20,000 பேர் தேர்வு செய்யப்படுவார்கள்.

   உ. போக்குவரத்துத் துறையில் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்கு 10,000 பேர் நியமனம் செய்யப்படுவார்கள்.

   ஊ. மின்சார வாரியத்தில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில்நுட்பப் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், முதல்கட்டமாக 16,000 பணியிடங்கள் நிரப்பப்படும்.

   எ. அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 4,000 மருத்துவர்கள், 3,000 மருத்துவத்துறைப் பணியாளர்கள் என மொத்தம் 7,000 பேர் நியமிக்கப்படுவர்.

   ஏ. தமிழக அரசால் தொடங்கப்படவுள்ள 30,000 காவிரி பல்பொருள் அங்காடிகளில் பணி செய்வதற்காக ஒரு இலட்சம் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

   ஐ. வேளாண் விளைபொருட்கள் கொள்முதல் வாரியத்திற்கு 12,000 பேர் தேர்வு செய்யப்படுவார்கள்.

மேற்கண்ட பணிகளுக்கான ஆள்தேர்வு அறிவிக்கைகள் செப்டம்பர் மாதத்தில் வெளியிடப்படும். ஒவ்வொரு பணிக்கும் போட்டித்தேர்வுகள், சான்றிதழ் சரிபார்ப்புகள் போன்ற நடைமுறைகள் 6 மாதங்களில் நிறைவு செய்யப்படும்.

3. அரசுப் பணியாளர் நியமனங்களில் நேர்முகத் தேர்வுதான் ஊழலுக்கு வகை செய்கிறது என்பதால், மாவட்டத் துணை ஆட்சியர், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் உள்ளிட்ட தொகுதி – 1 பணிகள் உட்பட அனைத்துப் பணிகளுக்கும் நேர்முகத் தேர்வுகள் இரத்து செய்யப்படும்.

## வேலையில்லா இளைஞர்களுக்கு ரூ.5,000 உதவித் தொகை

4. ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தபட்சம் ஒருவருக்கு அரசு அல்லது தனியார் துறையில் காலமுறை ஊதியத்துடன் கூடிய வேலை உறுதி செய்யப்படும்.

5. பட்டப்படிப்பை முடித்து அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, 5 ஆண்டுகள் முடிந்தும் வேலை கிடைக்காத இளைஞர்களுக்கு மாதம் ரூ.5,000 வீதம் நிதியுதவி வழங்கப்படும். 5 ஆண்டுகளுக்கு இந்த நிதியுதவி வழங்கப்படும்.

6. தமிழ்நாட்டில் 2028ஆம் ஆண்டில் திறன்மிக்க தொழிலாளர்கள் 50 இலட்சம் பேர் தேவைப்படுவார்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன. இந்தத் தேவையை நிறைவேற்றும் வகையில், பட்டம் மற்றும் தொழிற்கல்வி படித்த இளைஞர்களுக்கு அரசு உதவித்தொகையுடன் வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

## தனியார் வேலைவாய்ப்புக்குத் தனி வேலைவாய்ப்பு அலுவலகம்

7. தமிழ்நாட்டில் உள்ள தனியார் வேலைவாய்ப்புகளில் 80 விழுக்காட்டைத் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வழங்கச் சட்டம் இயற்றப்படும். அதன் ஒரு கட்டமாகத் தனியார் நிறுவனங்களையும், வேலைவாய்ப்பு தேடும் தமிழ்நாட்டு இளைஞர்களையும் ஒருங்கிணைக்கும் வகையில், தனி வேலைவாய்ப்பு அலுவலகம் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் தொடங்கப்படும்.

8. அரசுப் போட்டித் தேர்வுகள், தனியார் நிறுவனங்கள் நடத்தும் நேர்காணல்கள் ஆகியவற்றுக்குப் படித்த இளைஞர்களைத் தயார் செய்யும் வகையில் அனைத்து வட்டத் தலைநகரங்களிலும் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

## புத்தொழில், கூட்டுறவுத் தொழில் நிறுவனங்களுக்கு உதவி

9. குறைந்தபட்சம் 10 பேருக்கு வேலை வழங்கக்கூடிய புதிய நிறுவனங்கள் (Startup Companies) தொடங்கப்படும் போது, அவற்றுக்கு ரூ.10 இலட்சம் வரை வட்டியில்லாத கடனாகவோ, அல்லது அரசின் பங்கு மூலதனமாகவோ (Seed Funding) வழங்கப்படும்.

10. கூட்டாகத் தொழில் தொடங்கச் சிறப்பு அமைப்பினை (Co-Operative Clusters) ஏற்படுத்தி, இளைஞர்களை ஒருங்கிணைத்து, அவர்கள் வாழும் பகுதிக்கு ஏற்ற தொழில்களைக் கூட்டுறவு முறையில் ஏற்படுத்த மானியத்துடன் கடன் வழங்கப்படும்.

11. சொந்தத்தொழில் தொடங்க விரும்புவோருக்கான வழிகாட்டி அமைப்பு தொடங்கப்படுவதுடன், சிறப்பு நிதி மூலம் வட்டியில்லாக் கடன் வழங்கப்படும்.

12. வேளாண்மை சார்ந்த மதிப்புக்கூட்டுப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில் திட்டங்களை ஊக்குவிக்கும் வகையில், பயிற்சி மற்றும் கடனுதவி வழங்கப்படும்.

13. வேலை வாய்ப்பை அளிக்கும் தொழில் திட்டங்களுக்கு வரிச் சலுகைகள் வழங்கப்படும்.

# 5 ஆண்டுகளில் ஒரு கோடிப் பேருக்கு வேலை!

தமிழ்நாட்டில் படித்த இளைஞர்களுக்குக் கண்ணியமான ஊதியத்துடன் கூடிய வேலைகளை வழங்க அரசுத் துறைகளை மட்டுமே நம்பியிருக்க முடியாது. தனியார் துறைகளில் கால முறை ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்புகள் உள்ளூர் இளைஞர்களுக்கு வழங்கப்படுவதன் வாயிலாகவே அவர்கள் கௌரவமாக வாழ்வதை உறுதி செய்யமுடியும். ஆனால், தனியார்துறை வேலைவாய்ப்புகளைப் பெருக்கத் திமுக அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குதல், வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கான புதிய தொழில் துறைகளைக் கண்டறிதல் ஆகியவற்றின் மூலமாக மட்டுமே புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த முடியும். குறைந்த முதலீட்டில் அதிக வேலைவாய்ப்புகள் கிடைப்பதையும் உறுதி செய்ய வேண்டும். ஆனால், இவற்றுக்கான தொலைநோக்குப் பார்வை திமுக அரசுக்கு இல்லை.

### திமுக அரசின் தோல்விகள்

தனியார் துறையில் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வழங்குவதில் திமுக அரசு செய்த துரோகங்களில் மிகப் பெரியது என்னவென்றால், தனியார் நிறுவனங்களின் வேலைவாய்ப்புகளில் 75 விழுக்காட்டைத் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வழங்க வகை செய்யும் விதத்தில் சட்டம் இயற்றப்படும் என்று வாக்குறுதி அளித்து அதை நிறைவேற்றாததுதான். இதனால், தமிழக நிறுவனங்களில் பிற மாநிலத்தவருக்கே அதிக வேலைகள் கிடைத்தன.

1. தமிழ்நாட்டில் புதிய தனியார் தொழிற்சாலைகள் தொடங்கப்படுவதை ஊக்குவிக்காதது.
2. தொழில் தொடங்க முன்வருவோரிடம் அதிகக் கையூட்டு கேட்டதன் மூலம் அந்த நிறுவனங்கள் பிற மாநிலங்களுக்குச் செல்ல வழிவகுத்தது.
3. தருமபுரி போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் சிப்காட் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு, பல ஆண்டுகள் ஆகியும் அங்குத் தொழிற்சாலைகளைத் தொடங்க முன்வராதது.

**ஒரு கோடி வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்:**

1. வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையில் 50 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் இந்த வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.
2. தென்னைகளில் இருந்து இறக்கப்படும் நீரா பானத்தைப் பாதுகாப்பான முறையில் உறைகளில் அடைத்துத் தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டத்தின் மூலமாகத் தமிழகத்தில் 1 இலட்சம் பேருக்கு நேரடியாகவும், 2 இலட்சம் பேருக்கு மறைமுகமாகவும் வேலை கிடைக்கும்.
3. ஊர்ப்புற சுயஉதவிக் குழுக்கள் மூலம் ஆடுகள், கோழிகள், வான்கோழிகள், மீன்கள் ஆகியவை விற்பனை செய்யப்படும். பட்டதாரி இளைஞர் குழுக்கள் மூலம் முக்கிய நகரங்களிலும், சாலையோரங்களிலும் நவீன உணவகங்கள் அமைக்கப்பட்டு, சுயஉதவிக் குழுக்கள் வளர்க்கும் ஆடுகள், கோழிகள், மீன்கள் ஆகியவை சுவையாகச் சமைத்து வழங்கப்படும். இதனால், பல இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.
4. சர்வதேசத் தளவாடக் கிடங்கு மையம் (International Warehousing Hub): தமிழ்நாட்டில் உள்ள 6 பெரிய துறைமுகங்கள் மற்றும் 20 சிறிய துறைமுகங்களை இணைத்துத் தமிழகம் உலகின் தளவாடக் கிடங்கு மையமாக மாற்றப்படும். துறைமுக நகரங்கள் அனைத்திலும் அனைத்து வசதிகளும் கொண்ட கிடங்குகள் ஆயிரக்கணக்கில் உருவாக்கப்படும். இதனால், இந்தியாவிலிருந்து ஏற்றுமதி அதிகரிக்கும். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் 10 இலட்சம் பேருக்கு வேலை கிடைப்பது உறுதிசெய்யப்படும்.
5. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்துச் சென்னையில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும். கோவை மற்றும் திருப்பூரில் ஆடை சார்ந்த தொழில்களும், நீலகிரி, கன்னியாகுமரி, திண்டுக்கல், நாமக்கல், தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களில் சுற்றுலா சார்ந்த தொழில்களும் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் 2 இலட்சம் பேருக்கு வேலை கிடைக்கும்.
6. தமிழ்நாட்டில் இருந்து பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் தகவல்தொழில்நுட்பம், சுற்றுலா, ஆடை தயாரிப்பு உள்ளிட்ட பொருட்கள் மற்றும் சேவைத்துறை மூலம் பல இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கமுடியும்.
7. படித்த இளைஞர்களில் சொந்தத்தொழில் தொடங்க விருப்பம் உள்ளவர்கள் தாங்கள் தொடங்கவுள்ள தொழிலுக்கான திட்ட அறிக்கை மற்றும் அதற்குத் தேவைப்படும் முதலீடுகள் குறித்த விவரங்களுடன் விண்ணப்பித்தால், அவர்களுக்குப் பொதுத்துறை வங்கிகள் மூலம் ரூ.5 இலட்சம் வரை கடன் பெற்றுத் தர வழிவகை செய்யப்படும்.
8. ஒரு கோடிப் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித் தருவதற்கான இந்தப் பணிகளை மேற்கொள்ளத் தனித் துறை உருவாக்கப்படும். இத்துறை முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும். இத்துறைக்கான அலுவலகங்கள் மற்றும் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்காகத் தொடராச் செலவினமாக (Non Recurring Expenditure) ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

# சமூகநீதிக் கணக்கெடுப்பு நடத்தப்படும்: வன்னியர்களுக்கு உள்இடஒதுக்கீடு - அனைத்துச் சமூகங்களுக்கும் சமூகநீதி!

சமூகநீதியின் தொட்டில் என்று தமிழ்நாடு போற்றப்பட்டாலும் கூட, அது பெயரளவில் தான் உள்ளது. சமூகநீதியை நிலைநிறுத்த திமுக ஆட்சியில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இன்னும் கேட்டால், திமுக ஆட்சியில் மிகக் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட ஒரு துறை இருக்கும் என்றால், அது சமூகநீதி தான். கர்நாடகம், பீகார், தெலுங்கானா, ஒதிஷா ஆகிய நான்கு மாநிலங்களில் சமூகநீதி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு (சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு) நடத்தி முடிக்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் இடஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு சமூகநீதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

சமூகநீதி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு (சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு) நடத்த மாநில அரசுகளுக்கு அதிகாரம் உண்டு என்று பீகார், கர்நாடகா உள்ளிட்ட பல மாநிலங்களில் உயர்நீதிமன்றங்கள் தீர்ப்பளித்திருக்கின்றன. உச்சநீதிமன்றமும் அதற்கு தடை விதிக்கவில்லை. இவ்வளவுக்குப் பிறகும் தமிழ்நாட்டில் சமூகநீதி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு (சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு) நடத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திமுக அரசு தயாராக இல்லை. சமூகநீதி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு (சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு) நடத்தப்பட்டால் அதன் அடிப்படையில் பல சமூகங்களுக்கு உள்இடஒதுக்கீடு வழங்கவேண்டியிருக்கும் என்ற அச்சமும் யாருக்கும் சமூகநீதி கிடைத்துவிடக்கூடாது என்ற தீய எண்ணமும் தான் திமுக அரசின் இந்த நிலைப்பாட்டுக்கு காரணம் ஆகும்.

அதேபோல், தமிழ்நாட்டில் உரிய தரவுகளைத் திரட்டி, வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று 2022ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதி உச்சநீதிமன்றம் ஆணையிட்டது. அதன்பின், நான்கு ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைச் செயல்படுத்த திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேபோல், பட்டியலின மக்களுக்கு உள்இடஒதுக்கீடு வழங்கலாம் என்று 2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதன்பின், இரு ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில், அந்தத் தீர்ப்பையும் திமுக செயல்படுத்தவில்லை.

தமிழ்நாட்டுக்குச் சமூகநீதியின் தொட்டில் என்ற பெருமை மீண்டும் கிடைக்க வேண்டும் என்றால், அதற்கான முதல் தேவை திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டும். சமூகநீதியில் அக்கறை கொண்ட புதிய அரசு அமைக்கப்பட வேண்டும்.

## திமுக அரசின் தோல்விகள்

2021 சட்டப்பேரவைத் தேர்தலின்போது, சமூகநீதி தொடர்பாக 21 வாக்குறுதிகள் திமுகவின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்தன. ஆனால், அவற்றில் முக்கியத்துவம் இல்லாத 3 வாக்குறுதிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டன. மீதமுள்ள 18 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. அவற்றில் முக்கியமானவை.

1. மத்திய அரசின் ஓ.பி.சி. இடஒதுக்கீட்டில் கிரிமிலேயர் முறையை நீக்க மத்திய அரசுக்கு அழுத்தம் தரப்படும். (வாக்குறுதி எண். 265)
2. மாநிலங்களுக்கான இடஒதுக்கீட்டின் அளவை மாநில அரசுகளே நிர்ணயித்துக்கொள்ளும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த மத்திய அரசை திமுக அரசு வலியுறுத்தும். (வாக்குறுதி எண் – 267)
3. தனியார் துறையில் இடஒதுக்கீட்டைச் செயல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசைத் திமுக அரசு வலியுறுத்தும். (வாக்குறுதி எண் – 269)
4. உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசைத் திமுக அரசு வலியுறுத்தும். (வாக்குறுதி எண் – 270)
5. தமிழக அரசின் வேலைவாய்ப்புகளில் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டு நிரப்பப்படாத பின்னடைவுப் பணியிடங்களைத் திமுக அரசு நிரப்பும். (வாக்குறுதி எண் – 275)

### சமூகநீதியைப் பாதுகாப்பதற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. மத்திய அரசின் சார்பில் தேசிய அளவில் சமூகநீதி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு (சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு) நடத்தப்பட்டாலும், தமிழக அளவில் மக்களுக்கான சமூகநீதியை வழங்கவும், நலத்திட்டங்களை செயல்படுத்தவும் தேவையான தரவுகளை திரட்டும் வகையில், 2026ஆம் ஆண்டு பிற்பகுதியில் சமூகநீதி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு (சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு) நடத்தப்படும்.
2. பத்தாண்டுகளுக்கு ஒருமுறை சமூகநீதி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு (சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு) நடத்தப்படும்.
3. தமிழக அரசு செயல்படுத்தும் சமூகநீதி மற்றும் வளர்ச்சித் திட்டங்களால் ஒவ்வொரு சமூகத்திற்கும் எவ்வளவு பயன் கிடைத்திருக்கிறது என்பது குறித்து, பத்தாண்டுகளுக்கு ஒருமுறை ஆய்வு செய்து அறிக்கை வெளியிடப்படும்.

### வன்னியர்களுக்கு உள்இடஒதுக்கீடு

4. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை செயல்படுத்தும் வகையில், வன்னியர்களுக்கு உள்இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டம் நிறைவேற்றப்படும். சமூகநீதி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு (சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு) தரவுகளின் அடிப்படையில் இடஒதுக்கீட்டின் அளவு தீர்மானிக்கப்படும்.

5. யாதவர்கள், முத்தரையர்கள், விஸ்வகர்மாக்கள் உள்ளிட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கு உள்இடஒதுக்கீடு வழங்க வகை செய்யப்படும்.

6. நாவிதர், வண்ணார், பருவதராசகுலம், ஒட்டர், வலையர், அம்பலக்காரர், குரும்பர், குயவர், வேட்டுவக்கவுண்டர், ஊராளி கவுண்டர் ஆகிய 10 சமுதாயங்களையும் கொண்ட தனி இடஒதுக்கீட்டுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, அவர்களுக்குத் தனி இடஒதுக்கீடு வழங்கப்படும்.

7. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளில் உள்ள பிற சமூகங்களுக்கும் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் உள்ஒதுக்கீடு / தொகுப்பு ஒதுக்கீடு வழங்கப்படும்.

8. தமிழ்நாட்டில் குருமன்கள், நீலகிரி மாவட்டத்தில் வாழும் குரும்பர்கள் ஆகியோர் மட்டும் பழங்குடியினர் வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் பிற பகுதிகளில் வாழும் குரும்பர்கள், குரும்பக்கவுண்டர்கள் ஆகிய சமுதாயங்களைப் பழங்குடியினர் வகுப்பில் சேர்க்கும்படி மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

### உள்ளாட்சி அமைப்புகளில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு

9. தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் பட்டியலின, பழங்குடியின வகுப்பினருக்கு மட்டுமே இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கான 19% இடஒதுக்கீடு தவிர, மீதமுள்ள 89% இடஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 16% முதல் 20% வரை மட்டுமே பிரதிநிதித்துவம் கிடைப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையை மாற்றிப் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், அவர்களுக்கு முறையே, 30%, 20% இடஒதுக்கீடு வழங்கப்படும்.

### பட்டியலினச் சமூகங்களுக்கு உள்இடஒதுக்கீடு

10. உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் பட்டியலினச் சமூகங்களுக்கு உள்இடஒதுக்கீடு வழங்குவது குறித்துப் பரிந்துரைப்பதற்காக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஆணையம் அமைக்கப்படும்.

11. பட்டியலினச் சமூகங்களில் விருப்பமுள்ள சமூகங்களுக்கு உள்இடஒதுக்கீடு வழங்கப்படும்.

12. மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் பட்டியலின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கான இடஒதுக்கீட்டின் அளவை அதிகரிப்பதற்குச் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

13. பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கான நடைமுறைகள் எளிமைப்படுத்தப்படும். விண்ணப்பித்த 15 நாட்களில் சாதிச் சான்றிதழ் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

14. தமிழ்நாட்டில் உள்ள நரிக்குறவர்கள் மற்றும் குருவிக்காரர் சமூகங்கள் பழங்குடியினராக அறிவிக்கப்பட்ட நிலையில், அவர்கள் கல்வி பெறுவதை உறுதி செய்யும் வகையில், அனைத்து மாவட்டங்களிலும் அவர்களுக்கான உண்டு உறைவிடப்பள்ளிகள் தொடங்கப்படும்.

**மதம் மாறிய சமூகங்களுக்கும் இடஒதுக்கீடு**

15. மதம் மாறிய சமூகங்களுக்கு, அவர்களின் சமூகங்களுக்குரிய இடஒதுக்கீட்டிற்குப் பதிலாகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இந்த நிலையை மாற்றி, மதம் மாறிய சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கும், அவர்களின் சமூகத்திற்குரிய இடஒதுக்கீடு வழங்கத் தேவையான சட்டத் திருத்தங்கள் செய்யப்படும்.

16. கிறித்தவ வன்னியர்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

17. கிறித்தவ மதத்திற்கு மாறிய பட்டியலின மக்களுக்கும், பட்டியலினத்தவருக்கான இடஒதுக்கீடு தொடர்ந்து கிடைக்க வகை செய்யப்படும்.

18. ஆந்திர மாநிலத்தைப் பின்பற்றித் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் உள்ள சமுதாயங்களில், 30 ஆயிரத்திற்கும் கூடுதலாக மக்கள் தொகை கொண்ட அனைத்துச் சாதிகளுக்கும், தனித்தனியாக நலவாரியங்கள் அமைக்கப்படும். 30 ஆயிரத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட சாதிகளைச் சில குறிப்பிட்ட காரணிகளின் அடிப்படையில் ஒருங்கிணைத்து, வாரியங்கள் உருவாக்கப்படும். அந்த வாரியங்களின் தலைவர்களாக அந்தந்தச் சாதிகளைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்படுவார்கள். ஒவ்வொரு சாதிக்குமான நலத்திட்ட உதவிகள், முதியோர் ஓய்வூதியம், கல்விக்கட்டணம், தொழில் தொடங்கக் கடனுதவி, மருத்துவ உதவிகள் ஆகியவை இந்த வாரியங்களின் மூலமாக மட்டுமே வழங்கப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் இந்த வாரியங்களின் மூலமாக மொத்தம் 4 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் என பா.ம.க. உறுதி அளிக்கிறது.

19. பாரம்பரியத் தொழில் சமுதாயத்தினரின் பொருளாதார நிலை, மோசமடைந்துள்ள நிலையில், அந்தச் சமுதாயங்களின் முன்னேற்றத்திற்காக, மண்டல் ஆணையப் பரிந்துரைப்படி ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தனித்தனியாகக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்படும். அந்தச் சங்கங்களின் இயக்குநர்கள் மற்றும் தலைவர்களாக அந்தந்தச் சமுதாயங்களைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்படும் வகையில், கூட்டுறவுச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

20. தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளும் ஒரே மாதிரியான பொருளாதார மேம்பாட்டை அடைய அந்தந்தப் பகுதிகளின் இயற்கை வளங்கள், மழை அளவு, தட்ப வெப்பம், மக்கள் தொகை, பூகோள அமைப்பு இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு சிறந்த பொருளாதார வல்லுநர்களையும், தொழில்சார் பொருளியல் வல்லுநர்களையும் கொண்டு சிறப்புத் திட்டங்கள் உருவாக்கப்படும். இந்தத் திட்டங்கள் தொலைநோக்குப் பார்வை கொண்ட 20 ஆண்டுத் திட்டங்களாக அமைக்கப்படும்.

21. இந்தியச் சிறுபான்மையினர் துறை அமைச்சகத்தின் பன்முகத்தன்மைக் குறியீடு அளவீட்டினை முன்மாதிரியாகக் கொண்டு சாதி மேம்பாட்டுக் குறியீடு எனும் அளவீட்டு முறை ஏற்படுத்தப்படும். இதன் மூலம் அனைத்துப் பிரிவினரும் சம வளர்ச்சியை எட்ட வழி செய்யப்படும்.

# பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் மாநில இடஒதுக்கீடு!

இந்தியாவின் அனைத்து மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் இந்தியர்கள் தான்; மத்திய அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் அவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற போதிலும், பல்வேறு காரணங்களால் அது உறுதி செய்யப்படவில்லை. குறிப்பாகத் தொடர் வண்டித்துறை உள்ளிட்ட மத்திய அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் சில குறிப்பிட்ட மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. இந்த நிலை மாற்றப்பட்டுச் சமூகநீதி அனைவருக்கும் பரவலாக்கப்பட வேண்டும்.

பொதுத் துறை நிறுவனங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்குபவை என்றாலும் கூட, அவற்றை உருவாக்குவதில் மத்திய அரசு மட்டுமே பங்களிப்பு செய்யவில்லை. பொதுத் துறை நிறுவனங்களுக்குத் தேவையான நிலங்கள், சில தருணங்களில் நிதி முதலீடு போன்றவற்றை மாநில அரசுகளும் பங்களித்திருக்கின்றன. அத்தகைய சூழலில், பொதுத் துறை நிறுவனங்களின் வேலைவாய்ப்புகளிலும், மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களிலும், மாநிலங்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டியது தவிர்க்க முடியாத தேவை ஆகும்.

**திமுக அரசின் தோல்விகள்**

1. தமிழ்நாட்டில் உள்ள தனியார் நிறுவனங்களின் வேலைவாய்ப்புகளில் 75 விழுக்காட்டை தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு ஒதுக்கீடு செய்யச் சட்டம் இயற்றப்படும் என்று தேர்தல் வாக்குறுதி அளித்த திமுக, அதை நிறைவேற்றவில்லை.
2. என்.எல்.சி. போன்ற பொதுத்துறை நிறுவனங்களுக்குத் தேவையான நிலங்களைத் தமிழக உழவர்களிடம் இருந்து திமுக அரசு கட்டாயப்படுத்திப் பறித்துக் கொடுத்தது. ஆனால், நிலம் கொடுத்தவர்களுக்கு அந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பை உறுதி செய்ய எந்த நடவடிக்கையையும் திமுக அரசு மேற்கொள்ளவில்லை.
3. தமிழ்நாட்டில் உள்ள பல தனியார் பெருநிறுவனங்களில் பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தான் அதிக எண்ணிக்கையில் பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள். அதைத் தடுக்கவோ, தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை பெற்றுத் தரவோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## தமிழ்நாடு உரிமை சார்ந்த சமூகநீதியை வென்றெடுப்பதற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. தமிழ்நாட்டில் அனைத்து அரசு வேலைவாய்ப்புகளும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். 100% அரசு வேலைவாய்ப்புகளும் தமிழர்களுக்கு மட்டுமே கிடைக்கத் தேவையான சட்டத்திருத்தம் மற்றும் விதி மாற்றங்கள் செய்யப்படும்.

2. தமிழ்நாட்டில் உள்ள தனியார் நிறுவனங்களில் 80% பணியிடங்கள் தமிழக இளைஞர்களைக் கொண்டு நிரப்பப்படவேண்டும் என்பதைக் கட்டாயமாக்கிப் புதிய சட்டம் இயற்றப்படும்.

3. தமிழ்நாட்டில் உள்ள மத்தியப் பொதுத்துறை நிறுவனங்களில் அதிகாரிகள் நிலைப் பணியிடங்களைத் தவிர்த்துத் தொழிலாளர் நிலைப் பணியிடங்கள் அனைத்தும் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களைக்கொண்டே நிரப்பப்படுவதை மத்திய அரசிடம் வலியுறுத்திப் பாட்டாளி மக்கள் கட்சி உறுதி செய்யும்.

4. மாநிலங்களில் உள்ள மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் இடமாற்றம் செய்யப்படாத இடைநிலைப் பணியிடங்களில் 50% பணியிடங்கள் மாநில ஒதுக்கீடாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இப்பணியிடங்களில் அந்த மாநிலத்தவர்களை மட்டுமே நியமிக்க வேண்டும் எனப் பா.ம.க. வலியுறுத்தும்.

5. மத்திய அரசு அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் கடைநிலைப் பணியிடங்கள் அனைத்தும் அந்தந்த மாநிலங்களைச் சேர்ந்தவர்களைக் கொண்டே நிரப்பப்படும். அதாவது, கடைநிலைப் பணிகளில் 100% மாநில இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என மத்திய அரசைப் பா.ம.க. வலியுறுத்தும்.

## உயர்கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு

6. தமிழ்நாட்டில் உள்ள சென்னை இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (ஐ.ஐ.டி.), சென்னை மேலக்கோட்டையூரில் உள்ள இந்திய தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (ஐ.ஐ.ஐ.எம்), திருச்சி இந்திய மேலாண்மையியல் கல்வி நிறுவனம் (ஐ.ஐ.எம்), திருவாரூர் மத்தியப் பல்கலைக் கழகம், மதுரையில் அமையவுள்ள எய்ம்ஸ் மருத்துவக் கல்வி நிறுவனம் உள்ளிட்ட மத்திய உயர்கல்வி நிறுவனங்கள் தமிழக அரசால் வழங்கப்பட்ட நிலங்கள் மற்றும் நிதியுதவியைக் கொண்டு தான் அமைக்கப்பட்டன. அதனால், அந்த நிறுவனங்களின் மாணவர் சேர்க்கையில் 50% இடங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்தி வெற்றிபெறும்.

7. ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., தேசியத் தொழில்நுட்ப நிறுவனங்கள், ஜிப்மர் மற்றும் எய்ம்ஸ் போன்ற மருத்துவ உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்கள் உள்ளிட்ட நிறுவனங்களில், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் இடஒதுக்கீடு உரிமை பெறுவதற்கு உள்ள தடைகளை நீக்கப் பா.ம.க. பாடுபடும்.

### தனியார்துறை இடஒதுக்கீடு

8. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் குறைந்து வரும் நிலையில், அமைப்புச் சார்ந்த தனியார் துறையில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. அமைப்புச்சார்ந்த தனியார் துறையில் 6 கோடி வேலைவாய்ப்புகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் இது 10 கோடியாக உயர வாய்ப்புள்ளது. இத்துறையில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைய முடியும் என்பதால், தனியார்துறை வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தும்படி மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்.

9. கல்வி, வேலைவாய்ப்புகள் மட்டுமின்றி, சமூக முன்னேற்றத்திற்கு வகை செய்யும் அனைத்து அம்சங்களிலும் இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படும். தொழில் தொடங்க உதவி மற்றும் மானியம் வழங்குதல், அரசுத்துறை ஒப்பந்தங்கள் வழங்குதல், எரிபொருள் மற்றும் எரிவாயு விற்பனை முகமைகளுக்கு உரிமம் வழங்குதல் உள்ளிட்ட அனைத்து அம்சங்களிலும் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தப் பா.ம.க. வலியுறுத்தும்.

### தனியார் பெரு நிறுவனங்களின் பன்முகக் கொள்கை

10. இந்தியாவில் தனியார் பெரு நிறுவனங்களில் இடஒதுக்கீட்டுக் கொள்கை இன்னும் சட்டப்படி நடைமுறைக்கு வராத நிலையில், சமூகநீதியில் விருப்பம் உள்ள நிறுவனங்கள் தாங்களாக முன்வந்து இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் தானாக முன்வந்து செயல்படுத்தும் பன்முகக் கொள்கை (Voluntary Diversity and Inclusion Policy) செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும். இதன் மூலம் தமிழ்நாட்டில் தனியார் பெரு நிறுவனங்களிலும் 69% இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படும்.

### நீதித்துறையில் இடஒதுக்கீடு

11. உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமிப்பதற்கான கொலிஜியம் முறை அண்மைக்காலமாக மிகக்கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகிறது. கீழமை நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படும் நிலையில், உயர்நீதிமன்ற மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்திலும் இடஒதுக்கீடு தேவையாகும். எனவே, நீதித்துறையிலும் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தப் பா.ம.க. பாடுபடும்.

12. நீதித்துறையில் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வசதியாக உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் செய்வதற்காக நீதிபதிகள் நியமன ஆணையம் அமைக்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்தும்.

# வெளிப்படையான நிர்வாகம்: மக்களுக்குக் கேள்வி கேட்கும் அதிகாரம்

ஓர் அரசு சிறப்பாகச் செயல்படுவதற்கும் மக்களுக்கான சட்டங்களும், நலத்திட்டங்களும் சிறப்பான முறையில் உருவாக்கிச் செயல்படுத்தப்படுவதற்கும் ஆட்சியாளர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்பதைவிட, அரசு நிர்வாகம் சிறப்பாகக் கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் முக்கியமாகும். அரசு நிர்வாகம் என்பது ஒரு பேருந்தைப் போன்றது. என்ன தான் ஓட்டுநர்கள் திறமையானவர்களாக இருந்தாலும் பேருந்து சரியாக இல்லாவிட்டால் இலக்கை அடைய முடியாது. எனவே, ஓர் அரசு உன்னதமாகச் செயல்படுவதற்கு நிர்வாகம் சிறப்பாக வடிவமைக்கப்பட வேண்டும்.

மாறி வரும் தேவைகளுக்கும், மக்களின் விருப்பங்களுக்கும் ஏற்ற வகையில் நிர்வாக முறைகளில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். அப்போதுதான் அரசு நிர்வாகம் நேர்மையாகவும், தூய்மையாகவும் இருக்கும் என்று பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது. அதற்குத் தேவையான நிர்வாகச் சீர்திருத்தங்கள் குறித்த வாக்குறுதிகளையும் பாமக அளிக்கிறது.

### திமுக அரசின் தோல்விகள்

நிர்வாகச் சீர்திருத்தம் தொடர்பாக மொத்தம் 9 வாக்குறுதிகளைக் கடந்த தேர்தலின் போது திமுக அளித்திருந்தது. அவற்றில் ஒன்றுகூட முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் திமுக அரசு எந்த அளவுக்கு பின்தங்கியிருந்தது என்பதற்கு இது சான்றாகும்.

1. அரசு நிர்வாகத்தில் சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அமைச்சர்களின் தேவையற்ற செலவு, பயணங்கள் தவிர்க்கப்படும் என்று வாக்குறுதி அளித்த திமுக, அதை நிறைவேற்றவில்லை.
2. புதிய மாவட்டங்களை அமைப்பது தொடர்பான வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன.
3. அரசின் முடிவுகள் எடுக்கப்படுவதற்கு முன் அதுகுறித்துப் பொதுமக்களின் விருப்பங்களை அறிய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

### நிர்வாகச் சீர்திருத்தம் தொடர்பாகப் பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. தமிழ்நாடு அரசு நிர்வாகத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது குறித்துப் பரிந்துரைக்க உச்சநீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் அமைக்கப்படும்.

2. பொது வாழ்க்கையில் தூய்மையை உறுதி செய்யும் நோக்குடன் முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதத்தின் முதல் நாளில் தங்களின் சொத்து விவரங்களை வெளியிடுவது கட்டாயமாக்கப்படும்.

3. மக்கள் பிரதிநிதிகளின் சொத்து மதிப்பு ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டுக்கும் கூடுதலாக உயர்ந்திருந்தால், அவர்கள் அது குறித்துப் பொதுமக்களிடம் விளக்கம் அளிக்க வேண்டும்.

4. முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் சொத்து விவரங்கள் ஆண்டுதோறும் மக்கள் தணிக்கைக்கு உட்படுத்தப்படும்.

5. புதிய அரசு பதவியேற்று ஒவ்வொரு ஆண்டின் நிறைவிலும் அமைச்சர்களின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டு, அதன் முடிவுகள் மக்கள் பார்வைக்காக வெளியிடப்படும்.

6. ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகள், மக்கள் நலத் திட்டங்களில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவைக் குழு மாதம் ஒரு மாவட்டத்திற்குச் சென்று ஆய்வு செய்யும்.

7. தமிழக அரசின் முடிவுகள் பெரும்பாலும் கருத்தொற்றுமை அடிப்படையில் எடுக்கப்படும். சட்ட முன் வரைவுகள் மக்கள் முன் வைக்கப்பட்டு அவர்கள் விரும்பும் மாற்றங்களுடன் நிறைவேற்றப்படும்.

8. அதிகாரம் பரவலாக்கப்படும். முடிவுகள் விரைவில் எடுக்கப்படுவதற்காக எல்லாத்துறைகளிலுமே மாவட்ட அதிகாரிகளுக்கு நிர்வாக முடிவுகள் எடுக்கும் அதிகாரம் (Decentralization of Power) வழங்கப்படும்.

9. ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரம் அளிக்கும் வகையில் சட்டத்திருத்தம் செய்யப்படும். இதன் மூலம், பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான திட்டங்களைத் தாங்களே தயாரித்து நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

### தமிழ்நாட்டின் இரண்டாவது தலைநகரம் திருச்சி

10. தமிழ்நாட்டின் நிர்வாக வசதிக்காக 2ஆவது தலைநகராகத் திருச்சியும், 3ஆவது தலைநகரமாக மதுரையும் அறிவிக்கப்படும்.

11. தமிழ்நாட்டின் தொழில் தலைநகரமாகக் கோயம்புத்தூர் அறிவிக்கப்படும்.

12. நிர்வாக வசதிக்காகவும், பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையிலும், புதிய மாவட்டங்கள் உருவாக்கப்படும். 12 இலட்சம் பேருக்கு ஒரு மாவட்டம் வீதம் புதிய மாவட்டங்கள் ஏற்படுத்தப்படும். தமிழ்நாட்டை மொத்தம் 60 மாவட்டங்கள் கொண்ட மாநிலமாக மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## சட்டப்பேரவை

13. ஆண்டுக்கு நான்கு முறை சட்டப் பேரவை கூடுவதும், நூறு நாட்கள் கூட்டத் தொடர் நடப்பதும் உறுதி செய்யப்படும். வாரத்தில் ஒரு நாள் தொகுதிப் பிரச்சனைகள் குறித்து விவாதிக்க ஒதுக்கப்படும். அவை மரபுகள் காக்கப்படும்.

14. சட்டப் பேரவை நிகழ்ச்சிகள் நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும்.

15. தமிழ்நாட்டில் சட்ட மேலவை மீண்டும் ஏற்படுத்தப்படும்.

## பொதுத் தளத்தில் அரசாணைகள்

16. ஒவ்வொரு திட்டத்திற்காகவும், கொள்கை நிலைப்பாட்டிற்காகவும் எடுக்கப்படும் முடிவுகள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும். இதற்கு வசதியாகத் தமிழக அரசின் அனைத்து அரசாணைகளும் பொதுவெளியில் வெளியிடப்படும். இதற்காக ஒரு சிறப்பு இணையதளம் உருவாக்கப்படும்.

17. வேளாண்துறை சார்ந்த திட்டங்களுக்கு விரைந்து செயல் வடிவம் தருவதற்காக மூத்த அமைச்சர்கள் அடங்கிய வேளாண்துறைக்கான அமைச்சரவைக் குழு (Cabinet Committee on Agriculture) அமைக்கப்படும்.

18. ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்போது, முந்தைய ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எந்த அளவுக்குச் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதை விளக்கும் திட்ட விவர அறிக்கை (Action Taken Report) தாக்கல் செய்யப்படும்.

19. நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு திட்டத்திற்காகவும் செலவிடப்பட்ட தொகையால் சமூகத்திற்கும் மக்களுக்கும் எந்த அளவுக்குப் பயன் கிடைத்திருக்கிறது என்பதை விளக்கும் வகையில் தாக்க அறிக்கை (Outcome Budget) தாக்கல் செய்யப்படும். நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக இந்த அறிக்கை சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்படும்.

20. நிதிநிலை அறிக்கை தயாரிப்புக்கு முன்பாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் அனைத்துத் தரப்பு மக்களிடமும் கருத்துக்கேட்பு மற்றும் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்படும்.

# சேவை உரிமைச் சட்டம் நிறைவேற்றப்படும்: லோக்அயுக்தா உண்மையான ஊழல் ஒழிப்பு அமைப்பாக வலுப்படுத்தப்படும்

தமிழ்நாட்டில் திமுக ஆட்சியில் கட்டுப்பாடு இல்லாமல் வளர்ந்த இரு விசயங்கள் எவை என்று தேடினால், முதலாவது ஊழல், இரண்டாவது அரசின் கடன் என்பதுதான் சரியான பதிலாக இருக்கும். திமுக ஆட்சியில் மட்டும் ரூ.6 இலட்சம் கோடிக்கும் கூடுதலாக ஊழல் நடந்ததாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இந்தியாவில் ஊழல் என்பது பெரும்பான்மையான மாநிலங்களில் நடைபெறுவதுதான். ஆனால், பொதுவாக ஊழல்கள் மறைமுகமாகவே நடக்கும். மாறாக, தமிழ்நாட்டில் திமுக ஆட்சியில் அனைத்து ஊழல்களும் அப்பட்டமாக நடைபெற்றன.

அனைத்து ஒப்பந்தங்களிலும் கட்சி நிதி என்ற பெயரில் ஆளும் கட்சியினரின் முதன்மைக் குடும்பத்திற்கும், கமிஷன் என்ற பெயரில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் பெருந்தொகை கையூட்டாக வழங்கப்பட்டது. ஆட்சியின் கடைசிக் காலத்தில், 15 நாட்களில் மட்டும் 5 ஆயிரத்திற்கும் கூடுதலான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன. அடுத்த ஆண்டு (2026–27) நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு, இந்த ஆண்டிலேயே ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதற்குச் சிறப்பு அனுமதி அளிக்கும் அளவுக்கு ஊழல் தலைவிரித்தாடியது.

ஆட்சியாளர்கள் நிலையைக் கடந்து, அரசு நிர்வாகத்தின் ஊழல் அதிகமாக நடைபெறும் இடம் அரசு அலுவலகங்கள். மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்காகக் கையூட்டு வசூலிக்கப்படுவது வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும். அரசு நிர்வாகத்தில் ஊழலை ஒழிப்பதற்கான இரு அமைப்புகள் லோக்அயுக்தா எனப்படும் மக்கள் நீதிபதி அமைப்பும், சேவை பெறும் உரிமைச் சட்டம் எனப்படும் மக்களுக்கான உரிமை மற்றும் அதிகாரம் அளிக்கும் அமைப்பும் ஆகும். ஆனால், இந்த இரு அமைப்புகளுக்கும் உயிரூட்டுவதில் திமுக அரசு தோல்வியடைந்துவிட்டது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

**திமுக அரசின் தோல்விகள்**

ஊழலை ஒழிப்பதற்காக லோக்அயுக்தா சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்; லோக்அயுக்தா அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. அதன் பயனாக, 2019ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் லோக்அயுக்தா சட்டம் இயற்றப்பட்டு, லோக்அயுக்தா அமைப்பின் முதல் தலைவராகச் சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி பி.தேவதாஸ் கடந்த 15.04.2019 நியமிக்கப்பட்டார். ஆனால், திமுக ஆட்சியில் லோக்அயுக்தா அமைப்பு முடக்கப்பட்டது.

1. லோக்அயுக்தா அமைப்பின் தலைவர் பதவியும், நான்கு உறுப்பினர்களில் இரு உறுப்பினர்கள் பதவிகளும் இரு ஆண்டுகளுக்கும் மேலாகக் காலியாக கிடந்து, பாமக சுட்டிக்காட்டிய பின்னரே நிறைவேற்றப்பட்டன.
2. சேவை பெறும் உரிமைச் சட்டம் இயற்றப்படும் என்று திமுக தேர்தல் வாக்குறுதி அளித்தும் கூட அது நிறைவேற்றப்படவில்லை.
3. அரசிலும், நிர்வாகத்திலும் ஊழலை ஒழிக்கத் திமுக துரும்பைக்கூட நகர்த்தவில்லை.

## ஊழலை ஒழிப்பதற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. தமிழ்நாட்டில் முடக்கப்பட்டுள்ள லோக்அயுக்தா அமைப்பு வலிமையானதாக மாற்றப்படும். அந்த அமைப்புக்குத் தன்னாட்சி அதிகாரம் வழங்கப்படும். முதலமைச்சரும் அமைச்சர்களும் லோக்அயுக்தாவின் அதிகார வரம்புக்குள் கொண்டுவரப்படுவார்கள்.
2. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்களும், துறைகள் அளவில் செயலாளர்களும் ஊழல் ஒழிப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படுவார்கள். அவர்களின் அதிகார வரம்புக்குட்பட்ட அலுவலகங்களில் ஊழல் நடந்தது கண்டுபிடிக்கப்பட்டால் அதற்காக ஊழல் ஒழிப்பு அதிகாரிகள் மீதும் கடமை தவறிய குற்றச்சாட்டின் படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
3. அனைத்து அரசு அலுவலகங்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும்.
4. ஊழல் குறித்துப் புகார் தெரிவிக்க 3 இலக்க இலவசத் தொலைபேசிச் சேவை அறிமுகப்படுத்தப்படும்.

## சிறப்பு நீதிமன்றங்கள்

5. திமுக ஆட்சியில் மணல் கொள்ளை, கனிமவளக் கொள்ளை, பணியாளர் நியமன ஊழல், ஒப்பந்த ஊழல், பணியிட மாற்ற ஊழல், மது வணிகத்தில் வரி ஏய்ப்பு என ரூ.6 இலட்சம் கோடி அளவுக்கு ஊழல்கள் நடைபெற்றிருப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், அவை குறித்துத் தனித்தனியாக வழக்குப் பதிவு செய்து விசாரிக்கப்படும்.
6. அமைச்சர்கள், அதிகாரிகள் மீதான மீதான வழக்குகளை விசாரிப்பதற்காகச் சென்னையில் 3 சிறப்பு நீதிமன்றங்களும், மதுரை மற்றும் கோவையில் தலா ஒரு சிறப்பு நீதிமன்றமும் அமைக்கப்படும்.

## அரசுப் பணியாளர் தேர்வு அமைப்புகளில் மாற்றம்

7. தமிழ்நாட்டில் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு ஆள்தேர்வு அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இது திமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட Tamil Nadu Public Service Commission (Additional Functions) Act, 2022 சட்டத்திற்கு எதிரானதாகும். இந்தநிலை மாற்றப்படும்.

8. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC), தமிழ்நாடு ஆசிரியர் தேர்வுவாரியம் (TNTRB), தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் (TNUSRB) ஆகிய அமைப்புகள் மட்டுமே அரசுப் பணிகளுக்கு ஆள் தேர்வு செய்யும். மீதமுள்ள தேர்வு வாரியங்கள் கலைக்கப்பட்டு, அவற்றின் பணிகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடம் ஒப்படைக்கப்படும்.

9. அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், சீருடைப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவற்றின் தலைவர்களாக அப்பழுக்கற்றவர்கள் மட்டுமே நியமிக்கப்படுவார்கள்.

10. அரசுப் பணியாளர் நியமனங்களில் நேர்முகத் தேர்வுதான் ஊழலுக்கு வகை செய்கிறது என்பதால், மாவட்டத் துணை ஆட்சியர், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் உள்ளிட்ட தொகுதி – 1 பணிகள் உட்பட அனைத்துப் பணிகளுக்கும் நேர்முகத் தேர்வுகள் இரத்து செய்யப்படும்.

## பொதுச்சேவை பெறும் உரிமைச் சட்டம் (Right to Public Services act):

11. அரசு நிர்வாகத்தில் ஊழலை ஒழிக்கப் பொதுச் சேவை பெறும் உரிமைச் சட்டம் கொண்டு வரப்படும். அச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

12. பிறப்புச் சான்று, சாதிச் சான்று, வருமானச் சான்று, குடும்ப அட்டை, நில ஆவண நகல்கள், மின் இணைப்பு, தொழில் அனுமதி, கட்டடங்களுக்கான திட்ட அனுமதி உள்ளிட்ட அனைத்துச் சேவைகளும் விண்ணப்பித்ததிலிருந்து குறிப்பிட்ட நாட்களுக்குள் வழங்கப்படுவது கட்டாயமாக்கப்படும்.

13. குறிப்பிட்ட காலத்திற்குள் சேவை வழங்காத அதிகாரிக்கு ரூ.500 முதல் ரூ.25,000 வரை அபராதம் விதிக்கப்படும். அந்தத் தொகை சேவை கிடைக்காமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடாக வழங்கப்படும்.

14. தகவல்பெறும் உரிமைச் சட்டத்தை வலுப்படுத்தி, வெளிப்படையான, ஒளிவு மறைவற்ற நிர்வாகத்தை உறுதி செய்யும் வகையில் மாநிலத் தகவல் ஆணையம் வலிமையான அமைப்பாக மாற்றியமைக்கப்படும். உறுப்பினர்கள் எண்ணிக்கை 10 ஆக அதிகரிக்கப்படும்.

15. தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் சேவைகளில் சாத்தியமான சேவைகள் அனைத்தும் இணைய வழியில் வழங்கப்படும்.

# வளர்ச்சி, வேலைவாய்ப்புகளைப் பரவலாக்கத் தமிழகத்தில் தொழில்துறைப் புரட்சி மேற்கொள்ளப்படும்!

மனித உடலில் வளர்ச்சி என்பது ஒரே சீராக இருந்தால் தான் அது வளர்ச்சியாக பார்க்கப்படும். ஒரே இடத்தில் குவிந்திருந்தால் அது வீக்கமாகத்தான் கருதப்படும். இது மனித உடலுக்கு மட்டுமின்றி, மாநிலத்தின் முன்னேற்றத்திற்கும் பொருந்தும். ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு அடித்தளத்தை அமைப்பவை தொழிற்சாலைகள் தான். இவை மாநிலம் முழுவதும் பரவலாக இருந்தால் மட்டும் தான் மாநிலம் முழுவதும் சமச்சீரான வளர்ச்சி ஏற்படும். மாறாக, ஒரே இடத்தில் குவிந்திருந்தால் அப்பகுதிக்கும் மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும் இடையே மிகப் பெரிய அளவில் வளர்ச்சி இடைவெளி காணப்படும்.

எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் மொத்தம் 50 சிப்காட் தொழிற்பேட்டைகள் அமைந்திருக்கின்றன. ஆனால், இவற்றில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 9, திருவள்ளுவர் மாவட்டத்தில் 5, இராணிப்பேட்டை மாவட்டத்தில் 2, செங்கல்பட்டு, வேலூர் மாவட்டங்களில் தலா 1 என 18, அதாவது 36% சிப்காட் தொழிற்பேட்டைகள் சென்னை பகுதியில் மட்டுமே அமைந்துள்ளன. எண்ணிக்கை அடிப்படையில் இது 36%ஆக இருந்தாலும், உற்பத்தி அடிப்படையில் 50 விழுக்காட்டுக்கும் அதிகமாக இருக்கும்.

அடுத்ததாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 5, தூத்துக்குடி மாவட்டத்தில் 5 தொழிற்பேட்டைகளும், 5 மாவட்டங்களில் தலா இரு தொழிற்பேட்டைகளும், 12 மாவட்டங்களில் தலா ஒரு தொழிற்பேட்டைகளும் உள்ளன. சிப்காட் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லாத சென்னை, நீலகிரி மாவட்டங்கள் தவிர, 12 மாவட்டங்களில் ஒரு தொழிற்பேட்டை கூட இல்லை. இது எந்த வகையிலும் சமச்சீரான வளர்ச்சிக்கு வகை செய்யாது. இந்த நிலையை மாற்றித் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தொழில் வளமும், வேலைவாய்ப்புகளும் பெருக்கப்பட வேண்டும்.

### திமுக அரசின் தோல்விகள்

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக 28 வாக்குறுதிகளைத் திமுக அதன் தேர்தல் அறிக்கையில் அளித்திருந்தது. ஆனால், அவற்றில் 26 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. இரு வாக்குறுதிகள் மட்டுமே முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

**நிறைவேற்றப்படாத முக்கிய வாக்குறுதிகள்:**

1. வேலையில்லாப் பட்டதாரிகள் புதிய தொழில் தொடங்க ஆண்டுக்கு 25,000 பேருக்கு தலா ரூ.20 இலட்சம் குறைந்த வட்டிக்குக் கடன் வழங்கப்படும். (வாக்குறுதி எண் – 206)
2. திண்டுக்கல், வேலூர், சென்னை ஆகிய மாவட்டங்களில் தோல் பொருள் பூங்கா அமைக்கப்படும். (வாக்குறுதி எண் – 211)

3. 10 இலட்சம் மக்களின் வாழ்வாதாரமாகத் திகழும் பட்டாசுத் தொழில் பாதுகாக்கப்படும். (வாக்குறுதி எண் – 213)
4. 12ஆம் வகுப்பு மற்றும் தொழிற்கல்வி படித்த இளைஞர்கள் 15 பேர் இணைந்து இளைஞர் சுயமுன்னேற்றக் குழுக்களை அமைத்துத் தொழில் தொடங்க முன்வந்தால் அவர்களுக்கு 25% மானியம், 65% வங்கிக் கடனாக வழங்கப்படும். (வாக்குறுதி எண் – 217)

## தமிழ்நாட்டில் பரவலான தொழில் வளர்ச்சிக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. தமிழ்நாட்டில் சிப்காட் தொழிற்பேட்டைகள் இல்லாத திருப்பத்தூர், இராமநாதபுரம், மதுரை, கரூர், நாமக்கல், திருப்பூர், தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் குறைந்தபட்சம் ஒரு சிப்காட் தொழிற்பேட்டை, அடுத்த 3 ஆண்டுகளில் ஏற்படுத்தப்படும்.
2. காவிரி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ள தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் இரசாயனத் தொழிற்சாலைகளை அமைக்க முடியாது என்பதால், அம்மாவட்டங்களில் அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக் கூடிய வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.
3. தருமபுரி மாவட்டத்தில் சிப்காட் தொழிற்பேட்டை அறிவிக்கப்பட்டு 18 ஆண்டுகளாகியும், இருமுறை திறப்புவிழா நடத்தப்பட்டும் இன்னும் ஒரு தொழிற்சாலை கூட அமைக்கப்படவில்லை. அங்குத் தொழிற்சாலைகளை அமைக்க உடனடியாக அனுமதி அளிக்கப்படும். டாடா உள்ளிட்ட பெரு நிறுவனங்களிடம் பேசி, அவற்றின் தொழிற்சாலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
4. சிப்காட் தொழிற்பேட்டைகள் ஏற்கெனவே செயல்பட்டுவரும் மாவட்டங்களில் கூடுதல் சிப்காட் வளாகங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
5. புதிதாகத் தொழில் தொடங்குவோர் எதிர்கொள்ளும் தடைகள் முற்றிலும் களையப்படும். பலவிதமான உரிமங்களை ஒழித்து ஒற்றைப் பதிவுமுறை (Single Registration) ஏற்படுத்துதல், பதிவு செய்யும் நடைமுறையில் இலஞ்சம், ஊழலை அறவே ஒழித்து, 3 வாரங்களுக்குள் அனைத்துப் பதிவு அனுமதிகளையும் வழங்குதல், தொழில்முனைவோருக்கான அனைத்துவிதமான கட்டணங்களையும் நீக்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

## விளைநிலங்கள் கையகப்படுத்தப்படாது – நிலம் கொடுத்தோருக்கு வேலை, பங்கு

6. உலகிற்கு உணவு படைக்கும் வேளாண் தொழிலை அழித்துவிட்டுத் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டிய தேவையில்லை என்பதுதான் பாமகவின் நிலைப்பாடு. அதனால், சிப்காட் தொழிற்பேட்டைகளை அமைக்க வேளாண் விளை நிலங்கள் கையகப்படுத்தப்படாது. அரசு நிலங்கள் மற்றும் தரிசு நிலங்களில் மட்டுமே சிப்காட் அமைக்கப்படும்.
7. செய்யாறு சிப்காட் வளாகத்தை விரிவுபடுத்துவதற்காக மேல்மா உள்ளிட்ட 11 ஊர்களில் 2,700 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தும் திட்டம் கைவிடப்படும்.

8. சிப்காட் தொழிற்பேட்டைகளுக்காக மக்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்கள் கையகப்படுத்தப்படும் போது, அவற்றின் மொத்த மதிப்பு கணக்கிடப்பட்டு, அதில் 50% பணமாகவும், மீதமுள்ள 50 விழுக்காட்டுக்குத் தொழிற்சாலைப் பங்குகளாகவும் வழங்கப்படும்.

9. சிப்காட் தொழிற்பேட்டைகளுக்கு நிலம் கொடுத்த உள்ளூர் மக்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்குத் தொழிற்சாலைகளில் வேலை வழங்கப்படும்.

### தொழில் தொடங்கச் சலுகை

10. ஊரகப் பகுதிகளில் தொழில்தொடங்க ஊக்குவிக்கப்படும். ஊர்ப்புறங்களில் தொழில்தொடங்க முன்வருவோருக்கு அதிக வரிச்சலுகைகள் வழங்கப்படும்.

11. தொழில் வளர்ச்சியில் திருமணம் ஆன பெண்களும் பங்கேற்க உதவி செய்யும் வகையில், ஊர்களிலும், சிறு நகரங்களிலும் பணிக்குச் செல்லும் பெண்களின் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளும் மையங்கள் (Creches) ஏற்படுத்தப்படும்.

12. வணிகர்கள் மற்றும் முறைசாராத் தொழில்கள் வளர்ச்சிக்கு வழிசெய்தல்: முறைசாராத் தொழில்களுக்குக் கடன் வாய்ப்புகளை எளிதாக்குதல், வங்கிகள் கடன் அளிக்க அரசு உத்தரவாதம் அளிக்கப்படும்.

13. திறன்மிக்க மனித வளம் உருவாக்கப்படும். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொழிற்கல்லூரியும், ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு தொழிற்பயிற்சி மையமும் அமைக்கப்படும்.

14. சில தொழில்களுக்கான மூலப் பொருட்களைத் தில்லி, குஜராத், மராட்டியம் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்து வாங்கவேண்டியுள்ளது. அங்குள்ளவர்கள் சிண்டிகேட் அமைத்து விலையை உயர்த்துவதால் ஏற்படும் இழப்பைத் தவிர்க்கும் வகையில், தமிழ்நாட்டில் சென்னை, கோவை ஆகிய நகரங்களில் மூலப்பொருட்கள் வங்கி தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### மின் கட்டணச் சலுகை

15. சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் திமுக ஆட்சியில் உயர்த்தப்பட்ட மின்கட்டண உயர்வும், நிலைக்கட்டண உயர்வும் முழுமையாக ரத்து செய்யப்படும்.

16. சிறு–குறு விசைத்தறியாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தின் அளவு, 500 யூனிட்டுகளில் இருந்து 1000 யூனிட்டுகளாக உயர்த்தப்படும். இச்சலுகை 10 குதிரைத் திறன் மோட்டாரில் இருந்து 15 குதிரைத்திறன் மோட்டார்களுக்கும் நீட்டிக்கப்படும்.

17. விசைத்தறியாளர்கள் சூரிய ஒளி மின்உற்பத்திக் கட்டமைப்பை ஏற்படுத்திக்கொள்ள வசதியாக, அதற்குத் தேவையான மூலப்பொருட்கள் 90% மானியத்தில் வழங்கப்படும்.

18. தீப்பெட்டித் தொழிலுக்குத் தேவையான பொட்டாசியம் குளோரைடு, மெழுகு உள்ளிட்ட அனைத்து மூலப் பொருட்களும் நியாயமான விலையில் சிட்கோ மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

19. பட்டாசுத் தொழிலைப் பாதுகாக்கும் வகையில், சீனப் பட்டாசுகள் கள்ளச்சந்தையில் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்க மத்திய அரசுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

# உண்மையான தொழில் முதலீடுகள்... உண்மையான தொழில் வளர்ச்சி!

தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் நகைப்புக்குரிய விசயமாகப் பார்க்கப்பட்டது தொழில் முதலீடுகள் தான். திமுக ஆட்சியில் தொழில் நிறுவனங்களுடன் செய்துகொள்ளப்பட்ட 1,176 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மூலம், ரூ.12.16 இலட்சம் கோடி தொழில் முதலீடுகள் தமிழ்நாட்டிற்குக் கிடைத்திருப்பதாக திமுக அரசு பறைசாற்றிக் கொண்டது. இதன் மூலம் தமிழ்நாட்டில் 34 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்ததாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து கூறி வந்தார். ஆனால், இவை அனைத்தும் தமிழக மக்களை ஏமாற்றுவதற்காகக் கூறப்பட்ட பொய்கள் ஆகும்.

தமிழ்நாட்டிற்குக் கிடைத்த உண்மையான தொழில் முதலீடுகள் எவ்வளவு என்பதை நிரூபிப்பதற்காக “திமுக அரசின் பொய் முதலீடுகள்” என்ற ஆவணத்தைப் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் வெளியிட்டார். அதில், தமிழ்நாடு அரசு செய்து கொண்ட 1,176 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மூலம் கிடைக்க வேண்டிய ரூ.12.16 இலட்சம் கோடி தொழில் முதலீட்டில் வெறும் 8.2% மட்டும் தான் வந்திருப்பதாக புள்ளி விவரங்களுடன் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் விளக்கியிருந்தார். இதன் மூலம், திமுகவின் முகமூடி கிழிந்தது.

குறைந்த எண்ணிக்கையிலான மக்களுக்கு மட்டும் வேலை வழங்கக் கூடிய சேவைத் துறை வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் நிலையிலும், அதிகம் பேருக்கு வேலை வழங்கக் கூடிய வேளாண்மைத் துறை வீழ்ச்சியடைந்து வரும் நிலையிலும், அதிக எண்ணிக்கையிலானவர்களுக்கு நிலையான, கண்ணியமான ஊதியத்துடன் கூடிய வேலை கிடைக்க தொழிற்சாலைகள் அதிக எண்ணிக்கையில் தொடங்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை பாமக மேற்கொள்ளும்.

**திமுக அரசின் தோல்விகள்**

உலகத் தொழில் முதலீட்டாளர் மாநாடுகளை மிகப் பெரிய அளவில் நடத்தி, மக்களின் வரிப் பணத்தை வீணடித்த திமுக அரசு, உண்மையாகவே தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் அக்கறை காட்டவில்லை. அதிகத் தொழில் முதலீடுகள் வந்துவிட்டதாக பொய்யான கணக்குகளை காட்டி மக்களை ஏமாற்றும் முயற்சியில் மட்டுமே திமுக அரசு ஈடுபட்டது.

1. திமுக அரசின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துபாய், சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின், அமெரிக்கா ஆகிய 7 நாடுகளுக்குப் பயணம் சென்று, ரூ.34,014 கோடி முதலீட்டை ஈர்க்கப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். ஆனால், அந்த முதலீடுகளில் ஒரு பைசாகூட வரவில்லை.

2. தமிழ்நாட்டில் ரூ.1,720 கோடி முதலீட்டில் காலணித் தொழிற்சாலையை அமைக்க ஒப்பந்தம் செய்துகொண்ட தென் கொரியாவின் Hwaseung Enterprise நிறுவனம் அதை ரத்து செய்து விட்டு, ஆந்திராவில் தொழிற்சாலை அமைக்க முதலீடு செய்துள்ளது.

3. ஃபாக்ஸ்கான் நிறுவனம் ரூ.15,000 கோடி முதலீடு செய்ய ஒப்பந்தம் கையெழுத்திட்டிருப்பதாகத் தமிழக அரசு அறிவித்த நிலையில், அப்படி எந்தத் திட்டமும் இல்லை என்று அடுத்த அரை நாளில் ஃபாக்ஸ்கான் நிறுவனம் அறிவித்து, திமுக அரசின் முகத்திரையைக் கிழித்தது.

## தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்

1. தமிழ்நாட்டில் இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை வீதம் 2026, 2028, 2030 ஆகிய ஆண்டுகளில் உலகத் தொழில் முதலீட்டாளர் மாநாடுகள் நடத்தப்படும்.

2. ஆண்டுக்கு ஒருமுறை மண்டல அளவிலான தொழில் முதலீட்டாளர் மாநாடுகள் நடத்தப்படும்.

3. காவிரி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலங்களில் வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு ஆண்டுக்கு ரூ.1 இலட்சம் கோடி முதலீடு திரட்டும் நோக்குடன் ஆண்டுதோறும் வேளாண் முதலீட்டாளர் மாநாடு நடத்தப்படும்.

4. ஒவ்வொரு ஆண்டும் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை, அவற்றின் மதிப்பு, திறக்கப்பட்ட தொழிற்சாலைகள், புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் நிலை, கிடைத்த வேலைவாய்ப்புகள் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய வெள்ளை அறிக்கை ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 1ஆம் தேதி வெளியிடப்படும்.

## தொழில் முதலீட்டை ஈர்க்கச் சிறப்புத் திட்டம்

5. தமிழ்நாட்டில் தொழில்முதலீட்டை ஈர்க்கும் வகையில், தமிழகம் 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் தனித்தனிப் பொருளாதார ஆணையரகங்களாக அறிவிக்கப்படும். ஒவ்வொரு மண்டலத்திலும் தலைமைச் செயலாளர் நிலையில் உள்ள அதிகாரி ஒருவர் பொருளாதார ஆணையராக நியமிக்கப்படுவார். மண்டல அளவில் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதுதான் இந்த ஆணையரகங்களின் பணிகளாகும்.

6. ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள இயற்கை வளங்கள், தொழில் முதலீட்டு வாய்ப்புகள் ஆகியவற்றைக் கண்டறிந்து, அதற்கேற்ற வகையில் புதிய தொழில்களைத் தொடங்குதல், அதற்கான முதலீட்டை வெளிநாடுகளில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் ஈர்த்தல் ஆகிய பணிகளில் இந்த அமைப்பு ஈடுபடும்.

7. இந்தப் பணிகளில் மண்டலப் பொருளாதார ஆணையர்களுக்கு உதவுவதற்காக, அரசு அதிகாரிகள் மற்றும் அந்த மண்டலத்தைச் சேர்ந்த தொழிலதிபர்கள் உள்ளடக்கிய ஆலோசனை அமைப்பு உருவாக்கப்படும்.

8. மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்களில் தொழில்வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்குடன் அங்குப் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும். இதற்காகச் சிறப்புத்திட்டம் செயல்படுத்தப்படும்.

9. மதுரை – தூத்துக்குடி தொழில் தாழ்வாரம் (Industrial Corridor) இன்னும் முழுமையடையவில்லை. அப்பகுதியில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திப் புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.

10. புதிய தொழிற்சாலைகளைத் தொடங்க முன்வருவோருக்கு உடனடியாக நிலம் வழங்குவதற்கு வசதியாக ஒன்றரை இலட்சம் ஏக்கர் கொண்ட நில வங்கி ஏற்படுத்தப்படும். இதில் ஒரு சதுர அடிகூட விளைநிலமாக இருக்காது.

11. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு வேளாண் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படும். இதன் மூலம், அந்தந்தப் பகுதிகளில் வேலைவாய்ப்பு அதிகரிக்கப்படும்.

■

# வருவாய் - நிதிப் பற்றாக்குறை, கடன் குறைக்கப்படும்: அரசின் வருவாய் அதிகரிக்கப்படும்!

திமுகவின் ஐந்தாண்டு ஆட்சியில் தமிழ்நாட்டின் பொருளாதாரம் மிகப் பெரிய அளவில் வளர்ச்சி அடைந்துவிட்டதைப் போன்ற மாயத் தோற்றம் ஏற்படுத்தப்பட்ட போதிலும், அதில் எந்த உண்மையும் இல்லை. தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் எந்த நிலையிலும் உயரவில்லை. அரசின் வருவாய் சொல்லிக்கொள்ளும் படியாக அதிகரிக்கவில்லை.

மக்களின் வாழ்க்கைத்தரம் உயராததற்குக் காரணம் 60% மக்களின் வாழ்வாதாரமாகத் திகழும் வேளாண்துறை கடந்த இரு ஆண்டுகளில் வளர்ச்சியடைவதற்குப் பதிலாக வீழ்ச்சி அடைந்திருப்பது தான். தமிழ்நாட்டில் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்ததாகக் காகிதங்களில் கூறப்பட்டாலும், களத்தில் அதன் அறிகுறிகளைக் காண முடியவில்லை. அதன் விளைவுதான் அரசின் வருவாய் அதிகரிக்கவில்லை. அரசின் வருவாய் அதிகரிக்காததால், வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை ஆகியவை அதிகரித்து, மாநில அரசின் கடனும் அடைக்க முடியாத அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

இந்திய விடுதலைக்குப் பிறகு, தமிழகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஏற்படுத்தப்பட்ட 1952ஆம் ஆண்டிலிருந்து திமுக அரசு பொறுப்பேற்பதற்கு முந்தைய 2020–21ஆம் நிதியாண்டின் இறுதி வரையிலான 70 ஆண்டுகளில் தமிழகத்தின் நேரடிக் கடன் ரூ. 4.56 இலட்சம் கோடி மட்டும் தான். ஆனால், அதன்பின் பொறுப்பேற்ற திமுக அரசு ஐந்தாண்டுகளில் வாங்கிக் குவித்துள்ள கடன் மட்டும் ரூ.4.96 இலட்சம் கோடி ஆகும். இதேநிலை நீடித்தால் தமிழ்நாடு வங்கிகளிடம் அடகு வைக்கப்பட்டுவிடும். தமிழ்நாட்டை மீட்க வேண்டும் என்றால், அதற்கு ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

### திமுக அரசின் தோல்விகள்

திமுக ஆட்சிக்கு வந்த நாள் முதலாகவே, வீண் செலவுகளைக் குறைத்து வருவாய் பற்றாக்குறையை ஒழிப்போம் என்று கூறி வருகிறது. ஆனால், ஐந்தாண்டுகளாகியும் வருவாய் பற்றாக்குறை ஒழிக்கப்படவில்லை. மாறாக, 2025–26ஆம் ஆண்டில் கூட ரூ.69 ஆயிரம் கோடி அளவுக்கு வருவாய்ப் பற்றாக்குறையை திமுக அரசு விட்டுச் சென்றுள்ளது.

1. திமுக ஆட்சியில் சுமார் 5 இலட்சம் கோடி அளவுக்குக் கடன் வாங்கிக் குவிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த ஐந்தாண்டுகளில் செய்யப்பட்ட மூலதனச் செலவு, ரூ.2 இலட்சத்து 23 ஆயிரத்து 987 கோடி தான். இதன் மூலம் கடனாக வாங்கிய தொகையில் மீதமுள்ள 2 இலட்சத்து 76 கோடியைத் திமுக அரசு வீணாகச் செலவழித்துள்ளது.

2. திமுக ஆட்சியின் 5 ஆண்டுகளிலும் வருவாய்ப் பற்றாக்குறையும், நிதிப் பற்றாக்குறையும் அதிகரித்துள்ளன.
3. தமிழக அரசின் கடன் அளவைக் கணக்கிட்டுப் பார்த்தால், ஒவ்வொருவரின் பெயரிலும் ரூ.1.27 இலட்சம் வீதம் 4 பேர் கொண்ட குடும்பத்தின் மீது ரூ.5.08 இலட்சம் கடன் சுமை சுமத்தப்பட்டிருக்கிறது.

## தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்

1. தமிழ்நாட்டின் ஆண்டுப் பொருளாதார உற்பத்தி மதிப்பு 2025–26ஆம் ஆண்டின் முடிவில் 400 பில்லியன் அமெரிக்க டாலராக (ரூ.35 இலட்சம் கோடி) இருக்கும் நிலையில், இந்திய விடுதலையின் நூற்றாண்டான 2047ஆம் ஆண்டில் இதை 3.5 டிரில்லியன் அமெரிக்க டாலராக ($ 3.5 இலட்சம் கோடி) உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
2. தமிழகத்தின் ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை 10 விழுக்காட்டுக்கும் கூடுதலாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.
3. உற்பத்தித்துறை வளர்ச்சி ஆண்டுக்கு 20 விழுக்காடு என்ற அளவிற்கு உயர்த்தப்படும்.
4. வேளாண் துறை வளர்ச்சி ஆண்டுக்கு 5 விழுக்காட்டிற்கும் குறையாமல் உறுதி செய்யப்படும்.

## வரி அல்லாத வருவாயைப் பெருக்குவதற்கான திட்டங்கள்

5. கிரானைட் குவாரிகளை முறைப்படுத்தி நேரடியாக கிரானைட் விற்பனை செய்வதன் மூலம் ஆண்டுக்கு ரூ.65,000 கோடி கூடுதல் வருவாய் ஈட்டப்படும்.
6. தாது மணல் குவாரிகளை முறைப்படுத்துவதன் மூலம் ஆண்டுக்கு ரூ.70,000 கோடி அதிக வருமானம் பெறப்படும்.
7. தமிழ்நாட்டில் அரசுக்குச் சொந்தமான நிலங்களில் அமைக்கப்பட்டுள்ள கருங்கல் குவாரிகளை அரசே ஏற்று நடத்துவதன் மூலம் ஆண்டுக்கு ரூ.15,000 கோடி கூடுதல் வருவாய் ஈட்டப்படும்.
8. ஆற்று மணலை இறக்குமதி செய்து விற்பது, தாதுமணல் மீதான உள்ளூர் வரி விதிப்பு ஆகியவற்றின் மூலம் ஆண்டுக்கு ரூ.30,000 கோடி கூடுதல் வருவாய் ஈட்ட முடியும்.
9. ஜி.எஸ்.டி. வரி வசூலைத் தீவிரப்படுத்துவதன் மூலம் ஆண்டுக்கு ரூ.25,000 கோடி கூடுதல் வருவாய் ஈட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
10. மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலமாக மட்டும் ஆண்டுக்கு ரூ.2.05 இலட்சம் கோடி வருவாய் ஈட்ட முடியும். இவற்றில் ரூ. 1.80 இலட்சம் கோடி வரி அல்லாத வருவாய் என்பது குறிப்பிடத்தக்கது.

### வருவாய் மற்றும் நிதிப் பற்றாக்குறை குறைப்பு

11. தமிழ்நாடு அரசின் நிதி நிலையை வலுப்படுத்த வருவாய்ப் பற்றாக்குறையை ஒழித்து, வருவாய் உபரியை ஏற்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

    அ. தமிழக அரசின் அனைத்துத் துறைகளுக்குமான நிர்வாகச் செலவுகள் 15% குறைக்கப்படும்.

    ஆ. தமிழ்நாட்டிற்குள் முதலமைச்சர் தவிர்த்த பிற அமைச்சர்கள் விமானப் பயணம் மேற்கொள்வது தடை செய்யப்படும்.

    இ. அமைச்சர்கள், அதிகாரிகள், அரசுத் துறைகள் ஆகியவற்றுக்குப் புதிய மகிழுந்துகள் வாங்க தடை விதிக்கப்படும்.

    ஈ. அமைச்சர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோர் ஆடம்பர விடுதிகளில் தங்கத் தடை விதிக்கப்படும். அவர்கள் அரசு விருந்தினர் மாளிகைகளில் மட்டுமே தங்க வேண்டும்.

    உ. குடிநீர் விநியோகம், திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றைக் கையாள்வதற்காகத் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் எந்தவித இழப்பீடும் இல்லாமல் இரத்து செய்யப்படும். அப்பணிகளை அரசுத் துறைகளே மேற்கொள்ள ஊக்குவிக்கப்படும்.

    ஊ. தமிழக அரசு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதிலும், மூலதனச் செலவுகள் எந்த வகையிலும் குறைக்கப்படாது.

12. வருவாய்ப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்தி, வருவாய் உபரியை ஏற்படுத்துவதன் மூலமும், மூலதன செலவுகளை அதிகம் செய்தாலும் கூட, நிதிப் பற்றாக்குறை அதிகரிக்காமல் கட்டுப்படுத்தப்படும்.

### கடன் சுமைக் குறைப்பு

13. ஒரு மாநில அரசு கடன் வாங்காமல் மக்கள்நலத் திட்டங்களையும் உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான திட்டங்களையும் செயல்படுத்த முடியாது. அதே நேரத்தில் தமிழக அரசின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் நிதிப் பற்றாக்குறையையும், அதைச் சமாளிக்க வாங்கப்படும் கடனின் அளவையும் பாதியாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

14. வரி அல்லாத வருவாய் மூலம் கிடைக்கும் கூடுதல் வருமானத்தின் ஒரு பகுதியைத் தமிழக அரசு கடனை அடைக்கப் பயன்படுத்தப்படும். அதன் மூலம் தமிழக அரசின் கடன்சுமை அடுத்த சில ஆண்டுகளில் கணிசமாகக் குறைக்கப்படும்.

# 100 பொதுத்துறை நிறுவனங்களையும் இலாபத்தில் இயக்க நடவடிக்கை: ரூ.50,000 கோடி மறுமுதலீடு!

மாநில அரசின் வருவாய் ஆதாரங்களும், மத்திய அரசின் வரிப் பகிர்வு முறையும் அண்மைக்காலமாக எண்ணற்ற மாற்றங்களை எதிர் கொண்டு வருகின்றன. 2017ஆம் ஆண்டில் ஜிஎஸ்டி வரி விதிப்புமுறை அறிமுகம் செய்யப்பட்ட பிறகு, வரி விதிக்கும் அதிகாரம் மாநில அரசுகளிடம் இருந்து மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஜிஎஸ்டி கவுன்சிலுக்கு மாறிவிட்டது. ஒரு மாநில அரசின் விருப்பமே இல்லாமல் கூட, ஜிஎஸ்டி கவுன்சிலால் வரி விகிதங்களில் மாற்றங்களைச் செய்ய முடியும். அத்தகைய சூழலில், மாநில அரசின் வருவாய் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது.

அதுமட்டுமின்றி, ஒரு மாநில அரசு அதன் வருவாயை அதிகரிக்க வேண்டும் என்று நினைத்தால், அதற்காக வரிகளை உயர்த்த முடியாது. மது விற்பனை, எரி பொருள் விற்பனை ஆகியவற்றின் மீது மதிப்புக் கூட்டு வரி விதிக்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு உண்டு என்றாலும், மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில், மது வணிகத்தில் இருந்து கிடைக்கும் மதிப்புக்கூட்டு வரி வருவாய் முற்றிலுமாக நின்றுவிடும். பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் மீது அதிக வரி விதித்து மக்களைக் கொடுமைப்படுத்த முடியாது. தமிழ்நாட்டில் வாகனங்கள் மீதான வரியும், பத்திரப்பதிவுக்கான கட்டணங்களும் ஏற்கெனவே உச்சத்தை அடைந்திருப்பதால், அதிலும் எந்த மாற்றத்தையும் செய்ய முடியாது. இத்தகைய சூழலில், பொதுத் துறை நிறுவனங்களை இலாபத்தில் இயக்கச் செய்வதன் மூலமாகவும், கனிம வளங்கள் மூலமான வருவாயை அதிகரிக்கச் செய்வதன் மூலமாகவும்தான் மாநில அரசின் வருவாயைப் பெருக்க முடியும். இதற்காகப் பொதுத்துறை நிறுவனங்களை இலாபத்தில் இயக்க வலிமையான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.

### திமுக அரசின் தோல்விகள்

தமிழ்நாட்டில் மொத்தம் 102 பொதுத்துறை நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் இரு நிறுவனங்கள் முடங்கியுள்ள நிலையில், 100 நிறுவனங்கள் மட்டுமே இயங்கி வருகின்றன. மொத்தம் உள்ள 100 பொதுத்துறை நிறுவனங்களில் 54 நிறுவனங்கள் மட்டும் தான் சிறிய அளவு இலாபத்தில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 46 பொதுத்துறை நிறுவனங்களும் நட்டத்தில் தான் இயங்கி வருகின்றன.

1. பொதுத்துறை நிறுவனங்களின் மூலம் 2022 – 23ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கு ரூ.16,048 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

2. பொதுத் துறை நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கியதன் மூலம் அந்த ஆண்டில் அரசுக்கு மேலும் ரூ.26,867 கோடி இழப்பு ஏற்பட்டது.
3. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தில் இயங்குவதால், அவற்றின் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பலன்கள், ஓய்வூதியத்தின் மீதான அகவிலைப்படி உயர்வு ஆகியவற்றை வழங்க முடியவில்லை.

## பொதுத்துறை நிறுவனங்களை இலாபத்தில் இயக்குவதற்கான மாநில அரசின் நடவடிக்கைகள்

1. தமிழ்நாட்டில் நட்டத்தில் இயங்கி வரும் 46 பொதுத் துறை நிறுவனங்களை இலாபத்தில் இயக்கச் செய்வதற்காக அடுத்த ஐந்தாண்டுகளில் ஆண்டுக்கு ரூ.10 ஆயிரம் கோடி வீதம் மொத்தம் ரூ.50,000 கோடி மறுமுதலீடு செய்யப்படும்.
2. தமிழ்நாடு மின்சார வாரியம், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றில் அதிக அளவில் மறுமுதலீடு செய்யப்படும்.
3. தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள மின் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதன் மூலம் மின்வாரியத்தை இலாபத்தில் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
4. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் வீண் செலவைத் தவிர்க்கக் கடுமையான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.
5. பொதுத்துறை நிறுவனங்களின் வரவு செலவுகள் குறித்த காலத்தில் மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது கட்டாயமாக்கப்படும்.
6. பொதுத் துறை நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளில் நவீனத்துவம் புகுத்தப்படும்.
7. பொதுத்துறை நிறுவனங்களின் மீதான கண்காணிப்பை அதிகரிக்கும் வகையில், அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களும் பங்குச் சந்தையில் பட்டியலிடப்படும்.

# மகளிர், குழந்தைகள் பாதுகாப்பே மகத்தான நோக்கம்: குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.2,000 !

சமூகத்தின் போற்றத்தக்க பிரிவினராகக் கருதப்படுபவர்கள் குழந்தைகளும் பெண்களும் தான். ஆனால், இந்த இரு பிரிவினருக்கும் தமிழ்நாட்டில் பாதுகாப்பு இல்லாத சூழல் ஏற்பட்டிருக்கிறது. சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை, கோவை விமான நிலையத்திற்குப் பின்புறம் கல்லூரி மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை, கும்மிடிப்பூண்டியை அடுத்த ஆரம்பாக்கத்தில் 9 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை, திருவண்ணாமலையில் ஆந்திர இளம்பெண் இரு காவலர்களால் கூட்டுப் பாலியல் வன்கொடுமை, சென்னையில் பாலியல் வன்கொடுமைக்கான முயற்சியில் இளம்பெண், அவரது கணவர், 2 வயது குழந்தை ஆகியோர் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டது, தஞ்சாவூரில் காதலிக்க மறுத்த ஆசிரியை வெட்டிக் கொலை, இராமேஸ்வரத்தில் காதலிக்க மறுத்த மாணவி வெட்டிக் கொலை எனப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான கொடூரக் குற்றங்களின் பட்டியல் நீடித்துக் கொண்டே செல்கிறது.

திமுக ஆட்சியில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 54 விழுக்காடும், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 61 விழுக்காடும் அதிகரித்திருக்கின்றன. அதே நேரத்தில், பெண்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காகத் திமுக ஆட்சியில் குறிப்பிடும் படியாக எந்த நன்மைகளும் செய்யப்படவில்லை. இந்த நிலையை மாற்றிப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கான திட்டங்களைச் செயல்படுத்த ஆட்சி மாற்றம் மிகவும் அவசியமாகும்.

## திமுக அரசின் தோல்விகள்

2021ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான திமுக அரசின் தேர்தல் அறிக்கையில் பெண்கள் பாதுகாப்பு, பெண்கள் முன்னேற்றம் தொடர்பாக 22 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. அவற்றில் 18 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. வெறும் 4 வாக்குறுதிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டன.

**நிறைவேற்றப்படாத முக்கிய வாக்குறுதிகள்:**

1. 35 வயதுக்கு மேற்பட்ட கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் கைம்பெண்களுக்குக் கல்வித் தகுதியின் அடிப்படையில் அரசு மற்றும் அரசு நிறுவனங்களில் வேலை வழங்கப்படும். (வாக்குறுதி எண் – 250)
2. கருவுற்ற பெண்களுக்கு மாதம் ரூ.3 ஆயிரம் வீதம் 8 மாதத்திற்கு மொத்தம் 24 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். (வாக்குறுதி எண் – 252)
3. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சம் கிராமப்புற பெண்களுக்குக் கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்தல், மண் பானை செய்தல் போன்ற சிறு தொழில் செய்ய ரூ.50,000 வட்டியில்லாக் கடன் வழங்கப்படும். (வாக்குறுதி எண்–261)

## பெண்கள், குழந்தைகள் நலன், பாதுகாப்புக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்

1. குடும்பத் தலைவிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மாத உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தப்படும்.
2. மகளிருக்கான உரிமைத் தொகை எந்த நிபந்தனைகளும் இல்லாமல் அரிசி குடும்ப அட்டை வைத்திருக்கும் அனைத்துக் குடும்பத் தலைவிகளுக்கும் வழங்கப்படும்.

## ஏழைப் பெண்கள் சிறுதொழில் தொடங்க ரூ.25,000 கடன்

3. பெண்களின் முன்னேற்றத்தை உறுதி செய்யும் வகையில், ஏழைப் பெண்கள் தொழில் தொடங்க ரூ.25,000 கடன் வழங்கப்படும். இதில் ரூ.10,000 மானியம் போக, ரூ.15,000–ஐ இரு ஆண்டுகளில் செலுத்தினால் போதுமானது.
4. ஏழைப் பெண்கள் தொழில் தொடங்குவதற்கான ரூ.25,000 கடன் மொத்தம் ஒரு கோடிப் பேருக்கு வழங்கப்படும்.
5. சென்னை, தருமபுரி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் மகளிருக்கான சிறப்புப் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்படும்.
6. தமிழகத்தின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் மகளிர் அதிகார மையம் அமைக்கப்படும்.
7. பெண் கல்விக்கும், பெண்ணுரிமைக்கும் பெரும் ஆபத்தாக மாறி இருக்கும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களைத் தடுக்கக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
8. காவல்துறையில் மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்படும்.

## மகளிர் பாதுகாப்பு

9. மகளிர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கல்வி நிலையங்கள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதிகளிலும், ஆள் நடமாட்டமில்லாத இடங்களிலும் வலிமையான கண்காணிப்பு காமிரா கட்டமைப்பு உருவாக்கப்படும். இப்பகுதிகளை காவல்துறையின் தனிப்பிரிவைக் கொண்டு கண்காணிப்பு காமிராக்கள் மூலம் கண்காணிப்பதன் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுக்கப்படும்.
10. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் மாணவிகளுக்கு தற்காப்புக் கலை பயிற்சி அளிக்கப்படும்.
11. பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் மற்றும் வேலைக்குச் செல்லும் பெண்கள் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகச் சென்னையைப் போன்று பிற மாவட்டங்களிலும் ‘மகளிர் மட்டும்’ பேருந்துகள் இயக்கப்படும்.
12. சமூக விரோதிகள் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் செய்ய வாய்ப்புள்ள இடங்களில் சாதாரண உடையில் ஆண், பெண் காவலர்களால் மறைந்திருந்து கண்காணிக்கப்படும்.
13. பெண்களுக்கான திருமண வயதை 21ஆக உயர்த்தும்படி மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

### பாலின நிதிநிலை அறிக்கை

14. தமிழக அரசால் செயல்படுத்தப்படும் ஒவ்வொரு திட்டத்திலும் சுமார் 50 விழுக்காடு தொகை பெண்களுக்காக ஒதுக்கப்படும். இதுகுறித்த விவரங்கள் அடங்கிய பாலின நிதிநிலை அறிக்கை தமிழகச் சட்டப்பேரவையில் ஒவ்வொரு ஆண்டும் தாக்கல் செய்யப்படும்.

15. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்கான மாநில அரசின் பங்களிப்பு அதிகப்படுத்தப்பட்டு ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு நாள் தேவைக்கான வைட்டமின்களும், தாது உப்புக்களும் அடங்கிய சத்துணவு வழங்கப்படும். அங்கன்வாடிக் கட்டடங்கள் தரம் உயர்த்தப்படும்.

16. கருவுற்ற பெண்களுக்குச் சத்துணவு உருண்டைகள் வழங்கும் திட்டம் விரிவாக்கப்பட்டு அனைவருக்கும் நாள்தோறும் ஒரு முறை முட்டையுடன் கூடிய முழுமையான சத்துணவு தரும் திட்டம் செயலாக்கப்படும். இந்தத் திட்டம் பால் புகட்டும் தாய்மார்களுக்கும் பால் புகட்டும் காலம் வரை நீட்டிக்கப்படும்.

### குழந்தைகளுக்கான கொள்கை மற்றும் செயல்திட்டம்

17. 18 வயது வரை உள்ள அனைவரும் குழந்தைகளாகக் கருதப்படும் வகையில், தமிழக அரசு சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்படும். குழந்தைகளுக்கான கொள்கை மற்றும் செயல்திட்டம் வெளியிடப்படும்.

18. தமிழ்நாட்டில் சத்துக்குறைவு, வளர்ச்சிக் குறைவால் பாதிக்கப்பட்ட குழந்தைகளே இல்லை என்ற நிலையை ஏற்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் வலுப்படுத்தப்படும்.

19. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவச் சேவையை அடிப்படை உரிமையாக்கச் சட்டத் திருத்தம் செய்யப்படும்.

20. தமிழக அரசுத் திட்டங்களில் குழந்தைகள் நலன் மற்றும் மேம்பாட்டுக்காகச் செலவிடப்படும் நிதியின் அளவு குழந்தைகளின் மக்கள் தொகைக்கு ஏற்ப 39% ஆக உயர்த்தப்படும்.

### திருநங்கையர்கள் நலன்

21. தமிழகத்தில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் திருநங்கையர்களுக்கு 1% தனி இடஒதுக்கீடு வழங்கப்படும்.

22. திருநங்கையர்கள் மீது சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும் அன்புகாட்டி, அரவணைக்க வேண்டியதன் தேவை குறித்து மக்களிடம் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் செய்யப்படும்.

23. குடும்பத்தைப் பிரிந்து வாழும் திருநங்கையர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு வசதியாக விடுதிகள் அமைத்துத் தரப்படும்.

# ரூ.10-க்கு 'மக்கள் சாப்பாடு' : நியாய விலைக் கடைகளில் மானிய விலையில் வெல்லம், சமையல் எண்ணெய்கள்!

ஒரு மாநிலத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் நிலவ வேண்டும் என்றால், அதற்கான முதல் தேவை விலைவாசி கட்டுக்குள் இருக்க வேண்டும் என்பதுதான். விலைவாசி அதிகரித்து, ஏழை, எளிய மக்களால் வாழ்க்கை நடத்த முடியாத நிலை ஏற்படும் சூழலில், அடிப்படைத் தேவைகளுக்காகக் குற்றங்களை செய்யும் நிலை உருவாகும். அத்தகைய நிலை ஏற்படுவதைத் தடுக்க விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டியது மாநில அரசுகளின் கடமை ஆகும்.

அதேபோல், வறுமையில் இருந்து மக்களை மீட்பதற்கான திட்டங்களும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட வேண்டும். இதற்கான சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழ்நாட்டு மக்களை அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழச் செய்வதற்கு பாட்டாளி மக்கள் கட்சி உறுதி பூண்டிருக்கிறது.

## திமுக அரசின் தோல்விகள்

பொதுவிநியோகத் திட்டம் தொடர்பாக மொத்தம் 7 வாக்குறுதிகளை 2021ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையில் திமுக அளித்தது. ஆனால், அவற்றில் ஒன்றுகூட நிறைவேற்றப்படவில்லை.

**நிறைவேற்றப்படாத முக்கிய வாக்குறுதிகள்**

1. குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்களுக்கு 15 நாட்களில் ஸ்மார்ட் கார்டு வழங்கப்படும். (வாக்குறுதி எண் – 234)
2. நியாய விலைக் கடைகளில் ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் மாதந்தோறும் ஒரு கிலோ சர்க்கரை கூடுதலாக வழங்கப்படும். குடும்ப அட்டைகளுக்கு ஒரு கிலோ உளுந்து மீண்டும் வழங்கப்படும். (வாக்குறுதி எண் – 240)
3. நியாயவிலைக் கடைகளில் நாட்டுச் சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். (வாக்குறுதி எண் – 68)

**வறுமை ஒழிப்பு, விலைவாசிக் கட்டுப்பாட்டுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்**

1. நகர்ப்புறங்களில் பணியாற்றும் ஏழைத் தொழிலாளர்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய மக்கள் உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும். இதன்படி, ரூ.10–க்குச் சோறு, சாம்பார், ரசம், தயிர், கூட்டு, பொரியல், ஊறுகாயுடன் நிறைவான மதிய உணவு வழங்கப்படும்.
2. ஞாயிற்றுக் கிழமைகளில் ரூ.25–க்கு அசைவ மதிய உணவு வழங்கப்படும்.

### வறுமை ஒழிப்பு – விலைவாசிக் கட்டுப்பாடு

3. வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு இரு கறவை மாடுகளை வாங்க 50% மானியத்தில் கடன் வழங்கப்படும்.

### நியாய விலைக் கடைகளில் கடலை எண்ணெய், நல்லெண்ணெய்

4. நியாய விலைக் கடைகளில் தற்போது வழங்கப்படும் பாமாயில் உடலுக்குக் கேடு என்பதால், அதற்குப் பதிலாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு கிலோ கடலை எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் மானிய விலையில் வழங்கப்படும்.

5. நியாய விலைக் கடைகளில் ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் மாதம் அரைக் கிலோ தேங்காய் எண்ணெய் மானிய விலையில் வழங்கப்படும்.

5. நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் வெள்ளைச் சீனியின் அளவு பாதியாகக் குறைக்கப்பட்டு, அதற்கு இணையான அளவு சர்க்கரை அல்லது வெல்லம் மானிய விலையில் வழங்கப்படும்.

6. நியாய விலைக் கடைகளில் துவரம் பருப்பு மட்டுமே இப்போது வழங்கப்பட்டு வரும் நிலையில், கூடுதலாக ஒரு கிலோ உளுந்து வழங்கப்படும்.

### ரூ.500–க்கு மளிகைப் பொருள் தொகுப்பு

7. நியாய விலைக் கடைகளில் ரூ.500–க்கு மளிகைப் பொருள் தொகுப்பு வழங்கப்படும். இதில், மிளகாய்த் தூள், மல்லித் தூள், மஞ்சள் தூள், பிரியாணி மசாலா, கடுகு, வெந்தயம், பெருஞ் சீரகம், சீரகம், மிளகு, பெருங்காயப் பவுடர், புளி, கிராம்பு, ஏலக்காய், பட்டை உள்ளிட்ட பொருட்கள் இடம்பெற்றிருக்கும்.

8. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளும் கணினி மயமாக்கப்படும். இதன் மூலம் நியாயவிலைக் கடைகளில் என்னென்ன பொருட்கள் எவ்வளவு இருப்பு உள்ளன என்பதைப் பொதுமக்கள் இணையத்தளம் மூலம் அறியமுடியும். அதுமட்டுமின்றி, நியாயவிலைக் கடைகளில் முறைகேடுகள் நடப்பது தடுக்கப்படும்.

9. அனைத்துப் பொருட்களையும் அனைத்து நாட்களிலும் வழங்க வகை செய்யப்படும்.

10. 200 குடும்ப அட்டைகள் உள்ள பகுதிகளில் பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்கப்படும்.

### விலைவாசிக் கட்டுப்பாடு

11. சந்தையில் விலைவாசியைக் குறைப்பதற்கான ஒரே தீர்வு அரசின் குறுக்கீடு மட்டும் தான். இதை உணர்ந்து தமிழகம் முழுவதும் 10 ஆயிரம் நியாய விலைப் பல்பொருள் அங்காடிகள் திறக்கப்படும். இவற்றில் அனைத்துப் பொருட்களும் அடக்க விலைக்கே விற்பனை செய்யப்படும்.

12. சென்னை உள்ளிட்ட நகரங்களில் சிறிய அளவில் நடத்தப்பட்டு வரும் பண்ணைப் பசுமைக் கடைகள் தமிழகம் முழுவதும் நீட்டிக்கப்படும்.

13. பண்ணைப் பசுமைக் கடைகளுக்காக மாவட்ட அளவில் அரசு கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும். இதனால் காய்கறிகளுக்கு நல்ல விலை கிடைப்பது உறுதி செய்யப்படும்.

# அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டம்: எட்டாம் ஊதியக் குழுப் பரிந்துரை செயலாக்கம்!

அரசு நிர்வாகத்தின் முதுகெலும்பாகச் செயல்படுபவர்கள் அரசு ஊழியர்கள் தான். பொது மக்களுக்கான நலத் திட்டங்கள் தொடங்கி, மாநிலத்தின் வளர்ச்சிக்கான திட்டங்கள் வரை அனைத்தையும் செயல்படுத்துபவர்கள் அவர்கள் தான். இன்னொரு பக்கம் சமூகத்திற்கு அறிவூட்டி நல்வழிப்படுத்துபவர்கள் ஆசிரியர்கள் தான். உலகின் மிகப் பெரிய ஞானியாகவோ, அதிகாரியாகவோ இருப்பவர்கள் கூட யாரோ ஓர் ஆசிரியரிடம் இருந்து அறிவை வளர்த்துக் கொண்டவர்களாகத்தான் இருக்க முடியும். சமூகத்தின் முன்னேற்றத்திற்கும், தனி நபர்களின் முன்னேற்றத்திற்காகவும் இந்த அளவுக்குப் பங்களிக்கும் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் மனநிறைவுடன் வாழ்வது உறுதி செய்யப்பட வேண்டும்.

ஆனால், திமுக ஆட்சியில் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இழைக்கப்பட்டவை எல்லாம் நம்பிக்கைத் துரோகங்கள் மட்டும் தான். பழைய ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்துவதாக வாக்குறுதி அளித்த திமுக, அதைச் செய்யாமல் யாருக்கும் பயனில்லாத தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் என்ற மோசடித் திட்டத்தை அறிவித்தது. ஆனால், அந்தத் திட்டமும்கூட இன்றுவரை நடைமுறைப்படுத்தவில்லை. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னேற்றத்திற்கான எந்த நடவடிக்கைகளும் திமுக அரசால் மேற்கொள்ளப்படவில்லை.

**திமுக அரசின் தோல்விகள்**

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலன் தொடர்பாக மொத்தம் 10 வாக்குறுதிகளைத் திமுக அளித்தது. ஆனால், அவற்றில் ஒரே ஒரு வாக்குறுதி மட்டுமே நிறைவேற்றப்பட்டது. மீதமுள்ள 9 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

1. ரூ.8,000 அடிப்படை ஊதியத்தில் நியமனம் செய்யப்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்கு சமவேலைக்கு சமஊதியம் வழங்கப்படும். (வாக்குறுதி எண்–311)
2. தமிழகத்தில் பணியாற்றும் சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களை அரசுப் பணியாளர்களாகப் பணியமர்த்திக் காலமுறை ஊதியம் வழங்கப்படும். (வாக்குறுதி எண்–313)
3. பகுதிநேர ஆசிரியர்கள், தற்காலிகப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பணிநிலைப்பு வழங்கப்படும்.

## அரசு ஊழியர் நலனுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பழைய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும். 2003ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதிக்குப் பிறகு பணிக்குச் சேர்ந்த அனைவருக்கும் இது பொருந்தும். இந்த ஓய்வூதியத் திட்டத்திற்காக அரசு ஊழியர்கள் எவரும் பங்களிப்புத் தொகை செலுத்தத் தேவையில்லை.

2. திமுக அரசால் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்கு விதிகள் வகுக்கப்படவில்லை என்பதாலும், அதைவிடச் சிறந்த ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படுவதாலும் அது கைவிடப்படும்.

## எட்டாம் ஊதியக் குழுப் பரிந்துரைகள் நடைமுறை - இடைக்கால நிவாரணம்

3. மத்திய அரசு ஊழியர்களின் ஊதிய விகிதத்தை மாற்றியமைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள எட்டாம் ஊதியக் குழு அதன் அறிக்கையைத் தாக்கல் செய்தவுடன், அதன் பரிந்துரைகள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும். அதன் அடிப்படையில், 2026 ஜனவரி ஒன்றாம் தேதி முதல் தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படும்.

4. எட்டாம் ஊதியக் குழுப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் வரை, 2026ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒன்றாம் தேதி முதல் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அவர்களின் ஊதிய விகிதத்திற்கு ஏற்றவாறு மாதம் ரூ.3,000 முதல் ரூ.10,000 வரை இடைக்கால நிவாரணம் வழங்கப்படும்.

## ஊதிய முரண்பாடுகள் களையப்படும்

5. எட்டாம் ஊதியக் குழுப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் போது, இடைநிலை ஆசிரியர்கள், அரசு மருத்துவர்கள், நிலஅளவை ஆய்வாளர்கள் உள்ளிட்ட அனைவரின் ஊதிய முரண்பாடுகளும் களையப்படும். அரசு மருத்துவர்களுக்கு அவர்களின் பணிக்காலத்தில் 5, 9, 11, 12 ஆண்டுகளில் காலம் சார்ந்த ஊதிய உயர்வு வழங்கப்படும்.

6. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒரு பதவி உயர்வு கிடைப்பது உறுதி செய்யப்படும்.

7. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பணியிட மாற்றத்தில் வெளிப்படைத்தன்மை ஏற்படுத்தப்படும். நிர்வாகப் பணியிட மாற்ற முறை ரத்து செய்யப்படும்.

8. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் பதவி உயர்வுக்குத் தடையாக இருக்கும் அரசாணை எண் 243 இரத்து செய்யப்படும்.

### பகுதிநேர ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுக்குப் பணிநிலைப்பு

9. பகுதி நேரப் பள்ளி ஆசிரியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலகப் பணியாளர்கள் பணி நிலைப்புச் செய்யப்படுவார்கள். அவர்களுக்குக் காலமுறை ஊதியம் நிர்ணயிக்கப்படும்.

10. அரசு பல்கலைக்கழகங்களிலும், பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளிலும் தொகுப்பூதியத்தில் பணியாற்றுவோர் அனைவரும் பணி நிலைப்புச் செய்யப்படுவர்.

11. அரசு ஊழியர்களின் குறைகளைக் கேட்டறிந்து சரி செய்வதற்காக அரசுத் துறைச் செயலாளர் தலைமையில் தனி ஆணையம் அமைக்கப்படும்.

12. அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வூதியப் பயன்கள் உடனடியாக வழங்கப்படும்.

13. போக்குவரத்துக் கழக ஊழியர்கள் அனைவரும் அரசு ஊழியர்களாக்கப்படுவார்கள்.

14. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் அரசு ஊழியர்களுக்கு அதிக எண்ணிக்கையில் குடியிருப்புகள் கட்டித்தரப்படும்.

15. கிராம சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்களின் சேவையைப் பாராட்டும் வகையில் அவர்களுக்கு 25% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

### ஓய்வூதியர் நலன்

16. தமிழக அரசுத் துறைகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு மத்திய அரசு ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படுவதற்கு இணையாகக் குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ.3500 வழங்கப்படும். மருத்துவப் படி 100 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தப்படும்.

17. ஓய்வூதியர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்படி சிகிச்சை பெறுவதற்கான செலவுத் தொகை உச்சவரம்பு நீக்கப்படும். அனைத்துச் சிகிச்சைகளுக்குமான செலவுத் தொகையை அரசே முழுமையாக ஏற்கும்.

18. ஓய்வூதியம் பெறுவதற்கான குறைந்தபட்சப் பணிக்காலம் 30 ஆண்டுகளில் இருந்து 25 ஆண்டுகளாகக் குறைக்கப்படும்.

19. அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெறும் நாளில் அனைத்து வகையான ஓய்வூதியப் பயன்களும் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

# இணையம் சார்ந்த கிக் (GIG) தொழிலாளர்கள், அமைப்புசாரா தொழிலாளர்களுக்குச் சமூகப்பாதுகாப்பு!

சமூகத்தில் சபிக்கப்பட்டவர்கள் அமைப்புசாரா தொழிலாளர்கள் தான். அவர்கள் அரும்பாடுபட்டு உழைத்தாலும் அவர்களுக்கு எந்தச் சமூகப் பாதுகாப்பும், வாழ்வாதாரப் பாதுகாப்பும் கிடையாது. மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டால் அரசு ஊழியர்கள் மற்றும் அமைப்புச் சார்ந்த தனியார் ஊழியர்களுக்கு ஊதியம் உறுதி செய்யப்படும். ஆனால், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு மழை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போது வேலையும் கிடைக்காது; ஊதியமும் கிடைக்காது. அதேபோல், 60 வயதுக்குப் பிறகு அவர்களுக்குச் சமூகப் பாதுகாப்பும் கிடைக்காது.

அமைப்புசாராத் தொழிலாளர்கள் பிரிவில் புதிதாகச் சேர்ந்திருப்பவர்கள் இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் ஆவர். முறைசாராத தொழில்களைச் செய்பவர்கள் தான் கிக் தொழிலாளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இணையவழியில் ஆணை பெற்று உணவு வகைகள், மளிகைப் பொருட்கள், பார்சல்கள் போன்றவற்றை வீடுகளுக்குத் தேடிச் சென்று விநியோகம் செய்வோரும், வாடகைக்கு இரு சக்கர ஊர்தி, தானிகள், மகிழுந்துகள் போன்றவற்றை இயக்குபவர்களும் இந்தப் பிரிவில் இடம் பெறுவார்கள். அமைப்புசாராத் தொழிலாளர்களைப் போலவே இவர்களுக்கும் எந்தச் சமூகப் பாதுகாப்பும், வாழ்வாதாரப் பாதுகாப்பும் கிடையாது. இந்த நிலை மாற்றப்பட்டு இரவு பகலாக உழைக்கும் முறைசாராத, அமைப்புசாராத தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரப் பாதுகாப்பும், சமூகப் பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும்.

**திமுக அரசின் தோல்விகள்**

1. இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டங்களை நடத்தியபோது, அவர்களுக்கு ஆதரவாகத் திமுக அரசு செயல்படவில்லை. மாறாக, அவர்களிடம் வேலைவாங்கும் நிறுவனங்களுக்கு ஆதரவாக செயல்பட்டுத் தொழிலாளர்களின் போராட்டத்தைக் கலைத்தது.
2. மாநில அரசு நினைத்தால் அதற்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி, சமூகப் பாதுகாப்பு வழங்கியிருக்க முடியும். ஆனால், அதைச் செய்ய திமுக அரசு தவறிவிட்டது.
3. தமிழ்நாட்டில் அமைப்புசாராத் தொழிலாளர்கள், முறைசாராத தொழில் செய்யும் கிக் தொழிலாளர்கள் ஆகியோரின் நலன்களுக்காக 20 வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், திமுக ஆட்சியில் அவற்றின் செயல்பாடுகள் முடங்கிக் கிடந்தன.

## முறைசாரா, அமைப்புசாராத் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்

1. உணவு விநியோகம் செய்யும் நிறுவனங்கள், மளிகைப் பொருட்கள், காய்கறிகள் விநியோகம் செய்யும் நிறுவனங்கள், பார்சல்கள் விநியோகம் செய்யும் நிறுவனங்கள், வாடகை மகிழுந்து, இரு சக்கர ஊர்திகளை இயக்கும் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் கிக் தொழிலாளர்களுக்கு, விநியோகக் கட்டணம் வழங்குவது மட்டுமின்றி, அடிப்படை ஊதியம் வழங்குவது கட்டாயமாக்கப்படும்.

2. அடிப்படை ஊதியம், விநியோகக் கட்டணத்தின் ஆண்டுச் சராசரி ஆகியவற்றைக் கணக்கிட்டு, இரண்டாம் ஆண்டில் இருந்து கிக் தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்புநிதி பிடித்தம் செய்யப்படவேண்டும்; மருத்துவக் காப்பீட்டு வசதியும் செய்துகொடுக்கப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படும்.

3. தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்திருக்கும் தொழிலாளர்கள் அனைவருக்கும், அவர்கள் பதிவு செய்த நாளில் இருந்து மூன்றாவது ஆண்டு நிறைவடைந்தபின் 50% மானியத்தில் இருசக்கர ஊர்திகள் வழங்கப்படும்.

4. தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் 60 வயதை நிறைவு செய்தபின், ரூ.3,000 மாத ஓய்வூதியம் வழங்கப்படும்.

5. பிற அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கும், அவர்கள் சார்ந்த வாரியங்கள் வாயிலாகச் சமூகப் பாதுகாப்பும், வாழ்வாதாரப் பாதுகாப்பும் வழங்கப்படும்.

■

# உட்கட்டமைப்பின் மூலம் உயர்வு: மூலதனச் செலவுகளுக்கு ஆண்டுக்கு ரூ.1.25 இலட்சம் கோடி ஒதுக்கீடு!

ஒரு மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு மிகவும் அடிப்படையான தேவை உட்கட்டமைப்பு வசதிகள் தான். இந்தியாவின் வளர்ச்சி வரலாற்றை இரு காலக்கட்டங்களாகப் பிரிக்கலாம். 1991ஆம் ஆண்டிற்கு முன் இந்தியாவின் ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி 3 விழுக்காட்டைத் தாண்டவில்லை. அதற்குக் காரணம், சாலைகள், தொடர் வண்டிப் பாதைகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் எனக் கட்டமைப்பு வசதிகள் பெரிதாக ஏற்படுத்தப்படாததுதான்.

1991ஆம் ஆண்டில் புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு அரசு முதலீடு மற்றும் தனியார் முதலீட்டைக் கொண்டு, உட்கட்டமைப்பு வசதிகள் மிகப் பெரிய அளவில் விரிவுபடுத்தப்பட்டன. அதன் பயனாகத்தான் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி பல ஆண்டுகளில் இரட்டை இலக்கத்தை எட்டியிருக்கிறது. இதே பாதையில் பயணம் தொடர உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஆனால், திமுக ஆட்சியில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான மூலதனச் செலவுகளுக்காக மட்டுமே மாநில அரசுகள் கடன் வாங்க வேண்டும். ஆனால், திமுக அதன் ஐந்தாண்டுக் காலத்தில் ரூ.4.96 இலட்சம் கோடி அளவுக்குக் கடன் வாங்கிக் குவித்த நிலையில், கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான மூலதனச் செலவாக ரூ.2 இலட்சத்து 23 ஆயிரத்து 987 கோடியை மட்டுமே செலவழித்துள்ளது. இதன் மூலம் கடனாக வாங்கிய தொகையில் மீதமுள்ள 2 இலட்சத்து 72 ஆயிரம் கோடி ரூபாயைத் திமுக அரசு வீணாகச் செலவழித்துள்ளது. கடனாக வாங்கிய தொகையில் பாதியைக் கூட உட்கட்டமைப்புகளை மேம்படுத்தச் செலவழிக்காததன் மூலம் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் திமுக அரசு பெரும் துரோகம் செய்திருக்கிறது.

**திமுக அரசின் தோல்விகள்**

திமுக அரசின் நிர்வாகத் திறமையின்மைக் காரணமாக, அரசின் வருவாய்ச் செலவுகளை சமாளிப்பதற்கே பெருமளவில் கடன் வாங்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால், மூலதனச் செலவுகளுக்குப் பெரிய அளவில் நிதி ஒதுக்கப்படவில்லை. பொருளாதாரத்தில் தமிழ்நாட்டைவிட மிகவும் பின்தங்கி இருக்கும் உத்தரப்பிரதேச அரசு வருவாய் உபரியை ஏற்படுத்தி, அதைக் கொண்டு குறைந்த கடனில், அதிக மூலதனச் செலவுகளை செய்திருக்கிறது. ஆனால், திமுக அதிகக் கடன் வாங்கியும், குறைந்த மூலதனச் செலவுகளை செய்துள்ளது.

1. ஐந்தாண்டுகளில் சராசரியாக ஆண்டுக்கு ரூ.50,000 கோடியைக் கூடக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக திமுக அரசு செலவிடவில்லை.
2. திமுக ஆட்சியில் ஒரே ஒரு அனல்மின் திட்டம் கூட உருவாக்கிச் செயல்படுத்தப்படவில்லை.
3. திமுக ஆட்சியில் மருத்துவக் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் ஒரே ஒரு மருத்துவக் கல்லூரி கூடத் தொடங்கப்படவில்லை.

## உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தப் பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்

1. தமிழ்நாட்டில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 2026–27ஆம் ஆண்டில் ரூ.1.25 இலட்சம் கோடி செலவிடப்படும்.
2. மூலதனச் செலவுகளை அதிகரிப்பதற்காக, அரசின் வருவாய்ச் செலவுகளை கட்டுப்படுத்தி, வருவாய் உபரி ஏற்படுத்தப்படும். அதைக் கொண்டு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
3. தமிழ்நாட்டின் வளர்ந்து வரும் உட்கட்டமைப்புத் தேவையை மதிப்பீடு செய்து, நிறைவேற்றுவதற்காகத் தமிழ்நாடு கட்டமைப்பு ஆணையம் என்ற புதிய அமைப்பைத் தமிழக அரசு உருவாக்கும்.
4. உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதியுதவி செய்வதற்காகத் தனி நிதியம் ஏற்படுத்தப்படும்.

## விமான நிலையங்கள் விரிவாக்கம்

5. சேலம், தூத்துக்குடி விமான நிலையங்களை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
6. வேலூருக்கு விமானச் சேவை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
7. திருச்சி மற்றும் கோவை விமான நிலையங்கள் விரிவாக்கப்பட்டுப் பன்னாட்டு விமானச் சேவையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.
8. தஞ்சாவூர், நெய்வேலி, இராமநாதபுரம் ஆகிய நகரங்களில் விமானச் சேவையை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

## சாலைகள்

9. தமிழ்நாட்டில் சாலை வசதியில்லாத குடியிருப்புப் பகுதிகளே இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்படும்.
10. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டச் சாலைகளும், இருவழிப் பாதைகளாக்கப்படும்.

11. தமிழ்நாட்டில் அனைத்து மாநில நெடுஞ்சாலைகளும், 4 வழிப் பாதைகளாக்கப்படும்.

12. அனைத்து மாவட்டத் தலைநகரங்களும், சென்னையுடன் தேசிய நெடுஞ்சாலை மூலம் இணைக்கப்படுவது உறுதி செய்யப்படும். மத்திய அரசிடம் வலியுறுத்தி, இதைப் பா.ம.க. சாதிக்கும்.

13. சென்னை – கன்னியாகுமரி இடையிலான கிழக்குக் கடற்கரைச் சாலை ஆறுவழிப் பாதையாக மாற்றப்படும்.

# கோவை, மதுரையில் மெட்ரோ ரயில்: தமிழ்நாடு முழுவதும் நகரப் பேருந்துகளில் மக்கள் இலவசமாகப் பயணிக்கலாம்!

இந்தியாவின் அனைத்து மாநகரங்களும் எதிர் கொண்டு வரும் மிகப் பெரிய சிக்கல், போக்குவரத்து நெரிசல் தான். போக்குவரத்து நெரிசலால் நேரடியாக ஏற்படும் பாதிப்புகளைவிட, மறைமுகமாக ஏற்படும் இழப்புகள் அதிகம். போக்குவரத்து நெரிசல் காரணமாக ஒருவர் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் செல்வதற்குத் தாமதம் ஏற்பட்டால், அது அவருக்கு மட்டும் இழப்பு அல்ல. மாறாக, அவர் ஒரு சேவையைச் செய்வோர் என்றால், அவரது சேவையைப் பெறுவோர் அனைவருக்கும் மிகவும் தாமதமாகவே சேவை கிடைக்கும். அதனால், அவர்கள் அனைவரும் பாதிக்கப்படுவார்கள்.

மெட்ரோ ரயில் போக்குவரத்து, பேருந்து விரைவுப் போக்குவரத்து ஆகியவை தான் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த திட்டங்கள் என்று வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். இதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோவை உள்ளிட்ட நகரங்களில் போக்குவரத்துக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும்.

## திமுக அரசின் தோல்விகள்

நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்து, தொடர் வண்டித் திட்டங்கள், விமான நிலையங்கள் போன்றவை சார்ந்து 27 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 25 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை, இரு வாக்குறுதிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டன.

**நிறைவேற்றப்படாத முக்கிய வாக்குறுதிகள்:**

1. அரசுப் போக்குவரத்துக் கழகங்களை இலாபத்தில் இயக்க 2018ஆம் ஆண்டில் அரசுக்கு திமுக அளித்த பரிந்துரைகள் செயல்படுத்தப்படும். பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு பேருந்துப் பயணக் கட்டணங்கள் குறைக்கப்படும். (வாக்குறுதி எண் – 427)
2. சென்னை – கன்னியாகுமரி இடையிலான கிழக்குக் கடற்கரைச் சாலை விரிவாக்கப் பணிகளை விரைந்து முடிக்க முயற்சி மேற்கொள்ளப்படும். (வாக்குறுதி எண் – 433)
3. எண்ணூரில் இருந்து சென்னை சென்ட்ரல் வரையிலும், தீவுத்திடலில் இருந்து மாமல்லபுரம் வரையிலும் பக்கிங்காம் கால்வாய் சீரமைக்கப்பட்டுப் படகுப் போக்குவரத்து தொடங்கப்படும். (வாக்குறுதி எண் – 438)

### போக்குவரத்து மேம்பாட்டுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை என்று கூறப்படும் நிலையில், உரிய தரவுகளைத் திரட்டி, அத்திட்டங்களுக்கு ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.
2. சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக விரைவுப் போக்குவரத்துத் திட்டம் (BRT - Bus Rapid Transit) செயல்படுத்தப்படும்.
3. திருச்சி நகரில் மெட்ரோ தொடர் வண்டித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்படும்.

### சென்னை மெட்ரோ விரிவாக்கம்

4. இரண்டாம் கட்டச் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில் கடற்கரை கலங்கரை விளக்கம் முதல் – பூவிருந்தவல்லி வரையிலான வழித்தடத்தில் முதல்கட்டமாக, வடபழனி முதல் பூவிருந்தமல்லி வரையிலான மெட்ரோ தொடர் வண்டி சேவை ஜூன் 1ஆம் தேதி முதல் தொடங்கப்படும்.
5. சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில் மாதவரம் – சோழிங்கநல்லூர் இடையிலான ஐந்தாவது வழித் தடத்தில் கோயம்பேடு முதல் சென்னை பரங்கிமலை இடையிலான மெட்ரோ தொடர்வண்டிப் போக்குவரத்து ஆகஸ்ட் 15ஆம் தேதி பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்.
6. சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம்கட்டப் பணிகள் முழுவதும் 2028ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றி முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்.
7. சென்னை விமான நிலையம் – கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் இடையிலான மெட்ரோ ரயில் திட்டம் உரிய ஒப்புதல்கள் மற்றும் நிதியுதவி பெற்று நடப்பாண்டு இறுதிக்குள் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

### பேருந்துக் கட்டணம் உயராது

8. தமிழ்நாட்டில் உள்ள 8 அரசுப் போக்குவரத்துக் கழகங்களையும் மேம்படுத்தி, இலாபத்தில் இயக்க அரசு நடவடிக்கை எடுக்கும். இதற்காக ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்தின் மேலாண் இயக்குநராக இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்.
9. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 10 ஆயிரம் ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.
10. தேவையான எண்ணிக்கையில் புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு, அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சேவை விரிவுபடுத்தப்படும்.
11. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகத்தை மேம்படுத்துவதன் மூலம் அவற்றை இலாபத்தில் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்; பேருந்துக் கட்டண உயர்வு தவிர்க்கப்படும்.

12. தமிழ்நாடு முழுவதும் நகரப் பேருந்துகளில் அனைவரும் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

13. தமிழ்நாட்டின் அனைத்து ஊர்களுக்கும் பேருந்துச் சேவை உறுதி செய்யப்படும். 200க்கும் மேற்பட்ட மக்கள் வாழும் ஊர்களுக்கு நகரப் பேருந்துகள் இயக்கப்படும். இருநூற்றுக்கும் குறைவான மக்கள் வாழும் ஊர்களுக்கு அரசு சிற்றுந்துச் சேவை அறிமுகம் செய்யப்படும்.

14. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் நிர்வாகச் சீர்திருத்தங்கள் செய்யப்படும். தொழிலாளர்களுக்கும், பேருந்துப் பணியாளர்களுக்கும் நிர்வாகத்தின் முடிவுகளில் பங்களிப்பு அளிக்கும் வண்ணம் நிர்வாக அமைப்பு மாற்றப்படும்.

15. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஓய்வுபெற்று, இதுவரை ஓய்வூதியப் பயன்கள் கிடைக்காத அனைவருக்கும் அடுத்த 3 மாதங்களில் அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### இரயில் திட்டங்களில் 50% நிதி

16. தமிழகம் முழுவதும் நிலுவையில் இருக்கும் இரயில் பாதைப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காகத் திட்டச் செலவில் 50%–ஐ மாநில அரசு வழங்கும்.

17. தமிழகத்தின் கிழக்குக் கடலோர நீர்வழிப்பாதைகள் வளர்த்தெடுக்கப்பட்டு அதைப் பயன்பாட்டுக்குரிய பொதுமக்கள் பயண வசதியாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

# வீடுகளுக்கான மின்சாரத்தைச் சொந்தமாகத் தயாரிக்கச் சூரியஒளி மின் திட்டம்: தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக்கப்படும்

தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் மிகப் பெரிய சீரழிவைச் சந்தித்த துறைகளில் மிகவும் முக்கியமானது மின்சாரத் துறை ஆகும். மின் கட்டணத்தைக் குறைப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த திமுக, கடந்த 4 ஆண்டுகளில் ரூ.45,000 கோடி அளவுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறது. ரூ.1.5 இலட்சம் கோடி கூடுதல் வருவாயை ஈட்டியுள்ள போதிலும், தமிழ்நாடு மின்சார வாரியம் இன்னும் நட்டத்தில் இயங்கி வருகிறது. இதற்குக் காரணம் அதிக விலை கொடுத்து, வெளிச் சந்தையில் இருந்து மின்சாரம் கொள்முதல் செய்யப்படுவது தான். இவ்வாறு ஊழல் செய்வதற்கு வசதியாகத் தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள அனல்மின் திட்டங்கள் திட்டமிட்டு முடக்கி வைக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் மின்உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் மின் கட்டணத்தைக் குறைக்க முடியும் என்பது மட்டுமின்றி, மின் வாரியத்தையும், இலாபத்தில் இயக்க முடியும். மராட்டிய மாநில அரசு அதிக எண்ணிக்கையில் சூரிய ஒளி மின் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் 25% மின் கட்டணம் குறைக்கப்படும் என்று அறிவித்துள்ளது. நிர்வாகச் சீர்திருத்தங்கள் மூலம் அடுத்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மின்துறையில் தமிழ்நாட்டின் எதிர்காலத்தைப் பிரகாசமாக்க மேற்கண்ட நடவடிக்கைகள் மிகவும் முக்கியமாகும்.

### திமுக அரசின் தோல்விகள்

திமுகவின் தேர்தல் அறிக்கையில் மின்துறை சார்ந்து மொத்தம் 14 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. அவற்றில் ஒரே ஒரு வாக்குறுதி மட்டும்தான் நிறைவேற்றப்பட்டது. பொதுமக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட எந்த மின் திட்டமும் செயல்பாட்டுக்கு வரவில்லை; எந்த வாக்குறுதியும் செயல்படுத்தப்படவில்லை.

**நிறைவேற்றப்படாத முக்கிய வாக்குறுதிகள்:**

1. போர்க்கால அடிப்படையில் மின்உற்பத்தியைப் பெருக்கித் தடையற்ற மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். (வாக்குறுதி எண் – 220)
2. திமுக ஆட்சியின் ஐந்தாண்டுகளில் ஒரே ஒரு புதிய அனல்மின் திட்டம் கூடச் செயல்படுத்தப்படவில்லை.

3. மாதம் ஒருமுறை மின் கட்டணத்தைக் கணக்கிடும் முறை கொண்டுவரப்படும். இதனால், நுகர்வோருக்கு ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் வரை மிச்சமாகும். (வாக்குறுதி எண் – 221)

### மின்உற்பத்தியை அதிகரிப்பதற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்

1. தமிழ்நாட்டில் 2026 ஜூன் மாதம் முதல் கட்டப்படும் தனி வீடுகள், அலுவலகக் கட்டிடங்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகளின் பொதுப் பயன்பாட்டுக்கான இடங்கள் ஆகியவற்றின் மேல் தளத்தில் சூரியஒளி மின்சாரக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவது கட்டாயமாக்கப்படும்.

### வீடுகளுக்கான மின் உற்பத்தியில் தன்னிறைவு

2. வீடுகளுக்கான மின்சாரக் கட்டணச் செலவைக் குறைக்கும் வகையில், வாய்ப்புள்ள வீடுகளில் சூரியஒளி மின்உற்பத்திக் கட்டமைப்புகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

3. நாடு முழுவதும் செயல்படுத்தப்படும் பிரதமரின் சூரியஒளி மின்உற்பத்தித் திட்டத்தில் மத்திய அரசு மானியத்துடன் சேர்த்து, மாநில அரசும் மானியம் வழங்குவதன் மூலம் அனைத்து வீடுகளிலும் சூரிய ஒளி மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவது உறுதி செய்யப்படும். இதன் மூலம் வீடுகளுக்கான மின்தேவை சொந்தமாக உற்பத்தி செய்யப்படுவது உறுதி செய்யப்படும்.

4. பிரதமரின் சூரியஒளி மின்உற்பத்திக் கட்டமைப்புத் திட்டத்தின்படி, ஒரு கிலோ வாட் சூரிய ஒளி மின்உற்பத்திக் கட்டமைப்பை ஏற்படுத்த மத்திய அரசின் சார்பில் ரூ.30,000 மானியம் வழங்கப்படும் நிலையில், தமிழக அரசின் சார்பில் ரூ.10,000 கூடுதல் மானியம் சேர்த்து ரூ.40,000 வழங்கப்படும்.

5. 2 கிலோ வாட் சூரிய ஒளி மின்உற்பத்திக் கட்டமைப்பை ஏற்படுத்த மத்திய அரசின் சார்பில் வழங்கப்படும் ரூ.60,000 மானியத்துடன் தமிழக அரசின் பங்காக ரூ.20,000 சேர்த்து, ரூ.80,000ஆக மானியம் வழங்கப்படும்.

6. 3 கிலோ வாட் அல்லது அதற்கும் கூடுதலான சூரியஒளி மின் திட்டங்களுக்கு மத்திய அரசின் சார்பில் ரூ.78,000 நிதியுதவி வழங்கப்படும் நிலையில், ரூ.22,000 மாநில அரசின் மானியமாகச் சேர்த்து ரூ.1,00,000 வழங்கப்படும்.

7. மத்திய அரசுடன் இணைந்து மாநில அரசும் மானியம் வழங்குவதன் மூலம், சூரியஒளி மின் கட்டமைப்பை நிறுவுவதற்கான செலவுகளில் 50% மிச்சமாகும். இதற்கான செலவுகளை 3 ஆண்டுகளில் திரும்ப எடுத்தால், அதற்குப் பிந்தைய காலத்தில் வீடுகளுக்கான மின்சாரம் இலவசமாக உற்பத்தி செய்யப்படும்.

### ஊராட்சிதோறும் சூரியஒளி மின்நிலையங்கள்

8. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தலா ஒரு மெகாவாட் திறன் கொண்ட சூரியஒளி மின்நிலையங்கள் அமைக்கப்படும். இதில் கிடைக்கும் மின்சாரத்தைக் கொண்டு, அந்த ஊராட்சிகளில் உள்ள வீடுகளுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்படும். இது 10 ஆண்டு நீண்டகாலத் திட்டமாகச் செயல்படுத்தப்படும். இதற்கான செலவை அரசே ஏற்கும்.

9. சூரியஒளி மின்சாரம் தயாரிப்பவர்களின் வீட்டில் சூரியஒளி மின்உற்பத்தியைக் கணக்கிடுவதற்கான மின்னணு மீட்டர்கள் (Reversible Digital Meter) பொருத்தப்படும். இதன் மூலம் அவர்கள் பயன்படுத்திய மின்சாரத்திற்கான கட்டணத்தில் இருந்து, அவர்கள் உற்பத்தி செய்து கொடுத்த மின்சாரத்தின் மதிப்பு கழிக்கப்படும்.

### புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறைக்குத் தனி அமைச்சகம்

10. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மின்உற்பத்திச் செலவுகளைக் கட்டுப்படுத்தவும் வசதியாகப் புதுப்பிக்கவல்ல எரிசக்தி உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். அதற்கு வசதியாக அத்துறைக்குத் தனி அமைச்சகம் ஏற்படுத்தப்படும்.

11. தமிழ்நாட்டில் காற்றாலை மின்உற்பத்தித் திறன் தற்போதுள்ள 9,331 மெகாவாட்டில் இருந்து 2031ஆம் ஆண்டில் 15,000 மெகாவாட்டாக உயர்த்தப்படும்.

12. சூரியஒளி மின்உற்பத்தித் திறன் இப்போதுள்ள 10,509 மெகாவாட் என்ற அளவில் இருந்து 2031ஆம் ஆண்டில் 25,000 மெகாவாட்டாக உயர்த்தப்படும்.

### அனல் மின் திட்டங்கள் விரைவுபடுத்தப்படும்

13. தமிழ்நாட்டில் மின்உற்பத்தியில் தன்னிறைவை எட்டும் நோக்குடன், தற்போது நிலுவையில் உள்ள 5,700 மெகாவாட் மின் திட்டங்கள் அடுத்த 3 ஆண்டுகளில் முடிக்கப்பட்டு மின்உற்பத்தி தொடங்கப்படும்.

14. 800 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை மூன்றாவது அனல்மின் நிலையம் வணிக ரீதியான மின்உற்பத்தியைத் தொடங்கிவிட்டதாகக் கூறப்படும் நிலையில், அங்கு வணிக ரீதியிலான மின்உற்பத்தி நடைபெறவில்லை. வரும் ஜூலை மாதம் முதல் அங்குத் தடையில்லாமல் வணிக மின்உற்பத்தி நடைபெறுவது உறுதி செய்யப்படும்.

15. தலா 660 மெகாவாட் திறன் கொண்ட இரு அலகுகள் வீதம் மொத்தம் 1,320 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி மின் திட்டத்தில் ஜூன் மாதத்தில் வணிக ரீதியிலான மின்உற்பத்தி தொடங்கப்படும்.

16. தலா 660 மெகாவாட் திறன் கொண்ட இரு அலகுகள் வீதம் 1320 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல மின் நிலையத்தில் அடுத்த ஆண்டில் மின்உற்பத்தி தொடங்கப்படும்.

17. 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல்மின்நிலைய விரிவாக்கத் திட்டத்தில் அடுத்த ஆண்டில் மின்உற்பத்தி தொடங்கப்படும்.

18. 1600 மெகாவாட் திறன் கொண்ட உய்யூர் அனல்மின் திட்டப் பணிகள் முடக்கி வைக்கப்பட்டுள்ள நிலையில், அப்பணிகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

19. தமிழ்நாட்டில் தற்போது நிலுவையில் உள்ள அனல் மின் திட்டங்கள் 2030 ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்கப்படும் நிலையில், அதன்பின் புதிய அனல் மின் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்படாது.

### மின் கட்டணம் குறைப்பு - ஸ்மார்ட் மீட்டர்கள் இலவசம்

20. தமிழ்நாட்டில் இரு மாதங்களுக்கு ஒருமுறை மின் பயன்பாடு கணக்கிடப்படும் முறையை மாற்றி, மாதத்திற்கு ஒருமுறை மின் பயன்பாட்டைக் கணக்கிடும் முறை அறிமுகப் படுத்தப்படும்.

21. தமிழ்நாட்டில் வீடுகளுக்கான மின் பயன்பாட்டுக் கட்டணம் 25% வரை குறைக்கப்படும்.

22. வீடுகளின் மின் இணைப்புக்கான மீட்டர்களை ஸ்மார்ட் மீட்டர்களாக மாற்ற ரூ.15,000 செலவாகும் என திமுக ஆட்சியில் மதிப்பிடப்பட்ட நிலையில், அனைத்து வீடுகளுக்கும் ஸ்மார்ட் மீட்டர்கள் இலவசமாக வழங்கப்படும்.

23. 2027ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாடு மின்சார வாரியம் இலாபத்தில் இயங்குவது உறுதி செய்யப்படும்.

# நிலத்தடி நீர்வளம் பெருக்கப்படும்: அனைத்து வீடுகளுக்கும் குழாய்கள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர்!

மனிதன் உயிர் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது தண்ணீர் ஆகும். தண்ணீர் இல்லாவிட்டால் மனிதர்கள் உயிர் வாழ முடியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் முதன்மைக் கடமைகளில் குறிப்பிடத்தக்கது அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது ஆகும். ஆனால், இந்தக் கடமையைத் திமுக அரசு நிறைவேற்றவில்லை.

தமிழ்நாடு முன்னேறிய மாநிலமாக உயர்ந்துவிட்டது என்று திமுக ஆட்சியாளர்கள் பெருமிதம் தெரிவித்துள்ள நிலையில், கழிவுகள் கலந்த குடிநீர் மக்களுக்கு வழங்கப்பட்டதால் பல்லாவரம் மற்றும் திருத்தணி பகுதிகளில் மொத்தம் 5 பேர் உயிரிழந்துள்ளனர். 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சென்னை பல்லாவரத்தில் விநியோகிக்கப்பட்ட கழிவுநீர் கலந்த குடிநீரைக் குடித்து 3 பேரும், 2025ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் திருத்தணியை அடுத்த கர்லாம்பாக்கத்தில் கழிவுநீர் கலந்த குடிநீரைக் குடித்த இருவர் உயிரிழந்தனர். இது பெரும் அவமானம் ஆகும்.

இந்த நிலை மாற்றப்பட வேண்டும், தமிழ்நாடு முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின் பாட்டாளி மக்கள் கட்சி மேற்கொள்ளும்.

## திமுக அரசின் தோல்விகள்

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது தொடர்பாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு மொத்தம் 4 வாக்குறுதிகளை வழங்கிய திமுக அரசு, அவற்றில் ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை. இதன் மூலம் கிராமப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது சாத்தியமற்ற ஒன்றாகிவிட்டது. குடிநீர் தாகம் தீர்ப்பதற்குப் பதிலாகக் குறிப்பிட்ட சமூகத்தை இழிவுபடுத்துவதற்கான கருவியாகவும் கடந்த 5 ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டது திமுக அரசின் பெரும் தோல்வியாகும்.

1. புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் கிராமத்தில் பட்டியலின மக்கள் பயன்படுத்துவதற்கான குடிநீர்த் தொட்டியில் மனித மலம் கலக்கப்பட்டது. இதற்குக் காரணமான உண்மைக் குற்றவாளிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
2. சென்னை உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகளிலும் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கும் முறை இரத்து செய்யப்பட்டு, புதிய குழாய்கள் அமைத்து அதன் மூலம் குடிநீர் வழங்கப்படும். (வாக்குறுதி எண் – 394)
3. அனைத்துக் கிராமங்களிலும் காலாவதியான குடிநீர்க் குழாய்கள் அகற்றப்பட்டு, புதிய குழாய்களைப் பதிக்கச் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். (வாக்குறுதி எண்–395)

4. பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் குடிநீர்க் குழாய் இணைப்பு கேட்டு விண்ணப்பித்த அனைவருக்கும் 15 நாட்களில் இணைப்பு வழங்கப்படும். (வாக்குறுதி எண் – 397)

## பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. தமிழ்நாட்டில் அனைத்து ஆறுகளின் குறுக்கேயும் தேவையான அளவில் தடுப்பணைகளைக் கட்டுவதன் மூலம் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், உப்புத் தன்மையைப் போக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
2. தமிழ்நாட்டின் அனைத்து ஏரிகள், குளங்கள் போர்க்கால அடிப்படையில் தூர்வாரிச் செம்மையாக்கப்படும்.
3. தமிழ்நாட்டில் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் போதுமான அளவு தூய்மையான குடிநீர் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.
4. அனைத்துக் கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள வீடுகளுக்குக் குழாய் மூலம் தூய்மையான குடிநீர் வழங்கப்படும்.
5. விலைகொடுத்து வாங்கும் பாட்டில் தண்ணீருக்கு மேலான தரத்தில் குடிநீர்த் தேவைக்கான தண்ணீரைத் தூய்மைப்படுத்தியும் அளித்தல்.

## கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்கள்

6. சென்னைக்குத் தடையின்றிக் குடிநீர் வழங்க வசதியாகச் சென்னை முதல் மாமல்லபுரம் வரையிலான பகுதிகளில் மொத்தம் 4 இடங்களில் கடல்நீரை குடிநீராக்கும் ஆலைகள் அமைக்கப்படும். மத்திய அரசின் நிதியுதவியுடன் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.
7. நிலத்தடி நீர் மாசுபட்ட, நிலத்தடி நீரில் நச்சுப் பொருட்கள் அதிகம் உள்ள பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காகச் சவ்வூடுபரவல் (Reverse Osmosis) முறையில் தண்ணீரைச் சுத்திகரிக்கும் நிலையங்கள் அமைக்கப்படும்.
8. அனைத்து நகரப்பகுதிகளிலும் குடிநீர் மற்றும் சமையல் பயன்பாட்டுக்காக 40 லிட்டர் உட்பட ஒவ்வொருவருக்கும் 135 லிட்டர் தண்ணீர் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.
9. துப்புரவுத் தேவைக்கான வசதிகளை ஏற்படுத்துதல், அனைத்து வீடுகளிலும் தரமான கழிப்பிட வசதிகள் இருக்கும் நிலையை உறுதிசெய்தல், பொது இடங்களிலும் கழிப்பிட வசதிகள் இல்லாத குடியிருப்புப் பகுதிகளிலும் தரமான கட்டணமில்லாப் பொதுக் கழிப்பிட வசதிகளை உருவாக்குதல், அவற்றை முறையாகப் பராமரித்தல்.
10. தண்ணீர் மாசுபாட்டை முற்றிலுமாகத் தடுத்தல், தொழிற்சாலைகள் மற்றும் நகரப்பகுதிகளின் கழிவு நீரை முழுவதுமாகச் சுத்திகரித்துச் “சுழிய மாசுபாடு” (Zero Pollution) நிலையை ஏற்படுத்துதல்.
11. நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்துதல்.

# மூத்த குடிமக்களுக்கான ஓய்வூதியம் ரூ.2,000ஆக உயர்த்தப்படும்: அனைவருக்கும் வழங்கப்படும்!

மூத்த குடிமக்கள் எனப்படுவோர் சமூகத்தின் சுமை அல்ல, மாறாகச் சமூகத்தின் வழிகாட்டிகள் ஆவர். இளமைப் பருவத்தில் இருந்து வீட்டிற்காகவும், நாட்டுக்காகவும் உழைத்த அவர்களைக் கண்ணியத்துடன் நடத்த வேண்டியது அரமீசு மற்றும் சமூகத்தின் கடமை ஆகும். மூத்த குடிமக்களுக்கான மருத்துவச் சேவை, நிதியுதவி ஆகியவற்றை வழங்குவதன் மூலம் மூத்த குடிமக்கள் அனைவரையும் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் வைத்திருக்க முடியும்.

ஆனால், மூத்த குடிமக்களின் நலன்களுக்கு திமுக அரசு எந்த அக்கறையும் செலுத்தவில்லை. அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை. இதனால், வாழ்க்கையின் கடைசிக் காலத்தில் தங்களைத் தாங்களே பெரும் சுமையாக நினைத்துக் கொள்ளவேண்டிய அவல நிலைக்கு மூத்த குடிமக்கள் தள்ளப்பட்டனர்.

**திமுக அரசின் தோல்விகள்**

1. திமுக ஆட்சிக்கு வந்தால் மகளிர் மற்றும் மூத்த குடிமக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.2,000ஆக உயர்த்தப்படும் என்று திமுகவின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. ஆனால், ஓய்வூதியத்தை ரூ.1,200ஆக மட்டும்தான் திமுக அரசு உயர்த்தியது.
2. திமுக ஆட்சியில் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த முதியோர் உதவித் தொகை இலட்சக்கணக்கானோருக்குத் திடீரென ரத்து செய்யப்பட்டது. அதனால், அவர்கள் பாதிக்கப்பட்டனர்.
3. மூத்த குடிமக்களுக்கான மருத்துவ வசதிகளை அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தத் திமுக அரசு தோற்றுவிட்டது.

**சமூகநலனை மேம்படுத்துவதற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல்திட்டங்கள்**

1. முதியோர் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஓய்வூதியம் இப்போதுள்ள ரூ.1,200-லிருந்து ரூ.2,000ஆக உயர்த்தப்படும்.
2. திமுக ஆட்சியில் யாருக்கெல்லாம் முதியோர் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கான ஓய்வூதியம் நிறுத்தப்பட்டதோ, அவர்கள் அனைவருக்கும் மீண்டும் ஓய்வூதியம் வழங்கப்படும்.

3. முதியோர் ஒய்வூதியம் கோரி எவரும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. அரசிடம் உள்ள ஆவணங்களின் அடிப்படையில், அரசே தரவுகளைத் திரட்டி, 60 வயதைக் கடந்தவர்களுக்கு முதியோர் ஒய்வூதியம் வழங்கப்படும்.

4. 60 வயதான அனைவருக்கும் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

5. கணவனை இழந்த பெண்களுக்கும், ஆதரவற்ற அனாதைகளுக்கும், உடல் ஊனமுற்ற வேலை செய்ய இயலாதவர்களுக்கும், இதே போல மாதம் ரூ. 2500 ஒய்வூதியமாக வழங்கப்படும்.

### அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மாலைச் சிற்றுண்டி

6. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ–மாணவியருக்குக் காலை, மதியம் ஆகிய இரு வேளைகளிலும் சத்தான உணவு வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக மாலைச் சிற்றுண்டி வழங்கப்படும். மாலையில் பள்ளி முடிந்து மாணவர்கள் வீடு திரும்பும்போது, இந்தச் சிற்றுண்டி வழங்கப்படும்.

7. தகுதியுள்ள ஒரே ஒரு மாணவர் கூடப் பொருளாதாரக் காரணங்களால் படிப்பைத் தொடர இயலாத நிலை இல்லாமல் செய்யப்படும். கல்வி உதவித் தொகைக்கான நிதியம் உருவாக்கப்படும். இதன் மூலம் தகுதியுள்ள மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

8. தொடக்கப்பள்ளிப் பருவத்திலேயே கற்கும் திறன் குறைபாட்டைக் கண்டறியக் குழந்தை மனநல நிபுணர்களைக் கொண்டு ஆய்வுகள் நடத்தப்படும்.

9. அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் ஆண்டுக்கு ஒருமுறை முழுமையான மருத்துவ ஆய்வு மேற்கொள்ளப்படும்.

10. தமிழகத்தில் மொத்த வேலைக்குச் செல்வோரில் ஏறத்தாழ 70% தொழிலாளர்கள் அமைப்புச் சாராத் தொழிலாளர்கள். இவர்களுடைய குறைந்தபட்ச ஊதியத் தொகை நிர்ணயிக்கப்படும். நடுவண் அரசின் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் தனியார் நிறுவனத் தொழிலாளர்கள் அனைவரும் பதிவு செய்யப்படுவதை மாநில அரசு கண்காணிக்கும்; உறுதி செய்யும்.

11. பணியின் போது விபத்துக்கு உள்ளானவர்களுக்கான சிகிச்சைகள் முழுவதும் இலவசமாகக் கிடைக்கச் செய்யப்படும். விபத்துக்களால் பணி செய்ய முடியாத காலத்துக்கு உதவித் தொகை அளிக்கப்படும்.

12. தமிழ்நாட்டில் பசுமையைப் பாதுகாப்பதற்காகப் பசுமைப் படைகள் அமைக்கப்படும். தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மரம் வளர்க்கும் பணியில் இவர்கள் ஈடுபடுவார்கள்.

13. தூய்மையைப் பாதுகாப்பதற்காகத் தூய்மைப்படை அமைக்கப்படும். பொது இடங்கள் அசுத்தம் செய்யப்படுவதைத் தடுக்கும் பணியில் இவர்கள் ஈடுபடுத்தப்படுவர்.

■

# இஸ்லாமியர் இடஒதுக்கீடு உயர்வு: கிரீமிலேயர் முறையை நீக்க அழுத்தம் - பஞ்சமி நிலங்கள் மீட்கப்படும்!

ஆசைகாட்டி மோசம் செய்தல் என்பதற்கு ஆகச் சிறந்த எடுத்துக்காட்டு சிறுபான்மையினர், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியலினத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்குத் திமுக அளித்த வாக்குறுதிகள் தான். 2021 சட்டப் பேரவைத் தேர்தலில் திமுக வெற்றி பெற்று ஆட்சியமைத்ததற்கு முதன்மைக் காரணம் சிறுபான்மையினரின் வாக்குகள் தான். அதிமுக கூட்டணிக்கும், திமுக கூட்டணிக்கும் இடையிலான வாக்கு விழுக்காடு வித்தியாசம் வெறும் 5.67% மட்டும்தான். தொகுதிவாரியாகப் பார்க்கும்போது, அதிமுக கூட்டணிக்கு 2 இலட்சம் வாக்குகள் கூடுதலாக கிடைத்திருந்தால் 30 தொகுதிகளில் கூடுதலாக வெற்றி பெற்றிருக்கும். அத்தகைய சூழலில், திமுகவால் ஆட்சி அமைத்திருக்க முடியாது. அதிமுக கூட்டணியைவிட அதிக வாக்குகள் பெற்று திமுக அணி ஆட்சியமைக்கக் காரணமாக இருந்தவை சிறுபான்மையினரின் வாக்குகள் தான். ஆனால், ஆட்சிக்கு வந்த பிறகு சிறுபான்மையினர், பட்டியலினத்தவர், பழங்குடியினர், பிற பிற்படுத்தப்பட்டோரின் நலனுக்குத் திமுக எதையும் செய்யவில்லை.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள இஸ்லாமியர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையைத் திமுக நிராகரித்துவிட்டது; வேங்கைவயல் கிராமத்தில் பட்டியலின மக்கள் பயன்படுத்தும் குடிநீர்த் தொட்டியில் மலம் கலந்தவர்கள் மீது திமுக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை; பழங்குடியின மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கான நடைமுறைகளை எளிதாக்கவில்லை; பிற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உள்இடஒதுக்கீடுகளை வழங்கவில்லை என அனைத்துத் தரப்பு மக்களுக்கும் திமுக ஆட்சியில் துரோகங்களும், ஏமாற்றங்களும் மட்டுமே பரிசாகக் கிடைத்துள்ளன.

### திமுக அரசின் தோல்விகள்

2021ஆம் ஆண்டுச் சட்டப்பேரவைத் தேர்தலின்போது, சிறுபான்மையினர் நலனுக்காக 4 வாக்குறுதிகளைத் திமுக அளித்திருந்தது. அவற்றில் ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை. அவற்றில் முக்கியமானவை.

1. இஸ்லாமியர் நலனுக்கான நீதியரசர் சச்சார் ஆணையத்தின் பரிந்துரைகளை செயல்படுத்தும்படி மத்திய அரசைத் திமுக அரசு வலியுறுத்தும். (வாக்குறுதி எண் – 287)
2. கல்வி, பொருளாதார அடிப்படையில் சிறுபான்மையினர் பின்தங்கியுள்ள பகுதிகளில் அச்சமூகப் பெண்கள் பயனடையும் வகையில், சிறப்புச் சலுகைகளுடன் கல்வி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். (வாக்குறுதி எண் 288)

பட்டியலினத்தவர், பழங்குடியினர் நலன் தொடர்பாக திமுக 11 வாக்குறுதிகளை அளித்திருந்தது. அவற்றில் வெறும் இரண்டு வாக்குறுதிகளை மட்டும் தான் நிறைவேற்றியிருந்தது. மீதமுள்ள 9 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. அவற்றில் முக்கியமானவை.

1. தமிழக அரசின் வேலைவாய்ப்புகளில் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டு நிரப்பப்படாத பின்னடைவுப் பணியிடங்களைத் திமுக அரசு நிரப்பும். (வாக்குறுதி எண் – 275)

2. தூய்மைப் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது உயிர் இழக்க நேரிட்டால் அவருடைய வாரிசுதாரர்களுக்குக் கல்வித் தகுதியின் அடிப்படையில் உடனடியாக அரசு வேலைவாய்ப்பு வழங்கப்படும். (வாக்குறுதி எண் – 283)

   பிற பிற்படுத்தபட்ட வகுப்பினருக்கான கிரிமிலேயர் வரம்பை ரூ.25 இலட்சமாக உயர்த்த மத்திய அரசுக்கு அழுத்தம் தரப்படும் என்ற வாக்குறுதியைக் கூடத் திமுக அரசு நிறைவேற்றவில்லை.

## சிறுபான்மையினர், பட்டியலினத்தவர் பிற பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. தமிழ்நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய போராட்டத்தின் பயனாக, இஸ்லாமியர்களுக்கு 3.5% இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இது போதுமானது அல்ல என்பதால், மக்கள்தொகைத் கணக்கெடுப்பு நடத்தி முடிக்கப்பட்ட பிறகு, அதன் அடிப்படையில் இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீட்டின் அளவு உயர்த்தி வழங்கப்படும்.
2. மதம் மாறிய வன்னிய கிறித்தவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்கப்படுவார்கள்.
3. தமிழ்நாட்டில் கிறித்தவர்களும், இஸ்லாமியர்களும் அச்சமின்றி வாழ்வது உறுதி செய்யப்படும்.

## தேசியக் குடிமக்கள் பதிவேடு இல்லை

4. தமிழ்நாட்டில் சிறுபான்மையினரின் அச்சத்தைப் போக்கும் வகையில் தேசியக் குடிமக்கள் பதிவேடு தயாரிக்கப்படாது.
5. தமிழ்நாட்டில் தேசிய மக்கள்தொகைப் பதிவேடு தயாரிக்கும் போது பெற்றோரின் பிறப்பிடம், பிறந்த தேதி, ஆதார் எண் ஆகியவை தொடர்பான 6 வினாக்கள் எழுப்பப்படாது.
6. கிருஸ்துவர்கள், இஸ்லாமியர்கள் உள்ளிட்ட மதச் சிறுபான்மையினர் நலன் மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

## இஸ்லாமியர்கள் வணிகம் செய்ய ரூ.1 இலட்சம் கடனுதவி

7. இஸ்லாமியர்கள் சிறுவணிகம் தொடங்குவதற்கு வசதியாக, இரு நபர் ஜாமினுடன் டாம்கோ மூலம் தற்போது வழங்கப்பட்டு வரும் கடனின் அளவு ரூ.50,000–லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்படும்.
8. இஸ்லாமியப் பெண்கள் நலனுக்கான சிறுபான்மையினர் திறன் மேம்பாட்டுத் திட்டம் மாவட்ட அளவில் இருந்து, வட்டார அளவிற்கு மாற்றியமைக்கப்படும். இதன் மூலம் இஸ்லாமியப்

பெண்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்துத் தையல் இயந்திரம் உள்ளிட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

9. சிறுபான்மையினர் நலனுக்கு ஒரு சிறப்புக் கூறு திட்டத்தை அரசு செயல்படுத்தும். அவர்களின் திறன் மேம்பாட்டிற்காகத் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

10. 15 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறைகளில் வாடும் அனைவரும் கருணை அடிப்படையில் சட்டவிதிகளைப் பின்பற்றி விடுதலை செய்யப்படுவார்கள்.

## பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உள்இடஒதுக்கீடு

11. மத்திய அரசின் கல்வி, வேலைவாய்ப்பில் பிற பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு பெறுவதற்கான கிரீமிலேயர் வருமான வரம்பை இப்போதுள்ள 8 இலட்ச ரூபாயிலிருந்து 18 இலட்ச ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தி வெற்றிபெறும்.

12. பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான கிரீமிலேயர் வரம்பைக் கணக்கிடும்போது, ஊதியம் மற்றும் விவசாயம் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கணக்கில் கொள்ளக்கூடாது என்றும் மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தும்.

13. மத்திய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் கிரீமிலேயர் அல்லாதவர்கள் கிடைக்காவிட்டால், அந்த இடத்தை கிரீமிலேயரைக் கொண்டு நிரப்ப வேண்டும் என்று அரசாணை பிறப்பிக்கும்படி மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தும்.

14. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் ஏதேனும் புதிய சாதிகளைச் சேர்க்கவேண்டும் என்றால், அதற்குத் தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்ற நிபந்தனையை நீக்கவேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தும்.

15. மத்திய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உள்இடஒதுக்கீடு வழங்குவதற்கான நீதிபதி ரோகிணி ஆணையப் பரிந்துரைகளை செயல்படுத்தும்படி மத்திய அரசைப் பாமக வலியுறுத்தும்.

## 12 இலட்சம் ஏக்கர் பஞ்சமி நிலங்கள் மீட்கப்படும்

16. பட்டியலினம் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக வழங்கப்பட்டு, செல்வாக்கு மிக்கவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 12 இலட்சம் ஏக்கர் பஞ்சமி நிலங்கள் மீட்கப்படும்.

17. பட்டியலின மாணவர்கள் விடுதிக்கு வழங்கப்படும் உணவுப் படி இரு மடங்காக உயர்த்தப்படும். மாணவர்களுக்குப் புரதச் சத்து மிக்க உணவு வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

18. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மாணவ–மாணவியர்கள் கல்வி உதவித் தொகைக்கான நிதி ஒதுக்கீடு 50% அதிகரிக்கப்படும்.

19. அரசுத் துறையில் நிரப்பப்படாத பணியிடங்களைச் சிறப்புப் பணி நியமனங்கள் மூலமாக நிரப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

20. மனிதக் கழிவுகளையும், கழிவுநீர்ப் பாதை மற்றும் தொட்டி அடைப்புகளையும் மனிதர்களே அகற்றும் அநீதிக்கு முடிவு கட்டப்படும். இந்தப் பணிகளில் இதுவரை ஈடுபடுத்தப்பட்டு வந்த தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வழங்கப்படும்.

# அனைத்து மத வழிபாட்டுத் தலங்களுக்கும் 50% மின் கட்டணம் குறைப்பு: கிராமப்புறக் கோவில் பூசாரிகள் ஓய்வூதியம் ரூ.6,000!

மத நல்லிணக்கத்திற்கான சிறந்த எடுத்துக்காட்டாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. இதற்கான காரணங்களில் முதன்மையானது இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள் ஆகிய மதங்களைச் சேர்ந்த மக்கள், பிற மத வழிபாட்டுத் தலங்கள் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருப்பதும், அவற்றிற்குப் பல்வேறு உதவிகளைச் செய்வதும் ஆகும். இந்த நிலை தொடர்வதற்கும், இதை மேம்படுத்துவதற்கும் அரசின் சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

வழிபாட்டுத் தலங்கள் வெறுப்பை வளர்க்காமல், அன்பு, ஒற்றுமை, சகோதரத்துவம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் தலங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதும் கட்டாயம் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு.

### திமுக அரசின் தோல்விகள்

2021ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்காகத் திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், இந்து சமய அறநிலையத்துறை, மசூதிகள், தேவாலயங்கள் தொடர்பாக 11 வாக்குறுதிகளை அளித்திருந்தது. அவற்றில் 15 வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. அவற்றில் முக்கியமானவை:

1. கிராமக் கோவில் பூசாரிகளுக்கு மாதம் ரூ.2000 ஊதியம் வழங்கப்படும். ஓய்வூதியம் ரூ.4 ஆயிரமாக உயர்த்தப்படும். (வாக்குறுதி எண் – 406)
2. கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யும் திட்டம் விரிவுபடுத்தப்படும். (வாக்குறுதி எண் – 413)
3. அனைத்துச் சாதி அர்ச்சகர் திட்டத்தில் பயிற்சி பெற்ற 205 பேருக்கு அர்ச்சகர் பணி வழங்கப்படும். (வாக்குறுதி எண் – 417)
4. மசூதிகள், தேவாலயங்களைச் சீரமைக்கவும், புதுப்பிக்கவும் ஆண்டுக்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். (வாக்குறுதி எண் – 420)

## அனைத்து மத வழிபாட்டுத் தலங்கள் தொடர்பான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்:

### இந்து சமய அறநிலையத்துறை

1. கிராமப்புறக் கோவில்களில் பணியாற்றும் பூசாரிகளின் ஓய்வூதியத்தை இப்போதுள்ள ரூ.3 ஆயிரத்திலிருந்து, ரூ.6 ஆயிரமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.
2. கோவில்களுக்குச் சொந்தமான அனைத்து நிலங்களும் மீட்கப்படும்.
3. கோவில் நிலங்களில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்.
4. இந்துசமய அறநிலையத்துறை மற்றும் கோவில்களின் நிர்வாகத்தில் அரசியல் தலையீடு முற்றிலுமாக ஒழிக்கப்படும்.
5. பழங்காலக் கோவில்கள் அனைத்தும் சீரமைக்கப்படும்.
6. கோவில் குளங்கள் அனைத்தும் தூர்வாரி மேம்படுத்தப்படும்.
7. கோவில்களுக்கான மின்கட்டணம் 50 விழுக்காடு குறைக்கப்படும்.

### மசூதிகள்

8. வக்ஃபு வாரியச் சொத்துக்கள் மீட்கப்படும்.
9. மசூதிகளுக்கான மின்கட்டணம் 50 விழுக்காடு குறைக்கப்படும்.
10. மசூதிகள் தொடர்பான கோரிக்கைகள் இஸ்லாமிய மதப் பெரியவர்களிடம் இருந்து பெறப்பட்டு, அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

### தேவாலயங்கள்

11. தேவாலயங்கள் தொடர்பான கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும்.
12. தேவாலயங்களுக்கான மின் கட்டணம் 50 விழுக்காடு குறைக்கப்படும்.

# பசுவின் பாலுக்கு லிட்டருக்கு ரூ.45: கைத்தறித் துறையை மேம்படுத்தத் தனி நிதிநிலை அறிக்கை!

மக்களின் பசியைப் போக்குபவர்கள் உழவர்கள் என்றால், மானம் காப்பவர்கள் நெசவாளர்கள் ஆவர். தமிழ்நாட்டில் வேளாண்மையை வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் மக்களுக்கு அடுத்தபடியாக, நெசவுத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் நெசவாளர்கள் தான் எண்ணிக்கையில் அதிகம் ஆவர். ஆனால், விவசாயிகளையும், குறிப்பாகப் பால் உற்பத்தி செய்பவர்களையும் நெசவாளர்களையும் முன்னேற்றுவதற்காகச் சொல்லிக்கொள்ளும் வகையில் பெரிய திட்டங்கள் எதுவும் திமுக ஆட்சியில் செயல்படுத்தப்படவில்லை.

ஒரு நெசவாளர் ஒரு பட்டுப்புடவையை நெய்து முடிக்கக் குடும்பத்துடன் 10 நாள் முதல் 12 நாள்கள் வரை கடுமையாக உழைக்க வேண்டும். ஆனால், அதற்கான ஊதியமாக அவருக்கு ரூ.2,000 முதல் மிக அதிகபட்சமாக ரூ.5,000 வரை மட்டுமே கிடைக்கும். இது அவர்களுக்கு எந்த வகையிலும் போதுமானது அல்ல. நெசவுத் தொழிலை ஊக்குவித்து அவர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்க அரசுத் தரப்பில் எந்தச் சீர்திருத்தமும் செய்யப்படவில்லை.

பால் உற்பத்தியாளர்களின் நிலையும் அதுதான். மாடு வளர்ப்புக்கான தீவனம் உள்ளிட்ட பொருட்களின் விலை கட்டுப்பாடு இல்லாமல் உயர்ந்து வரும் நிலையில், திமுக ஆட்சியில் ஒரு லிட்டர் பசுவின் பாலுக்கான விலை 5 ஆண்டுகளில் ரூ.6 மட்டுமே உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றிப் பால் உற்பத்தியாளர்கள், நெசவாளர்களின் வாழ்க்கையில் வளம் சேர்ப்பதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு.

**திமுக அரசின் தோல்விகள்**

நெசவாளர்களின் நலன்கள் தொடர்பாகக் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் 14 வாக்குறுதிகளை அளித்த திமுக, கடந்த ஐந்தாண்டுகளில் வெறும் 3 வாக்குறுதிகளை மட்டுமே நிறைவேற்றியுள்ளது. 11 வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அதேபோல், பால் உற்பத்தியாளர்கள் நலன்கள் தொடர்பாக இரு வாக்குறுதிகளை அளித்த திமுக, அவை இரண்டையும் நிறைவேற்றவில்லை.

**நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள்:**

1. நெசவாளர்களுக்கென்று தனியாகக் கூட்டுறவு வங்கி அமைக்கப்படும். (வாக்குறுதி எண்–138)
2. ஜவுளித்துறையை மேம்படுத்துவதற்குத் தனியாக ஜவுளி ஆணையம் அமைக்கப்படும். (வாக்குறுதி எண் – 142)
3. நெசவாளர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் கடனுக்கான வட்டி 12 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாகக் குறைக்கப்படும். (வாக்குறுதி எண் – 148)

4. பால் உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பாலை முழுமையாக ஆவின் நிறுவனத்திடம் விற்பனை செய்ய வகை செய்யப்படும். பாலுக்கு உரிய விலை நிர்ணயம் செய்ய அதிகாரிகள் பால் உற்பத்தியாளர்கள் அடங்கிய குழு அமைக்கப்படும் (வாக்குறுதி எண் – 403)
5. பால் பொருட்களைப் பிற மாநிலங்களில் சந்தைப்படுத்த ஆவின் நிறுவனம் நவீனத் தொழில்நுட்பம் கொண்டதாக மாற்றப்படும். (வாக்குறுதி எண் – 404)

### பால் உற்பத்தியாளர், நெசவாளர் நலனுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்

1. ஆவின் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்படும் பசுவின் பாலுக்கு லிட்டருக்கு 45 ரூபாயும், எருமைப் பாலுக்கு லிட்டருக்கு 55 ரூபாயும் கொள்முதல் விலையாக வழங்கப்படும்.
2. ஆவின் நிறுவனத்தின் பால் கொள்முதல் இலக்கு ஒரு நாளைக்கு 50 இலட்சம் லிட்டராக உயர்த்தப்படும்.
3. கூட்டுறவுச் சங்கங்களில் பதிவு செய்துள்ள பால் உற்பத்தியாளர்கள் எவ்வளவு பாலை எடுத்து வந்தாலும், அதை ஆவின் நிறுவனம் கொள்முதல் செய்துகொள்ளும்.
4. குழந்தை பெற்ற இளம் தாய்மார்களுக்கு ஓராண்டு வரை நாள்தோறும் ஒரு லிட்டர் பால் வழங்கும் திட்டத்திற்கு அதிகப் பால் தேவைப்படும் என்பதால், ஆவின் நிறுவனம் பால் கொள்முதலை அதிகரிக்கும்.

### நெசவாளர் நலன்

5. நலிவடைந்து வரும் நெசவுத் தொழிலை மீட்டெடுக்கப் பல்வேறு புதிய திட்டங்களையும், சீர்திருத்தங்களையும் செய்ய வேண்டியுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, கைத்தறித் துறைக்குத் தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும். அத்துறைக்காக ஒதுக்கப்படும் நிதியின் அளவு மும்மடங்காக உயர்த்தப்படும்.
6. கடந்த காலங்களில் பட்டு நெசவாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படாததால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்கும் வகையில், பட்டு நெசவாளர்களுக்கு 30% கூலி உயர்வு வழங்கப்படும். மேலும், ஆண்டுக்கு ஒருமுறை 10% கூலி உயர்வு வழங்க வகை செய்யப்படும்.
7. சீனா உள்ளிட்ட நாடுகளில் இருந்து பட்டுப் புடவைகள் இறக்குமதி செய்யத் தடை விதிக்கும்படி மத்திய அரசிடம் வலியுறுத்தி வெற்றி பெறுவோம்.
8. கூட்டுறவுச் சங்கங்களிலும், பொதுத்துறை வங்கிகளிலும் நெசவாளர்கள் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்படும்.
9. நெசவாளர்களுக்கு வங்கிகள் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவி கிடைக்கவும், அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளை அரசே கொள்முதல் செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
10. கைத்தறி நெசவாளர்களுக்குப் பாவு நூல் எளிதில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
11. நெசவாளர் நல வாரியம் அமைத்து, 60 வயதுக்கு மேற்பட்டோருக்குக் காப்புத் தொகை, ஓய்வூதியம் ஆகியன வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

# 25 நகரங்களில் வணிக வளாகங்கள்: மின் கட்டணச் சலுகை

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், வருவாய்க்கும் முதன்மைக் காரணமாக இருப்பவர்கள் வணிகர்கள் தான். தமிழ்நாடு அரசின் மொத்த ஆண்டு வருவாய் ரூ.3.5 இலட்சம் கோடி என்றால், அதில் 45% முதல் 50% வரை வணிகர்களிடம் இருந்துதான் ஜிஎஸ்டி வரி, மதிப்புக் கூட்டுவரி உள்ளிட்ட பெயர்களில் வசூலிக்கப்பட்டு வருகிறது. மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு உதவி செய்யும் வணிகர்களுக்கு எப்போதுமே அதற்கான மரியாதை அளிக்கப்படுவதில்லை; மாறாக, அவர்களைச் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலைதான் தொடர்ந்து நிலவி வருகிறது.

இந்த நிலையை மாற்ற வேண்டும்; வணிகர்களுக்கு ஊக்கமும் சலுகையும் அளித்து வணிகத்தைப் பெருக்கவும், அதன் மூலம் வேலைவாய்ப்பு, அரசின் வருவாய் ஆகியவற்றைப் பெருக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**திமுக அரசின் தோல்விகள்**

வணிகர்களின் நலன்களைப் பாதுகாப்பதாகக் கூறி 2021ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த திமுக, வணிகர்களுக்கு அளித்த 7 வாக்குறுதிகளில் 5 வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. வெறும் 2 வாக்குறுதிகளே நிறைவேற்றப்பட்டது. அவற்றில் முக்கியமானவை.

1. கந்துவட்டிக் கொடுமையில் இருந்து ஏழை, சிறு வணிகர்களைக் காக்க ரூ.15,000 வட்டியில்லாக் கடன் வழங்கப்படும். (வாக்குறுதி எண் – 298)
2. மாநகராட்சிகள், நகராட்சிகளுக்குச் சொந்தமான கடைகளின் வாடகை உயர்வு இரத்து செய்யப்பட்டு, புதிய வாடகை நிர்ணயிக்கப்படும். (வாக்குறுதி எண் – 301)
3. மதுரை, தூத்துக்குடி, திருப்பூர், ஈரோடு ஆகிய நகரங்களில் வர்த்தக மேம்பாட்டை உறுதி செய்ய வர்த்தக மையங்கள் அமைக்கப்படும். (வாக்குறுதி எண் – 304)

## வணிகர்களின் முன்னேற்றத்திற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. தமிழ்நாட்டில் சேலம், வேலூர், தாம்பரம், கடலூர், கும்பகோணம், தஞ்சாவூர், தூத்துக்குடி உள்ளிட்ட 25 நகரங்களின் மக்கள்தொகை, 2026ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் 2 இலட்சத்தைத் தாண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த 25 நகரங்களிலும் வணிகர்களின் நலனுக்காக வணிகர் நலத்துறையும் வீட்டுவசதித் துறையும் இணைந்து குறைந்த வாடகை கொண்ட வணிக வளாகங்களைக் கட்டிக்கொடுக்கும்.

2. தமிழ்நாட்டில் வணிகத்தைப் பெருக்கவும், வணிகர்களின் குறைகளைக் களையவும், சரக்கு மற்றும் சேவை வரி குறித்த வணிகர்களின் கோரிக்கையை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று சரி செய்யவும், வணிகர்கள் நலத்துறை என்ற தனி அமைச்சகம் ஏற்படுத்தப்படும்.

3. சிறு வணிக நிறுவனங்கள் விதிகளை மீறிச் செயல்படும் பட்சத்தில், அவற்றை மூடி முத்திரையிடும் வழக்கம் கைவிடப்படும். மாறாகப் பிற நடவடிக்கைகளின் மூலம் அவற்றின் தவறுகள் திருத்தப்படும்.

4. சிறுவணிக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு இலவசக் காப்பீட்டு வசதி வழங்கப்படும். வணிகர்கள் மற்றும் அதிகாரிகளிடையே நல்லுறவை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

5. வணிகம் மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களுக்கு மின்கட்டணச் சலுகை வழங்கப்படும்.

6. தங்கம், வெள்ளி நகை உற்பத்தி எந்திரமயமாக்கப்பட்டு விட்டதால், வேலை இழந்த பொற்கொல்லர்களுக்கு மாற்று வாழ்வாதாரங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

7. தமிழகத்தில் நகைத் தொழிலாளர்களின் நலன் காக்கப் பொற்கொல்லர் நல வாரியம் ஏற்படுத்தப்படும்.

■





# மீனவர்கள் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்: மீன்பிடித் தடைக்கால நிவாரணம் ரூ.15,250ஆக உயர்த்தப்படும்!

தமிழ்நாட்டில் துயரங்களும் வலிகளும் நிறைந்த சமூகங்களில் முதன்மையானவர்கள் மீனவர்கள் ஆவர். பிற மாநிலங்கள் மற்றும் நாடுகளில் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் கரை திரும்பாமல் இருப்பதற்கு இயற்கை மட்டுமே காரணமாக இருக்க முடியும். ஆனால், தமிழ்நாட்டில் இன்னொரு காரணமும் உள்ளது. அது இலங்கைக் கடற்படையினர். வங்கக் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குவதும், சிறைபிடிப்பதும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதற்குக் காரணம் கச்சத் தீவு இலங்கை அரசுக்குத் தாரை வார்க்கப்பட்டது தான்.

பிற சமூகங்களுக்கு ஆண்டுக்கு 12 மாதங்கள் என்றால், மீனவர்களுக்கு 8 மாதங்கள் தான். மீன்பிடித் தடைக்காலம் 2 மாதங்களாக நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தக் காலத்திலும் மழைக் காலத்தில் இரு மாதங்களிலும் அவர்களுக்கு எந்த வருமானமும் கிடைக்காது. மீனவர்களையும், மீனவர்களின் வருவாய் ஆதாரங்களையும் பாதுகாப்பதன் மூலமாகவே அவர்களின் நிலையை மேம்படுத்த முடியும் என்பது பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும்.

## திமுக அரசின் தோல்விகள்

2021ஆம் ஆண்டுச் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான திமுகவின் தேர்தல் அறிக்கையில், மீனவர்களின் நலன்கள், மீனவர்களின் பாதுகாப்பு தொடர்பாக 25 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு இருந்தன. அவற்றில் ஒரே ஒரு வாக்குறுதிகூட முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. அவற்றில் முக்கியமானவை:

1. மீனவர்கள் நலனைக் காக்கக் கச்சத்தீவை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (வாக்குறுதி எண் – 113)
2. மீனவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்த்து அதற்கான சலுகைகளைப் பெற்றுத்தர திமுக அரசு நடவடிக்கை எடுக்கும். (வாக்குறுதி எண் – 114)
3. மீனவர்களுக்கு 2 இலட்சம் புதிய வீடுகள் கட்டித்தரப்படும்; (வாக்குறுதி எண் – 116)
4. மீன்வளத் துறையில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க மீன்வளக் கல்லூரிகள், கடல்சார் கல்லூரிகள் புதிதாக உருவாக்கப்படும். (வாக்குறுதி எண் – 121)
5. அனைத்து மீனவ கிராமங்களுக்கும் மீன் உலர்த்தும் தளம் அமைத்துத் தரப்படும். (வாக்குறுதி எண் – 130)





## மீனவர்கள் நலனுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. மீன்பிடித் தடைக்காலத்தில், ஒரு நாளைக்கு ரூ.250 வீதம் 61 நாட்களுக்கு ரூ.15,250 மீன்பிடித் தடைக்கால நிவாரணமாக வழங்கப்படும்.
2. மழைக் கால நிவாரணமாக மீனவர்களுக்கு ரூ.6,000 வழங்கப்படும்.
3. மீனவர்களுக்குப் படகுகளும், வலைகளும் மானிய விலையில் வழங்கப்படும்.
4. பிடிக்கப்பட்ட மீன்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வசதியாகக் குளிர்ப்பதனக் கிடங்குகள் ஏற்படுத்தப்படும். உணவுப் பதனத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.
5. ஆழ்கடல் மீன்பிடிக்கும் முறை ஊக்குவிக்கப்படும். ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கும் வகையில், படகுகள் மற்றும் வலைகள் வாங்க நிதியுதவி வழங்கப்படும்.
6. உள்நாட்டு மீனவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு வழங்கும்.
7. கடலோரப் பெண்கள், தாங்கள் வாழும் பகுதிகளில் மீன்வளர்க்கவும், கடல் பாசி வளர்க்கவும் ஊக்குவிக்கப்படுவார்கள்.

## கச்சத்தீவை மீட்க நடவடிக்கை

8. கச்சத் தீவை மீட்க உறுதியான, உண்மையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
9. இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்து வைக்கப்பட்டுள்ள படகுகளை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும்.
10. சிங்களப் படையினரால் சேதப்படுத்தப்பட்ட படகுகளைச் சரிசெய்ய முழு நிதியுதவி வழங்கப்படும்.
11. மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணும்படி இந்தியப் பிரதமரையும், இலங்கை அதிபரையும் முதலமைச்சர் தலைமையிலான குழு நேரில் சந்தித்து வலியுறுத்தும்.
12. தமிழக மீனவர்கள் சட்டவிரோதமாகத் தாக்கப்படுவது தொடர்ந்தால், அதற்குக் காரணமானவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து இன்டர்போல் உதவியுடன் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

## மீனவர்களுக்கு உள் இட ஒதுக்கீடு

13. மத்திய அரசில் மீனவர் நலனுக்காகத் தனி அமைச்சகம் ஏற்படுத்தும்படி மத்திய அரசை வலியுறுத்திச் சாதிப்போம்.
14. கடல் வளத்தை அழிக்கும் வகையில் கடலோரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அணுஉலை மற்றும் வேதித் தொழிற்சாலைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.
15. மீன்பிடி வேலை செய்ய வெளிநாடு செல்லும் மீனவர்களின் உரிமைகளைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.





16. மீனவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க சேர்க்க மத்திய அரசைப் பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தும்.

17. பழங்குடியினர் பட்டியலில் மீனவர்கள் சேர்க்கப்படும் வரை, மாநில அரசு அதன் அதிகாரத்தைப் பயன்படுத்தி மீனவர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கும்.

### கடன் தள்ளுபடி

18. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் மீனவர்கள் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். மீனவப் பெண்கள் தொழில்தொடங்கக் கூட்டுறவுச் சங்கம் மூலம் வட்டியில்லாக் கடன் வழங்கப்படும்.

19. 60 வயது நிரம்பிய மீனவர்களுக்கு ஓய்வூதியமாக மாதம் ரூ.2,000 வழங்கப்படும்.

### மானிய டீசல் அளவு அதிகரிப்பு

20. விசைப்படகு மீனவர்களுக்கு வழங்கப்படும் மானிய விலை டீசலின் அளவு ஆண்டுக்கு 20,000 லிட்டராக உயர்த்தப்படும்.

21. நாட்டுப்படகு மீனவர்களுக்கு வழங்கப்படும் மானிய டீசல் அளவு ஆண்டுக்கு 5,000 லிட்டராக அதிகரிக்கப்படும்.

22. நாட்டுப் படகுகளுக்குப் பதில் பிளாஸ்டிக் ஃபைபர் படகுகளைப் பயன்படுத்த அனுமதியும், நிதியுதவியும் வழங்கப்படும்.

23. மீன்களுக்கு நியாயமான விலை கிடைக்க மீன் வணிக வளாகங்கள் அமைத்துத் தரப்படும்.

# இளைஞர்களுக்கு நல்வழி காட்டல், மாற்றுத் திறனாளிகளுக்கு நம்பிக்கை, சென்னையில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள்!

இளைஞர்கள் தான் இந்தியாவின், குறிப்பாகத் தமிழ்நாட்டின் எதிர்காலத் தூண்கள் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இளைஞர்கள் பட்டை தீட்டப்படாத வைரங்களைப் போன்றவர்கள். அந்த வைரங்களைப் பக்குவமாக பட்டைத் தீட்டுவதன் வாயிலாகத்தான் ஜொலிக்க வைக்க முடியும். அந்தப் பணியை செய்வதுதான் மக்கள் நலனில் அக்கறையுள்ள ஓர் அரசின் முதல் கடமையாக இருக்க வேண்டும் என்பதே பாமகவின் நிலைப்பாடு.

ஆனால், திமுக ஆட்சியில் இளைஞர்களை பட்டைத் தீட்டுவதற்குப் பதிலாக, அந்தக் கருப்பு வைரங்களைக் கரிக் கட்டைகளாக மாற்றும் பணிதான் நடைபெற்று வருகிறது. தரமான கல்வி, வேலைவாய்ப்பு வழங்குவதற்குப் பதிலாக இளைஞர்களுக்கு மது, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை வழங்கும் பணிதான் திமுக ஆட்சியில் தீவிரமாக நடைபெறுகிறது. இந்த நிலையை மாற்றி, இளைஞர்களை முன்னேற்ற வேண்டியது சமூகத்தின் உடனடிக் கடமையாகும்.

## திமுக அரசின் தோல்விகள்

இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகப் புதிய வேலைவாய்ப்புகள் திமுக ஆட்சியில் ஏற்படுத்தப்படவில்லை. அரசு வேலைவாய்ப்புகள், தனியார் வேலைவாய்ப்புகள் ஆகியவற்றில் வாக்குறுதி அளித்த அளவில் 10% கூட வழங்கப்படவில்லை என்பது திமுக அரசின் பெரும் தோல்வியாகும்.

அரசுப் பணிகளில் ஒப்பந்த அடிப்படையில் அல்லது தற்காலிக அடிப்படையில் பணியாற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு இரு ஆண்டுகளில் பணி நிலைப்பு வழங்க வகை செய்வதற்கான அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன. ஆனால், திமுக ஆட்சியில் அந்த அரசாணைகள் செல்லாதவையாக்கப்பட்டு, மாற்றுத் திறனாளிகள் பணி நிலைப்புப் பெறுவதற்கான வாய்ப்புகள் அளிக்கப்பட்டன.

அரசுப் பணிகள் மற்றும் பதவி உயர்வுகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

## இளைஞர் நலன், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்

1. படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு வழிகாட்டத் தனி மையங்கள் அமைக்கப்படும்.
2. அனைத்து வட்டத் தலைநகரங்களிலும் போட்டித் தேர்வுக்கான பயிற்சி மையங்கள் அமைக்கப்படும். அந்த மையங்களில் இளைஞர்களுக்குப் பொது அறிவு, கணினி அறிவு, ஆங்கிலத்தில் நன்றாகப் பேசும் திறன், நேர்முகத் தேர்வுகளில் பங்கேற்கும் திறன் ஆகியவற்றை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.
3. படித்து முடித்தவுடன் வேலை கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பில் திறன்சார் கல்வி, அறிவுசார் கல்வி, தொழிற்கல்வி ஆகியவை அறிமுகம் செய்யப்படும்.

### விளையாட்டு

4. 23ஆம் ஆசிய விளையாட்டுப் போட்டிகளைச் சென்னையில் நடத்துவதற்கான அனுமதியைப் பெற்றுத் தரும்படி இந்திய ஒலிம்பிக் சங்கம் மற்றும் மத்திய அரசின் வாயிலாக வலியுறுத்தப்படும்.
5. ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்குச் சென்னையை தயார்படுத்தும் வகையில் சென்னைப் புறநகர்ப் பகுதியில் விளையாட்டு கிராமம் அமைப்பதற்கான அடிப்படைக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்.
6. தமிழ்நாட்டில் வாய்ப்புள்ள அனைத்து இடங்களிலும் விளையாட்டுத் திடல்கள் அமைக்கப்படும்.
7. அனைத்து ஊராட்சிகளிலும் உடற்பயிற்சி மையங்கள் மற்றும் நடைப்பயிற்சிப் பாதைகள் ஏற்படுத்தப்படும்.
8. தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், நிர்வாகிகள் மற்றும் பிற வல்லுநர்கள் குழு கலந்தாய்வு செய்து பத்தாண்டு விளையாட்டுச் செயல் திட்டம் ஒன்றினை வகுக்கும். ஒலிம்பிக் போட்டியில் தமிழக இளைஞர்கள் தங்கப் பதக்கம் வெல்லும் சாதனையை நிகழ்த்தும் அளவிற்குத் தேர்ச்சித் தரத்தை இது உருவாக்கும்.
9. தடகளம், சிம்னாஸ்டிக், கால்பந்து, ஆக்கி, கூடைப்பந்து, கைப்பந்து, டென்னிசு, பாட்மிண்டன், குத்துச்சண்டை, சடுகுடு, நீச்சல், சதுரங்கம் உள்பட விளையாட்டின் அனைத்துத் துறைகளிலும் தனித் தேர்ச்சிக்கு வலுவான ஊக்கம் அளிப்பது இந்தச் செயல்திட்டத்தின் அடிப்படையாக இருக்கும்.

### மாற்றுத்திறனாளிகள் நலன்

10. கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட இடஒதுக்கீட்டின் அளவு 5 விழுக்காடாக உயர்த்தப்படும்.

11. தனியார் நிறுவனங்களின் வேலைவாய்ப்புகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு 5% இடஒதுக்கீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காகச் சட்டம் இயற்றப்படும்.

12. மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய பின்னடைவுப் பணியிடங்கள் கணக்கிடப்பட்டுச் சிறப்பு ஆள்தேர்வு மூலம் நிரப்பப்படும்.

13. மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை ரூ.6,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

14. சொந்தத்தொழில் தொடங்க முன்வரும் மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகள் சார்பில் கட்டப்படும் வணிக வளாகங்களில் முன்னுரிமை அடிப்படையில் கடைகள் ஒதுக்கப்படும்.

15. மாற்றுத் திறன் கொண்ட முதியோருக்கு அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் விடுதிகள் அமைக்கப்படும்.

16. அரசு அலுவலகங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் மாற்றுத் திறனாளிகள் எளிதில் சென்றுவரும் வகையில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

# ஒரு பிரிவினரின் பிடியில் இருந்து மீட்டுத் தமிழ்த் திரைத்துறை அனைவருக்கும் பொதுவானதாக மாற்றப்படும்!

கதாநாயகர்களையும், பெரும் கோடீஸ்வரர்களையும் உருவாக்குவதாகக் கூறப்படும் திரைத்துறை தான் அண்மைக் காலமாக ஒட்டாண்டிகளையும் உருவாக்கி வருகிறது. இதற்குக் காரணம், தமிழ்த் திரையுலகம் செல்வாக்குப் படைத்த ஒருசில பிரிவினரின் கட்டுப்பாட்டிற்குள் சிக்கிக் கொண்டிருப்பதுதான். திரைத்துறையில் சாதிக்க வேண்டும் என்ற நோக்குடன் தங்களின் சொத்துகளை விற்றுத் திரைத்துறையில் முதலீடு செய்த பலர் சரியான வாய்ப்புகள் கிடைக்காததால், தங்களின் சொத்துகள் அனைத்தையும் இழந்ததற்கு ஏராளமான உதாரணங்கள் தமிழ்த் திரையுலகில் உண்டு.

இன்னொரு பக்கம், புதிய தொழில்நுட்பங்கள் திரைத்துறையை வளர்ப்பதற்குப் பதிலாக வீழ்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்கின்றன. திரைத்துறை என்பது கோடிக் கணக்கில் ஊதியம் வாங்கும் நட்சத்திரங்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோருக்கு மட்டுமே சொந்தமானது அல்ல. மாறாக, அன்றாட வாழ்க்கைக்காகத் திரைத் துறையை நம்பியுள்ள தொழிலாளர்கள் இலட்சக்கணக்கில் உள்ளனர். அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகத் திரைத் துறைக்குப் புத்துயிர் ஊட்டி, அனைவராலும் சாதனை படைக்க முடிந்த களமாக மாற்ற வேண்டியது அவசியம் என்று பாமக கருதுகிறது.

### திமுக அரசின் தோல்விகள்

திமுகவின் முதல் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் திரைத் துறையில் இருப்பதால், அவர்களைக் கடந்து வேறு எவரும் திரைத்துறையில் நுழைய முடியாது; சாதிக்க முடியாது என்ற நிலை திமுக ஆட்சியில் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறை திமுக ஆட்சிக்கு வரும் போதும், இதே நிலை தான் ஏற்படுகிறது.

எங்கும் ஜனநாயகம், எதிலும் ஜனநாயகம் என்று கூறும் திமுக, ஆட்சிக்கு வரும் போதெல்லாம் திரைத் துறையைப் பிணைக் கைதியாக மாற்றித் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் அடைத்து வைக்கும் கொடுமையைச் செய்து வருகிறது.

தமிழ்த் திரையுலகின் இன்றைய பின்னடைவுகளுக்கு முதன்மைக் காரணமே திமுக அரசு தான் என்பதில் சந்தேகம் இல்லை.

## திரைத் துறை வளர்ச்சிக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. தமிழ்த் திரையுலகில் சிறிய முதலீட்டில் தயாரிக்கப்பட்ட சுமார் 2,000 திரைப்படங்கள் வெளியிட முடியாமல் முடங்கிக் கிடக்கின்றன. அந்தத் திரைப்படங்களின் மொத்த மதிப்பு ரூ.5,000 கோடி ஆகும். திரையுலக அமைப்புகளை அழைத்துப் பேசி, ஒரு செயல் திட்டம் வகுப்பதன் மூலம் இந்தத் திரைப்படங்கள் அனைத்தும் அடுத்த 3 ஆண்டுகளில் வெளியாவது உறுதி செய்யப்படும்.

2. தமிழ்நாட்டில் வலிமையுள்ள சிலர் சிண்டிகேட் அமைத்துக் கொண்டு, திரையரங்குகள் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலைக்கு முடிவு கட்டப்படும்.

3. ஒரு வாரத்தில் இரு பெரிய பட்ஜெட் திரைப்படங்கள் வெளியிடப்பட்டால், 4 சிறிய பட்ஜெட் திரைப்படங்கள் வெளியிடப்படுவது, திரைத்துறை அமைப்புகளின் கருத்தொற்றுமையுடன் உறுதி செய்யப்படும்.

4. தமிழில் எவ்வளவு பொருட்செலவில் தயாரிக்கப்பட்ட படமாக இருந்தாலும், அதிகபட்சமாக மொத்தம் உள்ள திரையுரங்குகளில் மூன்றில் ஒரு பங்குத் திரையரங்குகளில் மட்டுமே திரையிடப்படுவது உறுதி செய்யப்படும். இதன் மூலம் அதே வாரத்தில் வெளியாகும் மற்ற திரைப்படங்களுக்குப் போதிய எண்ணிக்கையில் திரையரங்குகள் கிடைப்பது உறுதி செய்யப்படும்.

5. தமிழ்த் திரையுலகில் ஆரோக்கியமான போட்டித்தன்மையைப் பாதிக்கும் வகையிலான செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்காகப் புதிய ஆணையம் அமைக்கப்படும். இந்த ஆணையத்தில் திரையுலகம் மற்றும் அரசுத் துறைப் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இடம்பெற்றிருப்பார்கள்.

6. திரைப்படங்கள் திரையரங்குகளில் வெளியிடப்பட்டு, ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குப் பிறகே ஓ.டி.டி. தளங்களில் வெளியிடப்படுவது தான் ஆரோக்கியமான சூழலை உருவாக்கும். இது குறித்த விதிகளை வகுப்பதற்காகத் திரையுலகின் சம்பந்தப்பட்ட அமைப்புகளை அழைத்துப் பேசி சுமூகமான முடிவு எட்டப்படுவதற்குத் தமிழக அரசு பாடுபடும்.

## தனித் தமிழில் பெயர் வைத்தால் வரி விலக்கு

7. திரைப்படங்களுக்குத் தனித் தமிழில் பெயர் வைக்கப்பட்டால், 8% கேளிக்கை வரி செலுத்துவதில் இருந்து முழுமையான விலக்கு அளிக்கப்படும். இதனால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் இழப்பை அரசே ஈடுகட்டும்.

8. இணையத்தில் அனுமதியின்றித் திரைப்படங்களை வெளியிடுவதைத் தடுக்கவும், அதில் ஈடுபடுவோரைத் தண்டிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

9. திரைத்துறையில் இழந்த அனைத்துப் பெருமைகளையும், வாய்ப்புகளையும் மீட்டுச் சென்னையைத் தென்னிந்திய திரை உலகின் தலைநகராக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

10. தமிழகத்தில் அரசுக்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் நிலங்களில் படப்பிடிப்பு நடத்துவதற்கான கட்டணங்கள் குறைக்கப்படும்.

11. திரைசார் அசை கலை (ANIMATION) யில் தமிழகம் சிறந்து விளங்குகிறது. இதை முறைப்படுத்தும் வகையிலும், பன்னாட்டுத் திரைத்துறையினர் இங்கு வந்து அசைகலைச் சேவை பெற வசதியாகவும் சென்னையில் அனைத்து வசதிகளுடன் கூடிய அசைகலைப் பூங்கா (ANIMATION PARK) அமைக்கப்படும்.

12. குறைந்த செலவில் தரமான திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் வகையில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

13. திரைத்துறை மற்றும் திரைத்துறையினரின் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகத் தமிழ்நாடு திரைப்படத்துறை மேம்பாட்டுக் கழகம் என்ற புதிய அமைப்பு தோற்றுவிக்கப்படும்.

14. சென்னையில் செயல்பட்டு வரும் திரைப்படக் கல்லூரியையும், திரைப்பட நகரத்தையும் வலுப்படுத்தி, மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

15. திரைப்படத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஓய்வூதியம், வீட்டுவசதி உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்படும்.

# உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு மடிக்கணினி, அடுக்குமாடிக் குடியிருப்புகள்!

ஜனநாயகத்தின் நான்காவது தூண்களாகப் போற்றப்படுபவர்கள் பத்திரிகையாளர்கள். ஜனநாயகம் எந்த வகையிலும் சீரழிந்துவிடாமல் பாதுகாப்பவர்கள் அவர்கள் தான். அரசு நிர்வாகத்தில் ஊழல் நடக்காமல், கண் கொத்திப் பாம்பாகக் கண்காணிப்பவர்களும் அவர்கள் தான். நாட்டு நலனுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் பத்திரிகையாளர்களுக்கு உரிய ஊதியமும், மதிப்பும் வழங்கப்படுவதில்லை என்பது வேதனை அளிக்கும் உண்மை ஆகும். பத்திரிகையாளர்களுக்கு உரிய அங்கீகாரமும், உரிமைகளும் வழங்கப்படுவது மிகவும் அவசியம்.

திமுக ஆட்சியில் ஊடகத் துறையினர் பாதுகாக்கப்படுவதற்குப் பதிலாகக் கடமையை செய்ததற்காகத் தாக்கப்படுகின்றனர். திமுக சட்டப்பேரவை உறுப்பினருக்குச் சொந்தமான கருங்கல் குவாரியில் அளவுக்கு அதிகமாகக் கனிமவளம் வெட்டியெடுக்கப்படுவதைப் படம் பிடித்ததற்காகத் தனியார் தொலைக்காட்சியின் செய்தியாளர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். அவர்களைத் தாக்கிய திமுக சட்டப்பேரவை உறுப்பினர் மீது இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. திமுக ஆட்சியில் ஊடகச் சுதந்திரம் என்பது மிக மோசமான தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

## திமுக அரசின் தோல்விகள்

2021 சட்டப்பேரவைத் தேர்தலின்போது திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், பத்திரிகையாளர்கள் நலனுக்காக மொத்தம் 6 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் இரு வாக்குறுதிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டன. மீதமுள்ள 4 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. அவற்றின் விவரம்:

1. பத்திரிகையாளர்களுக்கு ஊதியக் குழுப் பரிந்துரைகள் நிறைவேற்றப்படும். (வாக்குறுதி எண் – 337)
2. முந்தைய திமுக ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ள பத்திரிகையாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் குறைபாடுகள் சரி செய்யப்பட்டு மீண்டும் சிறப்பானதாக மாற்றி அமைக்கப்படும். (வாக்குறுதி எண் – 338)
3. பணியின்போது பாதிக்கப்படும் பத்திரிகையாளர்களுக்கும், சேதமுற்ற உபகரணங்களுக்கும் உரிய நிவாரணம் வழங்கப்படும். (வாக்குறுதி எண் – 339)
4. மதுரை, திருச்சி, கோவை, சேலம், நெல்லை போன்ற முக்கிய நகரங்களில் பத்திரிகையாளர்களுக்குக் குடியிருப்பு மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும். (வாக்குறுதி எண் – 341)

## பத்திரிகையாளர்கள் நலனுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் பத்திரிகையாளர் நல வாரியத்திற்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படும்.
2. அரசு சார்பில் ஊடகங்களுக்கு வழங்கப்படும் விளம்பரங்களின் மொத்த மதிப்பில் 3% பத்திரிகையாளர் நல நிதிக்கு வழங்கப்படும். இந்த நிதியைக் கொண்டு பத்திரிகையாளர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும்.
3. உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நிறுவனப் பணியாளர்களுக்குப் பத்திரிகையாளர் ஊதியக் குழுப் பரிந்துரைப்படி ஊதியம் வழங்குவது உறுதி செய்யப்படும்.
4. பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்ற, நலிந்த பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.20,000ஆக உயர்த்தப்படும்.
5. பணியின் போது உயிரிழந்த பத்திரிகையாளர்கள் குடும்பத்திற்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

## அடுக்குமாடிக் குடியிருப்புகள், மடிக்கணினிகள்

6. சென்னைத் திருவான்மியூரில் அமைக்கப்பட்டிருப்பதைப் போன்று, சென்னைப் புறநகர்ப் பகுதியில் ஆயிரம் வீடுகளைக் கொண்ட பத்திரிகையாளர் குடியிருப்பு உருவாக்கப்படும். இதற்கான இடம் பத்திரிகையாளர் அமைப்புகளுடன் கலந்துபேசித் தீர்மானிக்கப்படும்.
7. சென்னையில் உள்ள அனைத்து அரசு வாடகைக் குடியிருப்புகளிலும் குறிப்பிட்ட விழுக்காடு பத்திரிகையாளர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும்.
8. மாவட்டத் தலைநகரங்களிலும் பத்திரிகையாளர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தரப்படும்.
9. அனைத்து மாவட்டங்களிலும் பத்திரிகையாளர் மன்றங்கள் அமைக்க அரசு நிலமும், நிதியுதவியும் வழங்கப்படும்.
10. தேசிய நெடுஞ்சாலைச் சுங்கச் சாவடிகளில் பத்திரிகையாளர்கள் / பத்திரிகை நிறுவனங்களின் வாகனங்களுக்குச் சுங்கக் கட்டண விலக்கு வழங்கப்படும்.
11. பத்திரிகையாளர்கள் மடிக்கணினி (Laptop) வாங்க 90% மானியத்துடன் கடனுதவி வழங்கப்படும். மடிக்கணினிக்கான இணையதளச் சேவை பி.எஸ்.என்.எல் மூலம் இலவசமாக வழங்கப்படும்.

# ஈழத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க நடவடிக்கை!

தமிழ்நாட்டுத் தமிழர்களின் கொப்பூழ்க் கொடி உறவுகளாகக் கருதப்படுபவர்கள் ஈழத் தமிழர்கள் ஆவர். தமிழீழ மண்ணின் மைந்தர்கள் அவர்கள் தான் என்றாலும்கூட, அவர்களுக்குக் கவுரவமான வாழ்க்கை மறுக்கப்பட்டே வந்தது. உரிமை கேட்டதற்காக ஈழத் தமிழர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். அதற்குக் காரணமான சிங்கள ஆட்சியாளர்கள் மீது போர்க்குற்ற வழக்குத் தொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்ததன் பயனாக, இப்போது ஐ.நா. மனித உரிமை ஆணையமே விசாரணை நடத்தி வழக்குப் பதிவு செய்துள்ளது. அதன் அடிப்படையில் நீதிமன்ற விசாரணை இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. அதற்காகத் திமுக அரசு ஆக்கப்பூர்வமாக எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

ஈழத் தமிழர்களுக்கு இந்தியாவில் இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஈழத் தமிழர்களுக்கு இந்தியாவின் குடியுரிமை வழங்க வேண்டும் எனத் திமுக கூறினாலும், அதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எதையும் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு மேற்கொள்ளவில்லை. ஈழத் தமிழர்கள் அவர்களின் தாயகமான தமிழீழத்தில் கண்ணியமாக வாழ வேண்டும்; தனித் தமிழ் ஈழம் அமைப்பதுதான் அதற்கு ஒரே வழி என்றால் அதையும் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் செய்து தரவேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும். அதற்காகப் பாமக தொடர்ந்து உழைக்கும்.

## திமுக அரசின் தோல்விகள்

ஈழத் தமிழர் நலன் தொடர்பாகத் திமுக சார்பில் 4 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றுகூட நிறைவேற்றப்படவில்லை. அந்த வாக்குறுதிகளின் விவரம்:

1. இலங்கைப் போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணைக்கு ஆணையிடும்படி உலக நாடுகளுக்கு அழுத்தம் தர வேண்டும் என்று மத்திய அரசைத் திமுக தொடர்ந்து வலியுறுத்தும். (வாக்குறுதி எண் – 13)
2. தனித் தமிழீழம் அமைப்பது குறித்து ஐ.நா. அவை மூலம் உலகெங்கும் வாழும் ஈழத் தமிழர்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்த நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசை திமுக தொடர்ந்து வலியுறுத்தும். (வாக்குறுதி எண் – 14)
3. ஈழத் தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க மத்திய அரசைத் திமுக அரசு வலியுறுத்தும். (வாக்குறுதி எண் – 15)
4. இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்பும் தமிழர்களுக்குத் தேவையான உதவிகள் செய்யப்படும். (வாக்குறுதி எண் – 16)

## ஈழத் தமிழர் நலனுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. இலங்கை இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான நீதிமன்ற விசாரணை முடங்கியுள்ள நிலையில், அது குறித்துப் பன்னாட்டு நீதிமன்ற விசாரணை நடத்த வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையம் மற்றும் ஐ.நா. அமைப்புக்கு அழுத்தம் தரும்படி மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்தும்.
2. ஈழத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கும்படி மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும்.
3. தமிழ்நாட்டில் வாழும் ஈழத் தமிழர்கள் தன்மானத்துடன் வாழும் வகையில் அனைத்து வசதிகளும், சலுகைகளும் வழங்கப்படும்.
4. தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்கள் அனைவருக்கும், தமிழக மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் வழங்கப்படும். தமிழகத்தில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் எந்தக் கட்டுப்பாடும் இன்றி, அவர்கள் சேர வகை செய்யப்படும்.
5. இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட அகதிகளின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை வரையறுக்கும் வகையில் சட்டம் இயற்ற மத்திய அரசு மூலம் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும்.
6. இலங்கைப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு தனித் தமிழீழம் அமைப்பதுதான். இதற்காக உலகம் முழுவதும் வாழும் ஈழத் தமிழர்களிடம் ஐ.நா. மூலம் பொது வாக்கெடுப்பு நடத்தி, அவர்கள் விருப்பப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
7. இலங்கையில் தமிழர்களுக்குத் தன்னாட்சி வழங்க வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு எதிராக ஒற்றை ஆட்சி முறையைக் கொண்டு வரும் இலங்கை ஆட்சியாளர்களின் முயற்சியைத் தடுத்து நிறுத்தும்படி மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்தும்.
8. ஐ.நா. பொது வாக்கெடுப்பு நடத்தப்படும்வரை இலங்கையில் உள்ள தமிழர்கள் கண்ணியத்துடன் வாழ்வதை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

# மணல் குவாரிகள் மூடப்படும்: தனியார் கல்குவாரி இனி இல்லை!

தமிழ்நாட்டில் திமுக ஆட்சியில் வரலாறு காணாத வளர்ச்சியடைந்த இரு தொழில்கள் என்றால், அது மணல் கொள்ளையும், கனிம வளக் கொள்ளையும் தான். காவிரி, கொள்ளிடம் உள்ளிட்ட ஆறுகளில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்காகவும், பாசன ஆதாரங்களை மேம்படுத்துவதற்காகவும், தடுப்பணைகளைக் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றாத திமுக அரசு, தடுப்பணை கட்ட வேண்டிய இடங்களில் எல்லாம் மணல் குவாரிகளை அமைத்து இயற்கை வளங்களைக் கொள்ளையடித்தது. காவிரியிலும், கொள்ளிடத்திலும் பல ஆண்டுகளில் அள்ளப்பட வேண்டிய மணலை, நான்கே மாதங்களில் கொள்ளையடித்த பெருமை திமுக அரசுக்கு உண்டு. திமுக ஆட்சியில் ரூ.4,730 கோடி அளவுக்கு மணல் கொள்ளை நடந்திருப்பதாக அமலாக்கத்துறை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளது. ஆனால், உண்மையில் திமுக ஆட்சியில் நடைபெற்ற மணல் கொள்ளையின் மதிப்பு ரூ.2 இலட்சம் கோடிக்கும் அதிகம் ஆகும்.

அதேபோல், கனிம வளக் கொள்ளையும் திமுக ஆட்சியில் கட்டுக்கடங்காமல் நடைபெற்று வருகிறது. இராதாபுரம் சட்டப்பேரவைத் தொகுதியில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட கல்குவாரிகள் செயல்பட்டு வருகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையையே குடைந்தெடுக்கும் அளவுக்குக் கல்குவாரிகள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் தடுக்க எந்த நடவடிக்கையையும் எடுக்காத திமுக அரசு, கனிம வளக் கொள்ளையர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டு வருகிறது.

இதேநிலை தொடர்ந்தால், கேரள மாநிலம் வயநாடு பகுதியில் ஏற்பட்டது போன்ற நிலச்சரிவு நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் ஏற்படக்கூடும். அத்தகைய பேரழிவைத் தடுக்க வேண்டும் என்றால், கனிமக் கொள்ளை தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும்.

### திமுக அரசின் தோல்விகள்

1. மணல் கொள்ளையால் நிலத்தடி நீர் மட்டம் கீழே செல்லுதல், கடல்நீர் ஊடுருவுதல் உள்ளிட்ட பல பாதிப்புகள் ஏற்பட்ட போதிலும், மணல் குவாரிகளை மூடத் திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.
2. கனிம வளக் கொள்ளைக்கு எதிராகப் பல இடங்களில் பொதுமக்கள் போராட்டம் நடத்தும் போதிலும், கல்குவாரிகளை மூடத் திமுக அரசு முன்வரவில்லை. மாறாகத் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு ஒரு சில நாட்கள் முன்பு வரை புதிய கல்குவாரிகளுக்கு திமுக அரசு உரிமம் வழங்கியது.

3. கனிம வளக் கொள்ளையர்களைத் தண்டிப்பதற்குப் பதிலாக, அவர்கள் கொள்ளையடித்த கனிம வளத்தின் மதிப்பில் பத்தில் ஒரு விழுக்காட்டுக்கும் குறைவான தொகையைத் தவணை முறையில் தண்டமாகச் செலுத்தினால் போதும் என்று திமுக அரசு சலுகை வழங்கியது.

### இயற்கை வளப் பாதுகாப்புக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்

1. தமிழ்நாட்டில் அனைத்து மணல் குவாரிகளும் மூடப்படும்.
2. தமிழ்நாட்டில் தனியார் நிலங்களில் செயல்பட்டு வரும் கல்குவாரிகள் மூடப்படும்.
3. அரசு நிலங்களில் கல்குவாரிகளை நடத்தத் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமங்கள் இரத்து செய்யப்படும். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கல்குவாரிகளை மட்டும் தமிழக அரசே டாமின் நிறுவனம் மூலமாக நடத்தும்.
4. தமிழகத்தில் உள்ள அனைத்து கிரானைட் மற்றும் தாது மணல் குவாரிகள் முறைப்படுத்தப்படும். அனைத்துக் குவாரிகளும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும். விற்பனையைப் பொறுத்தவரை 50% அரசால் நேரடியாக விற்பனை செய்யப்படும். மீதமுள்ள இயற்கை வளங்கள், பட்டதாரி இளைஞர்களுக்கு உரிமம் வழங்கப்பட்ட கடைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.
5. கிரானைட், தாதுமணல், இறக்குமதி மணல் மூலமான வருவாய் அரசுக் கருவூலங்களுக்கு வருவதும், மக்கள் நலப்பணிகளுக்காக அவை பயன்படுத்தப்படுவதும் உறுதி செய்யப்படும்.
6. கிரானைட், தாது மணல் மற்றும் ஆற்றுமணல் கொள்ளை குறித்து உச்சநீதிமன்றத்தின் கண்காணிப்பில் சிறப்புப் புலனாய்வுக் குழு அமைத்து விசாரணை நடத்தப்படும்.
7. இயற்கை வளக் கொள்ளையின் மதிப்புக் கணக்கிடப்பட்டு, அதைத் தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து பெற நடவடிக்கை எடுக்கப்படும். விசாரணை தொடங்கும் போதே அந்த நிறுவனங்களின் சொத்துக்கள் முடக்கப்படும்.

■





# சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம் காலநிலை மாற்றத்தின் தீய விளைவுகளைத் தடுப்போம்!

ஒட்டுமொத்த உலகிற்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலாகக் காலநிலை மாற்றம் உருவெடுத்துள்ளது. காலநிலை மாற்றமும், சுற்றுச்சூழல் பாதுகாப்பும் வெவ்வேறானவை அல்ல. இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவை ஆகும். சுற்றுச்சூழலை நாம் பாதுகாக்கத் தவறினால், அது விரைவான காலநிலை மாற்றத்திற்கும், விரைவான பேரழிவுக்கும் வழிவகுக்கும். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் மூலம் பேரழிவுகளில் இருந்து நம்மை நாமே பாதுகாக்க முடியும்.

ஆனால், திமுக ஆட்சியில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காகவும், அதனால் ஏற்படக் கூடிய காலநிலை மாற்றத்தின் தீய விளைவுகளைத் தடுப்பதற்காகவும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காலநிலை மாற்றம் தமிழ்நாட்டைத் தாக்கத் தொடங்கிவிட்டது என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் 18.12.2023 அன்று 24 மணி நேரத்தில் 960 மில்லிமீட்டர் மழை கொட்டியதும், 09.08.2019 அன்று நீலகிரி மாவட்டம் அவலாஞ்சியில் 911 மில்லி மீட்டர் மழை கொட்டியதும் ஆகும். ஓராண்டு முழுவதும் பெய்ய வேண்டிய மழை ஒரே நாளில் பெய்தால் அதனால் ஏற்படும் பாதிப்புகளை யாராலும் தடுக்க முடியாத நிலை ஏற்படும்.

வறட்சி அதிகரித்தல், பருவம் தவறி மழை பெய்தல், பயிர்கள் நாசமடைதல் எனக் காலநிலை மாற்றத்தால் சமாளிக்க முடியாத அளவுக்குப் பாதிப்புகள் ஏற்படக் கூடும். அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்கூட்டியே திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த வேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும்.

## திமுக அரசின் தோல்விகள்

2021ஆம் ஆண்டுச் சட்டப்பேரவைத் தேர்தலில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக 8 வாக்குறுதிகளை திமுக அளித்தது. அவற்றில் 7 வாக்குறுதிகளைத் திமுக அரசு நிறைவேற்றவில்லை என்பதில் இருந்தே சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் திமுக அரசு எந்த அளவுக்கு அக்கறை இன்றிச் செயல்பட்டது என்பதைப் புரிந்துகொள்ளலாம். நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளில் முக்கியமானவை:

1. தமிழகம் முழுவதிலும் ஓடும் அனைத்து ஆறுகளிலும் கலக்கும் தொழிற்சாலைக் கழிவு உள்ளிட்ட அனைத்துக் கழிவுகளையும் கட்டுப்படுத்தும் வகையில் தமிழ்நாடு ஆறுகள் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்படும். (வாக்குறுதி எண் – 362)

2. தமிழகத்தில் உள்ள பறவைகள் சரணாலயங்கள் பழவேற்காடு, வேடந்தாங்கல், கரிக்கிளி, கரைவெட்டி, உதயமார்த்தாண்டபுரம், வடுவூர், சித்திரங்குடி, கூந்தங்குளம், வெள்ளோடு, மேல்செல்வனூர், வேட்டங்குடி ஆகிய இடங்களில் சுற்றுலா வசதிகள்

மேம்படுத்தப்பட்டு நீர்நிலைகளில் தேவையான நீர் இருப்பதை உறுதிசெய்யும் வகையில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். முக்கியப் பறவைகள் சரணாலயங்களில் பறவைகள் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளக் கூடிய வகையில் பறவைகள் ஆய்வு மையங்கள் அமைக்கப்படும். (வாக்குறுதி எண் – 364)

3. எரிவாயுவில் இயங்கும் புகையில்லாப் பேருந்துகள் தமிழகத்திலுள்ள அனைத்து நகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் படிப்படியாக இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (வாக்குறுதி எண் – 366)

## பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்


1. காலநிலை மாற்றம், உயிரிப்பன்மய அழிவு, மாசுபாடு (climate change, biodiversity loss, pollution) ஆகியன ஒட்டுமொத்த உலகையும் கடுமையாகப் பாதிக்கும் கேடாக மாறியுள்ளன. இந்த மாபெரும் சிக்கல்கள் உலகளாவிய முப்பெரும் நெருக்கடிகள் (Triple Planetary Crisis) என ஐநா அவை வரையறை செய்துள்ளது. தமிழ்நாட்டில் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்ளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

2. தமிழக மக்கள் அனைவருக்கும் தூய்மையான, நலமான மற்றும் நீடித்திருக்கும் சுற்றுச்சூழலுக்கான உரிமை உள்ளது (the right to a clean, healthy and sustainable environment). இதில் குறைந்தபட்சம் 6 நிலைமுறை அங்கங்கள் (Substantive Elements) 1. தூய காற்று (Clean air), 2. பாதுகாப்பான காலநிலை (Safe climate), 3. பாதுகாப்பான – போதுமான தண்ணீர் (Safe and sufficient water), 4. நலமான மற்றும் நீடித்திருக்கும் முறையில் உற்பத்தி செய்யப்படும் உணவு (Healthy and sustainably produced food), 5. நச்சு இல்லாச் சுற்றுச்சூழல் (Non-toxic environments), 6. நலமான சூழல் மண்டலங்கள் – உயிரிப்பன்மயம் (Healthy biodiversity and ecosystems), மற்றும் 3 நடைமுறை அங்கங்கள் (Procedural Elements) 1. தகவல் பெறும் உரிமை (Access to information), 2. மக்கள் பங்கேற்பு (Public participation), 3. நீதி பெறும் உரிமை (Access to Justice) உள்ளன. பன்னாட்டுச் சட்டங்களின் அடிப்படையிலும் உள்நாட்டுச் சட்டங்களின் அடிப்படையிலும் தமிழ்நாட்டில் இந்த உரிமையை நிலைநாட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முழு அளவில் மேற்கொள்ளப்படும்.

3. தமிழ்நாட்டில் நகரங்கள் அனைத்திலும் மற்றும் மாவட்டங்கள் தோறும் முழுமையான தூய காற்றுச் செயல்திட்டம் (Clean Air Action Plan) செயலாக்கப்படும்.

4. 2026 நகர்ப்புறத் திடக்கழிவு மேலாண்மை விதிகளின் கீழ் திடக்கழிவுகளை வகைபிரித்து மேலாண்மை செய்வது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். பூஜ்யக் குப்பைக் (Zero Waste) கோட்பாடு தமிழ்நாட்டில் செயலாக்கப்படும். உற்பத்தியாளரே பொறுப்பேற்கும் கொள்கை (EPR - Extended Producer Responsibility) செயலாக்கப்படும்.

5. ஆபத்தான குப்பை எரிஉலைத் (Waste Incinerator) திட்டங்கள் முற்றிலுமாகத் தடை செய்யப்படும். வட சென்னை, தென் சென்னை, தாம்பரம் குப்பை எரிஉலைத் திட்டங்கள் நிரந்தரமாகக் கைவிடப்படும். குப்பை எரிப்பு தடுக்கப்படும் (Ban on Garbage Burning)





6. ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடை முழுமையாகச் செயல்படுத்தப்படும்.

7. உணவு வீணடிக்கப்படுவதைத் தடுப்பதற்கான திட்டம் செயலாக்கப்படும்.

8. தமிழ்நாடு புதைபடிவ எரிபொருள் சுரங்கங்கள் (No New Fossil Fuel Mines) இல்லாத மாநிலமாக அறிவிக்கப்படும். மீத்தேன் திட்டம், பாறை எரிவாயுத் திட்டம், புதிய நிலக்கரி சுரங்கத் திட்டங்கள் அனைத்தும் தடுக்கப்படும்

9. தமிழகத்தின் 42,978 சதுப்புநிலங்களும் 2017 சதுப்புநில விதிகளின் கீழ் சதுப்புநிலமாகச் சட்டப்படி அறிவிக்கை (Notification) செய்யப்பட்டு முழுமையாக பாதுகாக்கப்படும்.

10. நீர்நிலைகள் –ஆறுகள் மாசுபாடு முழுமையாகத் தடுக்கப்படும் (Stop River & Water-bodies Pollution). மாநகரங்கள் மற்றும் நகரங்களில் கழிவுநீர் மேலாண்மை முறை முழுமையாகச் செயலாக்கப்படும். கழிவுநீர் மறுசுழற்சிக் கொள்கை (Grey Water Recycling Policy) செயலாக்கப்படும்.

11. தோல் தொழிற்சாலைகள், இரசாயனத் தொழிற்சாலைகள், சாயப்பட்டறைகளால் மாசுபடுத்தப்பட்ட மாவட்டங்களில் நிலவளத்தையும் நீர்வளத்தையும் மீட்கும் திட்டம் செயலாக்கப்படும்.

12. இராணிப்பேட்டையில் 2 ஹெக்டேர் பரப்பளவில் தேங்கியுள்ள குரோமியக் கழிவுகள் அகற்றப்படும்.

13. நொய்யல் ஆற்றினையும் அதனைச் சார்ந்த நீர்வள ஆதாரங்களையும் காக்கவும் மீட்கவும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

14. மழை நீரை முழுமையாகச் சேகரிக்கும் திட்டங்கள் முழு அளவில் செயலாக்கப்படும் (Rain Water Harvesting). மாநகரங்கள் மற்றும் நகரங்களில் மழைநீர் –வெள்ளநீர் வடிகால் வசதிகள் முழுமையாக அமைக்கப்படும். மாநகரங்கள் மற்றும் நகரங்களில் பஞ்சு நகரம் முறை செயல்படுத்தப்படும் (Sponge City Initiative).

15. ஆற்று வடிநிலப்பகுதிகள் (River Basins) பாதுகாக்கப்படும். ஆறுகள், நீர் நிலைகள் மாசுபாடு உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படும். நீர்வள ஆதாரங்கள் சீரழிக்கப்படும் நிலை மாற்றப்படும். ஆறுகள், ஆற்றுவடிநிலப் பகுதிகள் அனைத்தும் பாதுகாக்கப்படும். குளங்கள், ஏரிகள், கோவில் குளங்கள், சதுப்புநிலங்கள், பசுமைப் பகுதிகள் உள்ளிட்ட அனைத்தும் பாதுகாக்கப்படும் வகையில் தமிழ்நாட்டில் 17 ஆற்று வடிநிலப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த ஆற்று வடிநிலப்பகுதி மேலாண்மைத் திட்டம் (Integrated River Basin Management - IRBM) செயலாக்கப்படும்.

16. மாநகரங்கள் மற்றும் நகரங்களில் வீடுகள்தோறும் குழாய்மூலம் நீர் வழங்கப்படும். குடிநீர் விநியோகத்தில் தனியார் கார்ப்பரேட் நிறுவனங்கள் அனுமதிக்கப்படாது (No to Water Privatisation).

### பசுமை – உயிரிப்பன்மயம்

17. தமிழ்நாடு மரங்கள் சட்டம் கொண்டுவரப்படும் (Tamil Nadu Trees Act), மரங்கள் ஆணையம் (Tree Authority) அமைக்கப்படும். பொது இடங்களில் உள்ள மரங்கள் அட்டவணை உருவாக்கப்படும்.

18. தமிழ்நாட்டின் நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சிகள் அனைத்திலும் உயிரிப்பன்மய மேலாண்மைக் குழுக்கள் (BMC) முறையாகச் செயல்படும் நிலை உருவாக்கப்படும். தமிழ்நாட்டின் அனைத்து நகரங்கள் மற்றும் உள்ளாட்சிகளில் உயிரிப்பன்மயச் செயல்திட்டம் (Biodiversity Action Plan) செயல்படுத்தப்படும்.

19. பழவேற்காடு முதல் பிச்சாவரம் வரையிலான கிழக்குக் கடற்கரைப் பகுதி பறவைகள் பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டு, வலசைப் பறவைகள் பாதுகாப்புக்கான திட்டம் செயல்படுத்தப்படும்.

### காலநிலை மாற்றம்

20. புவிவெப்பமடைதல் போராட்டத்தில் முன்னிலையில் நிற்கும் மாநிலமாகத் தமிழ்நாடு இருப்பதால், அதனை எதிர்கொள்ளும் தகவமைப்பு (adaptation to climate change) ஏற்பாடுகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்படும். அந்த வகையில் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்குமான தகவமைப்பு மற்றும் பேரிடர் சமாளிப்புத் திட்டங்கள் முழுமையாக செயலாக்கப்படும் (Adaptation and Resilience Action Plan).

21. புவிவெப்பமடைதலைத் தடுக்கவும், சமாளிக்கவுமான திட்டங்களை உள்ளடக்கிய காலநிலைச் செயல்திட்டத்தை (Climate Action Plan) ஒவ்வொரு மட்டத்திலும் செயல்படுத்தப்படும்

22. ஐநா அவை குறிப்பிடும் ‘காலநிலை அதிகாரமளித்தலுக்கான நடவடிக்கை (Action for Climate Empowerment)’ வழிமுறைக்கு ஏற்பத் தமிழ்நாட்டில் ஒரு காலநிலைக் கல்வி மற்றும் விழிப்புணர்வுத் திட்டம் செயலாக்கப்படும்.

23. தமிழ்நாட்டில் மழை, புயல், வெள்ளம், வெப்பம் குறித்துத் துல்லியமான முன்னறிவிப்பு (Early Warning) கட்டமைப்புகள் அமைக்கப்படும். இந்திய அளவில் வானிலைத் துறை இருப்பது போன்றே தமிழ்நாட்டுக்கான வானிலைத் துறை உருவாக்கப்படும்.

24. சென்னை மற்றும் தமிழ்நாட்டில் ஒவ்வொரு நகரப்பகுதிக்கும், ஊராட்சிக்கும், மாவட்டத்துக்கும் வெப்பத் தணிப்புச் செயல்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

25. தமிழ்நாட்டின் வெப்பச் செயல்திட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கத் தலைமை வெப்ப அலுவலராக (Chief Heat Officer) உயரதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவார். வெப்ப அலை பேரிடராக அறிவிக்கப்படும்.

26. 2021 சென்னைப் பெருநகர வெள்ளப் பேரிடர் தடுப்பு மற்றும் மேலாண்மைக்கான ஆலோசனைக் குழு (திருப்புகழ் குழு) அறிக்கை 2023 மார்ச் மாதம் முதலமைச்சரிடம் தாக்கல் செய்யப்பட்டது. திமுக அரசு ஒளித்து வைத்துள்ள இந்த அறிக்கை வெளியிடப்படும். சென்னை வெள்ளத்தடுப்புக்கான செயல்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும்.

27. சூரிய ஆற்றல் மேற்கூரைகள் இயக்கம் (Solar Roofs Movement), உள்ளூர் ஆற்றல் முன்முயற்சித் திட்டங்கள் (District energy initiative) ஆகிய மின்சக்தித் திட்டங்கள் தீவிரமாக்கப்படும்.

### பொதுப்போக்குவரத்து

28. காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதிலும், தகவமைப்பிலும் பொதுப்போக்குவரத்து முதன்மையான ஓர் அங்கம் வகிக்கிறது. அதனால், சென்னை மற்றும் மாநகரங்களில் சுமார்

ஒரு இலட்சம் பேருக்கு 60 பேருந்துகள் என்கிற எண்ணிக்கையில் மாசில்லாப் பேருந்துகள் இயக்கப்படும்.

29. ‘கட்டணமில்லாப் பொதுப்போக்குவரத்து’ (Free Fare Public Transport)’ முறையை 2016 முதல் பாமக தொடர்ந்து முன்வைத்து வருகிறது. அதன்படி, தமிழ்நாட்டின் அனைத்து நகரப்பேருந்துகளும் அனைவருக்கும் இலவசமாக்கப்படும்.

30. அனைத்து நகரங்களிலும் தடையில்லா நடைபாதைகள் அமைக்கப்படும். இதற்காக, நகரங்களில் ‘முழுமைத் தெருக்கள்’ திட்டம் (Complete Streets Plan) செயலாக்கப்படும்.

31. சென்னை உள்ளிட்ட மாநகரங்களில் மிதிவண்டி முழுமைத் திட்டங்கள் (Chennai Bicycle Masterplan) செயல்படுத்தப்படும்.

32. போக்குவரத்து நெரிசலை அதிகமாக்கும், பயனே இல்லாத அடுக்குமாடி வாகன நிறுத்தங்களைப் (Multi-level Car Parking - MLCP) பலகோடி செலவில் அமைக்கிறார்கள். இந்த ஊழல் திட்டங்கள் அனைத்தும் கைவிடப்படும்.

## சீமைக் கருவேல மரம் ஒழிப்பு

33. பிரேசில், ஆஸ்திரேலியா, சிரியா ஆகிய நாடுகளில் சீமைக் கருவேல மரங்கள் வெற்றிகரமாக அழிக்கப்பட்டு வருவதால், அதே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தமிழ்நாட்டில் சீமைக் கருவேல மரங்களை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

34. கருவேல மரங்களைப் பொக்லைன் இயந்திரங்கள் மூலம் அகற்றிவிட்டு, அந்த இடத்தில் Weedcide எனப்படும் களைக்கொல்லியைத் தெளிப்பதன் மூலம் அந்த இடங்களில் மீண்டும் கருவேல மரங்கள் வளராது. இந்த 3 தொழில் நுட்பங்களைப் பயன்படுத்திக் கருவேல மரங்கள் அழிக்கப்படும்.

35. கருவேல மரங்கள் ஒழிக்கப்பட்ட இடங்களில் தொடக்கத்தில் பருத்தியும் பின்னர் நெல்லும் விளைவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

36. யூக்கலிப்டஸ் தைல மரங்களும், சீமைக் கருவேல மரங்களுக்கு இணையாக நிலத்தடி நீரை உறியும் தன்மை கொண்டவை என்பதால், அவற்றை வளர்க்கத் தடை விதிக்கப்படும்.

37. தமிழ்நாட்டில் பனைகள் அழிந்து வருவதைத் தடுத்து அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்கச் சிறப்புத் திட்டத்தைப் பாட்டாளி மக்கள் கட்சி செயல்படுத்தும். அந்தச் சிறப்புத் திட்டம் கீழ்க்கண்ட அம்சங்களை உள்ளடக்கியதாக அமையும்:

38. காஃபி வாரியம், தேநீர் வாரியம் போன்று பனை வளர்ச்சி வாரியம் அமைக்கப்படும்.

# நகராட்சிகளுக்கு முழுமையான அதிகாரம்: குடிசைவாசிகளுக்கு நகரில் வாழும் உரிமை!

மாநிலத் தன்னாட்சி என்ற முழக்கம் எந்த அளவுக்கு முதன்மையானதோ, அதேபோல் உள்ளாட்சிகளின் தன்னாட்சியும் மிகவும் முக்கியமானது ஆகும். நகராட்சிகளின் தேவைகளைச் சம்பந்தப்பட்ட நகராட்சிகளே தீர்மானித்துக்கொள்வது உறுதி செய்யப்பட வேண்டும். இதற்காக நகராட்சிகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

நகர்ப்புறங்களில் மக்கள்தொகை அடர்த்தி அதிகம் இருந்தாலும், அதை மக்கள் உணராத வகையில் வசதிகள் செய்து தரப்பட வேண்டும். போக்குவரத்து, வீட்டுவசதி, குடிநீர், துப்புரவு, இயற்கை வளப் பாதுகாப்பு, திடக்கழிவு மேலாண்மை, மாசுபாட்டைத் தடுத்தல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்வதன் மூலம் நகர்ப்புற வாழ்க்கையை மகிழ்ச்சியான ஒன்றாக மாற்ற முடியும். இதைப் பாட்டாளி மக்கள் கட்சி வெற்றிகரமாகச் செய்யும்.

**திமுக அரசின் தோல்விகள்**

1. மாநில தன்னாட்சி பேசும் திமுக, நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க மறுக்கிறது. நகராட்சிகளும் ஊராட்சிகளும் எடுக்க வேண்டிய முடிவுகளை மாநில அரசே திணிக்கிறது.

2. நகரங்களை அழகுபடுத்துகிறோம் என்ற போர்வையில் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களை நகரங்களுக்கு வெளியே கொண்டு சென்று வாழத் தகுதியற்ற இடங்களில் குடியமர்த்துவது வாழ்வுரிமையைப் பறிக்கும் செயலாகும்.

3. சென்னை உட்பட எந்த நகரிலும் அடிப்படையான மழைநீர் வெளியேற்றும் வசதி, கழிவுநீர் வெளியேற்றும் வசதி ஆகியவற்றைக்கூடத் திமுக அரசு செய்யவில்லை. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் பெருமளவில் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளன.

## நகர்ப்புற வளர்ச்சியில் பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்

1. தமிழ்நாட்டில் சென்னை மோட்டார் வாகனமில்லாப் போக்குவரத்துக் கொள்கை 2014ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது (Chennai Non-Motorised Transport Policy 2014). ஆனால், அறிவித்தவாறு செயல்படுத்தவில்லை. இந்நிலையில், வளர்ச்சிக்கான போக்குவரத்துக் கொள்கையைச் (TOD - Transit-Oriented Development) செயலாக்கும் வகையில் தமிழ்நாட்டிற்கான Active Mobility சட்டம் கொண்டுவரப்படும்.

2. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மூன்றாவது அலகாக உள்ளாட்சிகள் இருக்கின்றன. நகர அரசாங்கம் என்பது, மாநகரங்கள், நகரங்கள், பேரூராட்சிகளில் மக்களுக்கான சேவைகள் மற்றும் வசதிகளை அளிப்பதற்கும், உள்ளூர்ப் பிரச்சனைகளை நிர்வகிப்பதற்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மக்களின் அன்றாடத் தேவைகளைக் கையாளும் பொறுப்புடைய அரசுகள் இவையாகும். இவ்வளவு முக்கியமானதாகவும் மக்களுக்கு நெருக்கமானதாகவும் இருந்தாலும், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இருக்கும் அதிகாரங்களில் சிறிதளவு கூட உள்ளாட்சிகளுக்கு இல்லை. உள்ளாட்சிகளில் பரந்துபட்ட ஜனநாயகமும் இல்லை. இந்த நிலை மாற்றப்படும். அரசின் சேவைகள் அனைத்தும் மக்களுக்கு மிகவும் நெருக்கமான தொலைவில் சிறிய அரசாங்கங்கள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்கிற துணையமைப்புக் கொள்கை (Principle of Subsidiarity) கோட்பாட்டை முழுமையாகச் செயல்படுப்படும். நகர்ப்புற அரசுகள் அரசு அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்படும். இந்திய அரசியல் சட்டத்தின் 12 ஆவது அட்டவணையில் உள்ள அதிகாரங்கள் முழுமையாக நகர அரசுகளுக்கு அளிக்கப்படும். அவற்றுக்கான நிதி ஆதாரங்களும் அளிக்கப்படும். அதே நேரத்தில், உள்ளாட்சி அரசுகள் ஜனநாயக அடிப்படையில் மக்களுக்குப் பதில்சொல்லும் பொறுப்புடைமை நிலைநாட்டப்படும். முழுமையான மக்கள் பங்கேற்புடனும், பொறுப்புடைமையுடனும், வெளிப்படைத் தன்மையுடனும் நகராட்சிகள் இயங்கும் வகையில் அவற்றுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும்.

3. நகர முழுமைத் திட்டங்கள், மாநகர முழுமைத் திட்டங்கள் (Masterplan) அனைத்தும் மக்கள் பங்கேற்புடனும் அறிவியல்பூர்வமாகவும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையிலும் உருவாக்கப்படும். நகர்ப்புற உள்ளாட்சிப் பிரதிநிதிகள், ஏரியா சபைகள் (Area Sabha), குடியிருப்போர் சங்கங்கள், பொதுநல அமைப்புகள் உள்ளிட்டவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து வெளிப்படைத் தன்மையுடன் உருவாக்கப்படும்.

4. நகரங்களில் விளையாட்டு அரங்கங்களை அமைப்பது, பராமரிப்பது, பயிற்சிகளுக்கு வழிவகுப்பது என அனைத்து வழிகளிலும் நகர அரசுகள் விளையாட்டை ஊக்குவிக்க வழி செய்யப்படும். மேலும், நகரங்களில் நடைபாதைகள், மிதிவண்டிப் பாதைகள் மற்றும் பொதுவெளிகளை அமைப்பதும் விளையாட்டு வளர்ச்சிக்கு வழிவகுக்கும். மாநகராட்சியின் உடற்பயிற்சிக் கூடங்கள், பூங்காக்கள், திறந்தவெளிகளை முறையாகப் பராமரித்து, விளையாட்டுக்கும் உடற்பயிற்சிக்கும் பயன்படுத்த வழி செய்யப்படும்.

5 நகரங்கள் ஒவ்வொன்றும் அந்தந்த நகரங்களில் வசிக்கும் மக்கள் அனைவருக்குமானவை ஆகும். இதனை வலியுறுத்தும் ‘நகரில் வாழும் உரிமை’ (Right to the city) கோட்பாட்டைத் தமிழ்நாடு அரசு அங்கீகரிக்கும். நகருக்குள் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள், நகரத்தை விட்டு வெளியேற்றப்பட மாட்டார்கள்.

6. மக்களின் உடலுழைப்பு வாய்ப்புகள் அதிகரிக்கப்படும் – பொது இடங்கள் மேம்படுத்தப்படும் (Physical Activity and Public Space). பூங்காக்கள் உள்ளிட்ட பொது இடங்களுக்கான கொள்கை (City Public Space Policy) உருவாக்கி செயல்படுத்தப்படும்.
7. பெருநகரங்களில் பேருந்து வசதிகள் இருமடங்காக்கப்படும். நடைபாதைகள் சீரமைக்கப்பட்டுப் பராமரிக்கப்படும். மிதிவண்டியில் பயணம் செய்யும் முறை ஊக்குவிக்கப்படும்.
8. நகரங்களின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள காலியிடங்களில் சிறுசிறு காடுகள் அமைக்கப்படும். இதன் மூலம் மக்களுக்குத் தூய்மையான காற்று உறுதி செய்யப்படும்.
9. நகர்ப்புறங்களில் காற்று மாசுபாட்டைத் தடுத்துத் தூய சுவாசம் உறுதி செய்யப்படும்.
10. பொதுமக்கள் கூடும் பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், சுற்றுலா இடங்கள் மேம்படுத்தப்படும்.
11. இயற்கைப் பேரிடர் சமாளிப்புக்கான முன்னேற்பாட்டுத் திட்டங்கள் செயலாக்கப்படும்.





# அமைதியான, பாதுகாப்பான வாழ்க்கைக்கு வழிவகுப்போம்; காவலர்கள் நலனைக் காப்போம்!

ஒரு மாநிலம் வளர்ச்சியடைய வேண்டுமானால், அதற்கான அடிப்படைத் தேவை சட்டம் – ஒழுங்கு பாதுகாக்கப்படுவதும், அமைதி நிலைநிறுத்தப்படுவதும் தான். காவல்துறை சிறப்பாக நிர்வகிக்கப்படுவதன் வாயிலாகவும், காவல்துறையினரின் கோரிக்கைகளை நிறைவேற்றி, அவர்களை மனநிறைவாக வைத்துக் கொள்வதன் வாயிலாகவும் தான் இதைச் சாதிக்க முடியும். ஆனால், இந்த அனைத்திலும் ஐந்தாண்டுக்காலத் திமுக ஆட்சி படுதோல்வி அடைந்துவிட்டது.

திமுக ஆட்சிக்கு வந்த பின்னர், தமிழ்நாட்டில் சட்டம் – ஒழுங்கு தாறுமாறாகச் சிதைந்திருக்கிறது. ஐந்தாண்டுகளில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படுகொலைகள், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட கள்ளச்சாராயச் சாவுகள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 61% உயர்வு, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 54 விழுக்காடும் அதிகரித்திருக்கின்றன. அதைவிடக் கொடுமை என்னவென்றால், திருநெல்வேலி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஜெயக்குமார் படுகொலை செய்யப்பட்டு 22 மாதங்களாகியும் எந்த முன்னேற்றமும் இல்லை. தஞ்சாவூரில் அரசு மதுக்கடையில் விற்கப்பட்ட மதுவைக் குடித்து இருவர் உயிரிழந்ததற்குக் காரணம், அதில் கலக்கப்பட்டிருந்த சயனைடு விஷம் தான் என்று மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனால், அரசு மதுக்கடையில் விற்கப்பட்ட மதுவில் சயனைடு கலந்தது யார்? என்ற வினாவுக்கு இன்று வரை விடை கண்டுபிடிக்கப்படவில்லை. மேற்கு மாவட்டங்களில் பண்ணைத் தோட்ட வீடுகளில் வசித்த பலர் படுகொலை செய்யப்பட்டு, நகை, பணம் கொள்ளையடிக்கப்பட்ட வழக்கில் உண்மைக் குற்றவாளிகள் இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இப்படியாகக் காவல்துறையின் தோல்விகள் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது.

இன்னொரு பக்கம் காவல்துறையினரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால், அவர்களும் மனக்குறையில்தான் உள்ளனர். வாரத்திற்கு ஒருமுறை விடுமுறை அளிக்கப்பட வேண்டும்; குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒருமுறை பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கோரிக்கைகள் கூட நிறைவேற்றப்படவில்லை. இந்தநிலையை மாற்றி, காவல்துறையினரின் நலன்கள் காக்கப்படுவதும், மக்களுக்கு அமைதியான, பாதுகாப்பான வாழ்க்கை வழங்கப்படுவதும் உறுதி செய்யப்பட வேண்டும்.

### திமுக அரசின் தோல்விகள்

திமுக ஆட்சிக்கு வந்தால் காவல்துறையின் நலன்களைப் பாதுகாப்பதற்காகக் காவலர்களுக்கு உரிய காலத்தில் பதவி உயர்வு அளிக்கப்படும் என்பது உள்ளிட்ட 9 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒரே ஒரு வாக்குறுதி மட்டும் தான் நிறைவேற்றப்பட்டது. மீதமுள்ள 8 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. அவற்றில் முக்கியமானவை.

1. காவலர்களின் குறைகளைக் கேட்டறிந்து சரி செய்ய மாநில மற்றும் மாவட்ட அளவில் குறைதீர்க்கும் அமைப்பு ஏற்படுத்தப்படும். (வாக்குறுதி எண் – 385)
2. காவலர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள துறை ரீதியான தண்டனைகள் ரத்து செய்யப்படுவதுடன், அவர்களுக்கு உரிய காலத்தில் பதவி உயர்வு வழங்க வகை செய்யப்படும். (வாக்குறுதி எண் – 386)
3. காவலர் பணியிடங்கள் ஆண்டுதோறும் நிரப்பப்படும். கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் தாமதமின்றி வழங்கப்படும். (வாக்குறுதி எண் – 387)
4. ஊர்க்காவல் படையினரின் பணி நாட்கள் அதிகரிக்கப்படும். ஊர்க்காவல் படையினரின் எண்ணிக்கை கணிசமாக உயர்த்தப்படும். (வாக்குறுதி எண் – 390)

## சட்டம் – ஒழுங்கைப் பாதுகாப்பதற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றக் காவல்துறைக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்படும்.
2. காவல் துறைச் சுதந்திரத்தை உறுதி செய்ய மாநிலப் பாதுகாப்பு ஆணையம் ஏற்படுத்தப்படும்.
3. தமிழகக் காவல்துறையில் தலைமை இயக்குநர் (டிஜிபி) பணியிடங்களின் எண்ணிக்கை 15ஆக உயர்த்தப்படும்.
4. சென்னை தவிர்த்த தமிழகத்தின் மற்ற பகுதிகள் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு காவல்துறைத் தலைமை இயக்குநர் நியமிக்கப்படுவார்.
5. சென்னை மாநகரக் காவல்துறை ஆணையர் பதவி நிரந்தரமாகத் தலைமை இயக்குநர் நிலைக்கு தரம் உயர்த்தப்படும்.
6. காவல்துறையின் ஒவ்வொரு பிரிவிற்குமான தலைமை அதிகாரிப் பணியிடம் தலைமை இயக்குநர் (டிஜிபி) நிலைக்குத் தரம் உயர்த்தப்படும்.
7. ஒட்டுமொத்தக் காவல்துறைக்குமான தலைமை இயக்குநர் உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி உரிய காலத்தில், உரிய முறையில் தேர்வு செய்து நியமிக்கப்படுவார்.

## காவலர்களுக்குப் பணி நேரம், பதவி உயர்வு

8. காவல்துறைச் சீர்திருத்தங்கள் தொடர்பாக 2024ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட ஐந்தாம் காவல் ஆணையத்தின் பரிந்துரைகளில் சாத்தியமானவை அனைத்தும் செயல்படுத்தப்படும்.
9. காவல்துறையினருக்கு 8 மணி நேரப் பணிவரம்பு நிர்ணயிக்கப்படும்.
10. அரசு ஊழியர்கள் – காவலர்கள் இடையிலான ஊதிய முரண்பாடு களையப்பட்டு, ஒரே கல்வித் தகுதி... ஒரே ஊதியம் என்ற நிலை ஏற்படுத்தப்படும்.
11. காவலர்களின் எண்ணிக்கை தேவையான அளவுக்கு உயர்த்தப்படும்.
12. காவலர்களுக்கு ஏழு ஆண்டுகளுக்கு ஒரு பதவி உயர்வு வழங்கப்படும்.

13. காவலராகப் பணியில் சேருபவர்கள், ஓய்வுபெறும்போது ஆய்வாளர் நிலைக்குப் பதவி உயர்வு பெறுவது உறுதி செய்யப்படும்.

14. அனைத்து மாவட்டங்களிலும் காவலர்கள் நல அமைப்பு ஏற்படுத்தப்படும்.

15. காவல் துறையினருக்கான அனைத்துப் படிகளும் ஆய்வு செய்யப்பட்டு, நிகழ்காலத் தேவைக்கு ஏற்ப உயர்த்தப்படும்.

16. இராணுவத்தினருக்கு வழங்கப்படுவது போன்ற சலுகைகள் காவல்துறைக்கும் வழங்கப்படும்.

### காவல்துறையில் மகளிருக்கு 33% இடஒதுக்கீடு

17. காவல்துறையில் அனைத்து நிலைகளிலும் மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கப்படும்.

18. பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

19. தடுக்கப்படாத சமூகக் குற்றங்கள் பெரிய குற்றங்களுக்கு வழிவகுக்கக்கூடும். எனவே, சட்டத்தால் தடை செய்யப்பட்ட பொது இடங்களில் புகைபிடித்தல், சாலை விதிகளை மீறுதல் உள்ளிட்ட சமூகக் குற்றங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

20. ஊர்க்காவல் படையினருக்கு ஒரு மாதத்தில் குறைந்தது 25 நாட்கள் பணி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கு மாதம் ரூ.25,000 தொகுப்பூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

21. ஊர்க்காவல் படையில் பணியாற்றி வரும் இளைஞர்களுக்குக் காவலர் ஆவதற்கான தகுதியும் திறமையும் இருந்தால், அவர்கள் காவல்துறையில் பணி மூப்புடன் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

### காவல்நிலையச் சீர்திருத்தங்கள்

22. காவல் நிலையங்களில் விசாரணைக் கைதிகள் உயிரிழப்பதைத் தடுக்கப் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். காவல் நிலையத்தில் அனைத்து அறைகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, அதில் பதிவாகும் காட்சிகள் ஓராண்டுக்குப் பாதுகாக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

23. விசாரணைக் கைதிகள் காவல்நிலையத்திற்கு அழைத்து வரப்படுவதும், காவல் நிலையத்தில் இருந்து வெளியில் கொண்டு செல்லப்படுவதும் காணொலியாகப் பதிவு செய்யப்படும். இரு நேரங்களிலும் கைதிகளுக்கு மருத்துவ ஆய்வும் செய்யப்படும்.

24. சட்டம் – ஒழுங்கைப் பாதுகாப்பதில் காவல்துறைக்கு உதவுவதற்காக ஒவ்வொரு ஊரிலும் இளைஞர்களைக் கொண்ட தனிப்படை அமைக்கப்படும்.

25. சிறைகள் தண்டனைக்கூடங்களாக இல்லாமல், குற்றம் செய்பவர்களைத் திருத்தும் இடமாகத் திகழும் வகையில், சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

26. சிறைகளில் மனித உரிமை மீறல் உள்ளிட்ட குற்றங்கள் நடப்பதற்கு வழியே இல்லாத வகையில் சிறைக் கையேடு திருத்தி அமைக்கப்படும்.





# சென்னையில் உச்சநீதிமன்றக் கிளை: அனைத்து மாவட்டங்களிலும் குறைந்தது ஒரு போக்சோ, மகளிர் நீதிமன்றங்கள்!

ஒரு மாநிலத்தில் நல்லாட்சி நடைபெறுவதைத் தீர்மானிக்கக் கூடிய கூறுகளில் முதன்மையானது அந்த மாநிலத்தின் மக்களுக்கு எந்த அளவுக்கு விரைவாகவும், எந்த அளவுக்குச் சரியாகவும் நீதி கிடைக்கிறது என்பதுதான். இதிலும்கூட திமுக அரசு தோல்வியடைந்துவிட்டது. தமிழ்நாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய காலத்தில் நீதி கிடைப்பதற்கான கட்டமைப்புகளை திமுக அரசு ஏற்படுத்தவில்லை என்பதுதான் இதற்கான காரணம் ஆகும்.

தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் திமுக ஆட்சியில் 61% உயர்ந்திருப்பது ஒருபுறம் இருக்க, பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நீதி வழங்கப்படவில்லை. தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட போக்சோ வழக்குகளில் 60% வழக்குகள் இன்றுவரை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் நிலுவையில் உள்ளன. இந்தநிலையை மாற்றிச் சாமானியனுக்கும் சம நீதி கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும்.

### திமுக அரசின் தோல்விகள்

போக்சோ வழக்குகளை விசாரிப்பதற்காக அனைத்து மாவட்டங்களிலும் குறைந்தது ஒரு போக்சோ சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ள போதிலும், தமிழ்நாட்டில் அது செயல்படுத்தப்படவில்லை.

தமிழ்நாட்டில் 53 போக்சோ சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டிய நிலையில், அதில் பாதிக்கும் குறைவாக 20 நீதிமன்றங்கள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றங்களில் போதிய கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை.

### அனைவருக்கும் நீதி வழங்குவதற்கான பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்

1. உச்சநீதிமன்றத்தின் கிளையை சென்னையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
2. உயர்நீதிமன்றத்தில் தமிழை ஆட்சி மொழியாக்க மத்திய அரசிடம் முதலமைச்சர் தலைமையிலான குழு தில்லி சென்று வலியுறுத்தும்.

### கூடுதல் போக்சோ, மகளிர் நீதிமன்றங்கள்

3. குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விரைந்து விசாரித்து முடிக்க அனைத்து மாவட்டங்களிலும் குறைந்தது ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகம் பதிவாகும் மாவட்டங்களில் தேவைக்கு ஏற்பச் சிறப்பு நீதிமன்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

4. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்கை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும். பெண்களுக்கு எதிரான குற்றங்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் ஆகியவை தொடர்பான வழக்குகளை ஒரே நீதிமன்றம் விசாரிக்கும் நிலை மாற்றப்படும்.

5. குற்றவியல் வழக்குகள் மற்றும் சிவில் வழக்குகளை விரைவாக விசாரித்து முடிக்க வசதியாகக் கீழமை நீதிமன்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்; அதற்கேற்ற வகையில் கூடுதலாக நீதிபதிப் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

6. ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தேங்கிக் கிடக்கும் வழக்குகள் அனைத்தையும் அடுத்த ஓராண்டுக்குள் விசாரித்து முடித்துத் தீர்ப்பளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7. நீதிமன்றங்கள், காவல்துறை, சிறைத்துறைச் செயல்பாடுகளை ஒருங்கிணைத்துக் கண்காணிக்க மின்னணுத் தகவல் கட்டமைப்பு ஏற்படுத்தப்படும்.

8. அனைத்துக் காவல் நிலையங்களிலும் மக்களுக்குச் சட்ட உதவி வழங்குவதற்கு வசதியாக ஒரு வழக்கறிஞர் நியமிக்கப்படுவார்.

■

# உலகமெங்கும் தமிழ் மொழியைப் பரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்!

உலகின் மூத்த மொழி தமிழ்மொழி என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. ஆனால், அன்னைத் தமிழ் மொழியின் பிறப்பிடமான தமிழ்நாட்டிலேயே தமிழ் மொழிக்கு உரிய மரியாதையும் அங்கீகாரமும் அளிக்கப்படவில்லை. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பது தமிழ்நாட்டு அரசின் முழக்கமாக இருந்தாலும்கூடத் தமிழ்நாட்டில் எங்குமே தமிழைக் காண முடியவில்லை என்பதுதான் வேதனையளிக்கும் உண்மை.

தமிழ் மொழியின் வளர்ச்சி என்பது பள்ளிகளில் தான் தொடங்குகிறது. மழலை வகுப்புகளில் பயிலத் தொடங்கும் குழந்தைகளுக்குத் தமிழ் மொழி கற்பிக்கப்பட்டால் தான் தமிழ் வளர்ச்சியடையும். ஆனால் தமிழ்நாட்டில் தமிழை ஒரு பாடமாகக் கூடப் படிக்காமல் பட்டம் பெற முடியும் என்ற அவலநிலைதான் நிலவுகிறது. தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் அண்மையில் நடத்தப்பட்ட முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணிக்கான போட்டித் தேர்வில் பங்கேற்ற 2.36 இலட்சம் பேரில், 85,000 பேர், அதாவது மூன்றில் ஒரு பங்குக்கும் கூடுதலானவர்கள் தமிழில் தோல்வியடைந்தனர். தமிழ்நாட்டில் தமிழ் மொழி வளர்ச்சி எந்த அளவில் உள்ளது என்பதற்கு இதுதான் வேதனையான சான்று ஆகும்.

இந்தநிலை மாற்றப்பட வேண்டும், மாணவர்களின் கல்விச் சான்றிதழ்களில் தொடங்கிக் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் வரை எங்கும் தமிழ் தழைக்க வேண்டும் என்பதே பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு.

### திமுக அரசின் தோல்விகள்

தமிழால் ஆட்சிக்கு வந்த திமுக, அன்னைத் தமிழை வளர்க்க எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. 2021ஆம் ஆண்டுக்கான சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் தமிழ் மொழி வளர்ச்சி தொடர்பாக 8 வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 7 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. அவற்றில் முக்கியமானவை:

1. உலகில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் இருக்கைகளை ஏற்படுத்த படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். (வாக்குறுதி எண் – 8)
2. தூய தமிழ் எழுத்து வரி வடிவத்தை மட்டுமே அனைவரும் பயன்படுத்துவதைக் கட்டாயமாக்க சட்டம் இயற்றப்படும்; அனைத்து அரசு அலுவலகங்களிலும் தமிழ் அலுவல் மொழிப் பிரிவு ஏற்படுத்தப்படும். (வாக்குறுதி எண் – 11)

3. அனைத்து அரசு அலுவலகங்களிலும் தமிழ் மொழியின் பயன்பாட்டை உறுதி செய்வதற்காகத் தமிழ் அலுவல் மொழி வளர்ச்சிப் பிரிவு ஏற்படுத்தப்படும். (வாக்குறுதி எண் – 12)

## தமிழ்மொழி வளர்ச்சிக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டம்

1. தமிழ்நாட்டில் மாநிலப் பாடத்திட்டம், மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் (சிபிஎஸ்இ) பாடத் திட்டம் உள்ளிட்ட அனைத்துப் பாடத் திட்டங்களையும் பின்பற்றும் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாயப் பாடமாக்கப்படும். இதற்குத் தடையாக உள்ள உச்சநீதிமன்ற வழக்கை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
2. தமிழ்நாட்டில் முனைவர் பட்டப் படிப்பு வரை தமிழ் வழியில் கற்பிக்கப்பட வேண்டும் என்பதும், பட்டப் படிப்பு வரை தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும் என்பதும் பாட்டாளி மக்கள் கட்சியின் இலட்சியங்கள். அதை நோக்கிய பயணத்தில் முதல் கட்டமாக 8ஆம் வகுப்பு வரை தமிழைக் கட்டாயப் பயிற்றுமொழியாக்கிச் சட்டம் இயற்றப்படும்.
3. மருத்துவம், பொறியியல் படிப்புகள் தமிழ் வழியில் கற்பிக்கப்படும். அதற்கான பாடநூல்கள் தமிழில் மொழி பெயர்த்து வழங்கப்படும்.
4. அனைத்து வகையான துணை மருத்துவப் படிப்புகளும், தமிழ் மொழியில் மட்டுமே கற்பிக்கப்படும்.
5. சென்னையில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தைத் தரம் உயர்த்தித் தமிழ் மத்தியப் பல்கலைக் கழகமாக மாற்றும்படி மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்தும்.

## உலகம் முழுவதும் தமிழ்

6. தமிழ் மொழியை உலகம் முழுவதும் பரப்புவதற்காகத் தமிழ்ப் பரப்புரைக் கழகம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்படும். வெளிநாடுகளில் தமிழ்ப் பரப்புரைக் கழகத்தின் கிளைகள் அமைக்கப்பட்டு, அதன் மூலம் அந்தந்த நாடுகளில் உள்ள தமிழ்ப் பட்டதாரிகளைக் கொண்டும், தேவைப்படும் நாடுகளுக்குத் தமிழ்நாட்டில் இருந்து தமிழ்ப் பட்டதாரிகளை அனுப்பியும் அங்குள்ளவர்களுக்குத் தமிழ் கற்பிக்கப்படும்.
7. தமிழ்ப் பரப்புரைக் கழகம் வாயிலாகத் தமிழ் பயிலும் அனைவருக்கும் தேர்வுகள் நடத்தப்பட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

## தமிழில் பெயர் வைத்தால் ரூ.5000

8. குழந்தைகளுக்கு தனித்தமிழில் பெயர் சூட்டும் பெற்றோருக்கு ரூ.5 ஆயிரம் வெகுமதி வழங்கப்படும்.
9. நடுவண் அரசின் விளம்பரங்களை அந்தந்த மாநிலங்களின் மொழியில் வெளியிடுவதற்கு அழுத்தம் கொடுக்கப்படும்.

10. எட்டாவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளையும், ஆட்சி மொழிகளாக அறிவிக்கப் பிற மாநில முதலமைச்சர்களுடன் இணைந்து நடுவண் அரசிடம் வலியுறுத்தப்படும்.

11. தமிழ் மொழி சார்ந்த ஆராய்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

### புத்தம் புது மொழிகள் கற்போம்

12. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நடுவண் அரசு அலுவலகங்களும் தமிழ்நாட்டுக்கு உள்ளேயான தகவல் பரிமாற்றங்களைத் தமிழில் செய்ய அழுத்தம் தரப்படும்.

13. தமிழ்நாட்டு மாணவர்கள் பிற மொழிகள் கற்க விரும்பினால் அதற்கான ஏற்பாடுகளை அரசே செய்து கொடுக்கும்.

14. அதே போல உயர்கல்வி மாணவர்கள் வெளிநாட்டு மொழிகளை விருப்பத்தின் அடிப்படையில் கற்பதற்கான உதவிகள் செய்யப்படும்.






# தண்ணீர் தேங்காத் தெருக்கள், பசுமை செழிக்கும் சாலைகள், சென்னையில் அழகு மிளிரச் செய்வோம்!

சென்னை மாநகரம் தோற்றுவிக்கப்பட்டு 387 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. இந்த 387 ஆண்டுகளில் சென்னை மாநகரம் மிக மோசமான சீரழிவுகளைச் சந்தித்தது திமுக ஆட்சி நடைபெற்ற கடந்த 5 ஆண்டுகளில் தான். இந்த 5 ஆண்டுகளில் தான் மிகக் குறைந்த மழைக்கே சென்னை மாநகரம் வெள்ளக் காடாக மாறியது. 2021, 2023 ஆகிய ஆண்டுகளில் சென்னை மாநகரம் பெரு வெள்ளங்களைச் சந்தித்து, பேரிழப்புகளை அனுபவித்தது. அதற்கு அடுத்து வந்த ஆண்டுகளில் சென்னையில் மழையே பெய்யக் கூடாது என்று சென்னை மாநகர மக்கள் வழிபாடு நடத்தும் நிலை இருந்தது என்றால், வெள்ளப் பாதிப்புகள் சென்னை மாநகர மக்களை எந்த அளவுக்குப் பாதித்திருக்கக் கூடும் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாத திமுக அரசு, அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.4,000 கோடியில் பெரும் பகுதியை ஊழல் செய்தது. மழைநீர் வடிகால்கள் அமைப்பதாகக் கூறி, 4 ஆண்டுகள் சென்னையின் தெருக்களையும், சாலைகளையும் பள்ளமாக்கி உயிரிழப்புகளை ஏற்படுத்தியதுதான் திமுக அரசின் சாதனையாகும். இன்றுவரை சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள் முழுமையாக நிறைவடையவில்லை. எப்போது மழை பெய்தாலும் சென்னை மாநகரம் வெள்ளக்காடாக மாறும் அவலம் தான் இப்போது வரை நீடித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றிச் சென்னையை தண்ணீர் தேங்கா நகரமாக மாற்றுவதே மிகப் பெரிய சாதனையாக இருக்கும்.

**திமுக அரசின் தோல்விகள்**

1. சென்னையில் மழைநீர் தேங்குவதைத் தடுக்கப் பேரிடர் மேலாண்மைக்குழு வல்லுநர் திருப்புகழ் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளில் மழைநீர் வடிகால்கள் அமைப்பது மட்டுமே அரைகுறையாகச் செயல்படுத்தப்பட்டது. மீதமுள்ள பரிந்துரைகள் செயல்படுத்தப்படவில்லை; திருப்புகழ் குழு அறிக்கையும் வெளியிடப்படவில்லை.
2. மெட்ரோ தொடர்வண்டித் திட்டப் பணிகளுக்காகச் சென்னையின் முக்கியப் பூங்காக்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. அவற்றுக்குப் பதிலாகப் புதிய பூங்காக்கள் அமைக்கப்படவில்லை.
3. மழைநீர் வடிகால் பணிகள், மெட்ரோ தொடர் வண்டிப் பணிகள் எனத் திமுக ஆட்சியின் ஐந்தாண்டுக் காலத்திலும் சென்னை மாநகரச் சாலைகளில் இருசக்கர ஊர்திகள், மகிழுந்துகளில் பயணிக்கவே முடியாத நிலை ஏற்பட்டது.





## சென்னைப் பெருநகர மேம்பாட்டுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்

1. மாநகரில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 60 பேருந்துகள் என்கிற விகிதத்தில் சென்னை MTC பேருந்துகள் எண்ணிக்கை 8000ஆக அதிகமாக்கப்படும். புதிய பேருந்துகள் அனைத்தும் மின்சாரப் பேருந்துகளாக இயக்கப்படும்.
2. அனைத்து MTC பேருந்துகளும் அனைவருக்கும் இலவசம் ஆக்கப்படும். பேருந்து நிலையங்கள் நவீனமாகவும் பாதுகாப்பானதாகவும் மேம்படுத்தப்படும்.
3. சென்னைப் போக்குவரத்துக்கான அரசின் நிதி ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 60% அளவுக்கு மேல் பொதுப்போக்குவரத்து, நடைபயணம், மிதிவண்டி, மாசில்லாப் பயண வகைகளுக்காகச் செலவிடப்படும்.
4. சென்னையின் அனைத்துச் சாலைகளிலும் முழுமையான நடைபாதைகள் அமைக்கப்படும். அனைத்துப் பிரிவு மக்கள் உடல்நலத்தை மேம்படுத்துவதாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்தவையாகவும் தெருக்களை மாற்றும் ‘முழுமைத் தெருக்கள் திட்டம்’ (Complete Streets Plan) சென்னை மாநகர் முழுமைக்கும் விரிவாக்கப்படும்.
5. சென்னைப் பெருநகரம் முழுமைக்கும் வளர்ச்சிக்கான போக்குவரத்துக் கொள்கை (TOD - Transit-Oriented Development) செயலாக்கப்படும்.
6. சென்னைப் பெருநகருக்கான மிதிவண்டி முழுமைத் திட்டம் (Chennai Bicycle Masterplan) வகுத்துச் செயலாக்கப்படும்.
7. பொது இடங்களில் அரசாங்கமே அடுக்குமாடி வாகன நிறுத்தங்கள் (Multi-level car parking) கட்டும் திட்டங்கள் அனைத்தும் கைவிடப்படும். சென்னைப் பெருநகரில் வாகன நிறுத்தங்களை முறைப்படுத்துவதற்கன அறிவியல் பூர்வமான வாகன நிறுத்தங்கள் கொள்கை (Parking Policy) செயல்படுத்தப்படும்.
8. சென்னைப் பெருநகரின் மெட்ரோ ரயில், மின்சார ரயில், பறக்கும்ரயில், பேருந்து நிலையங்கள், நடைபாதைகள், மிதிவண்டி வசதிகள் இணைந்த ஒருங்கிணைப்பு உருவாக்கப்படும். பேருந்து, மெட்ரோ, ரயில் நிலையங்களுடனான கடைசித் தூர இணைப்பு (last mile connectivity) முழுஅளவில் ஏற்படுத்தப்படும்.
9. மின்சார வாகனப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் விதமாகச் சென்னைப் பெருநகரில் அதிவேக மின்னேற்றக் கட்டமைப்புகளை (Superfast Electric Vehicle Charging Stations) உடனடியாக பரந்துபட்ட அளவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
10. பள்ளிகளின் சுற்றுப்புறம், பள்ளிக்குச் செல்லும் பாதைகள், பள்ளி வாகனங்கள் என அனைத்தையும் பாதுகாப்பானதாக்கும் Safe Routes to Schools திட்டம் அனைத்துப் பள்ளிகள் பகுதியிலும் செயல்படுத்தப்படும்.





**பள்ளம் இல்லாத, மழைநீர் தேங்காத தெருக்கள் – சாலைகள்**

11. சென்னை மாநகரச் சாலைகளும், தெருக்களும் பள்ளங்கள் இல்லாதவையாக மாற்றப்படும். எந்த அமைப்பும் முன்அனுமதி இல்லாமல் விருப்பம்போல் பள்ளம் தோண்டத் தடை விதிக்கப்படும்.

12. சென்னைப் பெருநகரில் ஐந்தாண்டுக் காலமாவது நீடிக்கும் வகையில் தரமாக சாலைகள்அமைக்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள், சென்னைப் பெருநகரின் அனைத்துச் சாலைகளும் மழைநீரை உறியும் sponge city நுட்பத்துடன் கூடிய கான்கிரீட் சாலைகளாக மாற்றப்படும். மேலும், வெப்பத்தைக் குறைக்கும், சூரிய ஒளியை எதிரொலிக்கும் சாலைகளாகவும் அமைக்கப்படும்.

13. சென்னைப் பெருநகரில் சாலை விபத்துகளைத் தடுக்கும் நோக்கில் CHENNAI VISION ZERO Road Safety Plan என்கிற திட்டம் செயல்படுத்தப்படும். போக்குவரத்து சமிக்ஞைகளை, நவீன ஸ்மார்ட் சிக்னல் எனப்படும் intelligent traffic control system முறைக்கு மாற்றப்படும்.

14. கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையம் Regional Mobility Hub ஆக மாற்றப்படும். சென்னை மாநகரின் 16 பேருந்துப் பணிமனைகளையும் வணிக வளாகங்களாக மாற்றும் முயற்சிக்குப் பதிலாக, அவை மாநகர அளவிலான Mobility Hub ஆக மாற்றப்படும். அவற்றுடன் கிளாம்பாக்கம் புறநகர்ப் பேருந்து நிலையத்திற்குத் தொடர்ச்சியான பேருந்து இணைப்பு ஏற்படுத்தப்படும்.

15. தேசியத் தூய காற்றுத் திட்டத்தின் (NCAP) கீழ் சென்னை ஐஐடி நிறுவனம் மூலம் சென்னை மாநகராட்சி நடத்திய சென்னையின் மாசுகள் எங்கிருந்து எந்த அளவுக்கு வருகின்றன என்பதைக் கணக்கிடுவதற்கான Source Apportionment and Carrying Capacity Assessment ஆய்வின் அறிக்கை உடனடியாக வெளியிடப்பட்டுப் பரிந்துரைகள் நிறைவேற்றப்படும்.

16. உலகச் சுகாதார நிறுவனம் வகுத்துள்ள காற்றுத்தர இலக்குகளை அடையும் நோக்கில், இந்திய அரசின் தூய காற்றுச் செயல்திட்டம் (National Clean Air Program - NCAP) சென்னைப் பெருநகரில் முழு அளவில் செயல்படுத்தப்படும்.

17. சென்னைப் பெருநகரின் காற்று மாசுப்பாட்டை உடனுக்குடன் கண்காணிக்கும் கருவிகளின் (continuous ambient air quality monitoring systems) எண்ணிக்கையை 40ஆக அதிகரிக்கப்படும். வடசென்னை கொடுங்கையூர், தென்சென்னை பெருங்குடி, தாம்பரம் வேங்கடமங்கலம் பகுதிகளில் திட்டமிடப்பட்டுள்ள மிக மிக ஆபத்தான குப்பை எரி உலை (Incinerator) திட்டங்கள் அனைத்தும் முற்றிலுமாகக் கைவிடப்படும்.

18. நகர்ப்புறச் சாலைகள் புழுதியற்றதாக மாற்றப்படும் (Dust-Free Roads). இந்திய அரசின் கட்டுமானம் மற்றும் கட்டிடக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 (Construction & Demolition Waste Management Rules 2016) என்ற விதி முழுமையாகச் செயல்படுத்தப்படும்.

19. அனல்மின் நிலையங்கள் மற்றும் வடசென்னை தொழிற்சாலைகள் காற்று மாசுபாடு முற்றிலுமாக தடுக்கப்படும்.

20. சென்னைப் பெருநகரில் அடர்த்தியாக மக்கள் வசிக்கும் பகுதிகள் குறைந்த மாசுப் பகுதிகளாக (Low Emission Zone) மாற்றப்படும்.

21. சென்னைப் பெருநகரில் பூஜ்யக் குப்பைக் (Zero Waste) கோட்பாடு செயலாக்கப்படும். உற்பத்தியாளரே பொறுப்பேற்கும் கொள்கை (EPR - Extended Producer Responsibility) செயலாக்கப்படும்.

22. ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடை முழுமையாகச் செயல்படுத்தப்படும்.

## பொது இடங்கள் – பசுமை

23. மக்களின் உடலுழைப்பு வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும் – பொது இடங்களை மேம்படுத்த வேண்டும் (Physical Activity and Public Space). இதற்கான சென்னைப் பொதுவெளிகள் முழுமைத் திட்டம் (Chennai Public Spaces Master Plan) செயல்படுத்தப்படும். கோயம்பேடு பேருந்து நிலைய இடம் ஒரு பசுமைப் பூங்காவாக மாற்றப்படும்.

24. சென்னைப் பெருநகரின் பசுமை மேம்பாட்டுக்காக ‘மரங்கள் ஆணையம் (Trees Authority) உருவாக்கப்படும். இதற்கான சட்டம் கொண்டுவரப்படும்.

25. சென்னை மாநகரின் முதன்மைச் சாலைகளில் மரங்கள் வளர்க்கப்பட்டுப் பசுமைப் போர்வை ஏற்படுத்தப்படும்.

26. சென்னைப் பெருநகரில் இந்திய உயிரிப்பன்மயச் சட்டம் 2002 (Biological Diversity Act, 2002) சட்டத்தின் படி முறையாக உயிரிப்பன்மய மேலாண்மைக் குழுக்கள் (Biodiversity Management Committees - BMC) அமைக்கப்படும். சென்னைப் பெருநகர உயிரிப்பன்மயச் செயல்திட்டம் (Urban Biodiversity Action Plan) செயல்படுத்தப்படும்.

27. வெப்ப அலையை சமாளித்தல், காற்று மாசுபாட்டைக் குறைத்தல், உயிரிப்பன்மயத்தை அதிகரித்தல், போக்குவரத்தை எளிதாக்குதல், மக்களின் உடலுழைப்பு வாய்ப்பை அதிகமாக்குதல், நலவாழ்வை மேம்படுத்துதல் உள்ளிட்ட ஏராளமான பலன்களை அளிக்கும் பசுமைப்பாதைகள் (green corridors) மற்றும் பசுமைப் போக்குவரத்துப் பாதைகள் (green mobility corridors) திட்டங்கள் சாத்தியமான சாலைகளில் செயல்படுத்தப்படும்.

28. சென்னைப் பெருநகரில் விளையாட்டு அரங்கங்களை அமைப்பது, பராமரிப்பது, பயிற்சிகளுக்கு வழிவகுப்பது என அனைத்து வழிகளிலும் விளையாட்டுகள் ஊக்குவிக்கப்படும். மாநகராட்சியின் உடற்பயிற்சிக் கூடங்கள், பூங்காக்கள், திறந்தவெளிகளை முறையாகப் பராமரித்து, விளையாட்டுக்கும் உடற்பயிற்சிக்கும் பயன்படுத்தப்படும்.

29. நகர்ப்புறச் சுகாதார மையங்களும் மருத்துவ சேவைகளும் அதிகமாக்கப்படும். அனைத்து விதமான பொதுச்சுகாதாரப் பணிகளும் முழுமையாக நிறைவேற்றப்படும். கொசு ஒழிப்பு, நாய் மற்றும் கால்நடைக் கட்டுப்பாடு உள்ளிட்ட நடவடிக்கைகளை முழுமையாக செயல்படுத்தப்படும்.

30. நகரங்கள் ஒவ்வொன்றும் அந்த நகரங்களில் வசிக்கும் மக்கள் அனைவருக்குமானவை ஆகும். இதனை வலியுறுத்தும் ‘நகரில் வாழும் உரிமை’ (Right to the city) கோட்பாடு அங்கீகரிக்கப்படும்.

சென்னை நகருக்குள் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள், சென்னையைவிட்டு வெளியேற்றப்படமாட்டார்கள்.

## வெள்ளம் – பேரிடர் தகவமைப்பு

31. 2021 சென்னைப் பெருநகர வெள்ளப் பேரிடர் தடுப்பு மற்றும் மேலாண்மைக்கான ஆலோசனைக் குழு (திருப்புகழ் குழு) அறிக்கை 2023 மார்ச் மாதம் முதலமைச்சரிடம் தாக்கல் செய்யப்பட்டது. திமுக அரசு ஒளித்து வைத்துள்ள இந்த அறிக்கை வெளியிடப்படும். சென்னை வெள்ளத்தடுப்புக்கான செயல்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும்.

32. சென்னைப் பெருநகருக்கான தகவமைப்பு மற்றும் பேரிடர் சமாளிப்புத் திட்டங்கள் முழுமையான மக்கள் பங்கேற்புடன் செயலாக்கப்படும்.

33. கோடைக் காலத்தில் பெரும் வெப்பப் பேரிடர்களை எதிர்கொள்வதற்காகச் சென்னைப் பெருநகர வெப்பத்தடுப்புச் செயல்திட்டம் (Chennai Heat Action Plan) செயல்படுத்தப்படும்.

## நீர்வளம்

34. சென்னைப் பெருநகரில் மழை நீரை முழுமையாகச் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் (Rain Water Harvesting). மழைநீர் –வெள்ளநீர் வடிகால் வசதிகள் முழுமையாக அமைக்கப்படும். பஞ்சு நகரம் முறை செயல்படுத்தப்படும். (Sponge City Initiative). நீர்நிலைகள் – சதுப்பு நிலங்களை வரையறை செய்து பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்படும் (Protect Water Resources and Wetlands).

35. பள்ளிக்கரணைச் சதுப்புநிலம் உள்ளிட்ட சென்னைப் பெருநகர அளவில் உள்ள அனைத்து சதுப்புநிலங்களும் 2017 சதுப்புநில விதிகளின் கீழ் சதுப்புநிலமாகச் சட்டப்படி அறிவிக்கை (Notification) செய்யப்பட்டு முழுமையாகப் பாதுகாக்கப்படும்.

36. சென்னை மாநகரை ராம்சார் சதுப்புநில மாநகரங்கள் பட்டியலில் (Wetland City Accreditation of the Ramsar Convention) இணைப்பதற்காகத் தமிழ்நாடு அரசு பரிந்துரைக்கும்.

37. சென்னைப் பெருநகருக்கான 3ஆவது முழுமைத் திட்டம் 2027 – 2046 என்பது முழுமையான மக்கள் பங்கேற்புடன் ஜனநாயக முறையில் உருவாக்கப்படும். குறிப்பாக, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 74ஆம் திருத்தத்தின் 243ZE பிரிவின் கீழ், பெருநகரத் திட்டக்குழு (Metropolitan Planning Committee - MPC) எனும் அமைப்பின் மூலம் சென்னைப் பெருநகருக்கான புதிய முழுமைத் திட்டம் (Third Master Plan for Chennai Metropolitan Area 2027-2046) உருவாக்கப்படும்.





# செஞ்சிக் கோட்டை சுற்றுலாத்தலம் ஆக்கப்படும்: கிழக்குக் கடற்கரைச் சாலை சுற்றுலாச் சாலையாக்கப்படும்!

மேற்குத் தொடர்ச்சி மலைகள், கிழக்குத் தொடர்ச்சி மலைகள், இந்தியாவிலேயே அதிகத் தொலைவு கடலோரத்தைக் கொண்ட இரண்டாவது மாநிலம், வரலாற்றுச் சிறப்புமிக்க நகரங்கள், தொல்லியல் சிறப்புமிக்க இடங்கள் எனச் சுற்றுலா வளர்ச்சிக்கான அனைத்து அம்சங்களும் தமிழ்நாட்டில் இயற்கையாகவே அமைந்துள்ளன. அதனால் இயற்கையாகவே அதிக எண்ணிக்கையில் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கும் மாநிலமாகத் தமிழ்நாடு உருவெடுத்திருக்கிறது. ஆனாலும், தமிழ்நாட்டின் திறனுக்கேற்ற வளர்ச்சி சுற்றுலாத் துறையில் இன்னும் கிடைக்கவில்லை.

திமுக ஆட்சியில் சுற்றுலா வளர்ச்சிக்காக எந்தவிதமான சிறப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை. திமுக ஆட்சியில் ஊழல் செய்வதற்காக ஏராளமான நெடுஞ்சாலைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டனவே தவிரச் சுற்றுலா வளர்ச்சிக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. சுற்றுலா வளர்ச்சிக்காகத் தமிழ்நாட்டில் உள்ள வளங்களைப் பயன்படுத்திக் கொண்டு, சுற்றுலாத் துறையை மேலும் மேம்படுத்த வேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டமாகும்.

### திமுக அரசின் தோல்விகள்


சுற்றுலாத் துறை வளர்ச்சி என்பது தமிழ்நாட்டில் வெளிநாட்டவரையும், வெளி மாநிலத்தவரையும் கவரும் வகையில், என்னென்ன அம்சங்கள் உள்ளன என்பதைக் காட்சிப்படுத்துவதில் தான் உள்ளது. தமிழ்நாட்டில் பல்வேறு வகையான சுற்றுலாத் திட்டங்கள் உள்ளன என்பதைப் பரப்புரை செய்வதில் திமுக அரசு தோல்வியடைந்துவிட்டது.

தமிழ்நாட்டில் சுற்றுலாத் தலங்களில் பணக்காரர்களும், நடுத்தர வகுப்பினரும் தங்குவதற்கான தங்குமிட வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றனவே தவிர, ஏழை மக்களுக்கான வசதிகள் செய்யப்படவில்லை. அதைச் செய்துதருவதில் திமுக அரசு தோல்வியடைந்துவிட்டது.

கிழக்குக் கடற்கரைச் சாலையைச் சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள் போன்ற சுற்றுலா வழித்தடமாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் இருந்தும் அதைச் செய்வதில் அரசு தோல்வியடைந்துவிட்டது. மாறாகக் கிழக்குக் கடற்கரைச் சாலையை மதுபோதைக் கொண்டாட்டங்களுக்கான சாலையாக மாற்றியுள்ளது.

### சுற்றுலா வளர்ச்சிக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் திட்டங்கள்

1. யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள செஞ்சிக் கோட்டை சுற்றுலாத்தலமாக மாற்றப்படும். அப்பகுதியில் தங்கும் இடம் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்படும்.





2. தமிழ்நாட்டில் தொல்லியல் ஆய்வு மேற்கொள்ளப்படும் கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை (தூத்துக்குடி), கொடுமணல் (ஈரோடு), வெம்பக்கோட்டை, துலுக்கர்பட்டி, கங்கைகொண்ட சோழபுரம், மாளிகைமேடு, கொற்கை (தூத்துக்குடி) ஆகிய பகுதிகள் ஒருங்கிணைக்கப்பட்டுத் தொல்லியல் சுற்றுலாத் திட்டம் உருவாக்கிச் செயல்படுத்தப்படும்.

3. கொடைக்கானல், நீலகிரி, ஏற்காடு, ஏலகிரி, கொல்லிமலை ஆகிய மலைப்பகுதிகள் ஒருங்கிணைக்கப்பட்டு, மலை சார்ந்த சுற்றுலாத் திட்டம் செயல்படுத்தப்படும்.

4. கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள பொழுதுபோக்கு மையங்கள், ஏரிகள், கழிமுகப் பகுதிகள் போன்றவை ஒருங்கிணைக்கப்பட்டு, கிழக்குக் கடற்கரைச் சாலை சுற்றுலா வழித்தடமாக மாற்றப்படும்.

5. சென்னை பழவேற்காடு ஏரி, பிச்சாவரம், முத்துப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அலையாற்றிக் காடுகளையும், அதையொட்டிய கடல் மற்றும் நிலப் பகுதிகளையும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்க வசதியாகப் புதிய சுற்றுலாத் திட்டம் உருவாக்கிச் செயல்படுத்தப்படும்.

6. கன்னியாகுமரி மாவட்டம் பசுமைச் சுற்றுலா மாவட்டமாக அறிவிக்கப்படும். அம்மாவட்டத்தில் பசுமைப் பகுதிகள் சுற்றுலாத் தலங்களாக மேம்படுத்தப்படும்.

7. தமிழ்நாட்டின் பல்வேறு கலாச்சாரங்களை வெளிநாட்டவரும், வெளி மாநிலத்தவரும் அறிந்து கொள்ள வசதியாகக் கலாச்சாரச் சுற்றுலா அறிமுகப்படுத்தப்படும்.

8. மூலிகைப் பகுதிச் சுற்றுலா, அருவிச் சுற்றுலா, கதை சொல்லி சுற்றுலா எனப் பல கருத்துக்களின் அடிப்படையிலான சுற்றுலாக்கள் தொடங்கப்படும்.

9. ஆன்மிகச் சுற்றுலா தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

### சுற்றுலாத் தூதர் நியமனம்

10. தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்களையும், சிறப்புகளையும் பிற மாநிலங்களிலும், பிற நாடுகளிலும் பிரபலப்படுத்த வசதியாகச் சுற்றுலாத் தூதர் நியமிக்கப்படுவார்.

11. சுற்றுலாத் துறை வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்துவதற்காகவும், தன்னிச்சையாக முடிவு எடுப்பதற்காகவும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவராகத் தலைமைச் செயலாளர் நிலையிலான இஆப அதிகாரி நியமிக்கப்படுவார்.

12. அனைத்துச் சுற்றுலாத் தலங்களிலும் கழிப்பறைகள், வாகனங்கள் நிறுத்துமிடம், குடிநீர் வசதி போன்றவை செய்து தரப்படும்.

13. அருவி சார்ந்த சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

14. சுற்றுலாத் தலங்களின் அருகில் வாழும் படித்த இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களுக்குச் சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி அளிக்கப்படும். இதன் மூலம் அவர்களுக்கு நல்ல ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பு கிடைக்கும்.

# வட தமிழ்நாட்டு மன்னர்களுக்கு சிலைகள், மணிமண்டபங்கள்!

அனைவருக்கும், அனைத்தும் கிடைக்க வேண்டும் என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலைப்பாடு ஆகும். அதற்கு வசதியாகப் பொதுமக்களின் அனைத்து விருப்பங்களும், கோரிக்கைகளும் அறியப்பட்டு, அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**பாட்டாளி மக்கள் கட்சியின் வாக்குறுதிகள்**

1. தமிழ்நாட்டின் வரலாற்றில் மறைக்க முடியாத, மறக்க முடியாத சாதனைகளைப் படைத்த வட தமிழ்நாட்டு மன்னர்களின் வரலாற்றை மறைக்கத் திட்டமிட்ட சதிகள் நடைபெறுகின்றன. அந்தச் சதிகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டு, வட தமிழ்நாட்டு மன்னர்களுக்குச் சிலைகளும், மணிமண்டபங்களும் அமைக்கப்படும்.
2. சம்புவராய மன்னர்களுக்குப் படைவீட்டிலும், காடவராய மன்னர்களுக்குச் சேந்தமங்கலத்திலும், வீர வல்லாள மகாராஜாவுக்குத் திருவண்ணாமலையிலும் மணிமண்டபங்கள் கட்டப்படும். மணி மண்டபத்தில் அவர்களின் சிலைகளும், வாழ்க்கை வரலாற்றை விளக்கும் படங்கள் அடங்கிய காட்சிக்கூடமும் அமைக்கப்படும்.
3. விடுதலைப் போராட்ட வீரர் அர்த்தநாரீச வர்மா அவர்களுக்குச் சேலத்தில் மணிமண்டபமும், திருவண்ணாமலையில் சிலையும் அமைக்கப்படும்.
4. இயற்கை வேளாண்மையை வலியுறுத்திய வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும்.
5. சென்னையில் தமிழிசை விழா நடத்தப்படும். இதற்காகச் சென்னையில் தமிழக அரசின் சார்பில் அனைத்து வசதிகளுடன் கூடிய தமிழிசை அரங்கம் பிரம்மாண்டமாக அமைக்கப்படும்.
6. தமிழ்ப் பண்ணிசையை வளர்க்கும் வகையில், மாவட்டத் தலைநகரங்களில் தமிழிசைப் பள்ளிகள் அமைக்கப்படும்.
7. வீடுகட்டுவதற்குத் தேவையான சிமெண்ட், மணல், சல்லி உள்ளிட்ட பொருட்களைத் தமிழக அரசே மானிய விலையில் வழங்கும். இதன் மூலம் ஏழைகளின் வீட்டுக் கனவு நனவாகும்.
8. வேலைதேடிச் சென்னை, மதுரை, கோவை உள்ளிட்ட நகரங்களுக்கு வரும் இளைஞர்களுக்கு வசதியாகத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகளிலும் இளைஞர் விடுதிகள் அமைக்கப்படும். இளைஞர்களுக்கு வேலை கிடைத்து முதல்மாத ஊதியம் பெறும்வரை இந்த விடுதிகளில் இலவசமாகத் தங்கிச் செல்லலாம். இந்த விடுதிகளில் தங்கும் இளைஞர்களுக்கு மானிய விலையில் தரமான உணவும் வழங்கப்படும்.

# உண்மையான மக்களாட்சி என்பது கூட்டாட்சியே!

இந்திய அரசாட்சி கூட்டாட்சியாக இருக்க வேண்டும் என்பது தான் இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட, இந்தியக் குடியரசின் ஆட்சி முறையை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றிய அண்ணல் அம்பேத்கர், ஜவகர்லால் நேரு போன்றவர்களின் கனவாகவும், எண்ணமாகவும் இருந்தது. 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற கருத்தையே இந்தியாவின் முதல் தலைமை அமைச்சர் நேரு முன் வைத்தார்.

பல்வேறு மொழி, இன, கலாச்சார வேறுபாடு கொண்ட மக்களை ஒரே அரசியல் அமைப்பின் கீழ் வைத்திருக்கப் பரவலாக்கப்பட்ட ஆட்சி அதிகார அமைப்பே சிறந்தது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாகியும் ஐக்கிய அமெரிக்கக் குடியரசு அமைப்பு ஒன்றுபட்டு விளங்குவதற்கு அமெரிக்கக் குடியரசின் பல்வேறு மாகாணங்களும் பெற்றுள்ள ஏறக்குறைய முழுமையான தன்னாட்சி அதிகாரம் தான்.

அதே சமயம் சோவியத் யூனியன் என்ற கூட்டாட்சி எழுபதே ஆண்டுகளில் கரைந்து போனதற்குக் காரணம் அந்த யூனியனின் குவிக்கப்பட்ட அதிகார அமைப்போடு இருந்த மத்திய நிர்வாகமும், பல்வேறு மொழி பேசும் மக்களிடையே ருஷ்ய மொழியைத் திணிக்க முயன்றதும் தான்.

பல்வேறு மொழிகளைப் பேசும், பல்வேறு இனத்தைச் சேர்ந்த, பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்களின் தொகுப்பாகிய இந்தியா என்ற நாட்டின் நிலைத்தன்மைக்கு அனைத்து மொழிகளையும், கலாச்சாரங்களையும், பண்பாடுகளையும் பாதுகாக்கக் கூடிய, வளர்த்தெடுக்கக் கூடிய அரசியலமைப்பு தேவையாகும்.

ஆனால் இந்திய விடுதலைக்குப் பின் அமைந்த அனைத்து நடுவண் அரசுகளுமே மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிப்பதையும், நடுவண் அரசின் அதிகார வரம்புகளைப் பரவலாக்குவதையுமே செய்து வந்திருக்கின்றன.

இந்திய நாட்டை ஒருமைப்படுத்துவது என்ற பெயரிலோ, நாடு முழுவதும் ஒரே மாதிரியான என்ற காரணத்தை முன்னிறுத்தியோ, தகுதி வளர்ப்பு என்ற போர்வையிலோ அகில இந்திய அளவில் தொழில் கல்விகளுக்கு நடத்தப்படும் பொது நுழைவுத் தேர்வுகள், மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் கல்லூரிகளுக்கு மற்ற மாநில மாணவர்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்ற விதிகள் போன்றவை அனைத்துமே மாநில அரசுகளின் அதிகாரத்தைப் பறிப்பதாகவும், இந்தி மொழித் திணிப்பிற்கு வழியாகவும் மட்டுமே இருக்கின்றன. இந்தியக் குடியரசு அமைந்து 70 ஆண்டுகள் ஆகியும் இன்னமும் மாநில மொழிகள் ஆட்சி மொழி அதிகாரம் பெறாமல் இருக்கின்றன. இன்னமும் அகில இந்திய அளவிலான தொழில்கல்விக்கான நுழைவுத் தேர்வுகள் இந்தி, ஆங்கிலம் தவிரப் பிற மாநில மொழிகளில் நடத்தப்படுவதில்லை. பாட்டாளி மக்கள் கட்சியின் தொடர் முயற்சி மற்றும்

சட்டப் போராட்டங்களைத் தொடர்ந்து, ஐஐடி நுழைவுத் தேர்வுகள் 2021ஆம் ஆண்டு முதல் தமிழ் உள்ளிட்ட 8ஆவது அட்டவணை மொழிகளில் நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இது அனைத்துப் போட்டித் தேர்வுகள் மற்றும் நுழைவுத் தேர்வுகளுக்கு நீட்டிக்கப்பட வேண்டும்.

நாட்டின் பல்வேறு மொழி பேசும் மாநிலங்களின் ஊர்களில் வாழும் பாமர மக்களுக்கு நடுவண் அரசின் கடிதத் தொடர்புகள் இந்தி மற்றும் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. நடுவண் அரசின் விளம்பரங்கள் அந்தந்த மாநில மொழிகளில் வெளியிடப்படாமல் இந்தியிலேயே இருக்கின்றன. அரசின் திட்டங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற அக்கறையை விட மொழித் திணிப்பே நடுவண் அரசுக்கு முதன்மையாக இருக்கிறது.

தமிழகத்தோடு பல நூற்றாண்டுகளாகக் கலாச்சார, இனத் தொடர்புள்ள இலங்கை நாட்டுடனான வெளியுறவுக் கொள்கையை வகுப்பதில் கூடத் தமிழ் நாட்டின் மாநில அரசு கலந்தாலோசிக்கப் படுவதில்லை. நடுவண் அரசின் வரி வருவாயில் மாநிலங்கள் கோரும் முறையான பங்கினையும் அளிப்பதில்லை.

இந்தச் சூழலில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் புராதனமான தங்களின் மொழி, இன, கலாச்சார அடையாளங்கள் இந்திய அரசியலமைப்பில் காப்பாற்றி வளர்க்கப்படாமல், அழிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் பல்வேறு மாநில மக்களுக்கு ஏற்படுவது இயல்பானதே.

‘அடைந்தால் திராவிட நாடு. இல்லையென்றால் சுடுகாடு’ என்று முழங்கிய திராவிடக் கட்சிகள் ஜவகர்லால் நேரு ‘பிரிவினைவாதத் தடுப்புச் சட்டம்‘ கொண்டு வந்தவுடன் ‘மாநிலச் சுயாட்சி’ கேட்பதாகத் தங்கள் நிலையை உடனே மாற்றிக் கொண்டன. பின்னர் அதனையும் முற்றிலும் மறந்து விட்டன. நடுவண் அரசில் பலம் வாய்ந்த கூட்டணிக் கட்சியாக இருந்த போதும், பல முக்கிய அமைச்சர் பதவிகளை வகித்த போதும் கூடத் திராவிடக் கட்சிப் பிரதிநிதிகளோ, நடுவண் அரசில் பெரும் பதவியில் இருந்த தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளோ நடுவண் அரசின் அதிகாரக் குவிப்புக்கு எதிராகக் குரல் கொடுக்கவும் இல்லை, பணியாற்றவும் இல்லை.

பாட்டாளி மக்கள் கட்சி இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும், அரசமைப்பின் வலிமைக்கும் நாடு கூட்டாட்சித் தத்துவத்தின் கீழ் நிர்வகிக்கப்பட வேண்டும் என உறுதியாக நம்புகிறது. மாநில அரசுகளின் அதிகாரம் ஆண்டுக்கு ஆண்டு அதிகப்படுத்தப்பட வேண்டுமே அல்லாது குறைக்கப்படக் கூடாது எனவும், நாட்டில் பேசப்படும் எல்லா மொழிகளுக்கும் ஆட்சி மொழி அதிகாரம் அளிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்துகிறது.

பாட்டாளி மக்கள் கட்சி அங்கம்வகிக்கும் கூட்டணியின் முதலமைச்சர் அனைத்து மாநில முதலமைச்சர்களின் கூட்டமைப்பு அமைக்கப் பாடுபடுவார். இந்தக் கூட்டமைப்பின் மூலம் நடுவண் அரசில் அதிகாரம் குவிவதைத் தொடர்ந்து எதிர்க்கவும், மாநில அரசுகள் அதிக அதிகாரம் பெறுவதற்கு முயற்சியும் செய்வார். அரசியல் அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட அத்துணை மொழிகளையும் ஆட்சி மொழிகளாக ஆக்கப் போராடுவார்.

இதன் மூலம் ‘கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய’ மூத்த குடியான தமிழ்க் குடியின் மாண்பையும் தமிழ் மொழியின் சிறப்பையும் பாட்டாளி மக்கள் கட்சி பேணும்.

# சமூகநீதி தழைக்க, போதை ஒழிய தமிழகம் வளர்ச்சிப் பாதையில் அணிவகுக்க அதிமுக - பாமக கூட்டணிக்கு வாக்களிப்பீர்!

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற முழக்கத்தை முதலில் எழுப்பியவர் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் தான். அரசியல் இலாப – நட்டக் கணக்குகளைப் பற்றிக் கவலைப்படாமல், மக்கள் விரோத திமுக ஆட்சியை அகற்றுவது மட்டும்தான் தமது ஒரே நோக்கம் என்று முழங்கினார். இது குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவே தமிழ்நாடு முழுவதும் தமிழக மக்கள் உரிமை மீட்புப் பயணத்தை அவர் மேற்கொண்டார். அவரது பயணம் ஆட்சி மாற்றத்திற்கான அடித்தளத்தை வலிமையாக அமைத்துக் கொடுத்தது.

தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் உள்ள மக்களைச் சந்தித்துக் கேட்டாலும், தமிழ்நாட்டில் திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டும் என்று உறுதியாகக் கூறுவார்கள். அதற்கான காரணங்களைக் கேட்டால், நூற்றுக்கும் மேற்பட்ட காரணங்களைப் பட்டியலிடுவார்கள். அவர்கள் பட்டியலிடும் காரணங்களில் 90 விழுக்காட்டுக்கும் மேற்பட்டவை மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்களால் முன்மொழியப்பட்டவையாக இருக்கும். மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் மேற்கொண்ட திமுக அரசுக்கு எதிரான பரப்புரைகள் மக்கள் மனத்தில் ஆழமாக வேரூன்றி இருப்பதையே இது காட்டுகிறது.

திமுக ஆட்சியை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் திறன் அஇஅதிமுகவுக்குதான் உள்ளது என்று பாட்டாளி மக்கள் கட்சி உறுதியாக நம்பியதால், அதிமுகவுடன் கூட்டணி உடன்பாடு செய்து கொண்டது. பாரதிய ஜனதா கட்சி, அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், தமிழ் மாநிலக் காங்கிரஸ், புதிய நீதிக் கட்சி, இந்திய ஜனநாயகக் கட்சி, புரட்சி பாரதம், தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், பெருந்தலைவர் மக்கள் கட்சி, தென்னிந்திய பார்வர்ட் பிளாக் கட்சி உள்ளிட்ட கட்சிகளும் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்துள்ளன. தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட இருப்பதை, இக்கூட்டணி வலுவடைந்து வருவதே உறுதி செய்கிறது.

பாட்டாளி மக்கள் கட்சி எந்த அணியில் இருந்தாலும் மக்கள் நலனைக் காக்க வேண்டும் என்பதில் எந்தச் சமரசமும் செய்துகொள்வதில்லை. தமிழ்நாட்டில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், மக்கள் நலனுக்கான திட்டங்கள் மற்றும் கோரிக்கைகள் குறித்து அரசுக்கு அழுத்தம் கொடுத்து அவற்றை நிறைவேற்றப் பா.ம.க. தொடர்ந்து போராடி வருகிறது.

2026ஆம் ஆண்டுச் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையிலும் பாட்டாளி மக்கள் கட்சி, மக்கள் நலன் சார்ந்த ஏராளமான புதிய திட்டங்களையும், வாக்குறுதிகளையும் முன்வைத்திருக்கிறது. கூட்டணிக்குத் தலைமை வகிக்கும் அதிமுக, புதிய அரசை அமைக்கும் போது இதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மக்கள் நலத் திட்டங்களையும் செயல்படுத்தும்படி, தமிழக அரசுக்கு அழுத்தம் கொடுத்து நிறைவேற்றச் செய்வது பாட்டாளி மக்கள் கட்சியின் கடமை ஆகும். மொத்தத்தில் தமிழ்நாட்டில் தற்போது நடைபெற்று வரும் திமுக ஆட்சி அகற்றப்பட்டு, அதிமுக ஆட்சி அமைக்கப்பட்டால்தான் தமிழ்நாட்டில் அமைதி தழைக்கும்; சமூகநீதி செழிக்கும்; கஞ்சா மற்றும் மதுபோதை ஒழியும்; தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் செல்லும். அதைப் பாட்டாளி மக்கள் கட்சி உறுதி செய்யும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. எனவே, தமிழ்நாட்டில் பா.ம.க. அங்கம் வகிக்கும் கூட்டணி வெற்றி பெறுவதைத் தமிழ்நாட்டு மக்கள் உறுதி செய்ய வேண்டும்.

■

# மருத்துவர் அன்புமணி இராமதாசு மத்திய அமைச்சராக இருந்து தமிழகத்தின் நலனுக்காக ஆற்றிய பணிகள்!

1. தமிழ்நாடு மட்டுமின்றி ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் உயிர் காக்கும் 108 அவசர ஊர்தித் திட்டம்.
2. தேசிய ஊரக சுகாதார இயக்கத்தின் மூலம் 2005ஆம் ஆண்டு முதல் இதுவரை தமிழ்நாட்டிற்கு ரூ.20,000 கோடிக்கும் கூடுதலான நிதி ஒதுக்கீடு.
3. சென்னை எழும்பூரில் ரூ.100 கோடியில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல அதி உயர் சிறப்பு மையம்.
4. சென்னையில் ரூ.250 கோடியில் பிளாஸ்மா பிரிப்பு மையம் (Plasma Fractionation Centre).
5. சென்னையில் ரூ.50 கோடி செலவில் மெட்ரோ ரத்த வங்கி (Metro Blood Bank).
6. தாம்பரத்தில் தேசியச் சித்த மருத்துவ நிறுவனம் மற்றும் மருந்து ஆய்வகம்
7. சென்னையில் ரூ.112 கோடியில் மூத்த குடிமக்கள் கவனிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (National Institute of Ageing).
8. சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் குருத்தணு ஆய்வு மையம் (Stem cell research centre).
9. தருமபுரியில் அரசு மருத்துவக் கல்லூரி கொண்டு வருவதற்கு உதவி
10. சேலத்தில் ரூ.139 கோடியில் எய்ம்சுக்கு இணையான அதி உயர் சிறப்பு மருத்துவமனை (Super Speciality Hospital).
11. மதுரையில் ரூ.150 கோடியில் எய்ம்சுக்கு இணையான புதிய மருத்துவமனை.
12. தமிழ்நாட்டில் ஹெச்.ஐ.வி. / எய்ட்சைக் கட்டுப்படுத்தச் சிறப்புத் திட்டங்கள்
13. செங்கல்பட்டில் ரூ.800 கோடியில் ஒருங்கிணைந்த தடுப்பூசி உற்பத்திப் பூங்கா.
14. காஞ்சிபுரத்தில் ரூ.45 கோடியில் மண்டலப் புற்று நோய் மையம்
15. மதுரை ராஜாஜி மருத்துவமனையில் ரூ.50 கோடியில் மண்டலப் புற்றுநோய் மையம்.
16. வேலூர் வாலாஜா, சேலம் ஓமலூர், மதுரை மேலூர், கடலூர், தாம்பரம், நெல்லை, கன்னியாகுமரி உள்ளிட்ட 10 இடங்களில் சாலை விபத்துக்களில் காயமடைந்தோருக்குச் சிகிச்சை அளிப்பதற்கான விபத்துக்காயச் சிகிச்சை மையங்கள்.
17. ஜிப்மர் மருத்துவமனைக்குத் தனிச் சட்டம் கொண்டு வந்து தன்னாட்சி வழங்கியது. ரூ.1,500 கோடியில் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்தது. இதனால் தமிழகத்தின் 10 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அம்மருத்துவமனையைப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

# மருத்துவர் அன்புமணி இராமதாசு மத்திய அமைச்சராக இருந்து தேசிய அளவில் செயல்படுத்திய திட்டங்கள்!

1. மருத்துவத்துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய தேசிய ஊரக சுகாதார இயக்கம் (National Rural Health Mission).
2. பொது இடங்களில் புகைபிடிக்கத் தடை உள்ளிட்ட புகையிலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்.
3. இந்தியா முழுவதும் உயிர்காக்கும் 108 அவசர ஊர்திச் சேவை.
4. தேசியப் பள்ளிக் குழந்தைகளுக்கான மருத்துவத் திட்டம் (National School Health Programme).
5. புதிய நோய்களுக்கு மருந்து கண்டுபிடிப்பதற்கான மருத்துவ ஆராய்ச்சித்துறை (Department of Medical Research).
6. இந்திய உணவு மற்றும் பாதுகாப்புத் தர ஆணையம் (Food Safety and Standards Authority of India)
7. மத்திய மருந்து ஆணையம் (Central Drug Authority India)
8. அயோடின் சத்துக் குறைபாட்டைப் போக்குவதற்கான திட்டம்.
9. அனைத்து மாநிலங்களிலும் எய்ம்சுக்கு இணையான மருத்துவமனைகளை அமைக்கும் திட்டம்.
10. தேசிய நோய்க் கண்காணிப்பு அமைப்பு (National Disease Surveillance System)
11. பாரம்பரிய அறிவு சார் மின்னணு நூலகம் (Traditional Knowledge Digital Library)
12. தானாகச் செயலிழக்கும் சிரிஞ்ச் (Auto Disable Syringe).
13. மத்திய அரசுக்குச் சொந்தமான மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நாடு முழுவதும் உள்ள மத்திய அரசு ஒதுக்கீட்டு இடங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு இடஒதுக்கீடு மறுக்கப்பட்டு வந்த நிலையில், அதை மாற்றி அவர்களுக்கு இட ஒதுக்கீடு பெற்றுத் தந்தார்.





# தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டப் பாமக வெளியிட்ட ஆவணங்கள்!

1. 2003–2004ஆம் ஆண்டில் தொடங்கி 2025–26ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 18 ஆண்டுகள் நிழல் நிதி நிலை அறிக்கை (மொத்தம் 23 ஆவணங்கள்)
2. 2008–2009 ஆம் ஆண்டில் தொடங்கி 2025–26ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 13 ஆண்டுகள் வேளாண் நிழல் நிதி நிலை அறிக்கை (மொத்தம் 18 ஆவணங்கள்)
3. 2024–25ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் உத்தேசப் பொருளாதார ஆய்வறிக்கை (Economic Survey Report)
4. தமிழ்நாட்டின் நிதிநிலை குறித்த உண்மை அறிக்கை **(Factual Report)** (18.08.2001)
5. பன்னிரண்டாவது நிதிக்குழுவுக்குப் பல்வேறு ஆலோசனைகளைத் தெரிவிக்கும் வகையில் 22 பக்கங்கள் கொண்ட செயல்திட்டத்தைத் தயாரித்து வழங்கியது. இந்தச் செயல்திட்டத்தில் இடம் பெற்றிருந்த பல்வேறு அம்சங்களை நிதிக்குழு அதன் இறுதி அறிக்கையில் சேர்த்து வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.
6. மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் சேர்ப்பதற்கான பல்வேறு திட்டங்களைத் தனி அறிக்கையாகத் தயாரித்து 02.02.2007 அன்று மத்திய அரசிடம் வழங்கியது.
7. தமிழகத்தில் தொழில் வளர்ச்சி – ஒரு மாற்றுத் திட்டம் (08.09.2007)
8. தமிழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி – பயனுள்ள மாற்றுத் திட்டம் (25.09.2007)
9. தமிழகத்தில் இளைஞர்களின் மறுமலர்ச்சி – பயனுள்ள ஓர் அணுகுமுறை (08.10.2007)
10. 2020ஆம் ஆண்டில் தமிழகம் – ஒரு தொலைநோக்குத் திட்டம் (22.10.2007)
11. சென்னை நகருக்கான மாற்றுப் போக்குவரத்துத் திட்டம்
12. தமிழ்நாடு அரசுக்கான மாற்று மதுவிலக்குக் கொள்கை (26.08.2008)
13. அரசு ஊழியர்களுக்கான ஊதியக் குழு போன்று உழவர்களுக்கான ஊதியக்குழு அமைக்கக் கோரும் தமிழ்நாட்டின் உழவர்களுக்கான ஒரு கொள்கை அறிக்கை **(A Manifesto for Farmers in Tamilnadu)** (03.10.2009).
14. புதிய அரசியல்.... புதிய நம்பிக்கை
15. இன்றைய காலத்திற்கு ஏற்ற கல்விமுறை.
16. பா.ம.க. ஒரு பசுமைக் கட்சி.
17. நாம் விரும்பும் சென்னை (சென்னைக்கான புதிய நகர்ப்புறச் செயல்திட்டம்)
18. விடியல் எங்கே? (தி.மு.கவின் நிறைவேற்றப்படாத தேர்தல் வாக்குறுதிகள்)
19. திமுக அரசின் பொய் முதலீடுகள் (34 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு மோசடி கதை)

# ஆட்சிக்கு வராமலேயே மக்கள் நலனுக்காகப் பாட்டாளி மக்கள் கட்சி ஆற்றிய பணிகள்!

1. மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இட ஒதுக்கீடு பெற்றுத் தந்தது.
2. தமிழ்நாட்டில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள சமுதாயங்களைத் தனிப் பிரிவாக அறிவித்து அவர்களுக்கு 20% தனி இடஒதுக்கீட்டைப் பெற்றுத்தந்தது.
3. தமிழ்நாட்டில் மிக மிகப் பின்தங்கிய நிலையில் உள்ள வன்னியர் சமுதாயத்திற்குச் சமூகநீதி வழங்கும் வகையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் வன்னியர்களுக்கு இடைக்கால ஏற்பாடாக 10.5% உள்இடஒதுக்கீட்டைப் பெற்றுத்தந்தது.
4. ஊர்ப்புற மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாக இருந்த நுழைவுத் தேர்வு முறையைத் தொடர் போராட்டங்களை நடத்தியும், நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தும் அகற்றக் காரணமாக இருந்தது.
5. சமச்சீர்க் கல்வி முறைக்கான இலக்கணங்களை வகுத்துத் தமிழ்நாட்டில் அந்தக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்படுவதற்குக் காரணமாக இருந்தது.
6. சமச்சீர்க் கல்வித் திட்டத்திற்குத் தடை விதிக்கப்பட்டதை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரை சென்று போராடித் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தது.
7. மதுக்கடைகளின் விற்பனை நேரத்தை 16 மணியிலிருந்து 10 மணி நேரமாகக் குறைக்க வைத்தது.
8. உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துத் தேசிய, மாநில நெடுஞ்சாலை ஓரங்களில் இருந்த 3,321 மதுக்கடைகளை மூட வைத்தது.
9. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காகத் தொடர் போராட்டங்களை நடத்தி, அத்திட்டம் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்தது.
10. தருமபுரி மாவட்டத்தில் சிப்காட் தொழிற்பேட்டை கொண்டுவந்தது.
11. சேலம் உருக்காலையை ரூ.1500 கோடி செலவில் உலகத்தரத்திற்கு உயர்த்தியதுடன், புதிய குளிரூட்டப்பட்ட உருக்காலையை அமைத்தது.
12. தமிழ்நாட்டிற்கு 2002– 2009 வரையிலான 7 ஆண்டுகளில் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தொடர்வண்டித் திட்டங்களைக் கொண்டு வந்தது.

13. மேற்கு மாவட்ட மக்களின் நீண்டகாலக் கனவை நிறைவேற்றும் வகையில் சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ரயில்வே கோட்டம் அமைத்தது.

14. தமிழகத்தில் உள்ள அனைத்துப் பாதைகளையும் அகல ரயில் பாதைகளாக்கித், தமிழ்நாட்டில் மீட்டர் கேஜ் பாதைகளே இல்லை என்ற நிலையை ஏற்படுத்தியது.

15. இலங்கைப் பிரச்சினைக்காக ஐ.நா. மனித உரிமைப் பேரவை வரை சென்று, இலங்கை இனப்படுகொலை குறித்து சர்வதேசப் போர்க் குற்ற விசாரணை நடத்த வகை செய்தது.

16. பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் ஆந்திர அரசின் முயற்சியை உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துத் தடுத்து நிறுத்தியது.

17. காவிரி, முல்லைப் பெரியாறு பிரச்சினைகளுக்காகத் தொடர் போராட்டங்கள் நடத்திவருவது.

18. தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 7 மாவட்ட விவசாயிகளைப் பாதிக்கும் இயற்கை எரிவாயுக் குழாய்ப் பாதை அமைக்கும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நிறுத்தியது.

19. வேளாண் விளைநிலங்களைச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்காகக் கையகப்படுத்தும் திட்டங்களைப் பல இடங்களில் போராட்டம் நடத்தி முறியடித்து, விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தது.

20. காவிரி பாசன மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வைத்தது.

■